புதிய பாடத்திட்டம்

# முதுகலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு

# தமிழ்

## இலக்கணம்






Professor Academy

# PG TRB

# தமிழ்

## UNIT - VII

## இலக்கணம்

Professor Academy

Copyright© 2025 by **Professor Academy**

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods.

Title : PG TRB **தமிழ்**

UNIT VII - **இலக்கணம்**

Edition: 1st edition

Year : 2025

Published by:

Professor Academy
No:14, West Avenue, Taylor Estate,
Kodambakkam, Chennai-600 024.
7070701005, 7070701009
professoracademy.com

Feel free to mail us at **feedback@professoracademy.com**

# INDEX


- எழுத்து இலக்கணம் .......... 05
- சொல் இலக்கணம் .......... 87
- பொருள் இலக்கணம் .......... 124
- யாப்பிலக்கணம் .......... 196
- அணி இலக்கணம் .......... 252

# SYLLABUS

**அலகு 7**

## இலக்கணம்

**ஐந்திலக்கணம் – எழுத்து, சொல், பொருள் (அகப்பொருள், புறப்பொருள்), யாப்பு, அணி – பாட்டியல் – புலமை இலக்கணம் – தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக்காரம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம்.**

Professor Academy

# PG TRB

# தமிழ்

## COURSE DETAILS

+91 707070 1005
+91 707070 1009

www.professoracademy.com




Professor Academy

# PG TRB 2025 ONLINE COURSE

| New Syllabus 2024 | Online Live Classes | 100+ Test Series |
|---|---|---|
| Complete coverage of **New Syllabus 2024** | **Online Live Classes** 200+ hrs. of Lectures | ◆ Daily test<br>◆ Unit wise test<br>◆ Full-length test |

| Recorded Access | Study Material | Support |
|---|---|---|
| **Recorded Access** 24/7 Availability | **Study Material** **11** Printed Books + Class notes | **Technical & Academic Support** |

www.professoracademy.com




# எழுத்து இலக்கணம்

**இலக்கியமும் இலக்கணமும்**

இலக்கியங்களை முதலில் வாய்மொழியாகப் பாடிக்கொண்டிருந்தனர். அவற்றை எழுதி வைக்கத் தொடங்கியபோது, மொழிaயின் அமைப்புப் பற்றிய சிந்தனை தோன்றியது. மொழி அமைப்புப் பற்றிய சிந்தனையின் காரணமாக இலக்கணம் தோன்றியது.

எனவே முதலில் தோன்றியது இலக்கியமே. அந்த இலக்கியத்தைப் பார்த்து, இலக்கணத்தை உண்டாக்கினார்கள். கால மாற்றத்தால் இலக்கியத்திலும் சில மாற்றங்கள் தோன்றின. இதனால் இலக்கணத்தை மீண்டும் மாற்றி எழுதவேண்டிய தேவையும் ஏற்பட்டது.

இவ்வாறு இலக்கியத்திலும் மொழியிலும் காலம்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்ததால், இலக்கணத்திலும் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. எனவே தமிழில் காலம்தோறும் புதிய இலக்கண நூல்கள் தோன்றிக் கொண்டே இருந்தன.

இலக்கண நூலை இயற்றுபவரை இலக்கண நூல் ஆசிரியர் என்று அழைப்பர். தமிழில் காலம் தோறும் பல ஆசிரியர்கள் இலக்கண நூல்களை எழுதி வந்துள்ளனர். சமண சமயத்தைச் சார்ந்த துறவிகளே இலக்கண நூல்களை மிகுதியாக இயற்றியுள்ளனர். எனினும் சைவம், வைணவம், கிறித்தவம் முதலிய சமயத்தைச் சேர்ந்தவர்களும் இலக்கண நூல்களை இயற்றியுள்ளனர்.

இலக்கண நூல் ஆசிரியர்கள் இலக்கணத்தை, விதிகளாகச் செய்யுள் வடிவில் அமைத்து இயற்றினார்கள். விதிகளைச் **சூத்திரம்** என்றும் **நூற்பா** என்றும் கூறுவர். ஒரு பொருள் பற்றிய சில விதிகள் எல்லாவற்றையும் தொகுத்து ஓர் இயலாக அமைப்பர். ஓர் இலக்கண நூலில் அப்படிப் பல இயல்கள் சேர்ந்து அமைந்திருக்கும்.

இலக்கண நூல்களை இயற்றும் ஆசிரியர்கள், அவற்றைச் சூத்திரங்களாக இயற்றியதால், எளிதில் பொருள் விளங்காமல் இருந்தன. மாணவர்கள் இவற்றைக் கற்பதற்கு மிகவும் இடர்ப்பட்டனர். அதனால், மாணவர்க்கு விளங்கும் வகையில் அச்சூத்திரங்களுக்கு எளிமையாக உரைநடையில் சிலர் பொருள் எழுதினார்கள். இவர்கள் எழுதியதை உரைகள் என்று வழங்குவர். இப்படி இலக்கண நூல்களுக்கும் இலக்கிய நூல்களுக்கும் விளக்கம் எழுதியவர்களை உரையாசிரியர் என்று அழைப்பர்.

**இலக்கணத்தின் வகைகள்**




தமிழ் இலக்கணம் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே **ஐந்திலக்கணம்** என்ற சொல்மரபு வழங்கி வருகிறது. அவை, **எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி** ஆகியவை ஆகும். இவற்றில் எழுத்து, சொல் இலக்கணங்கள் மொழிக்கு இலக்கணம் கூறுபவை ஆகும். பொருள் இலக்கணம் மொழியில் எழுதப்படும் இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு இலக்கணம் கூறுவது ஆகும். **யாப்பிலக்கணம்** என்பது இலக்கியம் எழுதப்படும் செய்யுளின் இலக்கணம் கூறுவதாகும். யாப்பிலக்கணத்தின் ஒரு வளர்ச்சியாகப் **பாட்டியல் இலக்கணம்** தோன்றியது. பாட்டியல் இலக்கணம் இலக்கிய வடிவங்களினது இலக்கணத்தைக் கூறுகிறது. பிள்ளைத்தமிழ், உலா, தூது போன்ற இலக்கியங்களின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் இடம்பெற்றுள்ளது. அணி இலக்கணம் செய்யுளில் அமையும் உவமை, உருவகம் முதலிய அணிகளின் இலக்கணத்தைக் கூறுகிறது. இந்தப் பாடத்தில் எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களின் அமைப்பும், வரும் பாடத்தில் பொருள், யாப்பு, அணி, பாட்டியல் இலக்கணங்களின் அமைப்பும் அறிமுகம் செய்யப்படும்.

எழுத்து இலக்கணத்தில், எழுத்துகளின் வகைகள், அவை ஒலிக்கும் கால அளவு, எழுத்துகள் பிறக்கும் முறை ஆகியனவும் சந்தி இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது முதல் சொல்லின் கடைசி எழுத்திலும் இரண்டாம் சொல்லின் முதல் எழுத்திலும் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லுவது ஆகும்.

சொல் இலக்கணத்தில், சொல்லின் வகைகளான பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியனவும் திணை, பால், எண், இடம், காலம் முதலியனவும் தொகை (எழுத்துகள் மறைந்து வருதல்), வேற்றுமை ஆகியனவும் சொல்லப்பட்டிருக்கும்.

பொருள் இலக்கணம் என்பது தமிழ் மொழிக்கே சிறப்பாக உரிய இலக்கணம் ஆகும். தமிழ் மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களின் பாடுபொருளுக்கு எழுதப்பட்ட

இலக்கணமே **பொருள் இலக்கணம்** ஆகும். பழங்காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட சங்க இலக்கியம் என்ற இலக்கியத் தொகுப்புக்கு எழுதப்பட்டதே பொருள் இலக்கணம் ஆகும். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கொள்ளும் காதல் **அகப்பொருள்** எனப்பட்டது. போர், வீரம், இரக்கம், நிலையாமை, கொடை, கல்வி முதலியவை எல்லாம் **புறப்பொருள்** எனப்பட்டன.

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுளில் இயற்றப் பட்டவையே. செய்யுள்களின் அமைப்பு, ஓசை, பாக்களின் வகைகள் முதலியவற்றைச் சொல்லுவதே யாப்பு இலக்கணம் ஆகும்.

சங்க காலத்திற்குப்பின் பக்தி இலக்கியக் காலத்திலும் அதற்குப் பின்பும் பல வகைச் சிறிய இலக்கிய வடிவங்கள் தோன்றின. தூது, உலா, அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ் முதலியவை இவ்வகையான இலக்கியங்களாகும். இவற்றுக்கு இலக்கணம் சொல்லுவது பாட்டியல் இலக்கணம் ஆகும்.

இலக்கியங்களில் அழகுக்காகவும் பொருள் விளங்குவதற்காகவும் உவமைகளைப் பயன்படுத்துவது கவிஞர்களின் இயல்பு. அவ்வாறு இடம்பெறும் உவமை, உருவகம் முதலியவற்றுக்கு அணி என்று பெயரிட்டு அவற்றின் இலக்கணத்தைச் சொல்லுவது அணி இலக்கணம் ஆகும்.

**தமிழ் இலக்கண நூல்கள்**

தமிழ் இலக்கியத்தின் வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்டது. இரண்டாயிரம் ஆண்டுகளில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றி, மொழியை வளப்படுத்தியுள்ளன. இலக்கியங்களைப் போலவே இலக்கண நூல்களும் தமிழில் மிகுதியாகத் தோன்றியுள்ளன. நீண்ட வரலாற்றில் அரசாட்சி, பிறமொழிகளின் தாக்கம், சமூக மாற்றம், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக மொழியும் இலக்கியமும் மாறின. எனவே இந்த மாற்றங்களை உள்வாங்கிப் புதிய இலக்கண நூல்கள் தோன்ற வேண்டியதும் அவசியம் ஆனது. இந்தத் தேவையைக் கருத்தில் கொண்டு காலம் தோறும் புதிய இலக்கண நூல்கள் தோன்றி வந்தன. எனவே தமிழில் இலக்கண வளம் மிகுதியாக உள்ளது என்று கூறலாம். தமிழில் உள்ள சில இலக்கண நூல்கள் பற்றிச் சிறு குறிப்பு இங்கே தரப்படுகிறது.

**தொல்காப்பியம்**

தமிழில் மிகவும் பழைய இலக்கண நூலாக விளங்குவது **தொல்காப்பியம்** ஆகும். இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதை இயற்றியவர் **தொல்காப்பியர்** ஆவார். இந்த நூலில் எழுத்து அதிகாரம், சொல் அதிகாரம், பொருள் அதிகாரம் என்ற மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயலாக இருபத்து ஏழு இயல்கள் உள்ளன. தமிழில் உள்ள இலக்கண நூல்களிலேயே மிகவும் பெரியது தொல்காப்பியம் ஆகும். பொருள் அதிகாரத்தில் தமிழின் பொருள் இலக்கணமும், யாப்பு இலக்கணமும் சொல்லப்பட்டுள்ளன. தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் உள்ள உவமை இயலில் அணி இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. இன்று தமிழில் உள்ள ஐந்திலக்கணங்களுக்கும் தோற்றுவாயாகத் தொல்காப்பியம் திகழ்கிறது.

தொல்காப்பியத்திற்குப் **பனம்பாரனார்** என்னும் அறிஞர் பாயிரம் எழுதியுள்ளார். இவர் தொல்காப்பியருடன் பயின்றவர் என்று அறிய முடிகிறது. பாயிரம் என்பது தற்காலத்தில் எழுதப்படும் முன்னுரை போன்றது. நிலந்தரு திருவின் பாண்டிய மன்னனின் அவையில் அதங்கோட்டாசான் தலைமையில் தொல்காப்பியம் அரங்கேறியது என்று பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் இலக்கணத்தை மிகவும் விரிவாகக் கூறுகிறது. சூத்திரங்கள் இலக்கண அமைப்பை விளக்கும் முறையில் அமைந்துள்ளன. சிறு இலக்கண விதிகளைக்கூட விட்டுவிடாமல் மிகவும் நுட்பமாகத் தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், பேராசிரியர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

**நன்னூல்**

**பவணந்தி முனிவர்** என்ற சமண சமய முனிவரால் இயற்றப்பட்டது **நன்னூல்** என்ற இலக்கண நூல். இது, எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம் ஆகிய இரண்டு இலக்கணங்களையும் கூறுகிறது. நன்னூல் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. நன்னூல், இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறும் நூல் ஆகும். நன்னூலில் முதலில் பாயிரம் என்று ஒரு பகுதி உள்ளது. இதில் ஐம்பத்தைந்து சூத்திரங்கள் உள்ளன. பாயிரப் பகுதியில் நூலின் இலக்கணம், நூலைக் கற்றுத்தரும் ஆசிரியர் இலக்கணம், கற்றுத்தரும் முறை, மாணவர்களின் குணங்கள், மாணவர்கள் கற்கும் முறை ஆகியவை இடம்

பெற்றிருக்கும். எழுத்து அதிகாரத்தில் ஐந்து இயல்கள் உள்ளன; 202 சூத்திரங்கள் உள்ளன. சொல்லதிகாரத்தில் ஐந்து இயல்கள் உள்ளன; 205 சூத்திரங்கள் உள்ளன.

**அருங்கலை விநோதன்** என்ற பட்டப் பெயர் பெற்ற **சீயகங்கன்** என்ற அரசனின் வேண்டுகோளின்படி நன்னூல் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. தொல்காப்பியம் தோன்றிப் பல நூற்றாண்டுகள் சென்றுவிட்டதால் அதில் உள்ள மரபுகள் மாறிவிட்டன. மேலும் தொல்காப்பியம் கடல் போலப் பரந்துவிரிந்த நூல் ஆகும். எனவே நன்னூல் தோன்றிய பின்பு பரவலாக அனைவரும் நன்னூலையே கற்கத் தொடங்கினர். எனவே நன்னூலுக்குப் பல உரைகள் தோன்றின. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், இராமானுச கவிராயர், ஆறுமுக நாவலர் முதலிய பலர் நன்னூலுக்கு உரை எழுதியுள்ளனர். நன்னூல் தோன்றிய பிறகு எழுத்து, சொல் இலக்கணங்களைக் கற்போர் நன்னூலையே விரும்பிப் படித்து வருகின்றனர்.

தமிழில் நாற்பதுக்கும் மேற்பட்ட இலக்கண நூல்கள் உள்ளன. முக்கியமான இலக்கண நூல்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| நூல் | ஆசிரியர் | காலம் | இலக்கண வகை |
|---|---|---|---|
| **தொல்காப்பியம்** | தொல்காப்பியர் | கி.மு.4ஆம் நூற். | எழுத்து, சொல், பொருள் |
| **நன்னூல்** | பவணந்தி முனிவர் | 13ஆம் நூற்றாண்டு | எழுத்து, சொல் |
| **நேமிநாதம்** | குணவீர பண்டிதர் | 12ஆம் நூற்றாண்டு | எழுத்து, சொல் |
| **இறையனார் களவியல்** | --- | 7ஆம் நூற்றாண்டு | அகப்பொருள் |
| **நம்பியகப் பொருள்** | நாற்கவிராச நம்பி | 13ஆம் நூற்றாண்டு | அகப்பொருள் |
| **மாறனகப் பொருள்** | குருகைப் பெருமாள் கவிராயர் | 16ஆம் நூற்றாண்டு | அகப்பொருள் |
| **புறப்பொருள் வெண்பாமாலை** | ஐயனாரிதனார் | 9ஆம் நூற்றாண்டு | புறப்பொருள் |
| **யாப்பருங்கலம்** | அமிர்தசாகரர் | 10ஆம் நூற்றாண்டு | யாப்பு |
| **யாப்பருங்கலக் காரிகை** | அமிர்தசாகரர் | 10ஆம் நூற்றாண்டு | யாப்பு |
| **தண்டியலங்காரம்** | தண்டி | 12ஆம் நூற்றாண்டு | அணி |
| **மாறன் அலங்காரம்** | குருகைப் பெருமாள் கவிராயர் | 16ஆம் நூற்றாண்டு | அணி |
| **வீரசோழியம்** | புத்தமித்திரர் | 11ஆம் நூற்றாண்டு | ஐந்திலக்கணம் |
| **இலக்கண விளக்கம்** | வைத்தியநாத தேசிகர் | 17ஆம் நூற்றாண்டு | ஐந்திலக்கணம் |
| **தொன்னூல் விளக்கம்** | வீரமாமுனிவர் | 18ஆம் நூற்றாண்டு | ஐந்திலக்கணம் |
| **சுவாமிநாதம்** | சுவாமிநாத கவிராயர் | 18ஆம் நூற்றாண்டு | ஐந்திலக்கணம் |
| **அறுவகை இலக்கணம்** | தண்டபாணி சுவாமிகள் | 19ஆம் நூற்றாண்டு | ஐந்திலக்கணம் |
| **முத்துவீரியம்** | முத்துவீர உபாத்தியாயர் | 19ஆம் நூற்றாண்டு | ஐந்திலக்கணம் |
| **பன்னிரு பாட்டியல்** | --- | 10ஆம் நூற்றாண்டு | பாட்டியல் |
| **வெண்பா பாட்டியல்** | குணவீர பண்டிதர் | 12ஆம் நூற்றாண்டு | பாட்டியல் |
| **இலக்கண விளக்கப் பாட்டியல்** | தியாகராச தேசிகர் | 17ஆம் நூற்றாண்டு | பாட்டியல் |

**எழுத்திலக்கண கோட்பாடுகள்**

- தமிழ் இலக்கண நூல்களுள் எழுத்ததிகாரத்தைச் சிறப்பாக ஆராய்வன தொல்காப்பியம் வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகிய எட்டு நூல்கள்.
- தொல்காப்பியம் எழுத்து அதிகாரத்தை 9 இயல்களாகக் குறிப்பிடுகிறது.
- தொல்காப்பியம் எழுத்ததிகார கடைசி ஆறு இயல்களையும் புணரியல் தொகை மரபு, உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியியல், குற்றியலுகரப் புணரியல் ஆகியவற்றை புணரியில் என்று புதுமைப்படுத்தலாம் மூன்றாவது இயலாக பிறப்பியலைத் தனி இயலாகக் கொள்ளலாம். எனவே நூல் மரபு மொழி மரபு ஆகிய முதல் இரண்டு இயல்களுக்கும் எழுத்தியல் என்றும் பிற்கால இலக்கண மரபை ஒட்டி பெயரிடலாம்.
- நன்னூல் கொண்டுள்ள எழுத்துகளுக்கும் தொல்காப்பியம் கொண்டதாக கூறும் எழுத்துகளுக்கும் வேறுபாடு உண்டு.
- நன்னூலாரின் எழுத்தியலில் தொல்காப்பிய நூல் மரபு மொழி மரபு பிறப்பியல் ஆகிய மூன்றும் அடங்கியுள்ளது.
- தொல்காப்பிய மொழி மரபில் கூறிய செய்திகள் நன்னூல் பதவியலில் விளக்கப்பட்டுள்ளன (தொல்காப்பியம் 45 மொழி மரபு) (நன்னூல் 128 பதவியியல்).
- தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுத்தியல் பிறப்பியல் புணரியல் என்னும் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.
- வீரசோழியம் எழுத்து அதிகாரத்தை சந்திப்படலம் என்ற ஒரே இயலாக விவரிக்கிறது.
- நேமி நாதமும் எழுத்ததிகாரத்தை ஒரே இயலாகவே கூறியுள்ளது.
- வரலாற்று நிலையில் நேமி நாத எழுத்து அதிகாரத்தை பொருத்தவரையில் வீரசோழியத்தையே பெரிதும் பின்பற்றி உள்ளது என்ற உண்மை புலப்படுத்தும் (செ. வை சண்முகம்).
- இதனால் இலக்கண ஆய்வில் எழுத்திலக்கணம் சிறந்த ஒன்றாக கருதப்படவில்லை என்ற பொது கருத்து உருவாகிறது சிவஞான முனிவர் முதல் சூத்திர விருத்தியில் அவர் சேனாவரையர் சொல்லதிகாரம் போல பெரும் பயன்படாமைக்கருதி எழுத்திற்கு உரை செய்யாது விடுத்தமையின் என்று கூறுவதும் இந்த உண்மையை வலியுறுத்தும்.
- நேமி நாதம் வீரசோழியம் இரண்டும் எழுத்தியல் புணரியல் என்ற வகையில் எழுத்து அதிகார செய்திகளை பேசி உள்ளதாக கொள்ள வேண்டும் பிறப்பியல் செய்திகள் நன்னூலில் இருப்பது போல கூறப்பட்டுள்ளன.
- “அவி நயம் எழுத்ததிகாரத்தை ஏழு வகையாக கூறியுள்ளது. பெயர் முறை பிறப்பு அளவியல் வடிவு புணர்தலோடு ஏழும் பொருந்திய வழக்கு” நேமி உரை மேற்கோள்.
- எழுத்ததிகாரத்தை 12 பிரிவுகளாக பிரித்துள்ளார் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை முதல் ஈறு இடைநிலை போலி என்றார்.
- உரையாசிரியர்கள் எழுத்து அதிகாரத்தை 5 பெரும் பிரிவுகளாக குறிப்பிடுகின்றனர்.

**மயிலை நாதர்**

இவ்வதிகாரத்துள் இணை வகை ஊற்றினால் எழுத்திலக்கணம் உணர்த்தினானோ எனின் ஐவகை ஒத்தினால் உணர்த்தினான் என்றும் எண் பெயர் முதல் முதலான பத்தும் உணர்த்திடாதலின் எழுத்தியல் என்று பெயர்த்தும்

- இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம் கூறும் முறையில் நன்னூலார் கூறிய 12 முறையையும் 5 இயலாக பிரித்த முறையையும் அப்படியே பின்பற்றி உள்ளது. இடம் மாற்றி கூறியுள்ளார்
- முத்து வீரியம் எழுத்ததிகார பாகுபாடு ஒன்றையும் குறிப்பிடவில்லை ஆனால் பதிப்பாசிரியர்கள் எழுத்தியல் மொழியியல் புணரியல் என்று மூன்று பிரிவாக வகுத்துக் காட்டி உள்ளார்கள்.
- சுவாமிநாதம், நன்னூலை போலவே எழுத்ததிகாரத்தை 12 பிரிவுகளாக பிரித்துள்ளது. சொற்பொழிவு, சொற்பொருள், யாப்பு அலங்காரம் என்னும் ஐந்தமிழின் இலக்கண விரிவை ஒவ்வொரு மூன்று இயலாது அடக்கி மொழிக்குவன்.
- இது எழுத்ததிகார மரபு பத மரபு புணர்ச்சி மரபு என்று சிறப்பு பெயர் பெற்றுள்ளன
- தொன்னூல் விளக்கம் முத்து வீரியத்துக்கும் சுவாமிநாதவதர்க்கும் காலத்தால் முந்தியது (இளவரசு 1963 243)
- “தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும் சாற்றுழி தோன்றும் எழுத்து இயல்பே”
- இதன்படி இத்தோற்றம் வகுப்பு விகாரம் என்றும் மூன்று பிரிவுகளாக எழுத்ததிகாரம்

பிரிக்கப்படுகிறது வீரமாமுனிவர் எழுத்ததிகாரத்தை தோற்றம் வகுப்பு விகாரம் என்று மூன்று பிரிவுகளாக பிரித்துக் கூறுகிறார்

1. தொல்காப்பியம் -3- எழுத்தியல், பிறப்பியல், புணரியல்
2. வீரசோழியம், நேமிநாதம் – எழுத்ததிகாரம்
3. அவிநயம் -2
   - எழுத்தியல், புணரியல்

4. நன்னூல், இலக்கண விளக்கம் முத்து வீரியம்சுவாமிநாதம்-3 – எழுத்தியல், பதவியல், புணரியல்

5. தொன்னூல் விளக்கம் -3- பிறப்பியல், எழுத்தியல், புணரியல்

- எழுத்துகள் என்று தொல்காப்பியர் கருதுவதற்கும் நன்னூலார் கருதுவதற்கும் உள்ள வேறுபாடு பிறப்பியலை நீக்கியது பின்னது பிறப்பியலை உள்ளடக்கியது.

மக்கள் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு உதவுவது மொழி. மொழி சொற்களால் ஆனது. சொற்கள் எழுத்துகளால் ஆனவை. எழுத்து என்பது மொழியின் சிறிய அலகு ஆகும். ஆகவே, ஒரு மொழியின் இலக்கணத்தைக் கற்பதற்கு அடிப்படையாக அமைவது எழுத்து இலக்கணமே ஆகும். எழுத்துகளின் வரிவடிவம். ஒலிவடிவம், எழுத்துகளின் வகைகள், மாத்திரை, போலி முதலியவற்றைப் பற்றி இந்தப்பாடத்தில் காணலாம்.

**ஒலிவடிவம், வரிவடிவம்**




எழுத்துகளுக்கு **ஒலிவடிவம், வரிவடிவம்** என்று இருவகை வடிவங்கள் உண்டு. எழுத்துகளை இந்த இரண்டு வடிவங்களிலும் காணலாம். இவற்றில் ஒலி வடிவம் முதன்மையானது. எழுத்துகளை ஒலிப்பதே **ஒலி வடிவம்** எனப்படுகிறது, எழுத்துகளை எழுதிக்காட்டுவது **வரி வடிவம்** எனப்படும்,

**அ, இ, உ, க், ச், ப்**

எழுத்து இலக்கணத்தில் வரி வடிவத்தைவிட, ஒலி வடிவம் முதன்மையானது, ஒலியை அடிப்படையாகக் கொண்டே, எழுத்துகளின் இலக்கணம் சொல்லப்படுகிறது,

**எழுத்தின் வகைகள்**

எழுத்துகளை **முதல் எழுத்து** என்றும் **சார்பு எழுத்து** என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். மொழிக்கு முதற்காரணமாகவும் பிற எழுத்துகள் தோன்றவும் ஒலிக்கவும் காரணமாக இருக்கும் எழுத்துகள் **முதல் எழுத்துகள்** எனப்படும்.

முதல் எழுத்துகளைச் சார்ந்து வரக்கூடிய எழுத்துகளைச் **சார்பு எழுத்துகள்** என்கிறோம். இதைப் பின் வரும் விளக்கப்படம் எடுத்துக்காட்டுகிறது.




**முதல் எழுத்துகள்** பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பதினெட்டு மெய் எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். சொற்களை உருவாக்க இவையே அடிப்படையாக இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்கிறோம்.




- **உயிர் எழுத்துகளும் அமைப்பு முறையும்**

தமிழில், அடிப்படை ஒலிகளான அ முதல் ஔ வரை உள்ள ஒலிகளை - எழுத்துகளை உயிர் எழுத்துகள் என்கிறோம். இவை அமைந்துள்ள முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ**

இந்தப் பன்னிரண்டு எழுத்துகளும் இயல்பாகவும் எளிதாகவும் ஒலிக்கக் கூடியனவாக உள்ளன.

உயிர் எழுத்தை ஆவி எழுத்து என்றும் குறிப்பிடுவர். ஆவி என்றால் உயிர் என்று பொருள்.

- **மெய் எழுத்துகளும் அமைப்பு முறையும்**

உயிர் எழுத்துகளைப் போலவே மொழிக்கு அடிப்படையாக உள்ள மற்றொரு வகை எழுத்துகள் **மெய் எழுத்துகள்** ஆகும்.

க், ங், ச் முதலியன மெய் எழுத்துகள் ஆகும். மெய் எழுத்துகளும் அவை வரிசையில் அமைந்துள்ள முறையும் கீழே தரப்பட்டுள்ளன.

**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்**

இந்த எழுத்துகளை ஒலிப்பது சற்றுக் கடினம். உயிர் இல்லாமல் உடல் இயங்காது. அதுபோல இந்த எழுத்துகள் உயிர் எழுத்துகளுடன் சேர்ந்தே

இயங்கும், அதனால் இவற்றை மெய் எழுத்துகள் என்று கூறுவர். மெய் என்பதும் உடம்பு என்பதும் ஒரே பொருள் தரும் சொற்கள் ஆகும். மெய் எழுத்துகளை **ஒற்று எழுத்துகள்** என்றும் கூறுவர். இந்த எழுத்துகள் புள்ளியுடன் இருப்பதால் இவற்றைப் **புள்ளி எழுத்து** என்றும் கூறுவர். உயிர் எழுத்துகள் 12, மெய்யெழுத்துகள் 18 ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும்.

**'உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே' (59)**

என்னும் **நன்னூல் நூற்பா** இதை விளக்குகிறது.

**சார்பு எழுத்துகள்**

- தமிழ் மொழியில் உயிர் எழுத்துகள் மெய் எழுத்துகள் மட்டும் அல்லாமல் வேறு சில வகை எழுத்துகளும் உள்ளன.
- இவை முதல் எழுத்துகளின் அடிப்படையில், அவற்றின் கூட்டாக அமைகின்றன.
- அதாவது முதல் எழுத்துகளைச் **சார்ந்து** (துணைஎழுத்தாக) நிற்கின்றன.
- எனவே **சார்பு எழுத்துகள்** என அழைக்கப்படுகின்றன.
- **உயிர்மெய், ஆய்தம்** முதலிய எழுத்துகள் சார்பு எழுத்துகள் ஆகும்.

**1. உயிர்மெய்**

- உயிர் (ஒலியும்) எழுத்துகளும் மெய் (ஒலியும்) எழுத்துகளும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகள் உண்டாகின்றன.
- உயிர் ஒலியே எல்லாவற்றுக்கும் அடிப்படை என்பதால் அதற்கு முதல் இடம் தந்து, 'உயிர்மெய்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

**உயிர்மெய் = 216**

1. மெய் + உயிர் = உயிர்மெய்
2. உயிரும் மெய்யும் சேர்ந்த ஒலிவடிவம்
3. வரிவடிவம் = மெய்யெழுத்தை ஒத்திருக்கும்
4. மாத்திரை = உயிர் எழுத்தை ஒத்திருக்கும்
5. முதலெழுத்தைச் சார்ந்து வருவதால் சார்பெழுத்து ஆகும்

- இந்த எழுத்துகள் எல்லாம் உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் சேர்ந்து உருவாகிய எழுத்துகள் என்பதால்,

| | | | | |
|---|---|---|---|---|
| க் | + | அ | = | க |
| க் | + | ஆ | = | கா |
| க் | + | இ | = | கி |
| க் | + | ஈ | = | கீ |
| க் | + | உ | = | கு |
| க் | + | ஊ | = | கூ |
| க் | + | எ | = | கெ |
| க் | + | ஏ | = | கே |
| க் | + | ஐ | = | கை |
| க் | + | ஒ | = | கொ |
| க் | + | ஓ | = | கோ |
| க் | + | ஔ | = | கௌ |

இவற்றை **உயிர்மெய் எழுத்துகள்** என்று அழைக்கிறோம்.

- மேலே காட்டிய எழுத்துகளை நீங்களும் ஒலித்துப் பாருங்கள், இந்த எழுத்துகளில் மெய் எழுத்தின் ஓசையும், உயிர் எழுத்தின் ஓசையும் இணைந்து இருப்பதைக் காணலாம்.
- உயிர் எழுத்துகளுக்கு உரிய மாத்திரையே உயிர்மெய் எழுத்துகளுக்கும் பொருந்தும். அதாவது உயிர்மெய்க் குறில் எழுத்துகள் ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெடில் எழுத்துகள் இரண்டு மாத்திரையும் பெறும். உயிர்மெய் எழுத்துகள் மெய் எழுத்துகளைப் போலவே வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று இனமாகவும் வரும்.
- உயிர்மெய் எழுத்துகளின் ஒலிவடிவம் உயிர் எழுத்தின் ஓசையும் மெய் எழுத்தின் ஓசையும் கலந்ததாக இருக்கும். உயிர்மெய் எழுத்துகளை ஒலித்து, அதில் மெய்யின் ஓசையும் உயிர் எழுத்தின் ஓசையும் கலந்து இருப்பதை அறிக.
- உயிர்மெய் எழுத்துகளில் மெய் எழுத்து முன்னும் உயிர் எழுத்து பின்னும் வரும்.

**க = க் + அ**
**மு = ம் + உ**

- உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவம் மெய் எழுத்துகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.
எடுத்துக்காட்டு:
- **க் = க, கா, கி, கீ**
**ப் = பி, பு, பெ, பை**
**ட் = டி, டீ, டொ, டோ**
- உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவம் பின்வருமாறு அமையும்.
- அகர உயிருடன் கூடிய மெய் எழுத்துகள், புள்ளி இல்லாத மெய் எழுத்தாக இருக்கும்.
**க, ங, ச, ஞ, ட**

- மற்ற உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வரும்போது மேற்கண்ட வடிவத்தில் சில மாற்றங்கள் பெற்று வரும்.
- ஆகார உயிருடன் சேர்ந்த மெய் எழுத்துகள், அகரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகளுடன் வலதுபக்கம் கால் '**ா**' பெற்று வரும்.
  **கா, சா, ஞா, டா**
- இகர உயிருடன் சேர்ந்த மெய் எழுத்துகள் மேலே 'ி' குறியீடு பெற்று வரும்
- **பி, சி, தி, டி**
- ஈகார உயிருடன் சேர்ந்த மெய் எழுத்துகள் மேலே 'ீ' குறியீடு பெற்று வரும்
  **நீ, ளீ, ரீ, தீ**
- உகரத்துடன் கூடிய மெய் எழுத்துகள் தனியான குறியீடு இல்லாமல் முழு உருவமும் மாறி வரும்.
  **கு, ஙு, சு, ஞு, டு, ணு, து, நு, பு,மு, யு, ரு, லு, வு, ழு, ளு, று, னு.**
- ஊகாரத்துடன் கூடிய மெய் எழுத்துகளும் தனிக் குறியீடு இல்லாமல் மாறி வரும்.
  **கூ, ஙூ, சூ, ஞூ, டூ, ணூ, தூ, நூ. பூ,மூ, யூ, ரூ, லூ, வூ, ழூ, ளூ, றூ, னூ.**
- எகரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகள் இடதுபக்கம் ஒற்றைக் கொம்பு என்னும் 'ெ' குறியீடு பெற்று வரும்.
  **கெ, செ, டெ, மெ**
- ஏகாரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகள் இடதுபக்கம் இரட்டைக் கொம்பு என்னும் 'ே' குறியீடு பெற்று வரும்.
  **கே, பே, ளே, வே, யே**
- ஐகாரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகள் இடதுபக்கம் 'ை'என்ற குறியீட்டைப் பெற்று வரும்.
  **மை, லை, றை, ழை, னை**
- ஒகரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகள் இடதுபக்கம் 'ெ'என்ற குறியீடும், வலதுபக்கம் '**ா**' என்ற குறியீடும் பெற்று வரும்.
  **பொ, யொ, றொ, சொ**
- ஓகாரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகள் இடதுபக்கம் 'ே'என்ற குறியீடும், வலதுபக்கம் '**ா**' என்ற குறியீடும் பெற்று வரும்.
  **கோ, டோ, மோ, யோ, ழோ**
- ஔகாரத்துடன் சேர்ந்த மெய் எழுத்துகள் இடதுபக்கம் 'ெ'என்ற குறியீடும், வலதுபக்கம் '**ள**' என்ற குறியீடும் பெற்று வரும்.
  **பௌ, சௌ, நௌ, ரௌ**

- **புள்ளி விட்டு அவ்வொடு முன் உரு ஆகியும் ஏனை உயிரொடு உருவு திரிந்தும் உயிர் அளபாய் அதன் வடிவு ஒழித்து இருவயின்**
  **பெயரொடும் ஒற்று முன்னாய் வரும் உயிர் மெய்**
  ***(நன்னூல் 89)***
- **பொருள்:** *அகர உயிர் எழுத்துடன் சேர்ந்து வரும்போது புள்ளி இல்லாமலும் மற்ற உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வரும்போது வடிவம் திரிந்தும் வரும். மாத்திரை கொள்ளும்போது உயிர்எழுத்தின் மாத்திரையே கொண்டு வரும். மெய் எழுத்து முன்பும் உயிர் எழுத்து பின்பும் வந்து உயிர் மெய் என்று இரண்டின் பெயரையும் பெற்று வரும்.)*

**2. ஆய்தம்**

தமிழ் மொழியில் ஃ என்று ஓர் எழுத்து உள்ளது, இதை**ஆய்த எழுத்து** என்று சுட்டுவர்.

**ஃ**

இது சொற்களில் பின்வருமாறு வரும்.




**அஃது, எஃகு**

- ஆய்த எழுத்து ஃ என்ற முக்கோண வடிவத்தில் உள்ளது. இதில் மூன்று புள்ளிகள் இருப்பதால் இதை **முப்புள்ளி, முப்பாற்புள்ளி** என்றும் அழைப்பர்.
- ஆய்த எழுத்து உயிர் எழுத்தோடும் மெய் எழுத்தோடும் ஒன்றாமல் இருப்பதால் இதைத் **தனிநிலை** என்றும் சுட்டுவர்.
- ஆய்த எழுத்துகள் சொல்லில் வரும்போது, அதற்கு முன்னும் பின்னும் வேறு எழுத்துகள் வருகின்றன.
- ஆய்த எழுத்தும் மற்ற எழுத்துகளைச் சார்ந்தே வருகிறது. எனவே இதுவும் சார்பு எழுத்து எனப்படுகிறது.

- தமிழில் வேறு சில சார்பு எழுத்துகளும் உள்ளன.

**குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்தே**
***(நன்னூல் 90)***
***பொருள்:***

ஆய்த எழுத்து குறில் எழுத்திற்குப் பின்பும், குற்றியலுகர எழுத்திற்கு முன்பும் வரும்.

**உயிரளபெடை**

பழங்காலத்தில் தமிழ் மொழியில் இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுள்களாகவே இருந்தன. செய்யுள், ஓசையை அடிப்படையாகக் கொண்டது. குறள் வெண்பா முதல் பல வகையான செய்யுள் வடிவங்கள் இருந்தன. செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் ஓசையை நிறைவு செய்வதற்காக எழுத்துகள் நீண்டு ஒலிக்கும். இவ்வாறு நீண்டு ஒலிப்பதை, **அளபெடுத்தல்** என்று கூறுவர். அளபெடை இரண்டு வகைப்படும். அவை,




| | |
|---|---|
| *1. உயிரளபெடை* | *2. ஒற்றளபெடை* |

என்பவை ஆகும்.

நெடில் எழுத்துகளே அளபெடுக்கும். நெடில் எழுத்து அளபெடுக்கும் போது, அந்த நெடில் எழுத்திற்கு இனமான குறில் எழுத்து அளபெடுப்பதற்கு அடையாளமாக அதன் அருகில் எழுதப்படும். செய்யுளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ள இடங்களில் நீட்டி ஒலிக்க வேண்டும் என்பது அதன் கருத்தாகும். நெடில் எழுத்து இரண்டு மாத்திரை. அளபெடுக்கும்போது அதற்கு இனமான குறில் எழுத்தையும் எழுதுவதால், குறிலுக்கு உரிய ஒரு மாத்திரையும் சேர்த்து உயிரளபெடை மூன்று மாத்திரை நேரம் ஒலிக்கும்.

இன எழுத்துகள் ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என்பனவாகும், ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் இணையான குறில் இல்லை என்பதால், முறையே இகரம், உகரம் ஆகியவை அடையாளமாக எழுதப்படும்.

மாஅயோள்
பேஎய்ப் பக்கம்

**இசை கெடின் மொழி முதல் இடை கடை நிலை நெடில்**
**அளபு எழும் அவற்று அவற்று இனக் குறில் குறியே**

***(நன்னூல் 91)***

***(பொருள்:*** செய்யுளில் ஓசை குறையும்போது சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் நெடில் எழுத்து நீண்டு ஒலிக்கும். அதற்கு அடையாளமாகக் குறில் எழுத்து எழுதப்படும்.)

பொதுவாக, செய்யுளில் ஏற்படும் ஓசைக் குறைவை நிறைவு செய்யவே அளபெடுக்கிறது. எனினும் வேறு காரணங்களுக்காக அளபெடுப்பதும் உண்டு. உயிரளபெடை நான்கு வகைப்படும்.

| |
|---|
| *1. இயற்கை அளபெடை* |
| *2. சொல்லிசை அளபெடை* |
| *3. இன்னிசை அளபெடை* |
| *4. செய்யுளிசை அளபெடை.* |

***1. இயற்கை அளபெடை***

இயல்பாகவே சொல்லில் வரும் எழுத்துகள் அளபெடுத்து நின்றால் அதை **இயற்கை அளபெடை** என்று கூறுவர்.

மரூஉ, ஒரூஉ, ஆடூஉ, மகடூஉ, குரீஇ
குழூஉக்குறி, குளாஅம்பல்
பேரூர்கிழாஅன்

இவை இயற்கையாகவே அளபெடுப்பதால் இயற்கை அளபெடை எனப்படுகின்றன

***2. சொல்லிசை அளபெடை***

ஒரு பெயர்ச் சொல்லை வினை எச்சமாக மாற்றுவது **சொல்லிசை அளபெடை** எனப்படும்.

**நசை** என்பது **விருப்பம்** என்று பொருள்படும். அதையே **நசைஇ** என்று அளபெடை ஆக்கினால், **விரும்பி** என்று பொருள் தரும். இதுவே சொல்லிசை அளபெடை ஆகும்

தொகை **தொகைஇ** (தொகுத்து)

வளை **வளைஇ** (வளைத்து)

***3. இன்னிசை அளபெடை***

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக குறில் எழுத்துகள்

நெடில் எழுத்துகள் ஆகி, அளபெடுத்தல் **இன்னிசை அளபெடை** ஆகும்.

**கெடுப்பதூஉம்** கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
**எடுப்பதூஉம்** எல்லாம் மழை

கெடுப்பதும் என்ற சொல்லில் உள்ள **து** என்ற குறில்எழுத்து, **தூ** என நெடில் எழுத்தாகி, கெடுப்ப**தூ**உம் என அளபெடுத்தல் இன்னிசை அளபெடை ஆகும்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் **உடுப்பதூஉம்**

**உண்பதூஉம்** இன்றிக் கெடும்

இந்தக் குறளில் உள்ள உடுப்ப**தூஉ**ம் உண்ப**தூஉம்** என்ற இரண்டும் இன்னிசை அளபெடைகளே.

***4.செய்யுளிசை அளபெடை***

செய்யுளில் ஓசை குறையும்போது அளபெடுத்து ஓசையை நிறைவு செய்வது **செய்யுளிசை அளபெடை** ஆகும்.

தெய்வம் **தொழாஅள்** கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

இந்தக் குறளில் தொழாள் என்று இயல்பாக இருந்தால், அது ஒரே நிரை அசை ஆகிவிடும். இந்த இடத்தில் ஓசை கெடாமல் இருக்க நிரை, நேர் என்ற இரு அசைகள் தேவை. தொழாஅள் என்று அளபெடுத்தபின், ***தொழா*** என்பது நிரை அசையாகவும், **அள்** என்பது நேர் அசையாகவும் அமைந்து ஓசையை நிறைவு செய்கின்றன. செய்யுளிசை அளபெடையை அறிந்து கொள்ள யாப்பிலக்கணம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். யாப்பிலக்கணப் பாடங்களில் அளபெடை பற்றி விரிவாக விளக்கப்படும்.

பயிலியது கெ**ழீஇ**ய நட்பின் மயிலியல்

**ஓஒ**தல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

**ஆஅ**தும் என்னு மவர்

நற்றாள் தொ**ழாஅ**ர் எனின்

என்று வரும் இவையும் செய்யுளிசை அளபெடை ஆகும். செய்யுளிசை அளபெடை சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும். செய்யுளிசை அளபெடையை **இசைநிறை அளபெடை** என்றும் கூறுவர்

அளபெடைச் சொற்களைச் சொல்லும் போது, நெடில் எழுத்தைத் தனியாகவும் அதனோடு ஒட்டி வரும் குறில் எழுத்தைத் தனியாகவும் ஒலிக்கக் கூடாது. இரண்டு எழுத்துகளின் ஓசையும் ஒட்டி வரும்படியே நீட்டி ஒலிக்க வேண்டும். அளபெடையில் எழுத்துகளை விட்டு இசைப்பது ஓசை இனிமையைக் கெடுக்கும்.

**கெடுப்பதூஉம்** கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே
**எடுப்பதூஉம்** எல்லாம் மழை
நமச்சிவாய **வாஅழ்க** நாதன் தாள் வாழ்க

***ஒற்றளபெடை***

உயிர் எழுத்துகள் அளபெடுப்பது போலவே மெய் எழுத்துகளும் அளபெடுக்கும். மெய் எழுத்து அளபெடுக்கும்போது, அதற்கு அடையாளமாக, அதே மெய் எழுத்து எழுதப்படும். ங், ஞ். ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்எழுத்துகளும் ஆய்த எழுத்தும் அளபெடுக்கும். ஒரு மெய்எழுத்து அரை மாத்திரை நேரம் ஒலிக்கும் என்று கூறப்பட்டது. மெய்எழுத்து அளபெடுக்கும்போது இரண்டு மெய்எழுத்துகள் வருவதால், இரண்டும் சேர்ந்து ஒரு மாத்திரை நேரம் ஒலிக்கும்.

வணங்ங்கினான்.
மன்ன்னன்

***ங, ஞ. ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தம் அளபு ஆம், குறில் இணை, குறில் கீழ், இடை, கடை மிகலே அவற்றின் குறி ஆம் வேறே***

***(நன்னூல் 92)***

***பொருள்:*** செய்யுளில் ஓசை குறையும்போது, குறில் எழுத்தை அடுத்தும், தொடர்ந்து வரும் இரண்டு குறில் எழுத்துகளை அடுத்தும், சொல்லின் இடையிலும் இறுதியிலும் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய மெய் எழுத்துகளும் ஆய்த எழுத்தும் நீண்டு ஒலிக்கும். அளபெடுப்பதற்கு அடையாளமாக அதே மெய்எழுத்து எழுதப்படும்.)

***பெயர்:*** ஒற்றளபெடை

***எழுத்துகள்:***

ங், ஞ்,ண்,ந்,ம்,ன்,வ்,ய்,ல்,ள், ஃ

***வரும் இடம்:***

ஒரு குறில் எழுத்து }
இரு குறில் எழுத்து } இவற்றுக்குப் பிறகு

சொல்லின் }
முதல் }
இடை }
இறுதி } ஆகிய இடங்களில் அளபெடுக்கும்

***அடையாளம்:***

அதே எழுத்து மீண்டும் எழுதப்படும்.

***குற்றியலுகரம்***

உகரம் ஒரு மாத்திரை உடையது. இந்த ஒரு மாத்திரை அளவும் குறைந்து (குறுகி) ஒலிக்கிற இடங்களும் உண்டு. அப்போது அது **குற்றியலுகரம்** (குறுகி ஒலிக்கின்ற உகரம்) என்று அழைக்கப்படும்.

அதற்குச் சில வரையறைகள் உண்டு.

- வல்லின மெய்களோடு சேர்ந்த உகரம் மட்டுமே குற்றியலுகரமாக வருவதற்கு வாய்ப்பு உண்டு. அதாவது, கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு எழுத்துகள் மட்டுமே இந்த வகையில் அடங்கும்.
- இந்த ஆறும் சொல்லின் கடைசி எழுத்தாக இருக்க வேண்டும். **எடுத்துக்காட்டு:** பாக்கு, பேசு, நாடு, காது, அம்பு, ஆறு.
- தனிக்குறில் எழுத்தை அடுத்து வந்தால் அது குற்றியலுகரம் ஆகாது. **எடுத்துக்காட்டு:** அது, பசு, வடு, அறு முதலியவை.

குற்றியலுகரத்தை **ஆறு** வகையாகப் பிரிக்கலாம். அவை,

- **நெடில் தொடர்க் குற்றியலுகரம்**
- **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்**
- **உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்**
- **வன்தொடர்க் குற்றியலுகரம்**
- **மென்தொடர்க் குற்றியலுகரம்**
- **இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

என்பவை ஆகும்.

***1. நெடில் தொடர்க் குற்றியலுகரம்***

தனியாக உள்ள நெடில் எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்தால் **நெடில் தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

**எ.டு :** பாகு, மூசு, பாடு, காது, ஆறு

***2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்***

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு ,து, பு, று என்னும் எழுத்துகள் வந்தால் **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

**எ.டு :** அஃது (அது என்பது பொருள்) கஃசு (பழங்காலத்து நாணயம் ஒன்று)

***3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்***

உயிர் எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்தால் **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

நெடில் எழுத்துகள், நெடில் தொடர்க் குற்றியலுகரத்தில் இடம் பெற்றதால் உயிர்மெய் எழுத்துகளில் உள்ள குறில் எழுத்துகள் மட்டும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தில் வரும். எனவே, இது, **குறில்தொடர்க் குற்றியலுகரம்** என்றும் அழைக்கப்படும்.

உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தில் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் மட்டுமே வரும்.

**எ.டு :** வரகு, தவிசு, முரடு, வயது, கிணறு

***4. வன்தொடர்க் குற்றியலுகரம்***

வல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்தால் **வன்தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

**எ.டு :**பாக்கு,கச்சு, பட்டு, பத்து, மூப்பு, காற்று

***5. மென்தொடர்க் குற்றியலுகரம்***

மெல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்தால் **மென்தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

**எ.டு :** சங்கு, பஞ்சு, நண்டு, பந்து, பாம்பு, கன்று

***6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்***

இடையின மெய் எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்தால் **இடைத்தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

**எ.டு :** மூழ்கு, செய்து, மார்பு, பல்கு

***முற்றியலுகரம்***

மேலே காட்டிய கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகள் தனிக் குறிலை அடுத்து வந்தால் ஓசை குறைவதில்லை.

நகு, பசு, தடு, எது, மறு

கு, சு, டு, து, பு, று ஆகிய வல்லின மெய்யுடன் கூடிய உகர எழுத்துகள் வந்தாலும், முதல் எழுத்து, குறில் எழுத்தாக இருப்பதால், இவை **குற்றியலுகரம் அல்ல.**

மெல்லின, இடையின மெய்களோடு சேர்ந்த உகரமும் சொல்லுக்கு இறுதியில் வரும்போது குறைந்து ஒலிப்பதில்லை.

அணு, தனு, உறுமு, குழுமு, தும்மு, பஞு, எரு, ஏவு இரவு, நிறைவு, உறவு, விரிவு, ஓய்வு, பிறழ்வு, நிகழ்வு, வலு, ஏழு, உழு, துள்ளு

மேலே காட்டப்பட்டுள்ள சொற்களின் இறுதியில் மெல்லின, இடையின மெய் எழுத்துகள் உகரத்துடன் சேர்ந்து வந்துள்ளன. அவை குறைந்து ஒலிப்பதில்லை. எனவே அவை குற்றியலுகரம் அல்ல. ஒரு சொல்லின் இறுதியில் உள்ள உகரம் குறைந்து ஒலிக்காமல் முழு அளவில் ஒலிக்குமாயின் அது **முற்றியலுகரம்** எனப்படும். மேலே காட்டியுள்ள சொற்களில் உள்ள உகரங்கள் எல்லாம் முற்றியலுகரங்கள் ஆகும்.

ஒரு சொல்லின் இறுதியில் வரும் உகரம் முற்றியலுகரமாகவோ குற்றியலுகரமாகவோ இருக்கும்.

**குற்றியலிகரம்**

உகரம் சில இடங்களில் குறுகி, குற்றியலுகரம் ஆவது போலவே, இகரமும் சில இடங்களில் குறுகும். இவ்வாறு இகரம் குறுகி வருவதைக் **குற்றியலிகரம்** என்று கூறுவர். குற்றியலிகரம் **இரண்டு** வகையாக வரும்.

**தனிமொழிக் குற்றியலிகரம்**

**மியா** என்ற அசைச்சொல்லில் ம் என்ற எழுத்தோடு சேர்ந்த இகரம் குறுகும். இதில் **ம்** என்ற எழுத்திற்குப் பின் யகரம் வருவதால் குறைந்து ஒலிக்கிறது. இதுவே **தனிமொழிக் குற்றியலிகரம்** ஆகும்.

கேண்**மி**யா
சென்**மி**யா

இந்தச் சொற்களில் உள்ள **'மி'** என்ற எழுத்தில் உள்ள இகரம் தனக்கு இயல்பான ஒரு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும்.

**புணர்மொழிக் குற்றியலிகரம்**

புணர்மொழி என்பது இரண்டு சொற்கள் சேர்ந்து வருவதாகும். **புணர்மொழிக் குற்றியலிகரம்** என்பது இரண்டு சொற்கள் சேரும்போது உருவாகும் குற்றியலிகரம் ஆகும். முதலில் உள்ள சொல்லின் இறுதியில் குற்றியலுகர எழுத்து வந்து, இரண்டாம் சொல் **'ய'** என்ற எழுத்தில் தொடங்கும்போது, குற்றியலுகரத்தில் உள்ள உகரமானது, இகரமாகத் திரியும். அவ்வாறு திரிந்த இகரம், உகரம் குறைந்து ஒலிப்பது போலவே அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.

நாடு(ட்+உ) + யாது = நா**டி**யாது(ட்+இ)

களிற்று(ற்+உ)+யானை = களிற்**றி**யானை(ற்+இ)

கொக்கு(க்+உ) + யாது = கொக்**கி**யாது(க்+இ)

குரங்கு(க்+உ) + யாது = குரங்**கி**யாது(க்+இ)

**யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்**
**அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய - (நன்னூல் 93)**

**பொருள்:** இரண்டு சொற்கள் சேரும் இடத்தில் முதல் சொல்லின் இறுதியில் வரும் குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இரண்டாம் சொல்லின் முதலில் யகரம் வரும்போது இகரமாக மாறும். இந்த இகரமும் அசைச் சொல்லாகிய மியா என்பதில் உள்ள இகரமும் குறைந்து ஒலிக்கும்.

**குறுக்கங்கள்**

குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகிய இரண்டிலும் உகரம் குறுகி ஒலிப்பதைப் பற்றிப் படித்தோம். அதைப்போல, ஐ, ஔ, ம், ஆய்தம் ஆகியவையும் குறுகி ஒலிக்கும். இவற்றை

- ஐகாரக் குறுக்கும்,
- ஔகாரக் குறுக்கம்,
- மகரக் குறுக்கம்
- ஆய்தக் குறுக்கம் என்று சொல்கிறோம்.

***1. ஐகாரக்குறுக்கம்***

ஐ என்கிற உயிர் எழுத்து சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும்.

**ஐ**ப்பசி, **வை**கல் - முதல், க**டை**சி, இ**றை**வன் - இடை
ம**ழை**, ந**கை** , க**டை** - இறுதி

மேலே ஐ என்ற எழுத்து, சொல்லின் மூன்று இடங்களிலும் வந்திருப்பதைக் காணலாம். ஐ என்பது நெடில் எழுத்து என்று முன்பே கூறப்பட்டது. நெடில் எழுத்து என்பதால் ஐகாரம் இரண்டு மாத்திரை நேரம் ஒலிக்கும். தனியே இருக்கும் ஐகாரம் மட்டுமே இவ்வாறு இரண்டு மாத்திரை ஒலிக்கும். சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் ஐகாரம் இரண்டு மாத்திரையில் குறைந்து ஒரு மாத்திரையாக ஒலிக்கும். இதை **ஐகாரக் குறுக்கம்** என்று கூறுவர்.

மேலே காட்டியுள்ள எடுத்துக்காட்டுகளில் உள்ள ஐகாரம், இரண்டு மாத்திரையில் இருந்து

குறைந்து ஒரு மாத்திரையாகவே ஒலிக்கும். ஐகாரம் அளபெடுக்கும் போது குறைந்து ஒலிப்பதில்லை,

நசைஇ, அசைஇ

இந்த இடத்தில் ஐகாரத்திற்கு இரண்டு மாத்திரையும் இகரத்திற்கு ஒரு மாத்திரையும் வரும்.

***2. ஔகாரக்குறுக்கம்***

ஔகாரம் நெடில் எழுத்து என்பதால் இரண்டு மாத்திரை பெறும். ஔகாரம் சொல்லுக்கு முதலில் வரும்போது குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிப்பதை **ஔகாரக்குறுக்கம்** என்பர். ஔகாரக்கு றுக்கம் ஒரு மாத்திரை நேரம் ஒலிக்கும்.

**ஔ**வையார், **மௌ**வல், **வெள**வால்.

ஔகாரம் தனியே ஒலிக்கும்போது குறைந்து ஒலிப்பதில்லை.

***தற்சுட்டு அளபு ஒழி ஐம் மூவழியும்***
***நையும் ஔவும் முதல் அற்று ஆகும் - (நன்னூல் 95)***

***பொருள்:*** ஐகார எழுத்து சொல்லில் வரும்போது, தன்னைச்சுட்டிக் கூறும் இடத்திலும் அளபெடையிலும் தவிர மற்ற இடங்களில் (சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும்) குறைந்தே ஒலிக்கும். ஔகார எழுத்தும் சொல்லின் முதலில் வரும்போது குறைந்து ஒலிக்கும்.

***3. மகரக்குறுக்கம்***

மகரக்குறுக்கம் என்பது மகர ஒற்று, குறைந்து ஒலிப்பதைக் குறிக்கும். மகரக்குறுக்கம் இரண்டு வகைப்படும்.

- **தனிமொழி**

ணகர, னகர ஒற்று எழுத்துகளை அடுத்து வரும் மகரமெய் எழுத்து, குறைந்து ஒலிக்கும்.

மருண்ம்,உண்ம்
போன்ம், சென்ம்

- **புணர்மொழி**

இரண்டு சொற்கள் சேரும்போது, முதல் சொல்லின் இறுதியில் மகர ஒற்று வந்து, இரண்டாம் சொல்லின் முதல் எழுத்தாக வகரம் வந்தால் மகர ஒற்று குறுகும்.

தரும் வளவன்
வாழும் வகை

மகர ஒற்று அரை மாத்திரை ஒலிக்க வேண்டும். மேற்கண்ட இடங்களில் குறைந்து ஒலிக்கும் மகரக்குறுக்கம் கால் மாத்திரையே பெறும்.

**ண, ன முன்னும், வஃகான் மிசையும் மக்குறுகும்.**

***(நன்னூல். 96)***

**பொருள்:** வகரத்திற்கு முன்பும் ண், ன் மெய் எழுத்துகளுக்குப் பின்பும் மகர ஒற்று, குறைந்து ஒலிக்கும்.

***4. ஆய்தக்குறுக்கம்***

இரண்டு சொற்கள் சேரும்போது முதல் சொல்லின் இறுதியில் ல், ள் ஆகிய மெய் எழுத்துகள் வந்து இரண்டாம் சொல்லின் முதலில் தகர எழுத்து வந்தால் ல், ள் ஆகியவை ஆய்த எழுத்தாக மாறிவிடும்.

அல் + திணை = அஃறிணை

முள் + தீது = முஃடீது

இந்த ஆய்த எழுத்து, குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும். இதையே **ஆய்தக்குறுக்கம்** என்று கூறுவர்.

**ல, ள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம்** அஃகும்

***- (நன்னூல் 97)***

*(**பொருள்:** ல், ள் ஆகிய எழுத்துகள் ஆய்த எழுத்தாகத் திரியும். அந்த ஆய்த எழுத்து, குறைந்து ஒலிக்கும். )*

***• சார்பு எழுத்துகளுக்கு மாத்திரை***

சார்பு எழுத்துகள் எல்லாம் எப்படி மாத்திரை பெறும் என்பதைப் பின்வரும் பட்டியல் காட்டும்.

| | |
|---|---|
| உயிரளபெடை | **மூன்று** மாத்திரை |
| உயிர்மெய் நெடில் | **இரண்டு** மாத்திரை |
| உயிர்மெய்க் குறில் | **ஒரு** மாத்திரை |
| ஒற்றளபெடை | **ஒரு** மாத்திரை |
| ஐகாரக்குறுக்கம், | **ஒரு** மாத்திரை |
| ஔகாரக்குறுக்கம் | **ஒரு** மாத்திரை |
| குற்றியலுகரம், குற்றியலிகரம் | **அரை** மாத்திரை |
| ஆய்தம் | **அரை** மாத்திரை |
| மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் | **கால்** மாத்திரை |

**மூன்று உயிரளபு;**

**இரண்டு ஆம் நெடில்; ஒன்றே**
**குறிலோடு, ஐ, ஔக் குறுக்கம் ஒற்றளபு;**
**அரை ஒற்று. இ, உக் குறுக்கம், ஆய்தம்;**
**கால் குறள் மஃகான், ஆய்தம், மாத்திரை. - (நன்னூல். 99)**

**பொருள்:** உயிரளபெடை மூன்று மாத்திரை பெறும். உயிர்மெய்க்குறில், ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் ஆகியவை ஒரு மாத்திரை பெறும். மெய் எழுத்து, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகியவை அரை மாத்திரை பெறும். மகரக்குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் கால் மாத்திரை பெறும்.

சார்பு எழுத்துகளின் பத்து வகையையும் இப்பாடம் விளக்குகிறது. உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய் எழுத்து உருவாவதை இப்பாடத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

ஆய்த எழுத்தின் வடிவம், மாத்திரை முதலியவற்றை இப்பாடம் தெரிவிக்கிறது. அளபெடையின் வகைகளையும் அவை பற்றிய விளக்கங்களையும் குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவற்றையும் இப்பாடம் அறிவிக்கிறது.

ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் முதலியவை குறுகி வரும் தன்மையையும் அவற்றின் மாத்திரையையும் இப்பாடம் உணர்த்துகிறது.

**சார்பெழுத்துகளின் பிறப்பு**

| | |
|---|---|
| *(1)* உயிர்மெய் | *(6)* குற்றியலுகரம் |
| *(2)* ஆய்தம் | *(7)* ஐகாரக்குறுக்கம் |
| *(3)* உயிரளபெடை | *(8)* ஔகாரக்குறுக்கம் |
| *(4)* ஒற்றளபெடை | *(9)* மகரக்குறுக்கம் |
| *(5)* குற்றியலிகரம் | *(10)* ஆய்தக்குறுக்கம் |

ஆகியன.

சார்புஎழுத்துகளைப் பத்து என்று வகைப்படுத்தியிருப்பது நன்னூல். ஆனால் தொல்காப்பியம் சார்பெழுத்துகளை மூன்று என்று மட்டுமே தெரிவிக்கின்றது. அவை,

**(1) குற்றியலிகரம்**
**(2) குற்றியலுகரம்**
**(3) ஆய்தம்**

ஆகியன.

சார்பெழுத்துகள் பிறக்கும் முறையினைப் பற்றித் தொல்காப்பியமும் நன்னூலும் தெரிவிக்கும் கருத்துகளைத் தனித்தனியே காண்போம்.

**சார்பெழுத்துகள் பிறப்புப் பற்றித் தொல்காப்பியம்**

முதல் எழுத்துகளின் பிறப்பினை விளக்கிய பின்னர்ச் சார்புஎழுத்துகளின் பிறப்பினை எடுத்துக் கூறுகின்றது.

தாமே தனித்து வரும் இயல்பில்லாமல் சில எழுத்துகளைச் சார்ந்துவரும் இந்தச் சார்பு எழுத்துகள் மூன்றும் தத்தமக்குச் சார்பாகிய எழுத்துகளின் பிறப்பிடத்திலேயே பிறக்கும் என்று தொல்காப்பியம் விளக்குகிறது. *(எழுத்து. 3 : 10)*

ஆய்தம் மட்டும் குற்றெழுத்தைச் சார்ந்து வரும் எனினும், அது தலையில் தங்கி வெளிப்படும் காற்றினால் பிறப்பதால், உயிரோடு சேர்ந்து வரும், வல்லெழுத்தினைச் சார்ந்தே பிறக்கும். வல்லின மெய்கள் தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் எனத் தொல்காப்பியம் கூறும்.

**சார்பெழுத்துகள் பிறப்புப் பற்றி நன்னூல்**

இந்தப் பத்தினுள் ஆய்தம் பிறக்கும் இடம் தலை ஆகும். ஆய்தம் பிறப்பதற்குத் தேவைப்படும் முயற்சி வாயைத் திறத்தல். இது நீங்க, எஞ்சியிருக்கும் ஒன்பது சார்புஎழுத்துகளும் தத்தம் முதல் எழுத்துகள் பிறக்கும் இடத்தில் பிறப்பன. அந்த முதல் எழுத்துகளுக்குத் தேவைப்படும் முயற்சியே இவை பிறப்பதற்குத் தேவைப்படுவன. இதனை,

**ஆய்தக்கு இடம்தலை; அங்கா முயற்சி; சார்புஎழுத்து ஏனவும் தம்முதல் அனைய (நூற்பா. *86*)**

என்னும் நன்னூல் நூற்பா விளக்குகின்றது

& மெய்யெழுத்துகளின் பிறப்பும் மொழியியல் கருத்தும் தொல்காப்பியமும் நன்னூலும் மெய்யெழுத்துகள் பிறக்கின்ற இடத்தை அடிப்படையாக வைத்து மூன்று வகையாகப் பிரித்துள்ளன. அவை:

**வல்லின மெய்கள்-பிறப்பிடம் நெஞ்சு (நன்னூல்)**

தலை *(தொல்.)*

மெல்லின மெய்கள்-மூக்கு

இடையின மெய்கள்-கழுத்து *(மிடறு)*

மொழியியல் அறிஞர்களும் மெய்யொலிகளை முதலில் அவை பிறக்கின்ற இடத்தை வைத்துப் பிரிக்கின்றனர். அடுத்த நிலையில் அந்த மெய்யொலி பிறப்பதற்கு முயற்சியில் ஈடுபடும் உறுப்புகளின் அடிப்படையில் பிரிக்கின்றனர். எனவே மொழியியல் அறிஞர்கள் அறிவியல் முறைப்படி ஆராய்ந்து வெளியிட்டுள்ள பாகுபாடு, இலக்கண நூல்கள் கூறும் பிறப்பிலக்கண அடிப்படையில்

அமைந்திருக்கும் சிறப்பு வெளிப்படக் காண்கிறோம்.

பிறப்பிடம் குறித்த செய்திகள் ஒப்பிட்டு அனைத்தையும் ஆராய்வது மிகவும் நீண்டு விடும். எனவே, மெல்லின மெய்களின் பிறப்பிடத்தை மட்டும் ஒப்பிட்டுக் காண்பது போதுமானதாக அமையும்.

மொழியியல் அறிஞர்கள் மெல்லின மெய்களை அவற்றின் பிறப்பிடம் நோக்கி 'மூக்கொலி' *(Nasal)* என்று வரையறுக்கின்றனர். இந்த மூக்கொலிகளுள் ஒன்றாகிய மகரம் பிறப்பதை,

**இதழ்இயைந்து பிறக்கும் பகார மகாரம் (எழுத்து. 3 : 97)**

என்று தொல்காப்பியமும்,

**மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும் (நூற்பா. 80)**

என்று நன்னூலும் தெரிவிக்கின்றன.

மொழியியல் அறிஞர்கள் மகரத்தை முதலில் மூக்கொலி என்று வகைப்படுத்தி விட்டுப் பின்னர் அது ஈரிதழ் ஒலி என்று விளக்கிக் கூறுகின்றனர்.

### தொல்காப்பியர் கருத்து

தொல்காப்பியர், சொல் மூன்று முறைகளில் தோன்றும் என்று வகுத்துரைக்கிறார். அவை,

### ஓர்எழுத்து ஒருமொழி

தமிழில் உள்ள உயிர்எழுத்துகள் பன்னிரண்டில் நெடில் எழுத்துகளாக இருக்கும் ஏழு எழுத்துகளும் ஓர்எழுத்து ஒருமொழிகள் என்பதை,

**நெட்டெழுத்து ஏழே ஓர்எழுத்து ஒருமொழி (எழுத்து 2: 43)**

என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது.

இந்நூற்பா, ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவரும் ஏழு நெடில் எழுத்துகளும் பொருள் தருவன. எனவே இவை ஓர்எழுத்து ஒருமொழிகள் என்று விளக்குகின்றது. இந்த நெடில்எழுத்துகள் ஒவ்வொன்றிற்கும் என்ன பொருள் என்பதைக் காண்போம்.

| வ.எண் | எழுத்து | பொருள் |
|---|---|---|
| *(1)* | ஆ | பசு |
| *(2)* | ஈ | ஈ |
| *(3)* | ஊ | இறைச்சி |
| *(4)* | ஏ | அம்பு |
| *(5)* | ஐ | அழகு, தலைவன் |
| *(6)* | ஓ | மதகுநீர் தாங்கும் பலகை |
| *(7)* | ஔ | இந்த எழுத்திற்குப் பொருள் இல்லை |

மேலே கண்டவற்றுள் 'ஔ' என்னும் எழுத்து ஓர்எழுத்து ஒருமொழி ஆவதில்லை. எனவே உயிர்எழுத்துகளில் நெட்டெழுத்துகள் ஆறு மட்டுமே ஓர்எழுத்து ஒருமொழி என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உயிர் எழுத்துகளில் நெட்டெழுத்துகளைப் பற்றிக் கூறிய தொல்காப்பியம், குற்றெழுத்துகள் ஐந்தும் ஓர்எழுத்து ஒருமொழியாக வருதல் இல்லை என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

**குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே (எழுத். 2: 44)**

என்பது தொல்காப்பிய நூற்பா.

### உயிர் எழுத்தின் வகைகள்

உயிர் எழுத்துகள் இரண்டு வகைப்படும். அவை, ***1. குறில் 2. நெடில்*** என்பவை ஆகும்.




*1. குறில்*

- பன்னிரண்டு உயிர் எழுத்துகளில் சில எழுத்துகள் குறுகி ஒலிக்கின்றன.
- அவ்வாறு குறுகி ஒலிக்கும் எழுத்துகளைக் **குறில் எழுத்துகள்** என்று குறிப்பிடுவர்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை நோக்குங்கள்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

இவற்றில் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறைந்த அளவு நேரமே ஒலிப்பதால் இவற்றைக் **குற்றெழுத்து** அல்லது **குறில் எழுத்து** என்று குறிப்பர்.

***'அ, இ, உ, எ, ஒ, குறில் ஐந்தே' (64)***

என்னும் **நன்னூல் நூற்பா**, அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளும் குறில் எழுத்துகள் என்று குறிப்பிட்டுள்ளது.

*2.* **நெடில்**

- பன்னிரண்டு உயிர் எழுத்துகளில் சில எழுத்துகள் நீண்டு ஒலிக்கின்றன.
- அவ்வாறு நீண்டு ஒலிக்கும் எழுத்துகளை நெடில் எழுத்துகள் என்று குறிப்பிடுவர்.
- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துகளும் நீண்டு ஒலிப்பதால் **நெட்டெழுத்து** அல்லது **நெடில் எழுத்துகள்** என்று குறிக்கப்படும்.

**'ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில்'** *(65)*

என்னும் **நன்னூல் நூற்பா** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துகளும் நெடில் எழுத்துகள் என்று குறிப்பிட்டுள்ளது.

**மெய் எழுத்தின் வகைகள்**

- உயிர் எழுத்துகளில் இவ்வாறு குறில், நெடில் வேறுபாடு உண்டு, ஆனால் மெய் எழுத்துகளில் இவ்வாறான குறில், நெடில் வேறுபாடு இல்லை.
- உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உண்டாகும் உயிர்மெய் எழுத்துகளிலும் இதே போல குறில் நெடில் வேறுபாடு உண்டு.

மெய் எழுத்துகள் மூன்று வகைப்படும். அவை,

1. **வல்லினம்**
2. **மெல்லினம்**
3. **இடையினம்**

*1.* **வல்லினம்**

- மெய் எழுத்துகளில் வன்மையாக ஒலிக்கும் எழுத்துகளை வல்லினம் என்று கூறுவர்.
- க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு மெய் எழுத்துகளும் வன்மையாக ஒலிப்பதால் **வல்லின எழுத்துகள்** ஆகும்.

**வல்லினம் க, ச, ட, த, ப, ற என ஆறே** *(68)*

என்னும் **நன்னூல் நூற்பா** வல்லின எழுத்துகள் எவை என்று குறிக்கிறது.

*2.* **மெல்லினம்**

- மெய் எழுத்துகளில் மென்மையாக ஒலிக்கும் எழுத்துகளை மெல்லினம் என்று கூறுவர்.
- ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறு மெய் எழுத்துகளும் மென்மையாக ஒலிப்பதால் **மெல்லின எழுத்துகள்** ஆகும்.

**மெல்லினம் ங, ஞ, ண, ந, ம, ன என ஆறே** *(69)*

என்னும் **நன்னூல் நூற்பா** மெல்லின எழுத்துகள் எவை என்று குறிக்கிறது.

*3.* **இடையினம்**

- மெய் எழுத்துகளில் வன்மைக்கும் மென்மைக்கும் இடையில் ஒலிக்கும் எழுத்துகளை இடையினம் என்று கூறுவர்.
- ய், ர், ல், வ், ழ், ள் என்ற ஆறு மெய் எழுத்துகளும் வன்மைக்கும் மென்மைக்கும் இடையில் ஒலிப்பதால் **இடையின எழுத்துகள்** ஆகும்.

**இடையினம் ய, ர, ல, வ, ழ, ள என ஆறே** *(70)*

என்னும் **நன்னூல் நூற்பா** இடையின எழுத்துகள் எவை என்று குறிக்கிறது.

**மெய்யெழுத்துகளின் பிறப்பிடம்**

ஒற்றுமைகள்

*(1)* இரு நூல்களும் மெல்லின மெய்கள் மூக்கில் இருந்து தோன்றுகின்றன என்று கூறுகின்றன.

*(2)* இரு நூல்களும் இடையின மெய்கள் கழுத்தில் இருந்து தோன்றுகின்றன என்பதில் ஒற்றுமையாக இருக்கின்றன.

**வேற்றுமை**

தொல்காப்பியம் வல்லின மெய்கள் தலையில் இருந்து தோன்றுகின்றன என்று கூறுகிறது.

நன்னூலோ வல்லின மெய்கள் நெஞ்சில் இருந்து பிறக்கின்றன என்று உரைக்கின்றது.

ஆறு இடையின எழுத்துகள் அவை பிறக்கும் இயல்பிற்கு ஏற்ப நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

*(1)* **ய்**
*(2)* **ர் ழ்**
*(3)* **ல் ள்**
*(4)* **வ்**

என்பன.

இடையின மெய்களின் பிறப்பினை விளக்குவதில் தொல்காப்பியமும் நன்னூலும் பெரிதும் வேறுபடவில்லை. எனவே, அவை ஒவ்வொரு இடையின மெய்யெழுத்தினையும் விளக்குவதைச் சேர்த்தே அறிந்து கொள்ளலாம்.

**யகர மெய்யெழுத்தின் பிறப்பு**

யகர மெய், மேல்வாயை நாவின் அடிப்பகுதி சேரும் போது, கழுத்தில் இருந்து எழும் காற்று மேல்வாயைச் சென்று அடையப் பிறக்கும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

தொல்காப்பியம் பல், இதழ் என்று பொதுவாகக் கூறியிருப்பதைச் சற்று விளக்கமாக மேற்பல் என்றும் கீழ் இதழ் என்றும் நன்னூல் பிரித்துக் காட்டி விளக்கியுள்ளது.

**யகர மெய் பிறப்பதை நன்னூலும்,**

***அடிநா அடிஅணம் உறயத் தோன்றும் (நூற்பா. 81)***

என்ற நூற்பாவில் விளக்குகின்றது. நாக்கின் அடியானது மேல்வாய் அடியைச் சென்று பொருந்த யகரம் பிறக்கும் என்று நன்னூல் சுருக்கமாகக் கூறுகின்றது.

**ர ழ – மெய்களின் பிறப்பு**

மேல்வாய் நுனியை நாக்கின் நுனி வருடும் போது ர், ழ் மெய்கள் தோன்றுகின்றன எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன.

**ரகர, ழகர மெய்களின் பிறப்பினை நன்னூல்,**

***அண்ணம் நுனிநா வருட ர ழ வரும் (நூற்பா. 82)***

என்று கூறுகின்றது.

**ல் ள் – மெய்களின் பிறப்பு**

ல் ள் என்னும் இரண்டு இடையின மெய்களும் உச்சரிப்பில் சிறிதளவே வேறுபாடு உடையவை. எனினும் அவற்றிற்கு இடையில் வேறுபாடு தோன்றுமாறு ஒலித்துப் பழகுவதே சிறப்பு.

மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியை நாவின் ஓரமானது (விளிம்பு) தடித்துப் பொருந்தும் (ஒற்றும்) போது லகர மெய் தோன்றும்; மேல்வாயை நாவின் ஓரமானது தடித்துத் தடவ (வருட) ளகர மெய் தோன்றும். இதனை, நன்னூல் பின்வரும் நூற்பாவில் விளக்குகின்றது.

***அண்பல் முதலும் அண்ணமும் முறையின் நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும் லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும் (நூற்பா. 83)***

**வகர மெய்யின் பிறப்பு**

மேற்பல் கீழ் இதழோடு இயைந்து பொருந்த வகர மெய் தோன்றுகிறது. இதனைத் தொல்காப்பியம்,

***பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும் (எழுத்து. 3 : 98)***

என்று கூறுகிறது. இக்கருத்தையே நன்னூலும்,

***மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே (நூற்பா. 84)***

என்று விளக்கிக் கூறுகின்றது.

**இன எழுத்துகள்**

- பிறப்பு, ஒலிப்பு முதலியவற்றில் ஒத்து இருக்கும் எழுத்துகளை **இன எழுத்துகள்** என்று கூறுவர்.
- உயிர் எழுத்துகள் குறில். நெடில் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.
- குறில் எழுத்துகள் ஐந்தும் நெடில் எழுத்துகள் ஏழும் உள்ளன.
- இவற்றின் ஒத்த தன்மையைக் கொண்டு இன எழுத்துகளாகப் பிரிப்பர்.

நெடில் எழுத்தாக; உள்ள ஐ, ஔ ஆகியவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் இல்லை.

- மெய் எழுத்துகளில் ஆறு மெல்லின எழுத்துகளும் ஆறுவல்லின எழுத்துகளுக்கு இன எழுத்துகளாக உள்ளன.
- மெய் எழுத்துகளில் இன எழுத்துகள் பின்வருமாறு அமையும்.

| க் | ச் | ட் | த் | ப் | ற் |
|---|---|---|---|---|---|
| ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |
| தங்கம் | பஞ்சு | நண்டு | பந்து | பாம்பு | கன்று |

- இந்தச் சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைக் கவனியுங்கள், இவற்றில் **ங்க, ஞ்சு, ண்டு, ந்து, ம்பு, ன்று** என்று வந்துள்ளதைக் கவனியுங்கள்,
- இந்தச் சொற்களில் மெய் எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகளும் அடுத்தடுத்து வந்துள்ளன.
- முன்பு உயிர் எழுத்துகளில் இன எழுத்துகளைப் பார்த்தோம்.
- இவை மெய் எழுத்துகளில் **இன எழுத்துகள்** ஆகும்.
- க, ச, ட, த, ப, ற என்ற வல்லின எழுத்துகள் ஆறும் தனியே ஒலிக்கும்போது வன்மையாக ஒலிக்கும்.

- மேலே காட்டியபடி சொற்களில் மெல்லின எழுத்துகளை ஒட்டி வரும்போது இவை மென்மையாகவே ஒலிக்கும்.
- வல்லின எழுத்தை ஒட்டி வரும்போது வன்மையாக ஒலிக்கும்.

| சங்கு | நஞ்சு | பண்டம் | மந்தி | பம்பரம் | இன்று |
|---|---|---|---|---|---|
| பக்கம் | நச்சு | பட்டம் | கத்தி | கப்பல் | நேற்று |

மேலே காட்டப்பட்டுள்ள சொற்களில் மேலே உள்ளவை மென்மையாகவும் கீழே உள்ளவை வன்மையாகவும் ஒலிக்கும்

**சுட்டு எழுத்துகள்**

- ஒரு பொருளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் பயன்படும் எழுத்துகள் சில உள்ளன, பின்வருவனவற்றைப் படியுங்கள்,
    - **அவ்வீடு,**
    - **இப்புத்தகம்,**
    - **அம்மரம்,**
    - **இப்பூனை**
- மேலே, வீடு, புத்தகம், மரம், பூனை முதலிய சொற்களுக்கு முன் அ, இ ஆகிய எழுத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த எழுத்துகள் பொருள்களைச் சுட்டிக் காட்டப் பயன்படுகின்றன. ஒரு பொருளின் பெயருக்கு முன் இந்த எழுத்துகள் வந்து, அந்தப் பொருளைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டப் பயன்படுகின்றன.
- **அ, இ, உ** ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும்.
- **உ** என்ற சுட்டு எழுத்து, தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லை.
    - உதுக்காண்
    - உவன்
    - உங்கே
- என்ற இடங்களில் உகரம் சுட்டு எழுத்தாக வந்துள்ளதைக் காணலாம்.
- இக்காலத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள் மட்டும் உகரச் சுட்டைப் பயன்படுத்துகின்றனர், மற்றபடி இக்காலத் தமிழ் மொழியில் உகரச் சுட்டு இடம் பெறுவதில்லை.

**அ, இ, உம் முதல் தனிவரின் சுட்டே *(66)***

என்னும் நன்னூல் நூற்பா சுட்டு எழுத்துகள் எவை என்று குறிக்கிறது.

**சேய்மைச் சுட்டு**

அவ்வீடு, அக்கரை
அம்மரம், அக்குளம்

- மேலே காட்டப்பட்ட எடுத்துக் காட்டுகளில், அவ்வீடு, அம்மரம் முதலியன தொலைவில் உள்ள பொருள்களைச் சுட்டிக்காட்டுகின்றன,
- எனவே இதனைச் **சேய்மைச் சுட்டு** என்கிறோம். சேய்மை என்பது தொலைவு என்று பொருள்படும்.

**அண்மைச் சுட்டு**

இப்பூனை, இப்புத்தகம்
இம்மாடு, இக்கட்டில்

- இப்புத்தகம், இப்பூனை முதலியன அருகில் உள்ள பொருள்களைச் சுட்டிக் காட்டுகின்றன.
- எனவே இவற்றை **அண்மைச் சுட்டு** என்கிறோம். அண்மை என்பது அருகில் என்று பொருள்படும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | - | ஒ | - |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |

**அகச்சுட்டு**

அவன், இவள்
அது, இது

- இந்தச் சொற்களில் அ, இ ஆகிய எழுத்துகள் சுட்டுப்பொருளை உணர்த்தி வருகின்றன.
- இவை சொல்லுக்கு உள்ளேயே இருக்கின்றன.
- அவன் என்பதில் 'அ' என்ற சுட்டு எழுத்தை நீக்கிவிட்டால் 'வன்' தனியே நின்று பொருள் இல்லாமல் போய்விடும்.
- எனவே இவற்றைச் சொல்லில் இருந்து தனியே பிரித்துக் காணமுடியாது. ஒரு சொல்லுக்கு உள்ளே இருந்து, சுட்டுப் பொருளையும் உணர்த்துவதால், இவற்றை **அகச் சுட்டு** என்று கூறுவர். அகம் என்பது உள்ளே என்று பொருள்படும்.

**புறச்சுட்டு**

அவ்வீடு, இம்மனிதன்
அக்குளம், இம்மாடு

- மேலே காட்டியவற்றில் அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் வீடு, மனிதன் முதலியவற்றுடன் கூடி. ஒரே சொல் போன்று காட்சி தருகின்றன.
- எனினும் இவற்றைத் தனியே பிரிக்க முடியும்.
- எடுத்துக்காட்டாக மேலே உள்ள சொற்களில் சுட்டு எழுத்துகளை நீக்கிப் பார்க்கலாம்.

**அ + வீடு**

**இ + மனிதன்**

**அ + குளம்**

**இ + மாடு**

இவற்றில் சுட்டு எழுத்தை நீக்கிய பின் வீடு, மனிதன், குளம், மாடு ஆகிய சொற்கள் தனித்து நிற்கின்றன. இந்த எடுத்துக்காட்டுகளில் சொல்லுக்கு வெளியே இருந்து சுட்டு எழுத்துகள் சுட்டுப் பொருளை உணர்த்துவதால் இவை **புறச் சுட்டு** எனப்படுகின்றன, புறம் என்பது வெளியே என்று பொருள்படும்.

**சுட்டுத் திரிபு**

அந்த மரம்
இந்த வீடு
அந்த மாடு
இந்த ஆடு

மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளில் மரம், வீடு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டும் அந்த, இந்த ஆகியவை சொல்லுக்கு வெளியே தனியே நின்றுள்ளன. இவை அடிப்படையில் அ, இ என்ற சுட்டு எழுத்துகளே. ஆனால் இங்கு அந்த, இந்த என்று மாறியுள்ளன. இவை தம் வடிவத்திலிருந்து திரிந்து, பொருளைச் சுட்டுகின்றன. எனவே இவற்றைச் **சுட்டுத் திரிபு** என்று கூறுவர்.

**வினா எழுத்துகள்**

அ, இ ஆகிய எழுத்துகள் சுட்டுப் பொருள் தருவது போலவே, சில எழுத்துகள் வினாப் பொருளைத் தருகின்றன. கீழே உள்ளவற்றைக் கவனிக்க. வினா என்பதும் கேள்வி என்பதும் ஒரே பொருள் தருவன.

யார்? எங்கு? நீயா?

இந்தச் சொற்கள் வினாப் பொருள் தருவதை உணரலாம். தமிழில் ஆ, எ. ஏ. ஓ, யா ஆகிய எழுத்துகள், வினாப் பொருள்தரும் எழுத்துகள் ஆகும், இவை வினாப் பொருள் தருவதால் **வினா எழுத்துகள்** எனப்படுகின்றன, வினா எழுத்துகள் ஒருசொல்லைச் சார்ந்தே வினாப் பொருள் தரும். இவற்றில் எ, யா ஆகிய இரு எழுத்துகளும் ஒருசொல்லுக்கு முதலில் வந்து வினாப் பொருள் தரும்,

எப்படி? எவ்வரிசை? எம்மனிதர்? யார்? யாது?

ஆ, ஓ ஆகிய இரு எழுத்துகளும் சொல்லுக்கு இறுதியில் வந்து வினாப் பொருள் தரும்.

ஆ- நானா சொன்னேன்?

ஆ- அவனா தருவான்?

ஓ- நானோ கள்வன்?

ஓ- அவர் வருவாரோ?

ஏ என்னும் எழுத்து, சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வந்து வினாப் பொருள் தரும்.

ஏன், ஏது யாரே அனுபவிப்பார்

**எ, யா, முதலும் ஆ, ஓ, ஈற்றும் ஏ, இருவழியும் வினா ஆகும்மே** *(67)*

என்னும் நன்னூல் நூற்பா வினா எழுத்துகள் எவை என்று குறிப்பதுடன் சொல்லுக்கு முதலில் வரும் வினா எழுத்துகளையும் இறுதியில் வரும் வினா எழுத்துகளையும் முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்தையும் குறிப்பிடுகிறது.

- **அகவினா**

சுட்டு எழுத்துகளைப் போலவே சொல்லுக்கு உள்ளே இருந்து வினாப் பொருளை உணர்த்துவது **அகவினா** எனப்படும்.

ஏன்? யார்? என்ன? எங்கு?

மேற்கண்ட சொற்களில் வினா எழுத்துகளை நீக்கிவிட்டால், அச்சொற்கள் பொருள் தர மாட்டா. ஆகவே இவை **அக வினா** எனப்படுகின்றன.

- **புறவினா**

வினா எழுத்துகள் சொல்லுக்கு வெளியே இருந்து, வினாப்பொருளைத் தந்தால் அது **புறவினா** எனப்படும்.

| **எம்மரம்?** | **எ+மரம்** |
|---|---|
| **எப்படி?** | எ+படி |
| **அவளா?** | அவள்+ஆ |
| **நின்றானா?** | நின்றான்+ஆ |
| **தருவாளா?** | தருவாள்+ஆ |

மேலே உள்ள எடுத்துக்காட்டுகளில், வினாப் பொருள் தரும் எ, ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கிவிட்டாலும் இந்தச் சொற்கள் பொருள் தரும்.

**மாத்திரை**

மாத்திரை என்பது ஓர் எழுத்தை எவ்வளவு நேரம் ஒலிக்கிறோம் என்று கூறுவதாகும். ஒவ்வோர் எழுத்தையும் குறிப்பிட்ட நேரம் மட்டுமே ஒலிக்க வேண்டும் என்று வரையறை செய்து வைக்கப்பட்டுள்ளது. மாத்திரை என்பது கால அளவைக் குறிப்பதாகும். மாத்திரை இரண்டு விதமான அளவுகளில் விளக்கப்படுகிறது.

***இயல்பு எழும் மாந்தர் இமை, நொடி, மாத்திரை - (நன்.100)***

1. மனிதர்கள் இயல்பாகக் கண் இமைக்கும் நேரம்.
2. மனிதர்கள் இயல்பாகக் கை நொடிக்கும் (சொடுக்குப் போடும்) நேரம்.

இவை ஒரு மாத்திரை எனப்படும். எழுத்துகள் கீழ்வருமாறு ஒலிக்கப்பட வேண்டும்.

உயிர்க் குறில் - ஒரு மாத்திரை- அ, இ
உயிர்மெய்க் குறில்- ஒரு மாத்திரை- ப, த
உயிர் நெடில்- இரண்டு மாத்திரை - ஊ, ஏ,
உயிர்மெய் நெடில் - இரண்டு மாத்திரை - போ, பூ
மெய் எழுத்து - அரை மாத்திரை - ய், ள்

மேலே குறிப்பிட்ட விதத்தில் எழுத்துகளை ஒலிக்கவேண்டும். எனினும், இந்த வரையறை சில இடங்களில் மீறப்படுவதும் உண்டு. இசை பாடும்போதும், ஒருவரை விளிக்கும்போதும், பொருள்களைக் கூவி விற்கும் போதும் இந்த வரையறையை மீறி ஒலித்தலும் உண்டு.

**போலி**

சொற்களில் ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வருவதைப் போலி என்று கூறுவர். அப்படி வேறு எழுத்து வரும்போது பொருள் மாறாமல் இருக்க வேண்டும். போலி எழுத்துகள் சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் வரும். இவற்றை முறையே

- ✓ **முதற்போலி,**
- ✓ **இடைப்போலி,**
- ✓ **இறுதிப்போலி**

என்று கூறுவர்.

**முதற்போலி**

ஒரு சொல்லின் முதல் எழுத்து, போலியாக வருவதை **முதற்போலி** என்று கூறுவர்.

பசல் - **பைசல்**
மயல் - **மையல்**
மஞ்சு - **மைஞ்சு**

இந்தச் சொற்களில் அகரம் வரவேண்டிய இடங்களில் ஐகாரம் வந்துள்ளது.

**இடைப்போலி**

சொல்லுக்கு இடையில் ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு எழுத்து வருவது **இடைப்போலி** ஆகும்.

அரயர் -**அரையர்**
இலஞ்சி- **இலைஞ்சி**

இந்தச் சொற்களில் அகரம் வரவேண்டிய இடங்களில் ஐகாரம் வந்துள்ளது. இவை சொல்லுக்கு இடையில் வந்துள்ளதால் **இடைப்போலி** எனப்படும்.

**இறுதிப்போலி**

சொல்லின் இறுதியில் ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு எழுத்து வருவது **இறுதிப் போலி** எனப்படும். இதைக் **கடைப் போலி** எனவும் கூறுவர்.

| **முகம்** | **முகன்** |
|---|---|
| **அகம்** | அகன் |
| **நலம்** | நலன் |
| **நிலம்** | நிலன் |
| **சாம்பல்** | சாம்பர் |
| **பந்தல்** | பந்தர் |

இந்தச் சொற்களின் இறுதியில் மகர ஒற்று வரவேண்டிய இடத்தில் னகர ஒற்றும், லகர ஒற்று வரவேண்டிய இடத்தில் ரகர ஒற்றும் வந்துள்ளன. இவ்வாறு வருவது **இறுதிப் போலி** எனப்படுகிறது.

**பதவியல்**

தமிழ் ஓர் ஒட்டு நிலை மொழியாகும். ஒட்டுநிலை மொழி என்பது ஒரு வேர்ச் சொல்லுடன் விகுதி, இடைநிலை, சாரியை முதலியன சேர்ந்து ஒரு சொல்லாகத் தோன்றுவது ஆகும். (இவற்றைப் பற்றி விரிவாகப் பின்னர் படிக்கலாம்) தமிழில் முன் ஒட்டுகள் இல்லை; பின் ஒட்டுகளே உள்ளன. வேர்ச் சொல்லுடன் பல உருபுகளும் சேர்ந்து சொற்கள் உருவாகும் முறை இலக்கணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**எடுத்துக்காட்டாக**

போ என்பது ஒரு வேர்ச் சொல்லாகும். இதனுடன் **வ்** என்ற எதிர் கால இடைநிலையும், **ஆன்** என்ற ஆண்பால் ஒருமை வினைமுற்று விகுதியும் இணைந்து,

போ + வ் + ஆன் = போவான்

என்று ஒரு சொல் உருவாகிறது. இலக்கணத்தில் இதைப் பற்றிச் சொல்லும் பகுதிக்குப் **பதவியல்** என்று பெயர்.

**சந்தி இலக்கணம்**

தமிழில் எழுத்திலக்கணத்தில் முக்கியப் பகுதியாகவும் பெரிய பகுதியாகவும் இருப்பது சந்தி இலக்கணம் ஆகும். சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய இலக்கணம் ஆகும். இலக்கண நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் சந்தி இலக்கணத்தைப் **புணர்ச்சி இலக்கணம்** என்று கூறுவர்.

**எடுத்துக்காட்டாக**

ஓடி + போனான் = ஓடிப்போனான்

என்று வரும்.

இங்கு இரண்டு சொற்கள் சேரும்போது, இரண்டுக்கும் இடையில் **ப்** என்ற மெய் எழுத்துத் தோன்றி இருக்கிறது. இவ்வாறு இரண்டு சொற்கள் சேரும்போது பல வகையான மாற்றங்கள் ஏற்படும்.

**சந்தி வகைகள்**

இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் நான்கு வகைகளில் அமையும்.

1. கதவு + மூடியது = கதவு மூடியது - **இயல்பாக** இருக்கிறது.
2. மாலை + பொழுது = மாலைப் பொழுது - ஒரு மெய் எழுத்துத் **தோன்றியது**.
3. மர**ம்** + நிழல் = மரநிழல் - ஓர் எழுத்துக் **கெட்டது** (அழிந்தது).
4. கல் + சிலை = க**ற்**சிலை – **ல்** என்ற எழுத்து **ற்** என்ற எழுத்தாகத் **திரிந்தது** (மாறியது).

எனவே, இரண்டு சொற்கள் சேரும்போது இயல்பாக வருதல், தோன்றுதல், திரிதல், கெடுதல் ஆகிய நான்கு வகைகளிலும் வரும் என அறியலாம். இங்கு இரண்டு சொற்கள் இருக்கின்றன. முதல் சொல்லை **நிலைமொழி** என்றும், இரண்டாம் சொல்லை **வருமொழி** என்றும் கூறுவர். இந்த மாற்றங்கள் நிலைமொழியின் இறுதி எழுத்துக்கும், வருமொழியின் முதல் எழுத்துக்கும் ஏற்ப அமையும். எனவே ஒரு சொல்லின் முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் பற்றி அறிய வேண்டியது அவசியம் ஆகிறது.

**முதலும் இறுதியும்**

உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகிய மூன்று வகை எழுத்துகள் சொற்களில் வரும். சந்தி இலக்கணத்தில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்ற இருவகை எழுத்துகளை மட்டுமே கொண்டு இலக்கணம் சொல்லப்படும். உயிர்மெய் எழுத்து, உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உருவானது ஆகும். அதை மெய் எழுத்து, உயிர் எழுத்து என்று பிரித்துக் கொண்டு சந்தி இலக்கணத்தில் பயன்படுத்த வேண்டும்.

**எடுத்துக்காட்டாக**

**ப**ல் என்ற சொல்லின் முதலில் உள்ள ப என்ற உயிர்மெய்எழுத்து,

ப் + அ என்ற இரண்டு எழுத்துகள் சேர்ந்தது.

பாம்**பு** என்ற சொல்லின் இறுதியில் உள்ள பு என்ற உயிர்மெய்எழுத்து,

ப் + உ என்ற இரண்டு எழுத்துகள் சேர்ந்தது.

எனவே சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

**ஓ**டை - உயிர் எழுத்தில் தொடங்கும் சொல்.
**மா**டு - மெய் எழுத்தில் தொடங்கும் சொல்.
பழ**ம்** - மெய் எழுத்தில் முடியும் சொல்.
கி**ளி** - உயிர் எழுத்தில் முடியும் சொல்

இவற்றைக் கொண்டு பார்க்கும்போது சொற்கள் அமையும் விதத்தைப் பின்வருமாறு காட்டலாம். ஈறு என்னும் சொல் **இறுதி** அல்லது **கடைசி** என்னும் பொருளைக் கொண்டது.

உயிர் ஈறு + மெய் முதல் (**ஓ**டை + **க**ரை)
உயிர் ஈறு + உயிர் முதல் (ம**ணி** + **அ**டித்தது)
மெய் ஈறு + உயிர் முதல் (பழ**ம்** + **உ**திர்ந்தது)
மெய் ஈறு + மெய் முதல் (மு**ள்** + **கு**த்தியது)

**வேற்றுமையும் அல்வழியும்**

சந்திகளில் **வேற்றுமைச் சந்தி, அல்வழிச் சந்தி** என்று இருவகை உண்டு. வேற்றுமை அல்லாத சந்தி **அல்வழிச் சந்தி** எனப்படும்.

நாய் ஓடியது
நாயை விரட்டினேன்
நாய்க்கு மணி கட்டு

இந்தச் சொற்களில் நாய் என்ற சொல்லுடன் **ஐ, கு** என்ற எழுத்துகள் சேர்ந்துள்ளன. நாய் என்ற சொல்லுடன் இந்த எழுத்துகள் சேர்ந்தவுடன் நாய் என்ற சொல்லின் பொருள் வேறுபடுகிறது. முதல் தொடரில் நாய் எழுவாயாக இருக்கிறது. இரண்டாம் தொடரில் நாய் என்ற

Professor Academy

# VIRTUAL CLASS FEATURES

**Start Date:** December 05, 2024

**Duration of Classes:** 5 months (up to exam date)

**Class Schedule:**

- **Morning Session:** 5:00 AM - 7:00 AM
- **Evening Session:** 7:30 PM - 9:00 PM
  (subject to change based on exam announcements)

**Key Features:**

- Interactive online live classes
- Weekly schedule updates via WhatsApp community
- Sessions conducted through Zoom for ease of access



Professor Academy

# COURSE BENEFITS

## APP FEATURES

- Login ID and password will be provided to the candidates to access the mobile app after enrolling in course.
- **Access to Missed Live Sessions** as Recorded Videos.
- Validity for Recorded Sessions and Test Series will be provided upto 1 year in our mobile app (Upto date of the examination)
- **Access to Missed Live Sessions as Recorded Videos.**
- **Mobile App** for learning (For Android users)
- **Website** for easy access from any device






www.professoracademy.com

சொல்லுடன் **ஐ** என்ற எழுத்துச் சேர்ந்தவுடன் நாய் செயப்படுபொருளாக மாறுகிறது. மூன்றாம் தொடரிலும் அவ்வாறே **கு** என்ற எழுத்துச் சேர்ந்தவுடன் அதன் பொருள் வேறுபடுகிறது. இவ்வாறு ஒரு பெயர்ச் சொல்லுக்குப் பின்னால் நின்று அதன் பொருளை வேறுபடுத்தும் எழுத்தை அல்லது சொல்லை **வேற்றுமை** என்கிறோம்.

அவ்வாறு வேறுபடுத்துவதற்குக் காரணமாக உள்ளவற்றை **வேற்றுமை உருபு** என்பர். எழுவாய் வேற்றுமை முதல் விளிவேற்றுமை வரை எட்டு வகை வேற்றுமைகள் உள்ளன. அவற்றுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமைகளுக்கே உருபு உள்ளது. வேற்றுமையின் இலக்கணம் பற்றிப் பின்னர் விரிவாக விளக்கப்படும்.

- நாயை + கண்டேன்- இரண்டாம் வேற்றுமை
- கல்லால் + அடித்தேன்- மூன்றாம் வேற்றுமை
- பசிக்கு + உணவு- நான்காம் வேற்றுமை

இங்குச் சொற்களுடன் வேற்றுமை உருபுகள் சேர்ந்து வந்துள்ளன. இவற்றை **வேற்றுமைத் தொடர்கள்** என்று கூறுவர்.

**மண் குடம்**
**பொன்வளையல்**

இவையும் வேற்றுமைத் தொடர்களே. இவற்றை விரித்துப் பார்த்தால், மண்ணால் ஆகிய குடம், பொன்னால் ஆகிய வளையல் என்று வரும். இந்தத் தொடர்களில் பெயர்ச்சொற்களுக்குப் பின்னால் வரும் வேற்றுமை உருபுகள் மறைந்து வந்துள்ளன. எனவே இவை **வேற்றுமைத் தொகை** எனப்படும்.

வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்தாலும், மறைந்து வந்தாலும், அது **வேற்றுமைச் சந்தி** எனப்படும்.

- வந்த + கண்ணன் (பெயர் எச்சம்)
- வந்து + போனான் (வினை எச்சம்)
- ஓடு + ஓடு (அடுக்குத்தொடர்)
- மழை + பொழிந்தது (எழுவாய்த்தொடர்)
- கண்ணா + செல் (விளித்தொடர்)

மேலே காட்டப்பட்ட பெயர் எச்சம், வினை எச்சம், அடுக்குத் தொடர், எழுவாய்த் தொடர், விளித் தொடர் முதலியவை வேற்றுமை அல்ல என்பதால் இவற்றை **அல்வழித்தொடர்** என்று கூறுவர்.

**பெயரும் வினையும்**

சொற்கள் பெயர், வினை, இடை, உரி, என நான்கு வகைப்படும். அவற்றுள் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இரண்டும் முக்கியமானவை. இவை இரண்டும் பின்வருமாறு இணைந்து வரும்.

- பெயர் + பெயர் = சேரன் பாண்டியன்
- பெயர் + வினை = வளவன் சென்றான்
- வினை + பெயர் = சென்றான் வளவன்
- வினை + வினை = படித்துச் சென்றான்

சந்தி இலக்கணம் பொருள் அடிப்படையிலும் பெயர்ச்சொல்லின் வகை அடிப்படையிலும் சொல்லப்படும்.

மரப்பெயர்கள், திசைப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள் ஆகியவற்றையும் சுட்டி, சந்தி இலக்கணம் சொல்லப்படுகிறது.

- மரப் பெயர் = தென்னை மரம்
- திசைப் பெயர் = வட கிழக்கு
- எண்ணுப் பெயர் = சேர, சோழ, பாண்டியர்

**எழுத்துச் சாரியை**

எழுத்துகளை ஒலிக்கும்போது, அ, ப் என்று ஒலிக்கிறோம். எழுத்துகளை ஒலிக்கும்போது தனியே எழுத்தை மட்டும் ஒலிக்காமல், அகரம், இகரம் என்று ஒலிப்பதும் உண்டு. கரம் என்று சேர்த்துச் சொல்வதால், எழுத்துகளை எளிதாக ஒலிப்பதற்கு ஏதுவாக இருக்கும். எழுத்துகளை எளிதாக ஒலிக்கப் பயன்படும் இவற்றை எழுத்துச் சாரியை என்று வழங்குவர்.

மெய் எழுத்துகளைத் தனியாக ஒலிப்பது கடினம். எனவே அவற்றை அ என்ற உயிர் எழுத்துடன் சேர்த்தே சொல்லுவர். இலக்கணத்தில், க என்று கூறப்படும் எழுத்து க் என்ற மெய் எழுத்தையே குறிக்கும், கரம் என்பதைப் போலவே காரம், கான் ஆகியவையும் எழுத்துச் சாரியைகளாக வரும். கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைக் கவனிக்க.

அகரம், சகரம், எகாரம், வகாரம், மஃகான், வஃகான் ஆகாரம், யாகாரம் ஐகான், ஔகான் க. ச. த. ப. இவற்றை நோக்குங்கள். இவற்றில் கரம், காரம், கான் ஆகிய சாரியைகள் வந்துள்ளன, மெய் எழுத்துகள் அ சாரியை பெறும் என ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. எழுத்துச் சாரியைகளைக் கீழ்க்காணுமாறு காட்டலாம்.

குறில் எழுத்துகள் - கரம், காரம், கான்

நெடில் எழுத்துகள் - காரம்

ஐ, ஔ, - கான்

மெய் எழுத்துகள்- அ

குறில் எழுத்துகள் கான் சாரியை பெற்று வரும்போது, அதற்குமுன் ஆய்த எழுத்து வரும்,

**எடுத்துக்காட்டாக**, மஃகான், லஃகான், வஃகான் என்று வரும்.

**மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும் ஐ, ஔ, கானும், இருமைக் குறில் இவ் இரண்டொடு காரமும் ஆம் சாரியை பெறும் பிற**

***(நன்னூல் 126)***

**எழுத்துப் பிறப்பு**

தமிழ் மொழியில் எழுத்துகள் இருவகைப்படும் என்றும் அவை முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள். இந்த எழுத்துகள் ஒவ்வொன்றும் இரு வடிவங்களைக் கொண்டவை; அவை ஒலிவடிவம், வரிவடிவம். தமிழ் எழுத்துகள் ஒலிவடிவம் பெறுவதன் தன்மை இங்கு விளக்கப்படுகிறது.

**எழுத்துப் பிறப்பு - பொது விளக்கம்**

ஒவ்வோர் எழுத்தும் பேச்சொலியாக இருந்து, பின்பே எழுத்து ஒலியாகப் பதிவு செய்யப்படுகின்றது. எனவே பேச்சிற்கு அடிப்படையாக அமையும் ஒலிகள் எவ்வாறு உருவாயின என்பதை இலக்கண நூலார் ஆராய்ந்து உள்ளனர். உடலில் இருந்து தோன்றி மேலே எழும் காற்று, எழுத்தொலியாக வெளிப்படும் நிகழ்வு **எழுத்துப் பிறப்பு** எனப்படும். இத்தகைய எழுத்து ஒலிகள் பிறப்பதற்கு உயிரின் முயற்சியும் உறுப்புகளின் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன.

**தொல்காப்பியரின் விளக்கம்**

தமிழ் மொழியில் இன்று வரை கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையானது **தொல்காப்பியம்.** இதனை இயற்றியவர் தொல்காப்பியர். இந்நூல் கி.மு. 4**ஆம்** நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் தமிழில் உள்ள ஐந்து இலக்கணங்களையும் விளக்குகின்றது. இத்தகைய பழமையான தமிழ் இலக்கண நூல், எழுத்துகளின் பிறப்புப் பற்றி ஆராய்ந்து கூறியிருப்பது சிறப்புடையதாகும்.

**எழுத்தொலி பிறத்தல்**

எழுத்தை உச்சரிக்க முயலும் ஒருவரின் கொப்பூழில் (உந்தி) இருந்து காற்று மேல் நோக்கி எழுகின்றது. இவ்வாறு எழும் காற்று அவரது தலை, கழுத்து, நெஞ்சு (மார்பு) ஆகிய இடங்களில் சென்று தங்கி (தொட்டு) நிற்கும். பின்னர், தலை, கழுத்து, நெஞ்சு ஆகிய இந்த மூன்று உறுப்புகளுடன், பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் (மேல்வாய்) ஆகிய ஐந்து உறுப்புகளும் சேர்ந்து இந்த எட்டு உறுப்புகளின் பொருத்தமான முயற்சியின் விளைவாக வெவ்வேறு எழுத்து ஒலிகள் பிறக்கின்றன. தமிழில் உள்ள எல்லா எழுத்து ஒலிகளும் இந்த முறையிலேயே பிறக்கின்றன. இதுவே எழுத்துப் பிறப்பின் பொதுவான இலக்கணம் ஆகும். (தொல்காப்பியம். எழுத்ததிகாரம், 83)

- **வெவ்வேறு ஒலிகள்**

ஆனால், எல்லா எழுத்தொலியும் தோன்றுவதற்கு இந்த எட்டு உறுப்புகளின் முயற்சியும் ஒத்துழைப்பும் தேவைப்படுவது இல்லை. தேவைப்படும் உறுப்புகள் பொருந்தி இயங்கும் தன்மைக்கேற்பவே வெவ்வேறு ஒலிகள் தோன்றும். ஒவ்வோர் எழுத்தொலியும் தோன்றுவதற்கு வெவ்வேறு உறுப்புகளின் ஒத்துழைப்புக் காரணமாக அமைகின்றது.

**தேவைப்படும் முயற்சி**

ஒலியை எழுப்ப நினைக்கும் ஒருவர் முதலில் செய்ய வேண்டியது முயற்சி ஆகும். இந்த முயற்சியை இலக்கண ஆசிரியர்கள் 'உயிரின் முயற்சி' என்று அழைக்கின்றனர். ஒலியை எழுப்பக் கருதிய ஒருவரின் உயிர்ப்புத் தன்மையே அடுத்தடுத்த முயற்சிக்குக் காரணமாக அமைகிறது. அதனைத் தொடர்ந்து உறுப்புகளின் ஒத்துழைப்புகளுக்கும் அதுவே காரணமாகிறது. எனவே எழுத்து ஒலிகள் தோன்றுவதற்கு மனித முயற்சி மிகவும் இன்றியமையாததாகும்.

இவ்வகையில், தொல்காப்பியரின் கருத்துப்படி, உயிரின் முயற்சியால் கொப்பூழில் இருந்து காற்று எழுகின்றது. இக்காற்று மேல்நோக்கிச் செல்கின்றது. இம்முயற்சிக்கு உறுப்புகள் துணை செய்கின்றன. இந்த உறுப்புகளில் அக்காற்று சென்று பொருந்துகின்றது. மேல்நோக்கி எழும் இக்காற்று பொருந்தும் உடல் உறுப்புகளைக் குறிப்பிடும் போது, தலை, கழுத்து, நெஞ்சு என்ற வரிசையில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**ஒத்துழைக்கும் உறுப்புகள்**

எழுத்தொலிகள் தோன்றுவதற்குத் தேவைப்படும் உறுப்புகளாகத் தொல்காப்பியர் எட்டு உறுப்புகளைக் குறிப்பிடுகின்றார். இந்த எட்டு உறுப்புகளை இரண்டு பிரிவாகப் பகுத்துக் காணலாம். அவை,

*(1) காற்றுப் பொருந்தும் உறுப்புகள்.*
*(2) ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்கும் உறுப்புகள்*

*என்பன.*

- ***காற்றுப் பொருந்தும் உறுப்புகள்:***

*காற்றுப் பொருந்தும் உறுப்புகள் 3 ஆகும். அவை,*

- *தலை,*
- *கழுத்து,*
- *நெஞ்சு.*

*என்பன.*

- ***ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்கும் உறுப்புகள்:***

*எழுத்தொலிகள் தோன்றுவதற்கு ஒன்றுடன் ஒன்று இயைந்து ஒத்துழைக்கும் உறுப்புகள் எட்டு ஆகும். அவை, முதலில் கூறப்பட்ட தலை, கழுத்து, நெஞ்சு ஆகிய மூன்றுடன்,*

- *பல்,*
- *இதழ்,*
- *நாக்கு,*
- *மூக்கு,*

*அண்ணம் ஆகிய ஐந்தும், சேர்ந்து 8 ஆகும்.*

***நன்னூலாரின் விளக்கம்***

***நன்னூல்*** *12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல். இது, எழுத்து, சொல் ஆகிய இரு இலக்கணங்களை மட்டுமே விளக்குகின்றது. தமிழ் இலக்கணம் கற்க விரும்புவோர் முதலில் இந்நூலில் இருந்து கற்கத் தொடங்குவது மரபு.*

***எழுத்தொலி பிறத்தல்***

***நன்னூல்,*** *ஒவ்வோர் எழுத்தும் ஒலியாக வெளிப்படுவதற்கு இரண்டு நிலைகள் தேவைப்படுகின்றன என்று தெரிவிக்கின்றது. அவை,*

***(1) உயிரின் முயற்சி***
***(2) உடல் உறுப்புகளின் ஒத்துழைப்பு***

*ஆகியன.*

*குறைபாடில்லாத நிறைந்த, உயிரின் முயற்சியினால் உள்ளே இருக்கும் காற்றானது மேலே எழும்பி நிற்கும்; அவ்வாறு எழுகின்ற காற்று, செவிகளுக்குக் கேட்கும்படியான அணுக்கூட்டமாகத் திரண்டு, மார்பு, கழுத்து, தலை, மூக்கு என்ற நான்கு இடங்களில் பொருந்தும்; பின்பு இதழ், நாக்கு, பல், அண்ணம் ஆகிய நான்கு உறுப்புகளின் இயக்கத்தினாலும் வேறுவேறு எழுத்துகளுக்கு உரிய ஒலிகள் தோன்றுகின்றன. இவ்வாறே எழுத்துகள் ஒலிவடிவம் பெறுகின்றன. இதனை எழுத்துகளின் பிறப்பு என்று கூறலாம் என்று* ***நன்னூல்*** *தெரிவிக்கின்றது.*

***தேவைப்படும் முயற்சி***

*எழுத்தொலி தோன்ற முதலில் தேவைப்படுவது ஒருவரின் முயற்சி ஆகும். இந்த முயற்சி உயிரின் முயற்சியாக இருக்க வேண்டும். உயிர்ப்புத் தன்மை நிறைந்த ஒருவரின் முயற்சியாக இருக்க வேண்டும். முயற்சியில் முழுமை இல்லாமல் இருந்தால் நினைத்த ஒலி எழும்பாது. எனவே உயிரின் முயற்சி என்று குறிப்பிடாமல்* ***நன்னூல்*** *ஆசிரியர் இங்குத் தேவைப்படும் முயற்சியை 'நிறை உயிர் முயற்சி' என்று குறிப்பிடுகின்றார். இத்தொடர், ஒலி எழுப்ப நினைப்பவரின் முயற்சிக்கு நிறைந்த உயிர் முயற்சிதான் தேவை என்பதைச் சுட்டுகின்றது. இத்தகைய முயற்சியின் விளைவாகவே உந்தியில் இருக்கும் காற்று மேல்நோக்கி எழும். அவ்வாறு எழும் காற்று உடலின் நான்கு உறுப்புகளில் சென்று தங்கும். இந்த நான்கு உறுப்புகளையும் எழுத்துஒலிகள் பிறப்பதற்கு முயற்சி செய்யும் உறுப்புகள் எனலாம். அவை,*

***(1) மார்பு,***
***(2) கழுத்து,***
***(3) தலை (உச்சி)***
*(4)* ***மூக்கு*** *என்பன.*

***ஒத்துழைக்கும் உறுப்புகள்***

*எழுத்தொலிகள் தோன்றுவதற்கு, சில உறுப்புகளின் முயற்சியுடன் வேறு சில உறுப்புகளின் ஒத்து இயங்கும் தன்மையும் தேவைப்படுகின்றது. சில உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்பட்டால்தான் எழுத்தொலிகள் பிறக்கும். அவ்வகையில் ஒத்துழைக்கும் உறுப்புகளை* ***நன்னூல்*** *ஆசிரியர் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். அவை,*

*(1) இதழ்*
*(2) நாக்கு*
*(3) பல்*
*(4) அண்ணம்*

*என்பன ஆகும்.*

*இந்த நான்கு உறுப்புகளில் எந்த உறுப்பின் முயற்சியால் ஓர் எழுத்தொலி பிறக்கின்றதோ, அந்த எழுத்திற்கு அந்த உறுப்பு பிறப்பிடம் என்று அழைக்கப்படுகின்றது. எனவே உறுப்புகளின் ஒத்துழைக்கும் தன்மைக்கு ஏற்ப வெவ்வேறு எழுத்தொலிகள் தோன்றுகின்றன. ஓர் எழுத்தொலி பிறக்க ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட*

உறுப்புகளின் ஒத்துழைப்பும் தேவையாக அமைவதும் உண்டு.

***நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப***
***எழும் அணுத்திரள் உரம், கண்டம், உச்சி***
***மூக்கு உற்று, இதழ், நாப் பல் அணத் தொழிலின்***
***வெவ்வேறு எழுத்தொலியாய் வரல் பிறப்பே.***

என்பது நன்னூல் நூற்பா *(73)*. இதில், உரம் என்பது மார்பையும், கண்டம் என்பது கழுத்தையும் குறிக்கும். அணம் என்பது அண்ணம், (மேல்வாய்) என்று பொருள்படும்.

**எழுத்துப் பிறப்பில் தொல்காப்பியமும் நன்னூலும்**

எழுத்தொலிகளின் பிறப்புப் பற்றித் **தொல்காப்பியமும் நன்னூலும்** தெரிவித்த கருத்துகளை தனித்தனியே பார்த்தபோது அவ்விரு நூல்கள் தெரிவித்த கருத்துகளுக்கு இடையில் சில ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் இருப்பதைக் காணமுடியும். அந்த ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஒப்பிட்டுக் காண்பது, இக் கருத்துகளை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளத் துணை செய்யும்.

**ஒற்றுமை**

(1) இரண்டு இலக்கண நூலாசிரியர்களும் ஓர் எழுத்துப் பிறப்பதற்கு உந்தியில் (கொப்பூழ்) இருந்து காற்றுத் தோன்றி மேலே எழும்ப வேண்டும் என்கின்றனர்.
(2) எழுத்துகள் பிறப்பதற்கு ஒத்துழைக்கும் உறுப்புகளில் ஒன்று மற்றொன்றோடு இயைந்து இயங்கும் தன்மைக்கேற்ப வேறு வேறு ஒலிகள் பிறக்கின்றன என்று இருவரும் உரைக்கின்றனர்.
(3) இரு நூலாரும், அடிப்படையில் எழுத்துஒலிகள் பிறப்பதற்கு அடிப்படையான உறுப்புகளாகக் குறிப்பிடும் உறுப்புகளின் மொத்த எண்ணிக்கை எட்டு ஆகும்.

**வேற்றுமை**

(1) தொல்காப்பியர் காற்று மேலே எழும்பித் தங்கும் இடங்களாக மூன்று உறுப்புகளை மட்டுமே குறிப்பிடுகின்றார். அவை முறையே தலை, கழுத்து, நெஞ்சு என்பன.
(1) நன்னூலார் காற்று மேலே எழுந்து தங்கும் இடங்களாக நான்கு உறுப்புகளைச் சுட்டுகிறார். அவை முறையே, நெஞ்சு, கழுத்து, உச்சி, மூக்கு என்பன.
(2) உறுப்புகளைக் குறிப்பிடுகையில் தொல்காப்பியர் மேலே இருந்து கீழே இறங்கி வருவது போல் தலை, கழுத்து, நெஞ்சு என்று குறிப்பிடுகின்றார்.
(3) நன்னூலார் காற்று கீழிருந்து மேலே எழும்பும் அதே இயல்பான நிலையில் மார்பு, கழுத்து, உச்சி, மூக்கு என்ற வரிசையில் அமைத்துள்ளார்.
(4) எழுத்தொலிகள் பிறக்கப் பயன்படும் உறுப்புகளைத் தொல்காப்பியர் எட்டு என்று விரித்துள்ளார். காற்றுத் தங்கும் இடங்களான மூன்றையும் சேர்த்துக் குறிப்பிடுகின்றார்.

நன்னூலார், இந்த உறுப்புக்களில் இதழ், நாக்கு, பல், அண்ணம் என்ற நான்கு உறுப்புகளை மட்டுமே எழுத்துப் பிறப்பதற்கு இயங்கும் உறுப்புகளாகக் குறிப்பிடுகின்றார்.

**எழுத்துப் பிறப்பும் மொழியியலும்**

எழுத்தொலிகள் பற்றி மொழிநூல் அறிஞர்கள் மிக விரிவாக ஆராய்ந்துள்ளனர். மொழிநூல் அறிஞர்கள் இது குறித்து ஆராய்ந்து விளக்கங்களை வெளியிட்ட பின்னரே, இத்துறையில் பல உண்மைகள் வெளிப்பட்டன என்று கூறலாம். எனவே எழுத்தொலிகள் பிறப்புப் பற்றி மொழிநூல் அறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துகளையும் இங்கு ஒப்பிட்டுக் காண்பது பொருத்தம் உடையது.

**மரபு**

ஒரு மொழிக்கு இலக்கணம் வகுக்கும் மரபுவழி இலக்கண ஆசிரியர்கள் மொழியின் எழுத்து வடிவத்திற்கே முதன்மை தருவர். அதனை விளக்கிக் கூறுவர். ஏட்டில் இலக்கிய வடிவம் பெற்ற எழுத்து வடிவத்தினை ஆராய்ந்து அதன் நுட்பத்தை வெளிப்படுத்துவர். மொழியின் பேச்சு வடிவத்தை ஆய்வுக்கு ஏற்றுக் கொண்டு அதனை விளக்குவது மரபுவழி இலக்கண நூல்களில் காணப்படுவது இல்லை. இந்த நிலை உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுவானதாகும்.

**மொழியியல்**

ஒரு மொழியை அறிவியல் பார்வையோடு அணுகவேண்டும் என்ற கருத்து எழுந்த போது 'மொழியியல்' என்ற பிரிவு உருவானது. மொழியியல் துறையில் ஈடுபடும் அறிஞர்கள் ஒரு மொழியின் எழுத்துவடிவத்தை விட அதன் பேச்சு வடிவத்தையே தங்கள் ஆய்விற்கு ஆதாரங்களாக எடுத்துக் கொண்டனர். மொழியியலார் பேச்சு மொழிதான் ஒரு மொழியின் உண்மையான இயல்பினை எடுத்துரைக்கும் என்று கருதுகின்றனர். இதனால் பேச்சொலி எழுவதற்குக் காரணமாக இருக்கும் மொழியின் ஒலி வடிவத்தில் தங்கள் ஆர்வத்தைச் செலுத்தினர். எனவே மொழியின் ஒலி வடிவத்திற்கு முதன்மை தரும் நிலையில் மொழியியல் ஆய்வுகள் எழுந்தன.

**மொழியியல் உண்மைகள்**

பேச்சு ஒலிகளை ஆய்வு செய்ய முற்பட்டவர் மொழியியல் அறிஞர்கள். இந்த ஆய்வு, பேச்சு ஒலிகள் தோன்றுவதற்குக் காரணமாக அமையும் உடல் உறுப்புகளையும் ஆய்வு செய்யத் தூண்டியது. எனவே எந்த ஒலி தோன்றுவதற்கு எந்த உறுப்பின் முயற்சியும் ஒத்துழைப்பும் பயன்படுகின்றது என்பதை ஆய்வு செய்து கண்டனர். அந்த ஆய்வின்படி பல உண்மைகளை வெளியிட்டனர். இந்த மொழியியல் ஆய்வுகள் எல்லாம் 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டிலும் இடம்பெற்றன. மேனாட்டு அறிஞர்கள் 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கி 20-ஆம் நூற்றாண்டில் இதில் மிகவும் முனைந்து ஈடுபட்டனர். இவ்வறிஞர்கள் வெளிப்படுத்திய உண்மைகளைத் **தொல்காப்பியமும் நன்னூலும்** முன்பே எடுத்துரைக்கக் காணலாம்.

எனவே, தமிழ் இலக்கணம் அறிவியல் முறைப்படி அமைந்தது என்பது இதனால் வெளிப்படுகின்றது. 2500 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியம் இன்றைய மொழியியலாரின் கருத்துகளை அன்றே விளக்கி இருப்பது தமிழ் மொழியின் சிறப்புக்குச் சான்றாக உள்ளது.

**தொகுப்புரை**

எழுத்தொலிகள் பிறப்பதற்கு உயிரின் முயற்சியும் உடல் உறுப்புகளின் ஒத்துழைப்பும் தேவைப்படுவன என்று **தொல்காப்பியமும் நன்னூலும்** தெரிவிக்கும் விளக்கங்களைக் கண்டோம். எழுத்தொலிகள், உந்தியில் இருந்து மேல் நோக்கி எழும் காற்று தலை, கழுத்து, மார்பு ஆகிய உறுப்புகளில் தங்கி, பல், இதழ், நாக்கு, அண்ணம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பிறக்கின்றன. **தொல்காப்பியமும் நன்னூலும்** எழுத்தொலிகளின் பிறப்பினை விளக்கி இருந்தாலும் அவற்றிடையே ஒற்றுமை வேற்றுமைகள் இருப்பது ஒப்பிட்டுக் காட்டப்பெற்றது. மொழியை அறிவியல் முறையில் ஆராய்ந்த மொழிநூல் அறிஞர்கள் எழுத்துகளின் பிறப்பினை விளக்கியிருப்பதும் எடுத்துக்காட்டப்பட்டது. தமிழ் இலக்கண நூல்கள் மொழியியல் என்னும் தனித்துறை வளராத காலத்தில் எழுத்துகளின் பிறப்பினை அறிவியல் முறைப்படி விளக்கியிருப்பதையும் இப்பாடத்தின் வழி அறிந்து கொண்டோம்.

**மொழியில் சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள் பற்றியும் சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகள்**

**பாட முன்னுரை**

தமிழ் மொழியில் எழுதும்போது சொற்களின் முதலில் இந்த எழுத்துகள் தான் வரும் என்ற வரையறை உண்டு. ஆங்கில மொழியில் உள்ள எல்லா எழுத்துகளும் சொல்லுக்கு முதலில் வரும். ஆனால் தமிழ் மொழியில் உள்ள எல்லா எழுத்துகளும் சொல்லுக்கு முதலில் வருவது இல்லை. தனி மெய் எழுத்துகள் சொல்லின் முதல் எழுத்தாக வாரா. ழு, வு, லு முதலிய உயிர்மெய் எழுத்துகளும் சொல்லுக்கு முதலில் வருவது இல்லை. அதேபோல, சொல்லுக்கு இறுதியிலும் எல்லா எழுத்துகளும் வருவதில்லை. சொல்லில் ஒரு மெய் எழுத்தை அடுத்து மற்றொரு மெய் எழுத்து வருவதற்கும் சில வரையறைகள் உள்ளன. தமிழ் மொழியில் சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள் பற்றியும் சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகள் பற்றியும் இந்தப் பாடத்தில் காணலாம்.

**உயிர்மெய் எழுத்துகளின் நிலை**

தமிழில் உள்ள எழுத்துகளை முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள் என வகைப்படுத்தலாம் என முந்தைய பாடங்களில் பார்த்தோம். உயிர் எழுத்து, மெய் எழுத்து ஆகிய முதல் எழுத்துகளும், சார்பு எழுத்துகளில் உயிர்மெய் எழுத்துகளும் சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும் தன்மையை இந்தப் பாடம் வரையறுத்துச் சொல்கிறது.

உயிர் எழுத்து, மெய் எழுத்து என்று முதல் எழுத்துகள் இரு வகைப்படும்.

அவற்றில் உயிர் எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வரும். மெய் எழுத்துகள் சொல்லுக்கு இறுதியில் வரும். உயிர் எழுத்துகள் தனியாகச் சொல்லுக்கு இறுதியில் வருவது இல்லை. மெய் எழுத்துகள் தனியாகச் சொல்லுக்கு முதலில் வருவது இல்லை. வல்லின எழுத்துகள் சொல்லுக்கு இறுதியில் வருவது இல்லை.

**எடுத்துக்காட்டு**

சொல்லின் **முதல் எழுத்தாக உயிர் எழுத்து** வருதல்.

**அ**ம்மா
**எ**றும்பு

சொல்லுக்கு **இறுதியில் மெய் எழுத்து** வருதல்.

- ✓ மண**ல்**
- ✓ மு**ள்**
- ✓ க**ண்**

உயிர்மெய் எழுத்துகள் சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும்.

சொல்லுக்கு முதலில் **உயிர்மெய் எழுத்து** வருதல்.

- ✓ **ப**ல்
- ✓ **க**ண்
- ✓ **ம**ரம்
- ✓ **நி**ழல்

சொல்லுக்கு **இறுதியில் உயிர்மெய் எழுத்து** வருதல்.

- ✓ எ**லி**
- ✓ அப்**ப**
- ✓ உண**வு**
- ✓ ஒற்று**மை**

உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் சேர்ந்து உண்டாவதே உயிர்மெய் எழுத்து என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் உயிர்மெய் எழுத்துகளில் மெய் எழுத்துகள் முன்னும் உயிர் எழுத்துகள் பின்னும் அமைந்துள்ளன என்பதையும் நீங்கள் அறிவீர்கள். சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகளைப் பற்றிப் பார்க்கும்போது உயிர்மெய் எழுத்துகளை மெய்+உயிர் என்று தனித்தனியே பிரித்துவிட வேண்டும். அவ்வாறு பிரித்துவிட்டால் **சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் உயிர்எழுத்து அல்லது மெய் எழுத்து ஆகிய இரண்டு மட்டுமே** வரும் என்பது தெளிவாகிவிடும்.

மரம் என்ற சொல்லின் முதல் எழுத்து ம. இதைப் பிரித்துப் பார்த்தால் **ம்+அ** என்று வரும். மரம் என்ற சொல் **ம்** என்ற மெய் எழுத்தில் தொடங்கிய சொல் என்று கொள்ள வேண்டும்.

கிளி என்ற சொல்லின் இறுதி எழுத்து **ளி** என்பதாகும். இதைப் பிரித்துப் பார்த்தால் **ள்+இ** என்று வரும். கிளி என்ற சொல் **இ** என்ற உயிர் எழுத்தில் முடிகின்ற சொல் என்று கொள்ள வேண்டும்.

இவ்வாறு பிரித்துப் பார்க்கும் போது எல்லா எழுத்துகளையும் உயிர் எழுத்து அல்லது மெய் எழுத்து என்ற பகுப்புக்குள் கொண்டு வந்து விடலாம். ஒருசொல் உயிர் எழுத்திலோ அல்லது மெய் எழுத்திலோ தான் தொடங்குகிறது என்று கூறிவிட இயலும். அதே போல ஒரு சொல் உயிர் எழுத்திலோ அல்லது மெய் எழுத்திலோ தான் முடிகிறது என்றும் கூறிவிட இயலும்.

சொல் என்பது ஒரு பொருளைக் குறிப்பது. பல எழுத்துகளின் சேர்க்கை ஒரு சொல் ஆகிறது. ஒரே எழுத்தும் ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படும். அப்போது அந்த ஒற்றை எழுத்தும் ஒருசொல் ஆகிறது. நெடில் எழுத்துகள் மட்டுமே தனித்து ஒரு சொல்லாக வரும்.

**தீ, பூ, வா, போ**

இவற்றை **ஓர் எழுத்து ஒரு மொழி** என்று கூறுவர். இந்தச் சொற்கள் எல்லாம் உயிர்மெய் எழுத்துகள் வரும் ஓர் எழுத்துச் சொற்கள். இவற்றைப் பிரித்துப் பார்க்கலாம்.

- ✓ தீ = த் + ஈ
- ✓ பூ = ப் + ஊ
- ✓ வா = வ் + ஆ
- ✓ போ = ப் + ஓ

மேலே பிரித்துக் காட்டியுள்ளதைக் கவனியுங்கள். இவற்றில் மெய் எழுத்து முன்னும், உயிர் எழுத்து பின்னும் அமைந்துள்ளன. எனவே இவற்றை மெய் எழுத்தில் தொடங்குகின்ற சொற்களாகவும், உயிர் எழுத்தில் முடிகின்ற சொற்களாகவும் கொள்ள வேண்டும்.

**ஓர்எழுத்து ஒருமொழி**

| | | |
|---|---|---|
| ***1. உயிர், மவில் ஆறும்*** | | |
| **உயிர்எழுத்துகள்** | 6 | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ |
| **'ம' வருக்கத்தில் ஆறு** | 6 | மா, மீ, மூ, மே, மை, மோ |
| ***2. தபந – இல் ஐந்தும்*** | | |
| **'த' வருக்கத்தில் ஐந்து** | 5 | தா, தீ, தூ, தே, தை |
| **'ப' வருக்கத்தில் ஐந்து** | 5 | பா, பூ, பே, பை, போ |
| **'ந' வருக்கத்தில் ஐந்து** | 5 | நா, நீ, நே, நை, நோ |
| ***3. கவச – இல் நாலும்*** | | |
| **'க'வருக்கத்தில் நான்கு** | 4 | கா, கூ, கை, கோ |
| **'வ'வருக்கத்தில் நான்கு** | 4 | வா, வீ, வை, வௌ |
| **'ச'வருக்கத்தில் நான்கு** | 4 | சா, சீ, சே, சோ |
| ***4. ய வில் ஒன்றும் (4)*** | | |
| **'ய' வருக்கத்தில்** | 1 | 1- யா |
| ***5. குறில்*** | | |
| **குறில்** | 2 | நொ, து |
| **மொத்தம்** | 42 | |

மேலே பட்டியலில் காட்டியபடி தமிழில் ஓர் எழுத்து ஒரு மொழியாக அமைவன 42 என்று நன்னூல் வகுத்துள்ளது.

| **உயிர்மெய் எழுத்துகள்** | | |
|---|---|---|
| 1 | ஆ | பசு, |
| 2 | ஈ | ஈ, |
| 3 | ஊ | இறைச்சி, |
| 4 | ஏ | அம்பு, |
| 5 | ஐ | அழகு,தலைவன், |
| 6 | ஓ | மதகு நீர் தாங்கும் பலகை. |

| ***'ம'வருக்கத்தில் (6)-*** *மா,மீ, மூ,மே,மை, மோ* | | |
|---|---|---|
| *7* | மா | பெரியது, |
| *8* | மீ | மேல், |
| *9* | மூ | மூப்பு, |
| *10* | மே | மேல், |
| *11* | மை | மசி, |
| *12* | மோ | மோத்தல்(நீர் மோத்தல்– முகத்தல்) |
| ***'த' வருக்கத்தில் (5)-*** *தா, தீ, தூ, தே, தை* | | |
| *13* | தா | கொடு |
| *14* | தீ, | நெருப்பு |
| *15* | தூ | தூய்மை, வெண்மை |
| *16* | தே | கடவுள் |
| *17* | தை | தைத்தல் |
| ***'ப' வருக்கத்தில் (5)-*** *பா, பூ, பே, பை, போ* | | |
| *18* | பா | பாடல் |
| *19* | பை | இளமை |
| *20* | பூ | மலர் |
| *21* | போ | செல் |
| *22* | பே | அச்சம் |
| ***'ந' வருக்கத்தில் (5)-*** *நா, நீ, நே, நை, நோ* | | |
| *23* | நே. | அன்பு |
| *24* | நீ | முன்னிலை ஒருமை |
| *25* | நா | நாவு |
| *26* | நை | துன்பம் |
| *27* | நோ | வறுமை |
| ***'க' வருக்கத்தில் (4)-*** *கா, கூ, கை, கோ* | | |
| *28* | கா | காப்பாற்று, சோலை |
| *29* | கூ | பூமி |
| *30* | கை | ஒழுக்கம் |
| *31* | கோ | மன்னன், தலைவன். |
| ***'வ' வருக்கத்தில் (4)*** | | |
| *32* | வா | அழைத்தல் |
| *33* | வீ | மலர் |
| *34* | வை | புல் |
| *35* | வெள | திருடல், கவர்தல் |
| ***'ச' வருக்கத்தில் (4)-*** *சா, சீ, சே, சோ* | | |
| *36* | சா | இறந்துபோ |
| *37* | சீ | இகழ்ச்சி, ஒளி |
| *38* | சே | எருது (காளை) |
| *39* | சோ. | மதில் |
| ***'ய' வருக்கத்தில் (1)*** | | |
| *40* | யா | ஒருவகை மரம். |
| *உயிர்மெய்க் குறில்- நொ, து* | | |
| *41* | நொ | வருத்து' (அ) 'துன்புறுத்து |
| *42* | து | உண் |

**ஓர் எழுத்து ஒரு மொழி - தொல்காப்பியம் – நன்னூல் கருத்து ஒப்பீடு:**

**ஒற்றுமைகள்**

*(1)* தொல்காப்பியமும் நன்னூலும் ஓர்எழுத்தே ஒருமொழியாக வரும் என்பதைக் குறிப்பிடுகின்றன.

*(2)* நெட்டெழுத்துகளே ஓரெழுத்து ஒருமொழிகளாக வரும் என்பதை இரு நூல்களும் குறிப்பிடுகின்றன.

**வேற்றுமைகள்**

*(1)* தொல்காப்பியம் ஓர்எழுத்து ஒருமொழிகளாக உயிர்எழுத்துகளை மட்டுமே தெரிவிக்கிறது.
நன்னூல் உயிர்எழுத்துகளோடு உயிர்மெய் எழுத்துகளிலும் வரும் ஓர்எழுத்து ஒருமொழிகளைக் கூறுகின்றது.

*(2)* தொல்காப்பியம் ஏழு உயிர் நெடில் எழுத்துகளையும் ஓர்எழுத்து ஒருமொழிகள் என்று வகுத்துள்ளது.
நன்னூல், உயிர் நெடில்களில் 'ஔ' வை நீக்கி விட்டு, ஆறு நெடில்களை மட்டுமே ஓர்எழுத்து ஒருமொழி என்று வரையறுக்கின்றது.

*(3)* தொல்காப்பிய நூற்பா குற்றெழுத்துகளில் எதுவும் ஓர்எழுத்து ஒருமொழியாக வருவது இல்லை என்று தெரிவிக்கின்றது.
ஆனால் நன்னூல் உயிர்மெய் எழுத்துகளில் இரண்டு குற்றெழுத்துகள் (நொ,து) ஓர்எழுத்து ஒருமொழியாக வருவன என்பதைக் கூறுகின்றது.

***நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே - (நன்னூல் - 109)***

**பொருள் :** உயிர்மெய் எழுத்துகளில் மெய் எழுத்து முன்னும், உயிர் எழுத்து பின்னும் இருக்கும்.

தனி உயிர் நெடில் எழுத்துகள் சொற்களாக அமைவதும் உண்டு.

**எடுத்துக்காட்டு**

- ✓ ***ஆ(பசு)***
- ✓ ***ஈ***
- ✓ ***ஏ (அம்பு)***

**மொழி முதல் எழுத்துகள்**

ஒரு சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள் பற்றி இந்தப் பாடத்தில் காணலாம். சொல்லுக்கு முதலில் உயிர் எழுத்துகளோ மெய் எழுத்துகளோ வரும். சொல் என்பதும், மொழி என்பதும், பதம் என்பதும் ஒரே பொருள் தரும் சொற்கள் ஆகும். முதலில் சொல்லுக்கு முதலில் வரும் உயிர் எழுத்துகளைப் பற்றிப் பார்ப்போம்.

**சொல்லுக்கு முதலில் வரும் உயிர் எழுத்துகள்**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| அம்மா | அல்லி |
| ஆடு | ஆறு |
| இடை | இரண்டு |
| ஈடு | ஈரம் |
| உடை | உடல் |
| ஊர் | ஊக்கம் |
| எறும்பு | எலி |
| ஏணி | ஏடு |
| ஐந்து | ஐப்பசி |
| ஒன்று | ஒட்டகம் |
| ஓடு | ஓடம் |
| ஔவையார் | ஔவியம் (பொறாமை) |

**சொல்லுக்கு முதலில் வரும் மெய் எழுத்துகள்**

இந்தப் பாடத்தின் முதல் பகுதியில் உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொற்கள் இயல்பாக மெய் எழுத்தில் தொடங்குகின்றன என்பது விளக்கப்பட்டது. இப்போது சொல்லின் முதலில் வரும் மெய் எழுத்துகள் பற்றிக் காணலாம். மெய் எழுத்துகள் உயிர் எழுத்துகளுடன் சேர்ந்தே சொல்லின் முதலில் வரும் என்று கூறப்பட்டது. மெய்எழுத்துகள் எந்தெந்த உயிர்எழுத்துகளுடன் சேர்ந்து சொல்லின் முதலில் வரும் என்றும் பின்வரும் பகுதியில் விளக்கப்படும்.

ஒரு மெய் எழுத்துடன் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் சேர்ந்து உருவாகும் உயிர்மெய் எழுத்துகளை **வருக்க எழுத்துகள்** என்று கூறுவர். எடுத்துக்காட்டாக, க் என்ற மெய் எழுத்துடன் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் சேர்ந்து உருவான க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்னும் பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துகளையும் **ககர வருக்கம்** என்று கூறுவர்.

**• க் என்னும் மெய்எழுத்து**

ககர மெய் எழுத்து, பன்னிரண்டு உயிர் எழுத்துகளுடன் சேர்ந்தும் சொல்லுக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| கல் | கரும்பு |
| கால் | காகம் |
| கிளி | கிழமை |
| கீரி | கீரை |
| குயில் | குரங்கு |
| கூடு | கூத்து |
| கெட்ட | கெடுதி (அழிவு) |
| கேள்வி | கேணி (கிணறு) |
| கை | கைத்தடி |
| கொடி | கொம்பு |
| கோடு | கோட்டை |
| கௌதாரி | |

**• ங் என்னும் மெய் எழுத்து**

ஙகரம். அ, இ ஆகிய சுட்டு எழுத்துகளுக்குப் பின்னும், யா, எ, ஆகிய வினா எழுத்துகளுக்குப் பின்னும் சொல்லுக்கு முதலில் வரும்.

அங்ஙனம்(**அப்படி**)
இங்ஙனம் (**இப்படி**)
எங்ஙனம்(**எப்படி**)
யாங்ஙனம் (**எப்படி**)

**சுட்டு, யா, எகர வினா வழி, அவ்வை ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்மே (106)**

என்னும் **நன்னூல்** நூற்பா, ஙகர எழுத்து மொழிக்கு முதலில் வருவதை விளக்குகிறது.

**• ச் என்னும் மெய்எழுத்து**

சகரம் பன்னிரண்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். ஆனால் பழங்காலத்தில் அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர் எழுத்துகளுடனும் மொழிக்கு முதலில் வருவதில்லை. அ என்னும் எழுத்துடன் சேர்ந்து சக்கரம், சங்கு, சங்கம் முதலான சொற்கள் பழங்காலம் முதலே பயன்படுத்தப் படுகின்றன. ஐ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் சகரம் சேர்ந்துவரும் சொற்கள் தமிழில் இல்லை. சைகை, சௌக்கியம் முதலான பிறமொழிச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| சக்கரம் | சந்தனம் |
| சாலை | சாறு |
| சிரிப்பு | சிலந்தி |
| சீற்றம் | சீப்பு |
| சுட்டு | சுண்ணாம்பு |
| சூடு | சூடாமணி |
| செறிவு | செம்பு |
| சேறு | சேரன் |
| சைகை | சைவம் |
| சொல் | சொட்டு |
| சோறு | சோழன் |

**• ஞ் என்னும் எழுத்து**

ஞகரம் அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

| | | |
|---|---|---|
| **ஞ**மலி *(நாய்)* | **ஞ**லவல் *(மின்மினிப் பூச்சி)* | =ஞ்+அ |
| **ஞா**லம் *(உலகம்)* | **ஞா**யிறு | =ஞ்+ஆ |
| **ஞெ**கிழி *(தீப்பொறி)* | **ஞெ**லிகோல் *(தீக்கடையும் கோல்)* | =ஞ்+எ |
| **ஞொ**ள்குதல் *(இளைத்தல்)* | | =ஞ்+ஒ |

***அ, ஆ, எ, ஒவ்வொடு ஆகும் ஞம் முதல் - (நன்னூல்.105)***

*(**பொருள்:** ஞகர மெய் எழுத்து அ, ஆ, எ, ஒ, ஆகிய நான்கு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.)*

**• த் என்னும் மெய்எழுத்து**

தகர மெய் எழுத்து, பன்னிரண்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| **த**ரை | **த**ம்பி |
| **தா**மரை | **தா**ய் |
| **தி**சை | **தி**ணை |
| **தீ**ர்ப்பு | **தீ**மை |
| **து**டிப்பு | **து**ன்பம் |
| **தூ**ண் | **தூ**க்கம் |
| **தெ**ன்னைமரம் | **தெ**ன்றல் |
| **தே**ன் | **தே**ங்காய் |
| **தை**மாதம் | **தை**யல் |
| **தொ**ழில் | **தொ**ட்டி |
| **தோ**ட்டம | **தோ**கை |
| **தௌ**வை*(அக்காள்)* | |

**• ந் என்னும் மெய்எழுத்து**

நகர மெய் எழுத்து, பன்னிரண்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| **ந**ன்றி | **ந**கை |
| **நா**டு | **நா**ள் |
| **நி**றம் | **நி**ழல் |
| **நீ**ர் | **நீ**ளம் |
| **நு**ங்கு | **நு**னி |
| **நூ**ல் | **நூ**று |
| **நெ**ல் | **நெ**ஞ்சு |
| **நே**ற்று | **நே**ர்மை |
| **நை**யாண்டி *(கேலி)* | **நை**தல் |
| **நொ**டி | **நொ**றுங்குதல் |
| **நோ**க்கம் | **நோ**ட்டம் |
| **நௌ**வி *(மான்)* | |

**• ப் என்னும் மெய்எழுத்து**

பகரமெய் எழுத்து, பன்னிரண்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| **ப**ல் | **ப**ழம் |
| **பா**ல் | **பா**ட்டு |
| **பி**டி | **பி**ரிவு |
| **பீ**லி (தோகை) | **பீ**டு (பெருமை) |
| **பு**கழ் | **பு**ல் |
| **பூ**ங்கா | **பூ**ட்டு |
| **பெ**ட்டி | **பெ**ண் |
| **பே**ச்சு | **பே**ழை (பெட்டி) |
| **பை** | **பை**யன் |
| **பொ**ன் | **பொ**ங்கல் |
| **போ**ட்டி | **போ**ர் |
| **பௌ**த்தர்(புத்த சமயத்தவர்) | |

**• ம் என்னும் மெய் எழுத்து**

மகர மெய் எழுத்து, பன்னிரண்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| **ம**ண் | **ம**க்கள் |
| **மா**ன் | **மா**டு |
| **மி**ன்னல் | **மி**தியடி |
| **மீ**ன் | **மீ**ண்டும் |
| **மு**ரசு | **மு**டி |
| **மூ**ங்கில் | **மூ**ன்று |
| **மெ**ய் | **மெ**ழுகு |
| **மே**டு | **மே**ளம் |
| **மை** | **மை**யம் |
| **மொ**ழி | **மொ**ட்டு |
| **மோ**திரம் | **மோ**சடி |
| **மௌ**னம் | **மௌ**வல்*(முல்லை மலர்)* |

**• ய் என்னும் மெய்எழுத்து**

யகர மெய் எழுத்து அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய ஆறு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும். யகர மெய் எழுத்து, பழங்காலத்தில் ஆ (ய்+ஆ=யா) என்னும் எழுத்துடன் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| **ய**வனர் | **ய**வை (நெல்வகை) |
| **யா**னை | **யா**ழ் |
| **யு**கம் (கால அளவு) | |
| **யூ**கி (அறிவாளி) | |
| **யோ**கம் (இணைந்து நிற்றல்) | |
| **யௌ**வனம் (இளமை) | |

**அ, ஆ, உ, ஊ, ஓ, ஒள யம் முதல் - (நன்னூல். 104)**

(**பொருள்:** அ, ஆ, ஊ, ஓ, ஒள ஆகிய உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து யகர மெய் சொல்லுக்கு முதலில் வரும். )

- **வ் என்னும் மெய் எழுத்து**

வகர மெய் எழுத்து அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஒள ஆகிய எட்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| **வ**ணக்கம் | **வ**ரிசை |
| **வா**ல் | **வா**ய் |
| **வி**ல் | **வி**ண் |
| **வீ**டு | **வீ**ண் |
| **வெ**ற்றி | **வெ**ண்மை |

| | |
|---|---|
| **வே**ல் | **வே**ங்கை |
| **வை**கை | **வை**யகம் (உலகம்) |
| **வெள**வால் | |

**உ, ஊ, ஒ, ஓ அலவொடு வம் முதல் - (நன்னூல் - 103)**

(**பொருள்:** வகர மெய் எழுத்து உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கு தவிர மற்ற (அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஒள) எட்டு உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.)

**சொல்லுக்கு முதலில் வராத மெய் எழுத்துகள்**

க, த, ந, ப, ம, ச, ஞ, ய, வ, ங என்னும் பத்து மெய் எழுத்துகளும் மொழிக்கு முதலில் வரும் என்பதை அறிந்தோம். இவை தவிர உள்ள ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு மெய் எழுத்துகளும் மொழிக்கு முதலில் வருவதில்லை. ஆனால் இந்த எழுத்துகளைக் குறிக்கும் போது இவை மொழிக்கு முதலில் வரும்.

'ட' என்னும் எழுத்து, 'ண' என்னும் எழுத்து என்று எழுத்தைக் குறிப்பிடும் போது இவையும் முதலில் வருகின்றன.

தமிழ்மொழி பேசும் மக்கள் பிறமொழி பேசுகிறவர்களுடன் கலந்து பழகி வாழ்கின்றனர். அவ்வாறு அவர்களுடன் பழகும்போது பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்துகிறார்கள். அப்படிப் பேச்சுவாக்கில் தமிழ் மொழியில் நுழைந்த பிறமொழிச் சொற்கள் பலவும் தமிழ்மொழியில் பயன்பாட்டில் உள்ளன. அவற்றையும் தமிழ் மக்கள் பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட பிறமொழிச் சொற்களில் ட, ண, ர, ல, ற என்னும் ஐந்து மெய்எழுத்துகளும் முதலில் வருகின்றன.

**ராமன்**
**லலிதா**

முதலான பிறமொழிப் பெயர்களைத் தமிழில் பயன்படுத்துகிறோம். இவ்வாறு பிறமொழிப் பெயர்களைத் தமிழ்மொழியில் பயன்படுத்தும் போது அவற்றைத் தமிழ்மொழியின் இயல்புக்கு ஏற்பவே காலங்காலமாகப் பயன்படுத்தி வருகிறோம்.

ரகர வருக்க எழுத்துகளும் லகர வருக்க எழுத்துகளும் தமிழ்மொழியில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை என்பதை அறிந்து அவற்றுக்கு முன் 'இ' என்னும் எழுத்தைச் சேர்த்து அப்பெயர்களை எழுதுகிறோம்.

| | |
|---|---|
| **ரா**ணி | **இ**ராணி |
| **ர**வி | **இ**ரவி |
| **ரா**மன் | **இ**ராமன் |
| **ல**லிதா | **இ**லலிதா |
| **லா**பம் | **இ**லாபம் |
| **லா**டம் | **இ**லாடம் |

மேலே **'இ'** என்னும் எழுத்தைச் சேர்த்தது போல் **'அ'** என்னும் எழுத்தைச் சேர்த்துப் பயன்படுத்துவதும் உண்டு.

**ரங்கன் அரங்கன்**

இ, அ என்னும் எழுத்துகளைச் சேர்த்துப் பயன்படுத்துவது போல் **'உ'** என்னும் எழுத்தைச் சேர்த்தும் பிறமொழிப் பெயர்களைப் பயன்படுத்துவது உண்டு.

| | |
|---|---|
| **ரோ**ம் | **உ**ரோம் |
| **ரோ**மம் | **உ**ரோமம் |
| **ரொ**ட்டி | **உ**ரொட்டி |

இவ்வாறு பிறமொழியிலிருந்து பெற்றுப் பயன்படுத்தும் சொற்கள் அனைத்தும் பெயர்ச் சொற்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும். அந்தப் பிறமொழிப் பெயர்களையும் நம் தமிழ் மொழியின் தன்மைக்கு ஏற்பவே அமைத்துப் பயன்படுத்துகிறோம். பிற மொழிப் பெயர்களைத் தேவை கருதிப் பயன்படுத்துவதைப்

போல் பிறமொழி வினைச் சொற்களையும் பிறசொற்களையும் பயன்படுத்தக் கூடாது.

- **ஒலிக்குறிப்புச் சொற்கள்**

சில ஒலிக்குறிப்புகளை நாம் நமது அன்றாடப் பேச்சில் பயன்படுத்துகிறோம்.

கோழி **கொக்**. . . **கொக்** என்று கொக்கரிக்கும்
காக்கை **கா**. . . **கா** என்று கரையும்
நாய் **லொள்** . . . **லொள்** என்று குரைக்கும்

இவற்றில் இடம்பெற்றுள்ள கொக். . . கொக். . ., கா. . .கா. . ., லொள். . . லொள். . . என்பவை **ஒலிக்குறிப்புச் சொற்கள்**. இவை போன்று வேறு பல ஒலிக்குறிப்புகளையும் பயன்படுத்துகிறோம். இத்தகைய ஒலிக்குறிப்புச் சொற்களில் மொழிக்கு முதலில் வராத எழுத்துகளும் இடம்பெறுவது உண்டு.

மணி **டாண்**....**டாண்** என்று ஒலித்தது.
பட்டாசு **டமார்**. . . **டமார்** என்று வெடித்தது.

இவை போன்ற ஒலிக்குறிப்புச் சொற்களைத் தமிழ்மொழியில் **இரட்டைக் கிளவி** என்று சொல்கிறோம். இரட்டைக் கிளவி பற்றி, பின்னர் விரிவாகப் படிப்போம்.

**மொழி இறுதி எழுத்துகள்**

சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகளை **மொழி இறுதி எழுத்துகள்** என்று கூறுவர். மெய் எழுத்துகள் இயல்பாகவே சொல்லுக்கு இறுதியில் வரும். சொல்லுக்கு இறுதியில் வரும் உயிர்மெய் எழுத்துகளை உயிர் எழுத்துகளாகவே கொள்ளவேண்டும்.

**சொல்லுக்கு இறுதியில் வரும் உயிர் எழுத்துகள்**

உயிர் எழுத்துகள் தனியாகச் சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும். சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வருவது இல்லை; மெய் எழுத்துடன் சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகவே சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும். அவ்வாறு வரும் உயிர் எழுத்துகளில் எவை சொல்லுக்கு இறுதியில் வரும் என்பதைப் பார்க்கலாம்.

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லுக்கு இறுதியில் வரும். அவற்றில் **எகரக் குறில் அளபெடையாக மட்டுமே சொல்லுக்கு இறுதியில் வரும்.** ஏனைய அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிர் எழுத்துகள் சொல்லுக்கு இறுதியில் வரும்.

**எடுத்துக்காட்டு**

| | | | |
|---|---|---|---|
| **அ** | பல | சில | திற |
| **ஆ** | நிலா | பலா | சுறா |
| **இ** | பனி | எலி | நரி |
| **ஈ** | தேனீ | தீ | |
| **உ** | ஏழு | கதவு | மிளகு |
| **ஊ** | பூ | தூ (வெண்மை) | |
| **எ** | சேஎ | | |
| **ஏ** | எங்கே | யானே | |
| **ஐ** | மழை | தாமரை | மலை |
| **ஒ** | | நொ (துன்பம்) | |
| **ஓ** | | நிலவோ | மலரோ |
| **ஔ** | | கௌ (கொள்) | வௌ (திருடு) |

குற்றியலுகரமும் சொல்லுக்கு இறுதியில் வரும்.

| | | |
|---|---|---|
| ஆறு | காடு | பட்டு |
| காற்று | பந்து | பாம்பு |
| செய்து | மூழ்கு | பழகு |
| விளையாடு | அஃது | எஃகு |

**சொல்லுக்கு இறுதியில் வரும் மெய் எழுத்துகள்**

வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மெய் எழுத்துகள் மூன்று வகைப்படும். இவற்றில் வல்லின மெய் எழுத்துகள் சொல்லுக்கு இறுதியில் வருவது இல்லை. மெல்லின மெய் எழுத்துகள் ஐந்தும், இடையின மெய் எழுத்துகள் ஆறும் சொல்லுக்கு இறுதியில் வரும்.

மெல்லின மெய் எழுத்துகளில் ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஐந்தும் சொல்லுக்கு இறுதியில் வரும்.

| | |
|---|---|
| உரி**ஞ்**(தேய்க்கும்) | |
| **ஆண்** | **பெண்** |
| வெரி**ந்** (முதுகு) பொருந்தும்) | பொரு**ந்** (போரிடும், |
| **மரம்** | **வெள்ளம்** |
| **மன்னன்** | **பொன்** |

உரிஞ் என்னும் ஒரு சொல்லில் மட்டும் 'ஞ்' என்னும் மெய்எழுத்து, இறுதியில் வரும்.

வெரிந், பொருந் என்னும் இரு சொற்களில் மட்டும் 'ந்' என்னும் மெய்எழுத்து இறுதியில் வரும்.

இடையின மெய் எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) சொல்லுக்கு இறுதியில் வரும்.

| | |
|---|---|
| நாய் | தாய் |
| வேர் | தண்ணீர் |
| கால் | நடத்தல் |
| தெவ் (பகை) | |
| கீழ் | ஊழ் |
| முள் | வாள் |

அவ், இவ், உவ், தெவ் என்னும் நான்கு சொற்களில் மட்டும் 'வ்' என்னும் மெய் எழுத்து இறுதியில் வரும்

**ஆவி, ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள மெய்**
**சாயும் உகரம் நால் ஆறும் ஈறே.**

***(நன்னூல் - 107)***

***(பொருள்:*** *உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய பதினொரு மெய் எழுத்துகளும் குற்றியலுகரமும் ஆக இருபத்து நான்கும் சொல்லுக்கு இறுதியில் வரும்.*

**மெய்ம்மயக்கம்**

உயிர் எழுத்துடன் உயிர் எழுத்துச் சேர்ந்து வருதல் இல்லை. எனவே இரண்டு உயிர் எழுத்துகள் சேர்ந்து வருதல் பற்றி இப்பாடத்தில் குறிப்பிடவில்லை. **மயக்கம் என்பது சேர்ந்து வருதலைக் குறிக்கும்.** மெய் எழுத்துகள் இரண்டு சேர்ந்து வருதலைக் குறிப்பது **மெய்ம்மயக்கம்** எனப்படும். உயிர் எழுத்துடன் மெய்எழுத்துச் சேர்ந்து மிகப் பல இடங்களில் வரும். அவற்றைப் பல்வேறு தமிழ் இலக்கியங்களில் நாம் படித்துத் தெரிந்து கொள்ள இயலும். எனவே, இப்பாடத்தில் மெய்ம்மயக்கம் பற்றி மட்டுமே தெரிவிக்கப்படுகிறது.

மெய்ம்மயக்கம் **இரண்டு** வகைப்படும். அவை:

| |
|---|
| ***1. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்*** |
| ***2. உடன்நிலை மெய்ம்மயக்கம்*** |

என்பவை ஆகும்.

- **உடன்நிலை மெய்ம்மயக்கம்**

ஒரு மெய் எழுத்துக்குப் பின் **அதே மெய் எழுத்து** வருவது **உடன்நிலை மெய்ம்மயக்கம்** எனப்படும்.

மெய் எழுத்துகள் பதினெட்டில் **ர், ழ்** என்னும் மெய் எழுத்துகளைத் தவிர ஏனைய பதினாறு மெய் எழுத்துகளும் உடன்நிலை மெய்ம்மயக்கத்தில் வரும்.

**உடன்நிலை மெய்ம்மயக்கத்தில் வரும் மெய்எழுத்துகள்:**

என்னும் மெய் எழுத்துகள் உடன்நிலை மெய்ம்மயக்கத்தில் இடம்பெறும்.

| | |
|---|---|
| **'க்'** | **மக்கள்**<br>**அக்காள்** |
| **'ங்'** | **அங்ஙனம்** (அவ்விதம்)<br>**எங்ஙனம்** (எவ்விதம்) |
| **'ச்'** | **உச்சி**<br>**அச்சு** |
| **'ஞ்'** | **அஞ்ஞான்று** (அப்பொழுது)<br>**எஞ்ஞான்று** (எப்பொழுது) |
| **'ட்'** | **பட்டம்**<br>**சட்டை** |
| **'ண்'** | **அண்ணன்**<br>**கண்ணீர்** |
| **'த்'** | **கத்தி**<br>**பத்து** |
| **'ந்'** | வெந்நீர்<br>செந்நீர் |
| **'ப்'** | **கப்பல்**<br>**குப்பை** |
| **'ம்'** | **அம்மை**<br>**அம்மாடு** |
| **'ய்'** | **செய்யான்**<br>**வெய்யோன்** (கதிரவன்) |
| **'ல்'** | **எல்லாம்**<br>**நல்லவன்** |
| **'வ்'** | **செவ்வாய்**<br>**கொவ்வை** |
| **'ள்'** | **பள்ளம்**<br>**தள்ளு** |
| **'ற்'** | **குற்றம்**<br>**காற்று** |
| **'ன்'** | **மன்னன்**<br>**பின்னால்** |

மேலே நாம் பார்த்த உடன்நிலை மெய்ம்மயக்கங்களில் ஒரு மெய் எழுத்திற்கு அடுத்து அதே மெய்எழுத்து வந்துள்ளது. ஆனால் அந்த மெய் எழுத்துத் தனித்து வராமல் உயிர்மெய் எழுத்தின் உருவில் வந்துள்ளது. க்+அ = க என்பது போல் இடம்பெற்றுள்ளது.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

ஒரு மெய் எழுத்தை அடுத்து வேறு ஒரு மெய்எழுத்துச் சேர்ந்து வருவது **வேற்றுநிலை மெய்ம்மயக்கம்** எனப்படும்.

ஒரு சொல்லின் முதல் எழுத்தாக உயிர் மெய் எழுத்து இருந்தால் அதனை மெய்+உயிர்

எனப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்பதை முந்தைய பாடத்தில் பார்த்தோம். எனவே ஒரு சொல்லில் ஒரு மெய் எழுத்தை அடுத்து ஓர் உயிர்மெய் எழுத்து வரும்போது இரண்டு மெய் எழுத்துகள் அடுத்தடுத்து வருகின்றன. அப்படி வரும்போது அவை இயல்பாக அமைகின்றனவா என்று பார்க்க வேண்டும். இயல்பாக இருந்தால் அது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

எடுத்துக்காட்டாக, **நான்கு** என்னும் சொல்லில் **ன்** என்னும் மெய்எழுத்தும் **க்** என்னும் மெய் எழுத்தும் இயல்பாக இணைந்து ஒலிக்கின்றன. எனவே இது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்று அழைக்கப்படுகிறது.

மெய்எழுத்துகள் பதினெட்டில் க, ச, த, ப என்னும் நான்கு மெய் எழுத்துகள் தவிர்த்து, ஏனைய பதினான்கு மெய்எழுத்துகளும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் வரும்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் வரும் மெய் எழுத்துகள்**

**ங், ஞ், ட், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்**

என்பன ஆகும்.

**• ங் என்னும் மெய்எழுத்து**

'ங்' என்னும் மெய்எழுத்துக்குப் பின், 'க்' என்னும் மெய்எழுத்து மட்டுமே வரும் பிற மெய் எழுத்துகள் வருவது இல்லை.

**எடுத்துக்காட்டு:**

| |
|---|
| தங்கம் |
| வங்காளம் |
| அங்கி (நெருப்பு, சட்டை) |
| அங்கு |
| அங்கூடம் (அழகிய கூடம்) |
| அங்கே |
| அங்கை (உள்ளங்கை) |
| எங்கோமான் |

**• ஞ் என்னும் மெய் எழுத்து**

'ஞ்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் ச், ய் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.

**எடுத்துக்காட்டு:**

| |
|---|
| கஞ்சம் (தாமரை) |
| அஞ்சாமை |
| அஞ்சி |
| அஞ்சீறடி (அழகிய சிறிய பாதம்) |
| கஞ்சுகம் (சட்டை) |
| உரிஞ்(தேய்) யாது |

**• ட் என்னும் மெய் எழுத்து**

'ட்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ப் ஆகிய மெய் எழுத்துகள் வரும்

**எடுத்துக்காட்டு:**

| |
|---|
| வெட்கம் |
| வெட்சி (ஒருபூ) |
| மாட்சி (பெருமை) |
| நட்பு |
| நுட்பம் |

**• ண் என்னும் மெய் எழுத்து**

'ண்' என்னும் மெய்எழுத்துக்குப் பின் க், ச், ஞ், ட், ப், ம், ய், வ் ஆகிய எட்டு மெய் எழுத்துகளும் வரும்.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| வெண்கலம்<br>கண்காட்சி | க் |
| வெண்சோறு<br>மண்சேறு | ச் |
| வெண்ஞமலி<br>உண்ஞமலி (உண்கின்ற நாய்) | ஞ் |
| மண்டலம்<br>வண்டல் | ட் |
| நண்பகல்<br>நண்பன் | ப் |
| வெண்மலர்<br>உண்மை | ம் |
| மண்யாது | ய் |
| மண்வலிது | வ் |

**• ந் என்னும் மெய் எழுத்து**

'ந்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் த், ய் என்னும் மெய்எழுத்துகள் வரும்.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| வந்த<br>வந்தான் | த் |
| வெரிந்யாது | ய் |

**• ம் என்னும் மெய்எழுத்து**

'ம்' என்னும் மெய்எழுத்துக்குப் பின் ப், ய், வ் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| கம்பன்<br>அம்பு | ப் |

| | |
|---|---|
| கல**ம்யா**து<br>புல**ம்யா**து | ய் |
| கல**ம்வ**லிது<br>வல**ம்வ**ரும் | வ் |

• **ய் என்னும் மெய் எழுத்து**

*'ய்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ஞ், த், ந், ப்,ம், வ் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| பொ**ய்கை** *(நீர்நிலை)*<br>மொ**ய்கு**ழல்*(அடர்ந்த கூந்தல்* | க் |
| வே**ய்சி**றிது<br>கா**ய்சி**னம் | ச் |
| வே**ய்ஞா**ன்ற<br>*(மூங்கில் முதிர்ந்தது)* | ஞ் |
| நெ**ய்த**ல்<br>நொ**ய்து** *(மெல்லியது)* | த் |
| மெ**ய்நீ**ண்டது | ந் |
| மெ**ய்பெ**ரிது | ப் |
| பே**ய்ம**னம் | ம் |
| பே**ய்வ**லிது | வ் |

• **ர் என்னும் மெய் எழுத்து**

*'ர்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ஞ், த், ந், ப், ம், வ் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| வே**ர்க**ள் | க் |
| வே**ர்சி**றியது | ச் |
| வே**ர்ஞா**ன்றது | ஞ் |
| தே**ர்த**ல் | த் |
| நீ**ர்நி**லம் | ந் |
| மா**ர்பு** | ப் |
| கூ**ர்மை** | ம் |
| விய**ர்வை** | வ் |

• **ல் என்னும் மெய் எழுத்து**

*'ல்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ப், ய், வ் என்னும் மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| கா**ல்கோ**ள் *(தொடக்கம்)* | க் |
| வ**ல்சி** *(உணவு)* | ச் |
| க**ல்பா**க்கம் | ப் |
| ந**ல்யா**று | ய் |
| ப**ல்வ**லி | வ் |

• **வ் என்னும் மெய் எழுத்து**

*'வ்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் 'ய்' என்னும் மெய்எழுத்து மட்டும் வரும்.*

**எடுத்துக்காட்டு :** தெ**வ்யா**து *(தெவ் - பகை)*

• **ழ் என்னும் மெய் எழுத்து**

*'ழ்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ஞ், த், ந், ப், ம், வ் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| மூ**ழ்கி**னான் | க் |
| பா**ழ்செ**ய் *(பாழ்படுத்து)* | ச் |
| வீ**ழ்ஞா**ன்ற *(தொங்கிய விழுது)* | ஞ் |
| ஆ**ழ்த**ல் | த் |
| வா**ழ்நா**ள் | ந் |
| வா**ழ்ப**வன் | ப் |
| வா**ழ்ம**னை | ம் |
| வா**ழ்வு** | வ் |

• **ள் என்னும் மெய் எழுத்து**

*'ள்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ப், ய், வ் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| கொ**ள்க**லம் | க் |
| வா**ள்சி**றிது | ச் |
| வா**ள் பெ**ரிது | ப் |
| வா**ள்யா**து | ய் |
| **கள்வ**ன் | வ் |

• **ற் என்னும் மெய்எழுத்து**

*'ற்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ப் ஆகிய மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

க**ற்க** - க்

க**ற்சி**லை - ச்

க**ற்ப**வை - ப்

• **ன் என்னும் மெய் எழுத்து**

*'ன்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் க், ச், ஞ், ப், ம், ய், வ், ற் என்னும் மெய் எழுத்துகள் வரும்.*

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| பொ**ன்க**லம் | க் |
| **புன்செ**ய் | ச் |
| **புன்ஞ**மலி | ஞ் |

| | |
|---|---|
| பு**ன்ப**யிர் | ப் |
| ந**ன்மை** | ம் |
| பொ**ன்யா**து | ய் |
| பொ**ன்வ**லிது | வ் |
| தெ**ன்ற**ல் | ற் |

இதுவரை க், ச், த், ப் என்னும் நான்கு மெய் எழுத்துகள் தவிர, ஏனைய பதினான்கு மெய் எழுத்துகளும் பிற மெய் எழுத்துகளுடன் சேர்ந்து வரும் தன்மையைப் பார்த்தோம்.

**ஈர்ஒற்று மயக்கம்**

ஒரு மெய் எழுத்துக்கு அடுத்து வேறொரு மெய்எழுத்து, உயிர்மெய் எழுத்துடன் வராமல் தனி மெய் எழுத்தாகவும் வருவது உண்டு. அவ்வாறு இரண்டு மெய் எழுத்துகள் சேர்ந்து வருவதை **ஈர்ஒற்று மயக்கம்** என்று கூறுவர்.

**எடுத்துக்காட்டு:** புகழ்ச்சி

இதில் 'ழ்' என்னும் மெய் எழுத்துக்குப் பின் 'ச்' என்ற மெய் எழுத்து வந்துள்ளது. இந்த 'ச்' உயிர்மெய்யுடன் சேர்ந்து வராமல் தனி மெய் எழுத்தாகவே வந்துள்ளது.

**ஈர்ஒற்று மயக்கம் வரும் இடங்கள்:**

ய், ர், ழ் என்னும் மூன்று மெய் எழுத்துகளை அடுத்து, க், ங், ச், ஞ், த், ந், ப், ம் ஆகிய மெய் எழுத்துகள் ஈர்ஒற்றுகளாகச் சேர்ந்து வரும்.

- **'ய்' டன் ஈர்ஒற்று வருதல்**

| | |
|---|---|
| நா**ய்க்**கால் | க் |
| வே**ய்ங்**குழல் | ங் |
| கா**ய்ச்**சல் | ச் |
| மெ**ய்ஞ்**ஞானம் | ஞ் |
| மே**ய்த்**தல் | த் |
| பா**ய்ந்**தது | ந் |
| வா**ய்ப்**பு | ப் |
| செ**ய்ம்**மன (செய்யுளில் மட்டுமே வரும்) | |

- **'ர்' டன் ஈர்ஒற்று வருதல்**

| | |
|---|---|
| பா**ர்க்**கிறாள் | க் |
| ஆ**ர்ங்**கோடு | ங் (ஆத்திமரக்கிளை) |
| உய**ர்ச்**சி | ச் |
| ஞ் | வழக்கத்தில் இல்லை. |
| பா**ர்த்**தல் | த் |
| ஊ**ர்ந்**து | ந் |
| தீ**ர்ப்**பு | ப் |
| ம் | வழக்கத்தில் இல்லை. |

- **'ழ்' டன் ஈர்ஒற்று வருதல்**

| | |
|---|---|
| வா**ழ்க்**கை | க் |
| பா**ழ்ங்**கிணறு | ங் |
| வீ**ழ்ச்**சி | ச் |
| ஞ் | வழக்கத்தில் இல்லை |
| வா**ழ்த்**து | த் |
| வா**ழ்ந்**து | ந் |
| தா**ழ்ப்**பாள் | ப் |
| ம் | வழக்கத்தில் இல்லை. |

**செய்யுளில் ஈர்ஒற்று மயக்கம்**

மேலே நாம் படித்த மெய்ம்மயக்கங்கள் செய்யுளிலும் பேச்சு வழக்கிலும் இடம் பெறும் மெய்ம்மயக்கங்கள் ஆகும்.

செய்யுளில் மட்டுமே இடம் பெறும் ஈர்ஒற்று மயக்கமும் உள்ளது.

'ம்' என்னும் மெய்எழுத்து, தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிப்பது மகரக்குறுக்கம் எனப்படும். இந்த மகரக்குறுக்கத்தில் இரண்டு மெய் எழுத்துகள் அருகில் இருக்கும்.

**எடுத்துக்காட்டு**

போ**ன்ம்**
மரு**ண்ம்**

இந்த மகரக் குறுக்கங்களும் ஈர் ஒற்று மயக்கம் ஆகும். இது செய்யுளில் மட்டுமே இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்புரை**

ஒரு மெய் எழுத்தை அடுத்து எந்த மெய் எழுத்து வரும் என்னும் வரையறைக்கு மெய்ம்மயக்கம் என்று பெயர் என்பதை இந்தப் பாடம் தெரிவித்துள்ளது.

மெய்ம்மயக்கத்தின் வகைகளான வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடன்நிலை மெய்ம்மயக்கம் ஆகியவற்றை இப்பாடம் விளக்கியுள்ளது.

ஈர்ஒற்று மயக்கம் என்றால் என்ன? என்பது பற்றியும் செய்யுளில் மட்டும் இடம் பெறும் மகரக்குறுக்கமும் ஈர்ஒற்றுமயக்கம் என்பது பற்றியும் எடுத்துரைத்துள்ளது.

**புணர்ச்சி I**

**பாட முன்னுரை**

இந்தப் பாடத்தில் **தொல்காப்பியரும், நன்னூலாரும்** எழுத்து இலக்கணத்தில் புணர்ச்சிக்கு எந்த அளவு முக்கிய இடம் தந்துள்ளனர் என்பது

விளக்கிக் காட்டப்படுகிறது. புணர்ச்சி பற்றி நன்னூலார் தரும் விளக்கம் குறிப்பிடப்படுகிறது. நன்னூலார் புணர்ச்சியை எழுத்துகள், பதங்கள், பொருள், எழுத்து மாற்றம் என்னும் நால்வகை அடிப்படையில் பாகுபடுத்திக் கூறியிருப்பது தக்க சான்றுகளுடன் விளக்கிக் காட்டப்படுகிறது. தமிழில் புணர்ச்சி இலக்கணம் ஓசை இனிமையும், பொருள் நோக்கும் கொண்டது என்னும் கருத்துச் சுட்டிக் காட்டப்படுகிறது.

***எழுத்து இலக்கணமும் புணர்ச்சியும்***

***புணர்ச்சி*** என்றால் **சேர்க்கை** என்று பொருள். இரண்டு பதங்கள் (சொற்கள்) ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருவதை எழுத்து இலக்கணம் ***புணர்ச்சி*** என்ற சொல்லால் விளக்கும்.

***சான்று:***

பொன் வளையல்

புணர்ச்சி என்பதைச் **சந்தி** என்றும் குறிப்பிடுவர். இரண்டு சொற்கள் சந்திப்பதைப் பற்றிய இலக்கணம் என்பதால் இவ்வாறு கூறினர் எனலாம். புணர்ச்சி என்பது தமிழ்ச் சொல். சந்தி என்பது வடசொல்.

புணர்ச்சியில் சேர்ந்து வரும் இரண்டு சொற்களில் முதலாவது வரும் சொல்லை ***நிலைமொழி*** என்றும், இரண்டாவது வரும் சொல்லை **வருமொழி** என்றும் **நன்னூலில்** பவணந்தி முனிவர் குறிப்பிடுகிறார். நிலைமொழி என்றால் நிற்கும் சொல் என்று பொருள். வருமொழி என்றால் நிலைமொழிக்குப் பின் வருகின்ற சொல் என்று பொருள்.

***சான்று:***

**பொன் வளையல்**

பொன் - நிலைமொழி

வளையல் - வருமொழி

தொல்காப்பியர் நிலைமொழி என்பதை **நிறுத்த சொல்** என்றும், வருமொழி என்பதைக் **குறித்துவரு கிளவி** என்றும் குறிப்பிட்டுள்ளார். மொழி, கிளவி, சொல் என்பன ஒரே பொருளுடைய சொற்கள். தற்காலத் தமிழ் இலக்கணத்தில் நிலைமொழி, வருமொழி என்பனவே வழக்கில் உள்ளன.

எழுத்து இலக்கணத்தில் புணர்ச்சிக்கு மிக முக்கியமான இடம் தரப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இயற்றிய **தொல்காப்பிய**த்தில் முதலாவதாக அமைந்துள்ள அதிகாரம் **எழுத்ததிகாரம்** ஆகும். அதில் ஒன்பது இயல்கள் உள்ளன. அவற்றில் **நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல்** என்னும் முதல் மூன்று இயல்களில் எழுத்துகளின் வகை, எண்ணிக்கை, பெயர், வடிவம், மாத்திரை, பிறப்பு முதலியன பற்றிக் கூறுகிறார். எஞ்சிய **புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்** என்னும் ஆறு இயல்களில் புணர்ச்சி பற்றியே கூறுகிறார்.

தொல்காப்பியரைப் போலவே நன்னூலாரும் **நன்னூலில்** முதலாவதாக அமைந்த எழுத்ததிகாரத்தில் புணர்ச்சிக்கு முக்கிய இடம் தந்துள்ளார். **நன்னூல்** எழுத்ததிகாரத்தில் ஐந்து இயல்கள் உள்ளன. அவை **எழுத்தியல், பதவியல், உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல், உருபு புணரியல்** என்பனவாம்.

நன்னூலார் எழுத்து இலக்கணத்தை **எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்** (சொல்லின் முதலில்), **ஈறு** (சொல்லின் இறுதியில்), **இடைநிலை** (சொல்லின் இடையில்), **போலி, பதம், புணர்ச்சி** எனப் பன்னிரு வகையாகப் பிரிக்கிறார்.

***எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை,***

***முதல், ஈறு, இடைநிலை, போலி என்றா***
***பதம், புணர்பு, எனப் பன்னிரு பாற்று***
***அதுவே (நன்.57)***

(**ஈறு** = இறுதி: **புணர்பு** = புணர்ச்சி.)

இவற்றில் எண் முதல் போலி என்பது வரையில் உள்ள பத்து இலக்கணங்களை எழுத்தியலிலும், பதம் என்பதைப் பதவியலிலும் விளக்குகிறார். புணர்ச்சியை ஏனைய **உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல், உருபு புணரியல்** ஆகிய மூன்று இயல்களில் விளக்குகிறார்.

மேற்கூறியவற்றால் தொல்காப்பியரும், நன்னூலாரும் எழுத்து இலக்கணத்தில் புணர்ச்சிக்கு முக்கியமான இடம் தந்துள்ளனர் என்பது நன்கு புலனாகிறது.

- ***புணர்ச்சி - விளக்கமும் பாகுபாடும்***

***புணர்ச்சி*** என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தை நன்னூலார் உயிர் ஈற்றுப் புணரியலின் முதல் நூற்பாவில் தருகிறார். அவர் தரும் புணர்ச்சி விளக்கம் வருமாறு:

மெய் எழுத்தையும், உயிர் எழுத்தையும் முதலும் ஈறுமாக உடைய பகாப்பதம், பகுபதம் என்னும் இரண்டு பதங்களும், தன்னொடு தானும் (பகுபதத்தோடு பகுபதமும், பகாப்பதத்தோடு பகாப்பதமும்), பிறிதொடு பிறிதுமாய் (பகுபதத்தோடு பகாப்பதமும், பகாப்பதத்தோடு பகுபதமும்), அல்வழிப் பொருளிலோ (வேற்றுமை வழி அல்லாத நிலை), வேற்றுமைப்

பொருளிலோ சேர்ந்து வரும்பொழுது, நிலைமொழியும், வருமொழியும் இயல்பாக இருந்தோ, விகாரம் பெற்றோ பொருந்துவது புணர்ச்சி எனப்படும்.

***மெய் உயிர் முதல் ஈறு ஆம் இரு பதங்களும், தன்னொடும் பிறிதொடும், அல்வழி வேற்றுமைப்***

***பொருளில் பொருந்துழி, நிலைவரு மொழிகள் இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே (நன் -151)***

*(**ஈறு** = இறுதி; **இரு பதங்கள்** = பகாப்பதம், பகுபதம்; **பொருந்துழி** = சேர்ந்து வரும்பொழுது; **நிலை வருமொழிகள்** = நிலை மொழியும் வருமொழியும்; **இயைவது** = பொருந்துவது, சேர்வது; **புணர்ப்பு** = புணர்ச்சி.)*

நன்னூலார் தரும் இப்புணர்ச்சி விளக்கத்தை நோக்கும்பொழுது, அவர் எழுத்துகளின் அடிப்படை, பதங்களின் அடிப்படை, பொருளின் அடிப்படை, எழுத்து மாற்றத்தின் அடிப்படை ஆகிய நான்கு வகை நிலைகளில் புணர்ச்சியைப் பாகுபடுத்திக் காண்கிறார் என்பது புலனாகிறது. இந்நால்வகைப் புணர்ச்சிப் பாகுபாடுகளைப் பற்றி ஒன்றன்பின் ஒன்றாகத் தக்க சான்றுகளுடன் காண்போம்.

***எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சிப் பாகுபாடு***

தமிழில் உள்ள பதங்கள் (சொற்கள்) எல்லாம் மெய் எழுத்தையும், உயிர் எழுத்தையும் முதலும் ஈறும் ஆக உடையவை என்கிறார் நன்னூலார். இதனை அவர் மேலே கூறிய புணர்ச்சி விளக்கத்தில்,

***மெய் உயிர் முதல் ஈறு ஆம் இரு பதங்களும் (நன். 151-1)***

எனக் குறிப்பிட்டிருப்பது காணலாம். எனவே பதங்கள் எழுத்து அடிப்படையில் நான்கு ஆகும். அவை வருமாறு:

| | |
|---|---|
| ***(1) உயிர் முதல் உயிர் ஈறு*** | ***சான்று:*** அணி உயிர் முதல் **அ;** உயிர் ஈறு **இ** (ண்+இ=ணி. |
| ***(2) உயிர் முதல் மெய் ஈறு*** | ***சான்று:*** அணில் உயிர் முதல் **அ;** மெய் ஈறு **ல்.** |
| ***(3) மெய் முதல் உயிர் ஈறு*** | ***சான்று:*** மணி மெய் முதல் **ம்** (ம்+அ=ம) உயிர் ஈறு **இ** (ண்+இ=ணி) |
| ***(4) மெய் முதல் மெய் ஈறு*** | ***சான்று:*** பல் மெய் முதல் **ப்** (ப்+அ=ப); மெய் ஈறு **ல்** |

இவ்வாறு அமையும் பதங்களே புணர்ச்சியில் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் வரும். நிலைமொழியின் ஈற்று எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் ஒன்றோடு ஒன்று பொருந்தி நிற்பதே **புணர்ச்சி** எனப்படும். நிலைமொழி ஈற்றில் உயிர் அல்லது மெய் எழுத்து இருக்கும். வருமொழி முதலிலும் உயிர் அல்லது மெய் எழுத்து இருக்கும். எனவே நிலைமொழியின் ஈற்றிலும், வருமொழியின் முதலிலும் இருக்கும் எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு, புணர்ச்சியை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை வருமாறு:

| | |
|---|---|
| ***(1) உயிர் ஈற்றின் முன் உயிர் வரல்*** *(நிலைமொழி இறுதி உயிர் + வருமொழி முதல் உயிர்)* | ***சான்று:*** மணி+அடித்தான் *(**இ** முன் **அ** வரல்)* |
| ***(2) உயிர் ஈற்றின் முன் மெய் வரல்:*** *(நிலை மொழி இறுதி உயிர் + வருமொழி முதல் மெய்)* | ***சான்று:*** அணி + கொடுத்தான் *(**இ** முன் **க்** வரல்)* |
| ***(3) மெய் ஈற்றின் முன் உயிர் வரல்*** *(நிலைமொழி இறுதி மெய் + வருமொழி முதல் உயிர்)* | ***சான்று:*** கால் + அணி *(**ல்** முன் **அ** வரல்)* |
| ***(4) மெய் ஈற்றின் முன் மெய் வரல்*** *(நிலை மொழி இறுதி மெய் + வருமொழி முதல் மெய்)* | ***சான்று:*** கால்+ விரல் *(**ல்** முன் **வ்** வரல்)* |

இவற்றுள் உயிர் ஈற்றின் முன் உயிர் வரல், உயிர் ஈற்றின் முன் மெய் வரல் என்னும் இருவகைப் புணர்ச்சி பற்றி உயிர் ஈற்றுப் புணரியலிலும், மெய் ஈற்று முன் உயிர் வரல், மெய் ஈற்று முன் மெய் வரல் என்னும் இருவகைப் புணர்ச்சி பற்றி மெய் ஈற்றுப் புணரியலிலும், விதிகள் பலவற்றைக் கொண்டு நன்னூலார் விளக்கிக் காட்டுவார்.

***பதங்களின் அடிப்படையில் புணர்ச்சிப் பாகுபாடு***

நிலைமொழி பகாப்பதமாகவோ, பகுபதமாகவோ இருக்கலாம். வருமொழியும் பகுபதமாகவோ, பகாப்பதமாகவோ இருக்கலாம். (பகுபதம்-பகுதி, விகுதி, இடைநிலை என்று பிரித்துப் பார்க்கக் கூடிய பதம்; பகாப்பதம் -

அவ்வாறு பிரிக்க முடியாத பதம்.) எனவே ஒன்றோடொன்று புணருகின்ற பதங்களை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை வருமாறு:

| | |
|---|---|
| **(1) பகாப்பதத்தின் முன் பகாப்பதம் வரல்** | **சான்று:** பொன் + குடம் |
| **(2) பகுபதத்தின் முன் பகுபதம் வரல்** | **சான்று:** கண்ணன் + ஓடினான் |
| இவை இரண்டும், இருவகைப் பதங்களும் தன்னொடு தானே பொருந்தி வந்தவை ஆகும். | |
| **(3) பகாப்பதத்தின் முன் பகுபதம் வரல்** | **சான்று:** மணி + அடித்தான் |
| **(4) பகுபதத்தின் முன் பகாப்பதம் வரல்** | **சான்று:** கண்ணன் + கால் |
| இவை இரண்டும், இருவகைப் பதங்களும் பிறிதொடு பிறிதுமாய்ப் பொருந்தி வந்தவை ஆகும். | |

இங்கே காட்டிய சான்றுகளில் **பொன், குடம், மணி, கால்** ஆகியன பகாப்பதங்கள். இவற்றைப் பகுபதங்களைப் போலப் பகுதி, இடைநிலை, விகுதி என்றவாறு பிரித்துக் காண முடியாது. எனவே இவை பகாப்பதங்கள். **கண்ணன், ஓடினான், அடித்தான்** ஆகியன பகுபதங்கள். இவற்றை முறையே,

*கண்+அன் (பகுதி + விகுதி)*
*ஓடு + இன் + ஆன் (பகுதி + இடைநிலை + விகுதி)*
*அடி + த் + த் + ஆன் (பகுதி + சந்தி + இடைநிலை + விகுதி)*

என்றவாறு பிரித்துக் காண முடியும். எனவே இவை பகுபதங்கள்.

**பொருளின் அடிப்படையில் புணர்ச்சிப் பாகுபாடு**

நிலைமொழியோடு வருமொழி பொருந்தும் பொழுது, எவ்வகைப் பொருளில் பொருந்துகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியை

- **வேற்றுமைப் புணர்ச்சி,**
- **அல்வழிப் புணர்ச்சி**

என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

***1. வேற்றுமைப் புணர்ச்சி***

**வேற்றுமைப் புணர்ச்சி** என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறுவதற்கு முன்பு வேற்றுமை என்றால் என்ன என்பது குறித்துச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

தமிழில் வேற்றுமைகள் எட்டு. இவற்றுள் முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்று கூறப்படும். எட்டாம் வேற்றுமை விளிவேற்றுமை என்று கூறப்படும். இவ்விரு வேற்றுமைகளுக்கு என்று தனி வேற்றுமை உருபு கிடையாது. ஏனைய இரண்டு முதல் ஏழு வரையிலான ஆறு வேற்றுமைகள் ஒவ்வொன்றனுக்கும் தனித்தனி உருபுகள் உண்டு. அவை பின்வருமாறு:

| வ. எண் | வேற்றுமை | உருபு |
|---|---|---|
| 1. | இரண்டாம் வேற்றுமை | ஐ |
| 2. | மூன்றாம் வேற்றுமை | ஆல் |
| 3. | நான்காம் வேற்றுமை | கு |
| 4. | ஐந்தாம் வேற்றுமை | இன் |
| 5. | ஆறாம் வேற்றுமை | அது |
| 6. | ஏழாம் வேற்றுமை | கண் |

இவ்வுருபுகள் பெயர்ச்சொல்லோடு சேர்ந்து வந்து, அப்பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதால் வேற்றுமை எனப்பட்டன.

**சான்று:**

- ✓ இராமன் பார்த்தான்
- ✓ இராமனைப் பார்த்தான்
- ✓ இராமனால் பார்த்தான்

இத்தொடர்களில் முதல் தொடரில் பார்ப்பவன் இராமனாகவும், இரண்டாம் தொடரில் பார்க்கப்படுபவன் இராமனாகவும், மூன்றாம் தொடரில் பார்ப்பதற்குக் காரணமானவன் இராமனாகவும் பொருள் வேற்றுமை பெற்றுள்ளது. முதல் தொடரில் இராமன் எழுவாயாகவும், இரண்டாம் தொடரில் இராமன் செயப்படுபொருளாகவும், மூன்றாம் தொடரில் இராமன் கருவிப் பொருளாகவும் விளங்குவதாக இலக்கணம் கூறும். இந்தப் பொருள் வேற்றுமையைச் செய்வது எது? **ஐ** என்னும் இரண்டாம் வேற்றுமை உருபும், **ஆல்** என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும்தான் பொருள் வேற்றுமையைச் செய்கின்றன என்பதை உணரலாம். இனி, வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

நிலைமொழியும், வருமொழியும் வேற்றுமைப் பொருளில் புணரும் பொழுது, அவ்விரு சொற்களுக்கும் இடையில் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு வேற்றுமைகளுக்கு உரிய உருபுகள் தொக்கியோ (மறைந்தோ), விரிந்தோ (வெளிப்பட்டோ) வருவது **வேற்றுமைப் புணர்ச்சி** எனப்படும். எனவே வேற்றுமைப் புணர்ச்சி ஆறு வகைப்படும்.

வேற்றுமை உருபுகள் தொக்கி வருவது **வேற்றுமைத் தொகை** எனவும், அவ்வேற்றுமை உருபுகள் தொகாது (மறையாது) விரிந்து வருவது **வேற்றுமை விரி** என்றும் கூறப்படும்.

***சான்று:***

| வேற்றுமைத் தொகை | உருபு | வேற்றுமை விரி |
|---|---|---|
| ***1. பால் குடித்தான்*** | ஐ | பாலைக் குடித்தான் |
| ***2. தலை வணங்கினான்*** | ஆல் | தலை**யால்** வணங்கி னான் |
| ***3. அரசன் மகன்*** | கு | அரசனுக்கு மகன் |
| ***4. மலை வீழ் அருவி*** | இன் | மலை**யின்** வீழ் அருவி |
| ***5. மலை உச்சி*** | அது | மலையி**னது** உச்சி |
| ***6. மாடப் புறா*** | கண் | மாடத்தின்**கண்** புறா |

***2. அல்வழிப் புணர்ச்சி***

வேற்றுமைப் பொருள் அல்லாத வழியில் நிலைமொழியும் வருமொழியும் புணரும் புணர்ச்சி **அல்வழிப் புணர்ச்சி** எனப்படும்.

உயர்திணை அல்லாத திணையை அஃறிணை (அல்+திணை= அஃறிணை) என்று கூறுவதைப் போன்று, வேற்றுமைப் பொருள் அல்லாத வழி என்பதை அல்வழி என்று தமிழ் இலக்கண நூலார் கூறினர்.

அல்வழிப் புணர்ச்சியில்

- ***தொகைநிலைப் புணர்ச்சி,***
- ***தொகாநிலைப் புணர்ச்சி***

என இருவகைகள் உள்ளன.

- ***தொகைநிலைப் புணர்ச்சி***

தொகைநிலைப் புணர்ச்சி **ஐந்து** வகைப்படும். அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| ***1. வினைத் தொகை*** | ***ஊறுகாய்*** | ***ஊறிய காய், ஊறுகின்ற காய், ஊறும் காய்*** |
| **2.பண்புத் தொகை** | செந்தாம ரை | செம்மை ஆகிய தாமரை |
| **3.உவமைத் தொகை** | தாமரை முகம் | தாமரை போன்ற முகம் |
| **4.உம்மைத் தொகை** | இராப்பகல் | இரவும் பகலும் |
| **5.அன் மொழித் தொகை** | பொற்றொ டி | பொன்னாலாகிய வளையலை உடையாள் |

இத்தொகைகளில் வினைத் தொகையில் மூன்று கால இடைநிலைகளும், பண்புத் தொகையில் ஆகிய என்ற பண்பு உருபும், உவமைத் தொகையில் போன்ற என்ற உவமை உருபும், உம்மைத் தொகையில் உம் என்ற உம்மை உருபும், அன்மொழித் தொகையில் அல்லாத மொழியாகிய (சொல்லாகிய) உடையாள் என்பதும் தொக்கு வந்தன. எனவே இவை தொகை எனப்பட்டன.

- ***தொகாநிலைப் புணர்ச்சி***

அல்வழியில் மற்றொரு வகைப் புணர்ச்சியான தொகாநிலைப் புணர்ச்சி ஒன்பது வகைப்படும். அவை வருமாறு:

| | |
|---|---|
| ***1. எழுவாய்த் தொடர்*** | **இராமன் வந்தான்** |
| ***2. விளித்தொடர்*** | இராமா வா |
| ***3. பெயரெச்சத் தொடர்*** | வந்த இராமன் |
| ***4. வினையெச்சத் தொடர்*** | வந்து போனான் |
| ***5. தெரிநிலை வினைமுற்றுத் தொடர்*** | வந்தான் இராமன் |
| ***6. குறிப்பு வினைமுற்றுத் தொடர்*** | நல்லன் இராமன் |
| ***7. இடைச்சொல் தொடர்*** | மற்றொன்று |
| ***8. உரிச்சொல் தொடர்*** | நனி நன்று (மிகவும் நன்று) |
| ***9. அடுக்குத் தொடர்*** | பாம்பு பாம்பு |

இத்தொடர்களில் இருசொற்களுக்கு இடையே எந்த உருபும் மறைந்திருக்கவில்லை. எனவே இவை தொகாநிலைத் தொடர்கள் எனப்பட்டன.

மேலே கூறியவற்றால் அல்வழிப் புணர்ச்சி, தொகைநிலை ஐந்தும், தொகாநிலை ஒன்பதுமாக மொத்தம் பதினான்கு வகைப்படும் என்பது புலனாகும்.

வேற்றுமைப் புணர்ச்சி ஆறாகவும், அல்வழிப் புணர்ச்சி பதினான்காகவும் வகைப்பட்டு விளங்குவதை நன்னூலார் உயிர் ஈற்றுப் புணரியலில் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

***வேற்றுமை ஐம்முதல் ஆறாம், அல்வழி***
***தொழில், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி,***
***எழுவாய், விளி, ஈர் எச்சம், முற்று, இடை,உரி***
***தழுவுதொடர் அடுக்கு, என ஈர் ஏழே (நன்னூல், 152)***

(**தொழில்** = வினைத்தொகை; **ஈர் எச்சம்** = பெயரெச்சம் வினையெச்சம்; **முற்று - ஈர் முற்று** = தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று; **ஈர்ஏழு** = பதினான்கு.)

***எழுத்து மாற்ற அடிப்படையில் புணர்ச்சிப் பாகுபாடு***

நிலைமொழியில் உள்ள சொல்லும், வருமொழியில் உள்ள சொல்லும் அல்வழிப் பொருளிலும், வேற்றுமைப் பொருளிலும் புணர்ந்து (சேர்ந்து) வரும் என்பதை மேலே பார்த்தோம். இவ்வாறு புணர்கின்ற இரு சொற்களில் ஏதேனும் மாற்றம் நிகழ்கின்றதா அல்லது நிகழவில்லையா என்பதை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியை நன்னூலார் **இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி** என இரண்டு வகையாகப் பிரிக்கிறார். இவ்விருவகைப் புணர்ச்சி பற்றி அவர் விளக்கமாகவும் கூறுகிறார்.

***இயல்பு புணர்ச்சி***

நிலைமொழி வருமொழியுடன் புணரும் பொழுது, அவ்விரு சொற்களிலும் எவ்வித எழுத்து மாற்றமும் நிகழாமல் இயல்பாக இருப்பது **இயல்பு புணர்ச்சி** எனப்படும். அஃதாவது அடுத்துக் கூறப்படும் விகாரப் புணர்ச்சிக்கு உரிய விகார வகைகள் எதனையும் அடையாமல் இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி ஆகும். இதனை நன்னூலார் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

***விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே - (நன்னூல், 153)***

*(**மேவலது** - அடையாதது.)*

***சான்று:***

தாமரை + பூத்தது = தாமரை பூத்தது
பொன் + மலை = பொன் மலை
கதவு + திறந்தது = கதவு திறந்தது

***விகாரப் புணர்ச்சி***

நிலைமொழி வருமொழியுடன் புணரும் பொழுது, அவ்விரு சொற்களில் ஒன்றிலோ அல்லது இரண்டிலுமோ ஏதேனும் எழுத்து மாற்றம் நிகழ்ந்தால் அது **விகாரப் புணர்ச்சி** எனப்படும். விகாரப் புணர்ச்சியை நன்னூலார் **தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம்** என மூன்று வகைப்படுத்திக் காட்டுகிறார். இம்மூவகை விகாரங்களும் நிலைமொழியாகவும், வருமொழியாகவும் வரும் சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய மூன்று இடங்களிலும் நிகழும் என்று அவர் கூறுகிறார்.

***தோன்றல், திரிதல், கெடுதல் விகாரம்***
***மூன்றும் மொழிமூ இடத்தும் இயலும் - (நன்னூல், 154)***

*(**மொழி** = சொல்; **மூ இடத்தும்** = சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய மூன்று இடங்களிலும்.)*

- **தோன்றல் விகாரம்**

இரு சொற்களுக்கு இடையில் எழுத்தோ, சாரியையோ தோன்றுவது **தோன்றல் விகாரம்** எனப்படும்.

***சான்று:***

பூ+கொடி = **பூங்**கொடி *(**ங்** என்ற எழுத்துத் தோன்றியது)*

யானை+கொம்பு = **யானைக்** கொம்பு *(**க்** என்ற எழுத்துத் தோன்றியது)*

ஆ+பால் = **ஆவின்** பால் *(**இன்** என்ற சாரியை தோன்றியது)*

- **திரிதல் விகாரம்**

இரு சொற்களில், ஏதேனும் ஒரு சொல்லில் உள்ள எழுத்து இன்னோர் எழுத்தாகத் திரிதல் (மாறுதல்) **திரிதல் விகாரம்** எனப்படும்.

***சான்று:***

பொ**ன்**+குடம் = பொ**ற்**குடம்

*(நிலைமொழி இறுதி **ன்** என்பது **ற்** எனத் திரிந்துள்ளது)*

முன்+**நி**லை = முன்**னி**லை

*(வருமொழி முதல் **ந்** என்பது **ன்** எனத் திரிந்துள்ளது)*

சில நேரங்களில் நிலைமொழியின் இறுதி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் இன்னோர் எழுத்தாகத் திரிதல் உண்டு.

***சான்று:***

பொ**ன்**+**தா**மரை = பொ**ற்றா**மரை *(நிலைமொழி இறுதி **ன்** என்பதும், வருமொழி முதல் **த்** என்பதும் **ற்** எனத் திரிந்துள்ளன.)*

- **கெடுதல் விகாரம்**

இரு சொற்களில் ஏதேனும் ஒரு சொல்லில் உள்ள எழுத்து மறைந்து போதல் **கெடுதல் விகாரம்** எனப்படும். (கெடுதல்-மறைதல்)

***சான்று:***

மர**ம்** + நிழல் =மரநிழல் *(நிலை மொழி இறுதி **ம்** என்பது கெட்டது.)*

மேலே கூறப்பட்ட மூன்று விகாரங்களும் நிலைமொழியாகவும், வருமொழியாகவும் அமையும் இரு சொற்களின் முதல், இடை, இறுதி

Professor Academy

# TEST SERIES

Extensive Test Series to Boost Your Preparation!

Get access to 100+ Test Series, including:

- **Daily Tests** to reinforce learning every day
- **Unit-Wise Tests** for focused revision
- **Full-Length Tests** to simulate the real exam experience

Comprehensive Study Materials as soft copy PDFs, available in our mobile app.





Download & Explore!

www.professoracademy.com

Professor Academy

# STUDY MATERIALS

Enroll today and receive 11 Printed Books right at your doorstep

- **10 Subject-Based Books** covering all major topics
- **1 Previous Year Question Bank**

Comprehensive Study Materials as soft copy PDFs, available in our mobile app.

## PG TRB TAMIL

### Based on New Syllabus



Rs. 300 for courier charge payments is excluded

www.professoracademy.com

# PAYMENT DETAILS& ENROLLMENT PROCESS




| BOOKS ONLY | COURSE ONLY | COURSE + BOOKS |
|---|---|---|
| ₹3999 | ₹8999 | ₹9999 |
| ACTUAL FEE ~~₹5999~~ | ACTUAL FEE ~~₹14999~~ | ACTUAL FEE ~~₹15999~~ |

An additional charge of Rs. 300 for courier charge payments is excluded in the original course fee.

- Step 1: Register Online on Our Website or App.

SCAN HERE TO REGISTER

- Step 2: Choose Your Course and Complete Payment
- Step 3: Receive Login Details and Begin Your Journey!
- Step 4: Our dedicated support team is here to assist you at every step.

NOTE* Books will be provided only after the full payment of fees has been made.




www.professoracademy.com

# Professor Academy

## Professor Academy's Pride
## TRB State Rankers

STATE FIRST
**ISWARYA P**

STATE FIRST
**DEVASAGAYAM D**

STATE SECOND
**RAJESHWARI N**

## Achiever's Testimonials

Line by line teaching helps me to take good notes. They teach me lessons thoroughly, and then only I attend their tests. Their test makes me more focused on preparation.

**VINITHA. M | STATE 6TH RANK**

Professor Academy's test series are good. I write each and every test like TRB exam. I am very happy to attend Professor Academy's test. Happy to see my test result. In a similar way, I secured state rank on PG TRB exam (just assume exam like Professor Academy's test).

**AMUTHA VIJAYALAKSHMI. A | STATE 7TH RANK**

Professor Academy's motivation and their notes are very helpful for me. Their crystal-clear explaining faculties are the secret of my success. Their friendly guidance boosts my exam preparation.

**HEMA. P | STATE 8TH RANK**

The reason for my success is Professor Academy. If not for Professor Academy, I wouldn't have achieved this. The recorded classes are very useful for me. It made studying easier and gave me confidence. Therefore, I recommend Professor Academy to everyone who wants to succeed in their studies.

**ARUNA RAJESWARI. R | STATE 10TH RANK**

www.professoracademy.com

Click here to
Watch more Achiever's Talks

ஆகிய மூன்று இடங்களிலும் நிகழும் என நன்னூலார் குறிப்பிட்டுள்ளார்.

***சான்று :***

*ஆறு + பத்து =அறுபது*

இதில் நிலைமொழியின் முதலில் உள்ள **ஆ** என்னும் நெட்டெழுத்து **அ** என்னும் குற்றெழுத்தாகத் திரிந்தது. வருமொழியின் இடையில் உள்ள **த்** என்ற மெய் கெட்டது.

- **ஒரே புணர்ச்சியில் பல விகாரங்கள்**

இரு சொற்கள் சேர்ந்துவரும் ஒரு புணர்ச்சியில் **தோன்றல், திரிதல், கெடுதல்** என்னும் மூன்றுவகை விகாரங்களில் ஒரே ஒரு விகாரம் மட்டும் அல்லாமல் இரண்டு விகாரமோ, மூன்று விகாரமோ கூட வரப்பெறும் என்கிறார் நன்னூலார்.

***ஒரு புணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறுமே***
***- (நன்னூல், 157)***

*(**புணர்** = புணர்ச்சி)*

***சான்று :***

*1. யானை + கொம்பு = யானைக் கொம்பு*

இதில் தோன்றல் விகாரம் மட்டும் வந்தது.

*2. மரம் + பெட்டி = மரப்பெட்டி*

இதில் நிலைமொழியின் இறுதியில் உள்ள மகரமெய் கெட்டு, அங்கே வருமொழியின் முதலில் உள்ள எழுத்துக்கு ஏற்ப, பகர மெய் தோன்றியதால் கெடுதல், தோன்றல் என்னும் இரு விகாரங்கள் வந்தன.

*3. பனை + காய் = பனங்காய்*

இதில் நிலைமொழியாக வந்துள்ள பனை என்பதன் இறுதியில் உள்ள ஐகாரம் கெட்டு (கெடுதல் விகாரம்), இடையில் அம் என்ற சாரியை தோன்றி (தோன்றல் விகாரம்), அம் என்ற சாரியையில் உள்ள மகரமெய் ஙகர மெய்யாகத் திரிந்ததால். (திரிதல் விகாரம்) மூன்று விகாரங்களும் வந்தன.

*பனை + காய்*

*பன் + காய் (**ஐ** - கெடுதல்)*

*பன் + அம்+காய் (**அம்** - தோன்றல்)*

*பன் + அங்+காய் (**ம் ங்** எனத் திரிதல்) = பனங்காய்*

- **புணர்ச்சியால் ஓசை இனிமையும், பொருள் தெளிவும்**

இரு சொற்கள் புணர்ச்சியில் சேரும்பொழுது சில இடங்களில் இயல்பாக வருகின்றன என்பதையும், சில இடங்களில் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களுள் ஒன்றையோ பலவற்றையோ பெற்று வருகின்றன என்பதையும் மேலே பார்த்தோம். இவை எல்லாம் அச்சொற்களைச் சேர்த்துப் பேசுபவர்க்கு எளிதில் உச்சரித்துக் கூறும் ஓசை இனிமையையும், அவற்றைக் கேட்பவர்க்குச் செவி மடுத்துக் கேட்கும் ஓசை இனிமையையும் தருகின்றன. மேலும் சில இடங்களில் பொருள் தெளிவையும் தருகின்றன. இயல்பு புணர்ச்சிக்கும், விகாரப் புணர்ச்சிக்கும் மேலே காட்டிய சான்றுகளை நோக்கினால், அவற்றை வாய்விட்டுச் சொல்லிப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு தெரியவரும்.

**பூ+கொடி** என்பதை இயல்பாக, **பூகொடி** என்று சேர்த்தும், இடையில் **ங்** என்ற மெய் எழுத்துத் தோன்ற, **பூங்கொடி** என்று சேர்த்தும் சொல்லிப் பாருங்கள். பின்னதிலேயே ஓசை இனிமை உள்ளதை உணரலாம். மேலும் பூ என்பதோடு கா, சோலை, தடம், பொழில் முதலிய சொற்கள் சேர்ந்து வந்து பூங்கா, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பொழில் என்று ஓசை இனிமையுடன் அமைவதையும் காணலாம்.

மரம்+பெட்டி என்பதை இயல்பாக, **மரம்பெட்டி** என்று கூறினால் ஒரு பொருள்படும். அதையே **மரப்பெட்டி** என்று விகாரப்படுத்திக் கூறினால் வேறொரு பொருள்படும். மரத்தால் ஆகிய பெட்டி வாங்கி வந்த ஒருவர் மற்றொருவரிடம்,

**நான் மரம்பெட்டி வாங்கி வந்தேன்**

என்று இயல்பாகக் கூறினால், கேட்பவர்க்கு **நான் மரமும் பெட்டியும் வாங்கி வந்தேன்** என்றல்லவா பொருள்பட்டுவிடும்?

**நான் மரப்பெட்டி வாங்கி வந்தேன்**

என்று விகாரப்படுத்திக் கூறும் போதுதான், **நான் மரத்தால் ஆகிய பெட்டி வாங்கி வந்தேன்** என்று கேட்பவர்க்குப் பொருள் தெளிவுபடும். மேலும் மரப்பெட்டி என்று சொல்லும்போதே ஓசை இனிமையும் தோன்றுகிறது.

எனவே ஓசை இனிமைக்கும், பொருள் தெளிவுக்கும் காரணம் புணர்ச்சியே என்பதை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

**செய்யுள் விகாரங்கள்**

தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூவகை விகாரங்களும் செய்யுள் வழக்கிலும், உலக வழக்கிலும் (பேச்சு வழக்கிலும்) ஒருங்கே வரும். இவை அல்லாமல் செய்யுளில் மட்டுமே வரும் விகாரங்களைப் பற்றியும் நன்னூலார் குறிப்பிடுகிறார். அவற்றைப் பற்றி இனிக் காண்போம்.

செய்யுளில் அசை, சீர், தளை, அடி, தொடை முதலியவற்றின் இலக்கணம் நோக்கிச் சில இடங்களில் சொற்கள் விகாரப்படுவது உண்டு. இவ்விகாரங்கள் செய்யுள் இலக்கணத்தை நிறைவு செய்தற்பொருட்டு வருவதால் **செய்யுள் விகாரங்கள்** எனப்பட்டன.

அவை **வலித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை** என்பனவாம்.

***வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல்,***
***விரித்தல், தொகுத்தல் வரும்செய்யுள் வேண்டுழி***
***(நன்னூல், 155)***

*ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே (நன். 156)*

(**மூவழி** = சொல்லின் முதல், இடை, கடை என்ற மூன்று இடத்திலும்)

- **வலித்தல் விகாரம்**

மெல்லின எழுத்தை வல்லின எழுத்து ஆக்குதல்.

**சான்று :**

***சிலப்பதிகாரம்***

இதில் சிலம்பு என்பதில் உள்ள **ம்** என்ற மெல்லின எழுத்து **ப்** என்ற வல்லின எழுத்தாகியது.

- **மெலித்தல் விகாரம்**

வல்லின எழுத்தை மெல்லின எழுத்து ஆக்குதல்.

**சான்று:**

***தண்டையின் இனக்கிளி கடிவோள்***

(தினைப்புனத்தைக் காவல் காக்கும் தலைவி, தினைக்கதிர்களை உண்ணவரும் கிளிகளை, தென்னை, பனை ஆகியவற்றின் மட்டையை மூன்று அல்லது நான்காகப் பிளந்து செய்த தட்டை என்ற கருவியை அடித்து ஒலி எழுப்பி விரட்டுவாள்.)

இதில் தட்டை என்பது தண்டை என்றாகியது. **ட்** என்ற வல்லின எழுத்து **ண்** என்ற மெல்லின எழுத்தாகியது.

- **நீட்டல் விகாரம்**

குற்றெழுத்தை நெட்டெழுத்து ஆக்குதல்.

**சான்று:**

**ஈசன் எந்தை இணையடி நீழலே**

இதில் **நி**ழல் என வரவேண்டியது, **நீ**ழல் என்று நீண்டது.

- **குறுக்கல் விகாரம்**

நெட்டெழுத்தைக் குற்றெழுத்து ஆக்குதல்.

**சான்று:**

***யானை***
***எருத்தத்து இருந்த இலங்கிலைவேல் தென்னன்***
***திருத்தார் நன்றென்றேன் தியேன்***

(யானையின் பிடரியில் வீற்றிருந்த ஒளி வீசும் வேலை ஏந்திய பாண்டியன் மார்பில் கிடந்த அழகிய மாலை நன்று என்று சொன்னேன் தீயவளாகிய நான் - இது தலைவி தன் தோழியரிடம் கூறியது.)

இதில் **தீ**யேன் என வரவேண்டியது **தி**யேன் என்று குறுகியது.

- விரித்தல் விகாரம்

ஒரு சொல்லில் இல்லாத எழுத்தை வருவித்தல்.

**சான்று :**

***சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே***

(**வெதிரின்** = மூங்கிலின்)

இதில் விளையுமே என்று வரவேண்டிய இடத்தில், விளையு**ம்**மே என்று மகரமெய் வந்துள்ளது.

- **தொகுத்தல் விகாரம்**

ஒரு சொல்லில் உள்ள எழுத்தை நீக்குதல்.

**சான்று :**

***சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே***

சிறிய+இலை என்பதில். இடையில் உள்ள அகர உயிரை (சிறி+(ய்)+இலை-ய் என்பது உடம்படுமெய்) நீக்கியிருப்பதால் தொகுத்தல் விகாரம்.

- **முதற் குறை**

ஒரு சொல்லில் முதல் எழுத்துக் குறைந்து வருவது.

**சான்று :**

***மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி***

*(தாமரை இதழைப் போன்ற அழகிய சிவந்த சிறிய பாதங்கள்)*

இதில் **தா**மரை என்ற சொல்லில் முதல் எழுத்துக் குறைந்து வந்துள்ளதால் முதற்குறை.

- **இடைக்குறை**

ஒரு சொல்லில் இடையில் உள்ள எழுத்துக் குறைந்து வருவது.

**சான்று :**

***வேதின வெரிநின் ஓதி முதுபோத்து***

*(**வேதினம்** = கருக்கரிவாள்; கருக்கரிவாளைப் போன்ற முதுகினைப் பெற்ற ஓந்தி; **வெரிந்** = முதுகு **முதுபோத்து** = முதிய ஆண்.)*

இதில் ஓந்தி (ஓணான்) என்ற சொல்லின் இடையில் உள்ள **நகர மெய்** குறைந்து வந்துள்ளதால் இடைக்குறை.

- **கடைக்குறை**

ஒரு சொல்லில் இறுதி எழுத்துக் குறைந்து வருவது.

**சான்று:**

***நீல் உண் துகிலிகை கடுப்ப***

*(நீலம் உண்ட வெண்மையான ஆடையைப் போன்று)*

இதில் **நீலம்** என்ற சொல்லின் இறுதியில் உள்ள **அகர உயிரும், மகர மெய்யும்** குறைந்து வந்துள்ளதால் கடைக்குறை.

**தொகுப்புரை**

இரண்டு சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருவது புணர்ச்சி எனப்படும். இது சந்தி என்ற வடசொல்லாலும் குறிப்பிடப்படும். இரண்டு சொற்களில் முதல் சொல் நிலைமொழி என்றும், இரண்டாம் சொல் வருமொழி என்றும் கூறப்படும். தொல்காப்பியரும் நன்னூலாரும் எழுத்ததிகாரத்தில் புணர்ச்சிக்கு முக்கிய இடம் தந்துள்ளனர்.

நிலைமொழியின் ஈற்றிலும், வருமொழியின் முதலிலும் வரும் எழுத்துகளை அடிப்படையாக வைத்துப் புணர்ச்சியை நன்னூலார் உயிர் ஈற்றின் முன் உயிர்வரல், உயிர் ஈற்றின் முன் மெய்வரல், மெய் ஈற்றின் முன் உயிர்வரல், மெய் ஈற்றின் முன் மெய்வரல் என நால்வகையாகப் பிரித்து விளக்குகிறார்.

இருசொற்கள் சேர்ந்து வரும்போது அவை எவ்வகைப் பொருளில் பொருந்துகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியை வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்று இருவகையாகப் பிரித்து விளக்குகிறார் நன்னூலார்.

இரு சொற்கள் சேர்ந்து வரும்போது அச்சொற்களில் நிகழும் எழுத்து மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு நன்னூலார் புணர்ச்சியை இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகையாகப் பிரித்து விளக்குகிறார். இயல்பு புணர்ச்சியை ஒன்றாகவும், விகாரப் புணர்ச்சியைத் தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என மூன்றாகவும் பகுத்து அவர் விளக்குகிறார்.

புணர்ச்சியில் சொற்கள் சேர்ந்து இயல்பாக வருவதும், தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்கள் பெற்று வருவதும் பேசுவோர்க்கும், கேட்போர்க்கும் ஓசை இனிமையையும், பொருள் தெளிவையும் தருகின்றன.

**புணர்ச்சி II**

இப்பாடத்தில் மெய்யின் முன்னர் உயிர்வந்து புணர்வது பற்றி நன்னூலார் குறிப்பிடும் பொதுவிதிகள் முதலில் விளக்கிக் காட்டப்படுகின்றன. அதனை அடுத்து ணகர, நகர ஈறுகளுக்கு அவர் கூறும் சிறப்பு விதிகள் விளக்கிக் காட்டப்படுகின்றன.

**மெய் ஈற்றுப் புணர்ச்சி விதி I**

**மெய் ஈற்றின் முன் உயிர்வந்து புணர்தல்**

நிலைமொழியின் இறுதியில் நிற்கும் எல்லா மெய்களின் முன்னும் உயிர்வந்து புணர்தல் பற்றி நன்னூலார் இரண்டு பொதுவிதிகளைக் கூறுகிறார். அவை மெய்யின் மேல் உயிர் வந்து ஒன்றுதல், தனிக்குறில் முன் நின்ற மெய், உயிர்வரின் இரட்டுதல் என்பனவாம்.

**மெய்யின் மேல் உயிர் வந்து ஒன்றுதல்**

நிலைமொழியின் இறுதியில் நிற்கும் மெய்யின்மேல், வருமொழியின் முதலில் உள்ள உயிர் வந்து கூடி உயிர்மெய்யாக மாறும். இவ்வாறு மாறுவது விகாரப் புணர்ச்சி அன்று; இயல்பு புணர்ச்சி ஆகும்.

***உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன்னூல், 204)***

*(**உடல்** – மெய் எழுத்து; **உயிர்** – உயிர் எழுத்து; **ஒன்றுவது** – கூடுவது)*

***சான்று:***

உயிர் + **எ**ழுத்து = உயி**ரெ**ழுத்து
வேல் + **எ**றிந்தான் = வே**லெ**றிந்தான்

*(**உயிரெழுத்து** – உயிராகிய எழுத்து. இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அல்வழிப் புணர்ச்சி; **வேலெறிந்தான்** – வேலை எறிந்தான். இரண்டாம் வேற்றுமைத் தொகை. வேற்றுமைப் புணர்ச்சி)*

இச்சான்றுகளில் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் **ர், ல்** என்னும் மெய்களோடு, வருமொழியின் முதலில் உள்ள **எ** என்னும் உயிர் வந்து கூடி, முறையே **ரெ, லெ** என்று உயிர்மெய்களாக மாறியிருப்பதைக் காணலாம். இம்மாற்றம் இயல்பாக நிகழ்ந்திருப்பதால் நன்னூலார் நூற்பாவில் 'இயல்பே' என்று கூறினார்.

**தனிக்குறில் முன் நின்ற மெய் உயிர்வரின் இரட்டுதல்**

நிலைமொழி தனிக்குறிலை அடுத்துவரும் ஒரு மெய்யைக் கொண்டதாக இருந்து, வருமொழி முதலில் உயிர்வந்தால், நிலைமொழி இறுதியில் நிற்கும் அம்மெய்யானது இரட்டிக்கும்.

***தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன்னூல், 205)***

*(**ஒற்று** – மெய்)*

***சான்று:***

மெய் + **எ**ழுத்து = மெ**ய்யெ**ழுத்து
**பல்** + **உ**டைந்தது = **பல்லு**டைந்தது
**முள்** + இலை = **முள்ளி**லை
பொ**ன்** + ஆரம் = பொ**ன்னா**ரம்

*(**மெய்யெழுத்து** – மெய் ஆகிய எழுத்து. இருபெயரொட்டுப் பண்புத்தொகை; **பல்லுடைந்தது** – எழுவாய்த் தொடர். இவை இரண்டும் அல்வழி. **முள்ளிலை** – முள்ளை உடைய இலை. இரண்டாம் வேற்றுமைத் தொகை; **பொன்னாரம்** – பொன்னாலாகிய ஆரம். மூன்றாம் வேற்றுமைத் தொகை. இவை இரண்டும் வேற்றுமை)*

இச்சான்றுகளில் தனிக்குறிலை அடுத்துவந்த **ய், ல், ள், ன்** என்னும் மெய்கள் வருமொழி முதலில் உயிர் வரும்போது அவை முறையே **ய்ய், ல்ல், ள்ள், ன்ன்** என இரட்டித்தமையைக் காணலாம்.

கண், மண், கல், பல், முள், எள், தின், பொன் போன்ற சொற்கள் தனிக்குறிலை அடுத்த மெய்யை உடையனவாய் வழங்குகின்றன. ஆனால் பேச்சுத் தமிழில் இச்சொற்களை எவரும் மெய் ஈறாக ஒலிப்பதில்லை. மெய் ஈறாக ஒலிப்பது அருகிக் காணப்படுகிறது. இச்சொற்களின் இறுதியில் உள்ள மெய்யோடு உகரம் சேர்த்துப் பேச்சுத்தமிழில் எல்லோருமே **கண்ணு, மண்ணு,** கல்லு, பல்லு, முள்ளு, எள்ளு, தின்னு, பொன்னு என ஒலிக்கின்றனர். உகர உயிர் சேரும்போது இச்சொற்களில் தனிக்குறிலை அடுத்து வரும் மெய்கள் இரட்டிப்பதைக் காணலாம். இவ்வாறு உகரம் சேர்த்து ஒலிப்பதில் எளிமை காணப்படுகிறது.

**ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சி விதிகள்**

இதுவரை மெய் ஈறுகளுக்கு உரிய பொதுவான புணர்ச்சி விதிகள் பற்றி நன்னூலார் கூறியனவற்றைப் பார்த்தோம். இனி நன்னூலார் மெய் ஈறுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அவை வருமொழி முதலில் வரும் மெய்களோடு புணரும்போது அடைகின்ற மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குகிறார். மொழிக்கு இறுதியில் வரும் மெய்கள் 'ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்' என்னும் பதினொன்றாகும். இவற்றுள் **ஞ்** என்பது **உரிஞ்** (தேய்த்தல்) என்னும் ஒரு சொல்லிலும், **ந்** என்பது **பொருந்** (பொருநுதல் = ஒத்திருத்தல்; போல இருத்தல்) **வெரிந்** (முதுகு) என்னும் இரு சொற்களிலும், **வ்** என்பது **அவ், இவ், உவ், தெவ்** (பகை) என்னும் நான்கு சொற்களிலும் மட்டுமே ஈறாகும். ஆனால் இச்சொற்கள் காலப்போக்கில் வழக்கிழந்து மறைந்து போயின. ஏனைய **ண், ம், ன், ய், ர், ல், ழ், ள்** என்னும் எட்டு மெய்களே காலந்தோறும் பெருவாரியான சொற்களில் இறுதியாக இருந்து வருபவை ஆகும். எனவே இந்த எட்டு மெய் ஈறுகள் பற்றி நன்னூலார் கூறும் புணர்ச்சி விதிகள் மட்டுமே இங்கே விளக்கிக் காட்டப்படுகின்றன.

முதற்கண், **ணகர, னகர** மெய் ஈறுகள், வருமொழி முதலில் வரும் வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவின மெய்களோடு புணரும்போது அடைகின்ற மாற்றங்கள் பற்றி நன்னூலார் குறிப்பிடும் புணர்ச்சி விதிகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சான்றுடன் காண்போம்.

**ணகர, னகர ஈறுகள் இயல்பாதலும் திரிதலும்**

1. நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகர, னகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் முறையே டகரமாகவும், றகரமாகவும் திரியும்.

***சான்று:***

*மண் + குடம் = மட்குடம்*
*சிறுகண் + களிறு = சிறுகட்களிறு*
*பொன் + காசு = பொற்காசு*
*பொன் + குடம் = பொற்குடம்*

*(**மட்குடம்** – மண்ணால் ஆகிய குடம். மூன்றாம் வேற்றுமைத் தொகை; **சிறுகட்களிறு** – சிறிய கண்ணை உடைய களிறு. இரண்டாம் வேற்றுமைத் தொகை; **பொற்காசு** – பொன்னால் ஆகிய காசு; **பொற்குடம்** – பொன்னால் ஆகிய குடம். இவை மூன்றாம் வேற்றுமைத் தொகை.)*

*இச்சான்றுகளில் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவும் திரிந்தன.*

*2. வேற்றுமைப் புணர்ச்சியில் ணகர, னகரங்கள் மெல்லினமும், இடையினமும் வந்தால் இயல்பாகும்.*

***சான்று:***

*மண் + மேடை = மண்மேடை*
*பொன் + முடி = பொன்முடி*
*கண் + வலி = கண்வலி*
*பொன் + வளையல் = பொன்வளையல்*

*(**மண்மேடை** – மண்ணால் ஆகிய மேடை; **பொன்முடி** – பொன்னால் ஆகிய முடி; **முடி** – கிரீடம்; இவை இரண்டும் மூன்றாம் வேற்றுமைத் தொகை. **கண்வலி** – கண்ணில் வலி. ஏழாம் வேற்றுமைத் தொகை; **பொன்வளையல்** – பொன்னால் ஆகிய வளையல். மூன்றாம் வேற்றுமைத் தொகை.)*

*இச்சான்றுகளில் வேற்றுமைப் புணர்ச்சியில் ணகர னகரங்கள் மெல்லினமும், இடையினமும் வர இயல்பாயின.*

*3. அல்வழிப் புணர்ச்சியில் ணகர, னகரங்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவினமெய்கள் வந்தாலும் இயல்பாகும்.*

***சான்று:***

*மண் + சரிந்தது = மண் சரிந்தது*
*பொன் + பெரிது = பொன் பெரிது*
*கண் + மங்கியது = கண் மங்கியது*
*பொன் + மலிந்தது = பொன் மலிந்தது*
*கண் + வலிக்கிறது = கண் வலிக்கிறது*
*பொன் + வலிது = பொன் வலிது*

*(இவையாவும் எழுவாய்த் தொடர்)*

*இச்சான்றுகளில் அல்வழிப்புணர்ச்சியில் ணகர, னகரங்கள் மூவின மெய்களும் வர இயல்பாயின.*

*மேலே சொல்லப்பட்ட மூன்று விதிகளையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் தொகுத்துக் கூறுகிறார்.*

***ணன வல்லினம் வரட் டறவும், பிறவரின்***
***இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு***
***அனைத்துமெய் வரினும் இயல்பு ஆகும்மே***
***(நன்னூல், 209)***

**சில ணகர ஈற்றுப் பெயர்களுக்குச் சிறப்பு விதி**

*1. சாதி பற்றி வரும் பாண், உமண் என்ற பெயர்களுக்கும், கூட்டம் பற்றி வரும் அமண் என்ற பெயர்க்கும், பரண், கவண் என்ற பெயர்களுக்கும் இறுதியில் உள்ள ணகர மெய், வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும்.*

*(**பாண்** – இசை பாடுவதில் வல்ல சாதியார்; **உமண்** – உப்பு விற்கும் சாதியார்; **அமண்** – சமண சமயத்தைச் சார்ந்த கூட்டத்தார். இவர்கள் ஆடையில்லாமல் திரிவதால் அமண் எனப்பட்டனர்; **பரண்** – தினைப்புனம் காப்பதற்கு அதன் நடுவில் போட்டிருக்கும் மேடை; **கவண்** – கல் எறியும் கருவி.)*

***சான்று:***

*பாண் + சேரி = பாண்சேரி*
*உமண் + குடி = உமண்குடி*
*அமண் + சேரி = அமண்சேரி*
*பரண் + கால் = பரண்கால்*
*கவண் + கல் = கவண்கல்*

*(**கவண்கல்** – கவணில் வைத்து எறியப்படும் கல். ஏழாம் வேற்றுமைத் தொகை. மற்றவை ஆறாம் வேற்றுமைத் தொகை)*

*2. உணவுப்பொருளாகிய எள் என்பதைக் குறிக்கும் எண் என்ற பெயர்க்கும், ஒன்பது அங்குல அளவுள்ள சாண் என்ற நீட்டல் அளவைப் பெயர்க்கும் இறுதியில் உள்ள ணகர மெய், அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் டகரமாகத் திரியும்.*

***சான்று:***

*எண் + சிறிது = எட்சிறிது*
*சாண் + கோல் = சாட்கோல்*

*3. சாதிபற்றி வரும் பெயர்க்கும், கூட்டம் பற்றி வரும் பெயர்க்கும் இறுதியில் வரும் ணகர மெய் வேற்றுமையில் அகரச் சாரியை பெற்று வருவதும் உண்டு. (இவ்விதி நூற்பாவில் பிற என்று கூறப்படுவதால் பெறப்படுகிறது.)*

***சான்று:***

*பாண் + குடி = பாணக்குடி*
*அமண் + சேரி = அமணச்சேரி*

இம்மூன்று, விதிகளையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் தொகுத்துத் தருகிறார்.

***சாதி, குழூஉ, பரண், கவண்பெயர் இறுதி இயல்பாம் வேற்றுமைக்கு; உணவு எண், சாண் பிற டவ்வா கலுமாம் அல்வழி யும்மே (நன்னூல், 211)***

*(**குழூஉ** - கூட்டம்; **எண்** - எள் என்னும் உணவு)*

**னகர ஈற்றுச் சாதிப்பெயர்க்குச் சிறப்பு விதி**

னகரத்தை இறுதியில் உடைய சாதிப்பெயர், வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர, ஈறு திரியாமல் இயல்பாதலும், அகரச் சாரியை பெறுதலும் ஆகிய புணர்ச்சியைப் பெறும்.

***னஃகான் கிளைப்பெயர் இயல்பும், அஃகான் அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே (நன்னூல், 212)***

*(**கிளைப்பெயர்** – சாதிப்பெயர்; **அஃகான்** – அகரச் சாரியை; **அடைவும்** - பெறுதலும்)*

***சான்று:***

*எயின் + குடி = எயின்குடி*
*எயின் + குடி > எயின் + **அ** + குடி = எயினக்குடி*

*(**எயினக்குடி** – எயினரது குடி. ஆறாம் வேற்றுமைத் தொகை)*

எயின் என்பது பாலை நிலத்தில் வாழும் வேட்டுவச் சாதியைக் குறிக்கும். இச்சாதிப்பெயரின் ஈற்று னகரமெய் வல்லினம் வர இயல்பானதுடன், அகரச் சாரியையும் பெற்று வந்தது.

**மீன் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி**

மீன் என்னும் சொல்லின் இறுதியில் உள்ள னகரமெய், வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர, இயல்பாவதோடு, றகர மெய்யாகவும் திரியும்.

***மீன் றவ்வொடு பொரூஉம் வேற்றுமை வழியே (நன். 213)***

*(**பொரூஉம்** – விகற்பமாகும்)*

***சான்று:***

*மீன் + கண் = **மீன்கண்** (னகரம் இயல்பானது)*
*மீன் + கண் = **மீற்கண்** (னகரம் றகரமாகத் திரிந்தது)*

*(**மீன்கண்** – மீனினதுகண். ஆறாம் வேற்றுமைத் தொகை)*

**தேன் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி**

தேன் என்னும் சொல், அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழிகளோடு பின் வருமாறு புணரும்.

1. வருமொழி முதலில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூவின மெய்கள் வந்தால் தேன் என்ற சொல்லின் இறுதியில் உள்ள னகர மெய் இயல்பாகும்.

***சான்று:***

**<u>அல்வழி</u>**

*தேன் + சிறிது = **தேன்** சிறிது*

*தேன் + மாண்டது = **தேன்** மாண்டது*

*தேன் + யாது = **தேன்** யாது*

**னகரம் இயல்பானது**

*(இவை மூன்றும் எழுவாய்த் தொடர்)*

**<u>வேற்றுமை</u>**

*தேன் + குடித்தான் = **தேன்** குடித்தான்*

*தேன் + மாட்சி = **தேன்** மாட்சி*

*தேன் + வாங்கினான் = **தேன்** வாங்கினான்*

**னகரம் இயல்பானது**

*(**தேன் குடித்தான்** – தேனைக் குடித்தான்; **தேன் வாங்கினான்** – தேனை வாங்கினான்; இவை இரண்டும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. **தேன்மாட்சி** – தேனினது மாட்சி; இது ஆறாம் வேற்றுமைத் தொகை.)*

2. வருமொழி முதலில் மெல்லினம் வந்தால், தேன் என்ற சொல்லின் இறுதியில் உள்ள னகர மெய் இயல்பாதலே அன்றிக் கெடுதலும் உண்டு.

***சான்று:***

**<u>அல்வழி</u>**

*தேன் + மொழி = **தேன்**மொழி (னகரம் இயல்பானது)*
*தேன் + மொழி = தேமொழி (னகரம் கெட்டது)*

*(**தேன்மொழி** – தேன் போன்ற இனிய மொழி. உவமைத்தொகை; **மொழி** – சொல்)*

**<u>வேற்றுமை</u>**

*தேன் + மலர் = **தேன்**மலர் (னகரம் இயல்பானது)*
*தேன் + மலர் = தேமலர் (னகரம் கெட்டது)*

*(**தேன்மலர்** – தேனை உடைய மலர்; இரண்டாம் வேற்றுமைத்தொகை)*

*3. வருமொழி முதலில் வல்லினம் வந்தால், தேன் என்ற சொல்லின் இறுதியில் உள்ள னகரமெய் இயல்பாதலே அன்றிக் கெட்டு, வருமொழி முதலில் உள்ள வல்லினமோ அதற்கு இனமான மெல்லினமோ மிகுவதும் உண்டு.*

***சான்று:***

**அல்வழி**

தேன் + குழம்பு = தே**ன்**குழம்பு *(னகரம் இயல்பானது)*
தேன் + குழம்பு = தே**க்**குழம்பு *(னகரம் கெட்டு, வல்லினம் மிக்கது)*
தேன் + குழம்பு = தே**ங்**குழம்பு *(னகரம் கெட்டு, மெல்லினம் மிகுந்தது)*

*(**தேன்குழம்பு** – தேன் ஆகிய குழம்பு. இருபெயரொட்டுப் பண்புத்தொகை)*

**வேற்றுமை**

தேன் + குடம் = தே**ன்**குடம் *(னகரம் இயல்பானது)*
தேன் + குடம் = தே**க்**குடம் *(னகரம் கெட்டு வல்லினம் மிக்கது)*
தேன் + குடம் = தே**ங்**குடம் *(னகரம் கெட்டு மெல்லினம் மிகுந்தது)*

*(**தேன்குடம்** – தேனை உடைய குடம். இரண்டாம் வேற்றுமைத் தொகை)*

மேலே கூறிய மூன்று விதிகளையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

***தேன்மொழி மெய்வரின் இயல்பும், மென்மை மேவின் இறுதி அழிவும், வலிவரின் ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி (நன்னூலார், 214)***

**தன், என், நின் என்னும் சொற்களுக்குச் சிறப்பு விதி**

தான் என்பது படர்க்கை ஒருமை இடப்பெயர். நான் என்பது தன்மை ஒருமை இடப்பெயர். நீ என்பது முன்னிலை ஒருமை இடப்பெயர். இம்மூன்று பெயர்களும் வேற்றுமை உருபு ஏற்கும்போது, அவற்றின் முதலில் உள்ள நெடிலானது குறிலாகக் குறுகும். எனவே, இவற்றை நெடுமுதல் குறுகும் பெயர்கள் என்பர்.

தான் + ஐ = **தன்**னை
நான் + ஐ = **என்**னை
நீ + ஐ = **நின்**னை

தன், என் எனும் நெடுமுதல் குறுகிய இடப்பெயர்களின் ஈற்றில் உள்ள னகரம், வல்லினம் வந்தால் ‘**ணன** வல்லினம் வரட் டறவும்’ என்ற விதிப்படி றகரமாகத் திரிதலும், அவ்விதியை ஏற்காது இயல்பாதலும் உண்டு.

***சான்று:***

***தன்** + பகை = **தற்**பகை, **தன்**பகை*
***என்** + பகை = **எற்**பகை, **என்**பகை*

*(**தற்பகை, தன்பகை** – தனது பகை; **எற்பகை, என்பகை** – எனது பகை; இவை ஆறாம் வேற்றுமைத் தொகை)*

நின் என்னும் நெடுமுதல் குறுகிய இடப்பெயரின் ஈற்றில் உள்ள னகரம், வல்லினம் வந்தால் திரியாமல் இயல்பாகும்.

***சான்று:***

***நின்** + பகை = **நின்**பகை*

*(**நின்பகை** – நினது பகை. ஆறாம் வேற்றுமைத் தொகை)*

**தொகுப்புரை**

நிலைமொழியின் இறுதியில் நிற்கும் மெய்யின்மேல், வருமொழியின் முதலில் உள்ள உயிர் வந்து கூடி உயிர்மெய்யாக மாறும். தனிக்குறிலை அடுத்து வரும் மெய், வருமொழி முதலில் உயிர்வந்தால் இரட்டிக்கும்.

நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகர, னகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் முறையே டகரமாகவும், றகரமாகவும் திரியும்; மெல்லினமும், இடையினமும் வந்தால் இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியில் அனைத்து மெய்களும் வந்தாலும் இயல்பாகும்.

பாண், உமண், அமண், பரண், கவண் போன்ற பெயர்ச்சொற்களின் இறுதியில் உள்ள ணகரமெய் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும்; சிலவிடங்களில் அகரச் சாரியை பெறும்.

அல்வழி, வேற்றுமை என்னும் இருவகைப் புணர்ச்சியிலும் தேன் என்ற சொல், வருமொழி முதலில் மூவினமெய்கள் வந்தால், அதன் இறுதியில் உள்ள னகர மெய் இயல்பாகும்; வருமொழி முதலில் மெல்லினம் வந்தால், அதன் இறுதியில் உள்ள னகரமெய் இயல்பாதலே அன்றிக் கெடுதலும் உண்டு; வருமொழி முதலில் வல்லினம் வந்தால், அதன் இறுதியில் உள்ள னகரமெய் இயல்பாதலே அன்றிக் கெட்டு, அவ்விடத்தே வருமொழி முதலில் உள்ள வல்லினமோ அல்லது அதற்கு இனமான மெல்லினமோ மிகுவதும் உண்டு.

***மெய் ஈற்றுப் புணர்ச்சி விதி II***

*ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி நன்னூலார் கூறியனவற்றைப் பார்த்தோம். இனி மகர ஈற்றுப் புணர்ச்சி பற்றியும், யகர, ரகர, ழகர ஈற்றுப் புணர்ச்சி பற்றியும் அவர் மெய் ஈற்றுப் புணரியலில் கூறுவனவற்றைப் பார்ப்போம்.*

*மகர மெய்யை இறுதியாகக் கொண்ட சொற்கள், வருமொழி முதலில் வரும் உயிரோடும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவின மெய்களோடும் புணரும் முறையைப் பொதுவிதியும், சிறப்பு விதியும் கொண்டு விளக்கிக் காட்டுகிறார். மேலும் நும், தம், எம், நம் என்னும் மகர ஈற்று மூவிடப்பெயர்கள், அகம் என்ற உள்ளிடப்பெயர் ஆகியன வருமொழிகளோடு புணரும் முறையைச் சிறப்பு விதிகள் தந்து விளக்குகிறார்.*

*யகர, ரகர, ழகர மெய்களை இறுதியாகக் கொண்ட சொற்கள் வருமொழி முதலில் வரும் வல்லின மெய்களோடு புணரும் முறையைப் பொது விதி கொண்டு விளக்கிக் காட்டுகிறார். மேலும், தமிழ், தாழ், கீழ் என்னும் ழகர ஈற்றுச் சொற்கள் வருமொழிகளோடு புணரும் முறையைச் சிறப்பு விதிகள் கொண்டு விளக்கிக் காட்டுகிறார். இவற்றை எல்லாம் இப்பாடத்தில் ஒன்றன்பின் ஒன்றாகக் காண்போம்.*

***மகர ஈற்றுப் புணர்ச்சி விதிகள்***

*மகர மெய்யை ஈற்றிலே கொண்ட சொற்கள், ஈற்றிலே உள்ள மகரமெய் கெட்டு உயிர் ஈறாய் நின்றும், ஈற்றிலே உள்ள மகர மெய் கெடாமல் நின்றும் வருமொழிகளோடு புணரும் முறையைப் பொது விதி கொண்டும், சிறப்பு விதி கொண்டும் நன்னூலார் விளக்கிக் காட்டுகிறார். மேலும், நும், தம், எம், நம் என்னும் மூவிடப் பெயர்கள், அகம் என்னும் இடப்பெயர் ஆகியவை வருமொழிகளோடு புணரும் முறையைச் சிறப்பு விதிகள் கொண்டு விளக்கிக் காட்டுகிறார். அவற்றை ஈண்டுக் காண்போம்.*

***மகர ஈற்றுப் புணர்ச்சி - பொதுவிதி***

*மகர மெய் ஈற்றுப் புணர்ச்சிக்குரிய பொது விதியாக நன்னூலார் இரண்டனைக் குறிப்பிடுகிறார். அவை வருமாறு:*

*1. நிலைமொழியில் உள்ள மகர மெய் ஈற்றுச் சொற்கள், வருமொழியின் முதலில் வரும் உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் நாற்கணங்களோடு புணரும்போது, இறுதியில் உள்ள மகர மெய் கெட்டு (நீங்கி), உயிர் ஈறாய் நிற்கும். அவ்வாறு நிற்கும் உயிர் ஈற்றின் முன்னர், வருமொழி முதலில் உயிர்கள் வந்தால் அவை உடம்படுமெய் பெறும் வல்லினம் வந்தால் வருகின்ற அவ்வல்லின எழுத்து மிகும்; மெல்லினமும் இடையினமும் வந்தால் அவை இயல்பாகும்.*

***சான்று:***

***அல்வழி***

*பவளம் + இதழ் > பவள + இதழ் > பவள + வ் + இதழ் = பவளவிதழ்*

*இச்சான்றில் நிலைமொழியாக உள்ள **பவளம்** என்பது மகர மெய் ஈற்றுச்சொல். இச்சொல் வருமொழியில் இகர உயிரை முதலாகக் கொண்டு வரும் **இதழ்** என்ற சொல்லோடு புணரும்போது, இறுதியில் உள்ள மகர மெய் கெட்டுப் **பவள** என அகர உயிர் ஈறாக நின்றது. இவ்வாறு நிற்கும் அகர உயிர் ஈற்றின் முன்னர், இதழ் என்னும் வருமொழி முதலில் வந்த இகர உயிர் **வகர**
**உடம்படுமெய்** பெற்றுப் **பவளவிதழ்** என்றாயிற்று.*

*கமல~~ம்~~+கண் > கமல+கண் > கமல+க்+கண் = கமலக்கண்*

*(வருமொழி முதலில் வந்த க் என்ற வல்லினம் மிக்கது)*

*வட்ட~~ம்~~+முகம் > வட்ட+முகம்> வட்டமுகம்*

*(வருமொழி முதலில் வந்த ம் என்ற மெல்லினம் இயல்பாயிற்று)*

*பவள~~ம்~~+வாய் > பவள+வாய் > பவளவாய்*

*(வருமொழி முதலில் வந்த வ் என்ற இடையினம் இயல்பாயிற்று)*

*(**பவளவிதழ்** – பவளம் போன்ற சிவந்த இதழ். உவமைத் தொகை; **கமலக்கண்** – கமலம் போன்ற சிவந்த கண். உவமைத்தொகை; **கமலம்** – தாமரை; **வட்டமுகம்** – வட்டமாகிய முகம். பண்புத்தொகை; **பவளவாய்** – பவளம் போன்ற சிவந்தவாய். உவமைத்தொகை)*

**வேற்றுமை**

*மர~~ம்~~+அடி > மர+அடி > மர+வ்+அடி = மரவடி*

*(வருமொழி முதலில் வந்த அகர உயிர் வகர உடம்படுமெய் பெற்றது)*

*மர~~ம்~~+கிளை > மர+கிளை > மர+க்+கிளை = மரக்கிளை*

*(வருமொழி முதலில் வந்த க் என்ற வல்லினம் மிக்கது)*

*மர~~ம்~~+நார் > மர+நார் = மரநார்*

*(வருமொழி முதலில் வந்த ந் என்ற மெல்லினம் இயல்பாயிற்று)*

*மரம்+வேர் > மர+வேர் = மரவேர்*

*(வருமொழி முதலில் வந்த வ் என்ற இடையினம் இயல்பாயிற்று)*

*(**மரவடி** – மரத்தினது அடி; **மரக்கிளை** – மரத்தினது கிளை; **மரநார்** – மரத்தினது நார்; **மரவேர்** – மரத்தினது வேர். இவை நான்கும் ஆறாம் வேற்றுமைத் தொகை.)*

*2. வருமொழி முதலில் வல்லினம் வந்தால், ஈற்று மகரமெய் கெடாமல், வருகின்ற வல்லினத்திற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரியும்.*

***சான்று:***

***அல்வழி***

*நா**ம்** + சிறியேம் = நா**ஞ்**சிறியேம்*
*நில**ம்** + தீ = நில**ந்**தீ*
*உண்ணு**ம்** + சோறு = உண்ணு**ஞ்**சோறு*

*(**நாஞ்சிறியேம்** – எழுவாய்த்தொடர்; **நிலந்தீ** – நிலமும் தீயும். உம்மைத் தொகை; **உண்ணுஞ்சோறு** – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்)*

*இச்சான்றுகளில் நிலைமொழி ஈற்றில் உள்ள மகரமெய் அல்வழிப் புணர்ச்சியில் கெடாமல், வருமொழி முதலில் உள்ள வல்லினத்திற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிந்தது காணலாம். சகரத்திற்கு இனமெல்லெழுத்து ஞகரம் ஆகும்; தகரத்திற்கு இனமெல்லெழுத்து நகரம் ஆகும்.*

**வேற்றுமை**

*மர**ம்** + கண்டார் = மர**ங்**கண்டார்*
*அற**ம்** + கூறவையம் = அற**ங்**கூறவையம்*

*(**மரங்கண்டார்** – மரத்தைக் கண்டார்; **அறங்கூறவையம்** – அறத்தைக் கூறும் அவையம்; பழங்காலத்தில் வழக்காடும் நீதிமன்றத்திற்குரிய பெயர்; இவை இரண்டும் இரண்டாம் வேற்றுமைத் தொகை)*

*இச்சான்றுகளில் நிலைமொழி ஈற்றில் உள்ள மகரமெய், வேற்றுமைப் புணர்ச்சியில் கெடாமல், வருமொழி முதலில் உள்ள வல்லினத்திற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிந்தது காணலாம். ககரத்திற்கு இனமெல்லெழுத்து ஙகரம் ஆகும்.*

*மகர ஈற்றுப் புணர்ச்சிக்குரிய இவ்விரண்டு பொது விதிகளையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.*

***மவ்வீறு ஒற்றுஅழிந்து உயிர்ஈறு ஒப்பவும்,***
***வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் (நன்னூல், 219)***

*(**மவ்வீறு** – மகரமெய் ஈறு; **ஒற்று** – மகரமெய்; **அழிந்து** – கெட்டு; **உயிர்ஈறு ஒப்பவும்** - உயிர் ஈற்றுச் சொற்களைப் போலப் புணர்வனவும்)*

***மகர ஈற்றுப் புணர்ச்சி – சிறப்பு விதி***

*வேற்றுமைப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் வந்தால், நிலைமொழியின் இறுதியில் உள்ள மகர மெய் கெட்டு, வருகின்ற வல்லினமோ, அவ்வல்லினத்திற்கு இனமான மெல்லினமோ மிகும். அல்வழிப் புணர்ச்சியில் உயிரும் இடையினமும் வந்தால் இறுதியில் உள்ள மகரமெய் கெடாமல் இயல்பாகும். இதனை நன்னூலார் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.*

***வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்,***
***அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள (நன்னூல், 220)***

***சான்று:***

**வேற்றுமை**

*குளம் + கரை > குள + கரை > குள + **க்** + கரை = குள**க்**கரை*
*குளம் + கரை > குள + கரை > குள + **ங்** + கரை = குள**ங்**கரை*

*(**குளக்கரை, குளங்கரை** – குளத்தினது கரை; ஆறாம் வேற்றுமைத் தொகை)*

*இச்சான்றுகளில் குளம் என்ற சொல் குள என மகரம் கெட்டு நின்று, கரை என்னும் வல்லின முதல் வருமொழியோடு புணரும்போது, குளக்கரை என வல்லினம் மிக்கும், குளங்கரை என வல்லினத்துக்கு இனமான மெல்லினம் மிக்கும் புணர்ந்தமை காணலாம்.*

***அல்வழி***

*குளம் + அழகியது = குளமழகியது*
*ஆளும் + அரசன் = ஆளுமரசன்*
*மரம் + வளர்ந்தது = மரம் வளர்ந்தது*
*கொல்லும் + யானை = கொல்லும் யானை*

*(**குளமழகியது, மரம் வளர்ந்தது** – எழுவாய்த் தொடர்; **ஆளுமரசன், கொல்லும் யானை** – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்)*

*இச்சான்றுகளில் உயிரும், இடையினமும் வர, ஈற்று மகரமெய் கெடாமல் இயல்பாயிற்று.*

**நும், தம், எம், நம் என்னும் சொற்களுக்குச் சிறப்பு விதி**

நீர் என்பது முன்னிலைப் பன்மை இடப்பெயர்; தாம் என்பது படர்க்கைப் பன்மை இடப்பெயர்; யாம், நாம் என்பன தன்மைப் பன்மை இடப்பெயர். இந்நான்கு பெயர்களும் வேற்றுமை உருபு ஏற்கும்போது, அவற்றின் முதலில் உள்ள நெடிலானது குறுகும். எனவே இவற்றை நெடுமுதல் குறுகும் பெயர்கள் என்பர்.

நீர் + ஐ = **நும்**மை
தாம் + ஐ = **தம்**மை
யாம் + ஐ = **எம்**மை
நாம் + ஐ = **நம்**மை

எனவே வேற்றுமை உருபு ஏற்கும் போது நீர், தாம், யாம், நாம் என்பன முறையே நும், தம், எம், நம் என நெடுமுதல் குறுகும் பெயர்களாக மாறும் என்பது பெறப்படும்

நும், தம், எம், நம் என்னும் நான்கு சொற்களின் இறுதியில் உள்ள மகர மெய்யானது, வருமொழி முதலில் வருகின்ற ஞகர மெய்யாகவும், நகர மெய்யாகவும் திரியும்.

***நும், தம்***
***எம், நம் ஈறாம் மவ்வரு ஞநவே (நன்னூல், 221)***

***சான்று:***

**நும்** + ஞாண் = **நுஞ்**ஞாண்
**தம்** + ஞாண் = **தஞ்**ஞாண்
**எம்** + ஞாண் = **எஞ்**ஞாண்
**நம்** + ஞாண் = **நஞ்**ஞாண் (ஞாண் = கயிறு)

**நும்** + நூல் = **நுந்**நூல்
**தம்** + நூல் = **தந்**நூல்
**எம்** + நூல் = **எந்**நூல்
**நம்** + நூல் = **நந்**நூல்

**அகம் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி**

அகம் என்னும் இடப் பெயரின் முன் செவி, கை என்னும் சினைப்பெயர்கள் வந்தால், அச்சொல்லின் இறுதியில் உள்ள மகரமெய், வருமொழியின் முதலில் உள்ள வல்லினத்திற்கு இனமாகிய மெல்லெழுத்தாகத் திரிதலேயன்றி, அதன் நடுவில் நிற்கும் ககரமெய்யும் அதன் மேல் ஏறிய அகர உயிரும் கெடும்.

***அகம்முனர்ச் செவி, கை வரின் இடையன கெடும் (நன்னூல், 222)***

(**முனர்** – முன்னர்; **இடையன** – இடையில் உள்ள 'க' என்னும் உயிர்மெய்)

***சான்று:***

அகம் + கை > அகங் + கை > அங் + கை = அங்கை
அகம் + செவி > அகஞ் + செவி > அஞ் + செவி = அஞ்செவி

**'அங்கைப் புண்ணிற்கு ஆடியும் வேண்டுமோ?** என்பது ஒரு பழமொழி. இதில் அகம் + கை என்பது அங்கை என வந்துள்ளது. (அங்கை – உள்ளங்கை.)

**யகர, ரகர, ழகர ஈற்றுப் புணர்ச்சி விதிகள்**

யகர, ரகர, ழகர மெய்களை ஈற்றிலே கொண்ட சொற்கள் நிலைமொழியில் இருக்கும்போது அவற்றோடு, வருமொழி முதலில் வரும் க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் அல்வழியிலும், வேற்றுமையிலும் புணரும் முறையை நன்னூலார் பொதுவிதி கொண்டு விளக்கிக் காட்டுகிறார். மேலும் தமிழ், தாழ் (தாழ்ப்பாள்), கீழ் என்னும் ழகர ஈற்றுச் சொற்கள் நிலைமொழியில் இருந்து வருமொழிகளோடு அவை புணரும் முறையை அவர் சிறப்பு விதிகள் கொண்டு விளக்கிக் காட்டுகிறார்.

**யகர, ரகர, ழகர ஈற்றுப் புணர்ச்சி – பொதுவிதி**

யகர, ரகர, ழகர, ஈற்றுப் புணர்ச்சிக்குப் பொது விதியாக நன்னூலார் இரண்டனைக் குறிப்பிடுகிறார்.

1. யகர, ரகர, ழகர மெய் ஈறுகளின் முன்னர் வரும் க, ச, த, ப என்னும் வல்லினமெய்கள் அல்வழியில் இயல்பாதலும், மிகுதலும் பெறும்.

நன்னூலார் இங்கே ய, ர, ழ முன்னர் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும் அல்லது மிகும் எனப் பொதுப்படக் கூறினாலும், வல்லினம் இயல்பாதல் எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை, வினைத்தொகை ஆகிய மூன்றில் மட்டுமே ஆகும்; வல்லினம் மிகுதல் வினையெச்சத் தொடர், பண்புத்தொகை, உவமைத்தொகை ஆகிய மூன்றில் மட்டுமே ஆகும்.

- **அல்வழியில் வல்லினம் இயல்பாதல்**

***சான்று:***

| | |
|---|---|
| வே**ய்** + கடிது = வே**ய்**கடிது | எழுவாய்த் தொடர் |
| வே**ர்** + சிறிது = வே**ர்**சிறிது | |
| வீ**ழ்** + பெரிது = வீ**ழ்** பெரிது | |
| (**வேய்** – மூங்கில்; **வீழ்** – மர விழுது) | |

| | |
|---|---|
| பே**ய்** + பூதம் = பே**ய்**பூதம் | உம்மைத் தொகை |
| நீ**ர்** + கனல் = நீ**ர்**கனல் | |
| இக**ழ்** + புகழ் = இக**ழ்**புகழ் | |
| (**பேய்பூதம்** – பேயும்பூதமும்; **நீர்கனல்** – நீரும் கனலும்; **கனல்** – நெருப்பு; **இகழ் புகழ்** – இகழும் புகழும்) | |

| | |
|---|---|
| செய் + தொழில் = **செய்**தொழில் | வினைத் தொகை |
| தேர் + பொருள் = தேர்பொருள் | |
| வீழ் + புனல் = **வீழ்**புனல் | |
| *(**தேர்** – ஆராய்தல்; **புனல்** – நீர்)* | |

- **அல்வழியில் வல்லினம் மிகுதல்**

***சான்று:***

| | |
|---|---|
| போய் + பார்த்தான் = போய்**ப்**பார்த்தான் *(வினையெச்சத் தொடர்)* | இரு பெயரொட்டுப் பண்புத்தொகை |
| மெய் + கீர்த்தி = மெய்**க்**கீர்த்தி | |
| கார் + பருவம்= கார்**ப்**பருவம் | |
| பூழ் + பறவை = பூழ்**ப்**பறவை | |
| *(**மெய்** –உண்மை; **கீர்த்தி** – புகழ்; **மெய்க்கீர்த்தி** – உண்மை ஆகிய புகழ் **கார்ப்பருவம்** – கார் ஆகிய பருவம்; **பூழ்** – காடை; **பூழ்ப் பறவை** – காடை ஆகிய பறவை)* | |

| | |
|---|---|
| வேய் + தோள் = வேய்**த்**தோள் | உவமைத்தொகை |
| கார் + குழல் = கார்**க்**குழல் | |
| *(**வேய்** – மூங்கில்; **கார்** – மேகம்; குழல், கூந்தல்; **வேய்த்தோள்** – மூங்கில் போன்ற வழுவழுப்பான தோள்; **கார்க்குழல்** – மேகம் போன்ற கரிய கூந்தல்)* | |

*2. யகர, ரகர, ழகர மெய் ஈறுகளின் முன்னர் வரும் க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் வேற்றுமையில் மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் பெறும். (இனத்தோடு உறழ்தலாவது ஒரே புணர்ச்சியில் வல்லினமும் மெல்லினமும் மிகுந்து வருதல் ஆகும்.)*

- **வேற்றுமையில் வல்லினம் மிகுதல்**

***சான்று:***

நாய் + கால் = நாய்**க்**கால்
தேர் + கால் = தேர்**க்**கால்
ஊழ் + பயன் = ஊழ்**ப்**பயன்

*(**நாய்க்கால்** – நாயினது கால்; **தேர்க்கால்** – தேரினது கால்; **கால்** – சக்கரம்; **ஊழ்ப்பயன்** – ஊழினது பயன்; ஊழ் - விதி. இவை மூன்றும் ஆறாம் வேற்றுமைத் தொகை)*

- **வேற்றுமையில் வல்லினம் இனத்தோடு உறழ்தல்**

***சான்று:***

வேய் + குழல் = வேய்**க்**குழல், வேய்**ங்**குழல்
ஆர் + கோடு = **ஆர்க்**கோடு, **ஆர்ங்**கோடு
குமிழ் + கோடு = குமிழ்**க்**கோடு, குமிழ்**ங்**கோடு

*(**வேய்** – மூங்கில்; **வேய்க்குழல்** – மூங்கிலால் ஆகிய குழல், புல்லாங்குழல்; **ஆர்** – ஆத்திமரம்; **கோடு** – கிளை; **குமிழ்** – குமிழ்மரம்; ஆர்க்கோடு – ஆத்திமரத்தினது கிளை; குமிழ்க்கோடு – குமிழமரத்தினது கிளை. இவை இரண்டும் ஆறாம் வேற்றுமைத் தொகை)*

*யகர, ரகர, ழகர ஈறுகளுக்குரிய இவ்விரு புணர்ச்சி விதிகளை நன்னூலார் பின்வரும் நூற்பாவில் தருகிறார்.*

***யரழ முன்னர்க் கசதப அல்வழி***
***இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை***
***மிகலும், இனத்தோடு உறழ்தலும் விதிமேல்***
***(நன்னூல், 224)***

*(**இனத்தோடு உறழ்தல்** – வல்லினமாகவும், அதற்கு இனமாகவும் மிகுந்து வருதல். இதை வல்லினம் விகற்பித்தல் என்றும் கூறுவர்.)*

**தமிழ், தாழ் என்னும் சொற்களுக்குச் சிறப்பு விதி**

*1. தமிழ் என்னும் ழகர மெய் ஈற்றுச் சொல் வேற்றுமைப் புணர்ச்சியில் நாற்கணங்களும் வர அகரச் சாரியை பொருந்தவும் பெறும்.*

***சான்று:***

தமிழ் + அரசன் > தமிழ் + **அ** + அரசன் = தமி**ழ**வரசன்
தமிழ் + பிள்ளை > தமிழ் + **அ** + பிள்ளை = தமி**ழப்**பிள்ளை
தமிழ் + நாகன் > தமிழ் + **அ** + நாகன் = தமி**ழ**நாகன்
தமிழ் + வளவன் > தமிழ் + **அ** + வளவன் = தமி**ழ**வளவன்

*(**தமிழப்பிள்ளை** – தமிழை உடைய பிள்ளை; இரண்டாம் வேற்றுமைத் தொகை. மற்றவற்றிற்கும் இவ்வாறே வேற்றுமைப் பொருள் விரித்துக் கொள்க.)*

*2. தாழ் என்ற ழகர ஈற்றுச் சொல்லும், கோல் என்னும் சொல் வருமொழியில் வரும்போது அகரச்சாரியை பெறும்.*

***சான்று:***

தாழ் + கோல் > தாழ் + **அ** + கோல் = தா**ழ**க்கோல்

*(**தாழக்கோல்** – திறவுகோல்)*

***தமிழ் அவ்வுறவும் பெறும் வேற்றுமைக்கே;***
***தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே (நன்னூல், 226)***

**கீழ் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி**

கீழ் என்னும் சொல்லின் முன்னர் வரும் வல்லினம் விகற்பம் ஆகும். அதாவது ஒரே புணர்ச்சியில் வல்லினம் இயல்பாதல், மிகுதல் ஆகிய இரண்டையும் பெறும்.

***கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும் (நன்னூல், 226)***

***சான்று:***

கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்**க்**குலம்
கீழ் + தெரு = கீழ்தெரு, கீழ்**த்**தெரு

மகர ஈற்றுச் சொற்கள், ஈற்றில் உள்ள மகரமெய் கெட்டு உயிர் ஈறாய் நின்று நாற்கணங்களை முதலாகக் கொண்ட வருமொழிகளோடு புணரும். அவ்வாறு உயிர்ஈறாய் நிற்கும் சொற்களின் முன்னர் வருமொழி முதலில் உயிர்கள் வந்தால் அவை உடம்படுமெய் பெறும்; வல்லினம் வந்தால் வருகின்ற வல்லினம் மிகும்; மெல்லினமும் இடையினமும் வந்தால் அவை இயல்பாகும்.

நீர், தாம், யாம், நாம் என்னும் மூவிடப் பன்மைப் பெயர்கள் புணர்ச்சியில் நும், தம், எம், நம் என நெடுமுதல் குறுகிய பெயர்களாக நின்று, வருமொழி முதலில் உள்ள ஞகர, நகர மெய்களோடு புணரும்.

அகம் என்ற சொல், செவி, கை என்னும் சொற்களுடன் புணரும்போது அச்சொல்லின் இடையில் உள்ள ‘க’ என்ற உயிர்மெய் கெடும்.

ய, ர, ழ என்னும் மெய் ஈறுகளில் முன் வரும் க,ச, த, ப என்னும் வல்லின மெய்கள் அல்வழியில் இயல்பாதலும், மிகுதலும் பெறும்; வேற்றுமையில் மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் பெறும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் தமிழ் என்ற சொல் அகரச் சாரியை பெற்றுப் புணரும். கீழ் என்னும் சொல்லின் முன் வரும் வல்லினம் இயல்பாகவும் வரும்; மிக்கும் வரும்.

**மெய் ஈற்றுப் புணர்ச்சி விதி *III***

ண், ன், ம், ய், ர், ழ் ஆகிய ஆறு மெய் ஈறுகளுக்கான புணர்ச்சி பற்றி நன்னூலார் கூறியனவற்றைப் பார்த்தோம். இப்பாடத்தில் லகர, ளகர மெய் ஈற்றுப் புணர்ச்சி பற்றி அவர் மெய் ஈற்றுப் புணரியலில் கூறுவனவற்றைப் பார்ப்போம்.

மெய் ஈற்றுப் புணரியலில் எல்லா மெய் ஈறுகளுக்கான புணர்ச்சியையும் தனித்தனியே ஒன்றன்பின் ஒன்றாகக் கூறி முடித்த பின்னர், நன்னூலார் வருமொழியின் முதலில் வரும் தகர மெய்யும் நகர மெய்யும் நிலைமொழியின் இறுதியில் வரும் ன், ண், ல், ள் ஆகிய மெய்களோடு புணரும்போது, வேறு மெய்களாகத் திரிகின்ற முறையைக் குறிப்பிட்டு விளக்குகிறார். உயிர் ஈற்றுப் புணரியலிலும் மெய் ஈற்றுப் புணரியலிலும் கூறிய புணர்ச்சி விதிகளுக்கு மாறுபட்ட சொற்புணர்ச்சிகள் சில செய்யுள் வழக்கிலும், பேச்சு வழக்கிலும் இருப்பதைக் கண்ட நன்னூலார் அவையும் ஒரு காரணம் கருதி அமைந்திருப்பதால் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மெய் ஈற்றுப் புணரியலில் உள்ள இறுதி நூற்பாவில் குறிப்பிடுகிறார். இவற்றையும் இப்பாடத்தில் விளக்கமாகக் காண்போம்.

**லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி விதிகள்**

லகர, ளகர மெய்களை ஈற்றிலே கொண்ட சொற்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவின மெய்களை முதலாகக் கொண்ட வருமொழிகளோடு புணரும் முறையைப் பொது விதி கொண்டும், சிறப்பு விதி கொண்டும் நன்னூலார் விளக்குகிறார். மேலும் நெல், செல், கொல், சொல், இல் என்னும் லகர ஈற்றுச் சொற்கள் வல்லினத்தை முதலாகக் கொண்ட வருமொழிகளோடு புணரும் முறையைச் சிறப்பு விதிகள் கொண்டு விளக்குகிறார்.

**லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி – பொதுவிதி**

லகர,ளகர மெய் ஈற்றுப் புணர்ச்சிக்குப் பொதுவிதியாக நன்னூலார் நான்கனைக் குறிப்பிடுகிறார். அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சான்றுடன் காண்போம்.

1. நிலைமொழி இறுதியில் உள்ள லகர, ளகர மெய்கள், வேற்றுமைப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் (க, ச, த, ப) வந்தால் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரியும். அதாவது லகர மெய் றகர மெய்யாகவும், ளகரமெய் டகர மெய்யாகவும் திரியும்.

***சான்று:***

க**ல்** + கோயில் = க**ற்**கோயில்
மு**ள்** + செடி = மு**ட்**செடி

*(**கற்கோயில்** – கல்லால் ஆகிய கோயில். மூன்றாம் வேற்றுமைத் தொகை; **முட்செடி** – முள்ளை உடைய செடி. இரண்டாம் வேற்றுமைத் தொகை)*

2. அல்வழிப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் வந்தால், லகர ளகர மெய்கள் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரிந்தும் வரும்; திரியாமல் இயல்பாயும் வரும்.

***சான்று:***

*கா**ல்** + பெரிது = கா**ற்**பெரிது, கா**ல்**பெரிது*
*மு**ள்** + சிறிது = மு**ட்**சிறிது, மு**ள்**சிறிது*

*(இவை அல்வழியில் எழுவாய்த் தொடர்)*

இச்சான்றுகளில் ஒரே புணர்ச்சியில் லகரம் நகரமாய்த் திரிந்தும், திரியாமல் இயல்பாயும் வந்துள்ளதையும், ளகரம் டகரமாய்த் திரிந்தும், திரியாமல் இயல்பாயும் வந்துள்ளதையும் காணலாம்.

3. அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழி முதலில் மெல்லினம் வந்தால் லகர மெய் னகர மெய்யாகவும், ளகர மெய் ணகர மெய்யாகவும் திரியும்.

***சான்று:***

| | |
|---|---|
| 1. க**ல்** + மனம் = க**ன்**மனம் | அல்வழி |
| வா**ள்** + மாண்டது = வா**ண்**மாண்டது | |
| (**கன்மனம்** – கல் போன்ற மனம். உவமைத் தொகை; **வாண் மாண்டது** – வாள் மாட்சிமைப்பட்டது. எழுவாய்த்தொடர்) | |
| 2. தோ**ல்** + முரசு = தோ**ன்**முரசு | வேற்றுமை |
| மு**ள்** + மலர் = மு**ண்**மலர் | |
| (**தோன்முரசு** – தோலால் கட்டப்பட்ட முரசு. மூன்றாம் வேற்றுமைத் தொகை ; **முண் மலர்** – முள்ளை உடைய மலர். இரண்டாம் வேற்றுமைத் தொகை) | |

4. அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழி முதலில் இடையினம் வந்தால் லகர, ளகர மெய்கள் இயல்பாகும்.

***சான்று:***

| | |
|---|---|
| கொ**ல்** + யானை = கொ**ல்**யானை | அல்வழி |
| க**ள்** + வழிந்தது = க**ள்**வழிந்தது | |
| (**கொல் யானை** – வினைத்தொகை; **கள் வழிந்தது** – எழுவாய்த் தொடர்) | |
| வி**ல்** + வளைத் தான் = வி**ல்** வளைத் தான் | வேற்றுமை |
| தோ**ள்** + வலிமை = தோ**ள்** வலிமை | |
| (**வில் வளைத்தான்** – வில்லை வளைத்தான். இரண்டாம் வேற்றுமைத் தொகை; **தோள் வலிமை** – தோளினது வலிமை – ஆறாம் வேற்றுமைத் தொகை.) | |

லகர ளகர ஈற்றுப் புணர்ச்சிக்குரிய இந்நான்கு பொதுவிதியையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

***லள வேற்றுமையில் றடவும், அல்வழி***
***அவற்றோடு உறழ்வும் வலிவரின் ஆம், மெலி***
***மேவின் னணவும், இடைவரின் இயல்பும்,***
***ஆகும் இருவழி யானும் என்ப (நன்னூல், 227)***

*(**உறழ்வும்** – ஒரே புணர்ச்சியில் லகர, ளகர மெய்கள் நகர, டகர மெய்களாகத் திரிந்தும், திரியாமல் இயல்பாய் வருதலும் உண்டு; **வலி** – வல்லினம்; **மெலி** – மெல்லினம்; **மேவின்** - வந்தால்; **இடை** – இடையினம்; **இருவழி** – அல்வழி, வேற்றுமை)*

***லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி – சிறப்பு விதி***

நன்னூலார் லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சிக்கு உரிய சிறப்பு விதிகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.

- ***தனிக்குறிலைச் சார்ந்த லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி***

அல்வழிப் புணர்ச்சியில், தனிக்குறிலின் பின் நின்ற லகர, ளகர மெய்கள் வருமொழி முதலில் தகர மெய் வருமானால் முறையே றகர, டகர மெய்களாகத் திரிவதோடு அல்லாமல் ஆய்தமாகவும் திரியும்.

***குறில்வழி லளத் தவ்வணையின் ஆய்தம்***
***ஆகவும் பெறும் அல்வழி யானே (நன்னூல், 228)***

*(**தவ்வணையின்** – த அணையின்; **அணையின்** – வருமானால்)*

***சான்று:***

*க**ல்** + தீது = க**ற்**றீது, க**ஃ**றீது*
*மு**ள்** + தீது = மு**ட்**டீது, மு**ஃ**டீது*

இச்சான்றுகளில் வருமொழி முதலில் தகரமெய் வர, தனிக்குறிலின் பின் நின்ற லகர ளகரமெய்கள் பொதுவிதிப்படி முறையே றகர, டகர மெய்களாகத் திரிந்ததோடு மட்டும் அல்லாமல், ஆய்தமாகவும் திரிந்தன.

வருமொழி முதலில் உள்ள தகரம் லகரத்தை அடுத்து வரும்போது றகரமாகவும், ளகரத்தை அடுத்து வரும்போது டகரமாகவும் திரிவதற்கு விதி **னல முன் றனவும்** என்று தொடங்கும் நூற்பாவில் பின்னர்க் கூறப்படும்.

- ***தனிக்குறிலைச் சாராத லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி***

தனிக்குறிலைச் சாராத லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி நன்னூலார் மூன்று சிறப்பு விதிகளைத் தருகிறார். கல், முள் போன்ற சொற்களில் தனிக்குறிலைச் சார்ந்து லகர ளகர

மெய்கள் ஈறாக வந்தன. வேல், வாள் போன்ற சொற்களில் தனி நெட்டெழுத்தைச் சார்ந்தும், மரங்கள் போன்ற சொற்களில் பல எழுத்துகளை அடுத்தும் ல, ள இரண்டும் ஈறாக வந்தன. இத்தகைய சொற்களின் இறுதியில் வரும் லகர ளகர மெய்களே தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் எனக் கூறப்படுகின்றன.

1. அல்வழிப் புணர்ச்சியில் தனிக்குறிலைச் சார்ந்து வாராத லகர, ளகர மெய்கள், வருமொழியின் முதலில் வந்த தகரம் திரிந்த பின்பு தாமும் கெடும். (லகரத்தின் முன் வரும் தகரம் றகரமாகவும், ளகரத்தின் முன்வரும் தகரம் டகரமாகவும் திரியும்.)

**சான்று:**

வேல் +தீது > வேல்+றீது > வே+றீது = வேறீது

இச்சான்றில் வருமொழி முதலில் உள்ள தகரமெய் றகர மெய்யாகத் திரிந்தபின்பு, நிலைமொழி இறுதியில் உள்ள லகரமெய் கெட்டது.

வாள்+தீது > வாள்+டீது > வா+டீது = வாடீது

இச்சான்றில் வருமொழி முதலில் உள்ள தகரமெய் டகரமெய்யாகத் திரிந்தபின்பு, நிலைமொழி இறுதியில் உள்ள ளகரமெய் கெட்டது.

2. அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழியில் முதலில் வந்த நகரமெய் திரிந்த பின்பு நிலைமொழி இறுதியில் உள்ள லகர ளகர மெய்கள் கெடும். (லகரத்தின் முன் வரும் நகரம் னகரமாகவும், ளகரத்தின் முன்வரும் நகரம் ணகரமாகவும் திரியும். இவ்வாறு திரிவதற்கு விதி ‘னல முன் றனவும்’ என்ற நூற்பாவில் பின்னர்க் கூறப்படும்.)

**சான்று:**

**அல்வழி**

தோன்றல்+நல்லன் > தோன்றல்+னல்லன் > தோன்ற+னல்லன் = தோன்றனல்லன்

வேள்+நல்லன் > வேள்+ணல்லன் > வே+ணல்லன் = வேணல்லன்

(**வேள்** – வேளிர் குலத் தலைவன்)

**வேற்றுமை**

தோன்றல்+நன்மை > தோன்றல்+னன்மை > தோன்ற+னன்மை = தோன்றனன்மை

வேள்+நன்மை > வேள்+ணன்மை > வே+ணன்மை = வேணன்மை

(தோன்றல் என்பது ஒருவன் பெயர். தோன்றலி**னது** நன்மை, வேளி**னது** நன்மை ஆறாம் வேற்றுமைத் தொகை)

இச்சான்றுகளில் லகரத்தை அடுத்து வந்த நகரம் னகரமாகவும், ளகரத்தை அடுத்து வந்த நகரம் ணகரமாகவும் திரிந்த பின்பு, நிலைமொழி இறுதியில் உள்ள லகர, ளகர மெய்கள் கெட்டன.

3. வருமொழி முதலில் வல்லின மெய்கள் வந்தால் லகர ளகர மெய்கள் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாதலும், முறையே றகரமெய்யாகவும், டகர மெய்யாகவும் திரிதலும் உண்டு; வேற்றுமைப் புணர்ச்சியில் திரியாமல் இயல்பாதலும் உண்டு.

**சான்று:**

**அல்வழி**

கா**ல்** + கை = கா**ல்**கை (காலும் கையும்)
பொரு**ள்** + புகழ் = பொரு**ள்**புகழ் (பொருளும் புகழும்)

இவை உம்மைத் தொகை. இச்சான்றுகளில் வல்லினம் வர அல்வழியில் லகர ளகர மெய்கள் இயல்பாயின.

வே**ல்** + படை = வே**ற்**படை (வேல் ஆகிய படை)

வா**ள்** + படை = வா**ட்**படை (வாள் ஆகிய படை )

இவை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இச்சான்றுகளில் வல்லினம் வர அல்வழியில் லகர ளகர மெய்கள் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரிந்தன.

**வேற்றுமை**

கா**ல்** + பிடித்தான் = கா**ல்** பிடித்தான் (காலைப் பிடித்தான்)
வா**ள்** + பிடித்தான் = வா**ள்** பிடித்தான் (வாளைப் பிடித்தான்)

இவை இரண்டாம் வேற்றுமைத்தொகை. இச்சான்றுகளில் வேற்றுமையில் வல்லினம் வர லகர ளகர மெய்கள் இயல்பாயின.

***குறில் செறியா லள அல்வழி வந்த***
***தகரம் திரிந்தபின் கேடும், ஈரிடத்தும்***
***வரும் நத் திரிந்தபின் மாய்வும், வலிவரின்***
***இயல்பும் திரிபும் ஆவன உள பிற (நூற்பா, 229)***

இந்நூற்பாவின் இறுதியில் பிற எனக் கூறப்படுவது கொண்டு பின்வருவனவற்றையும் கொள்ளவேண்டும்.

1. பொதுவிதிப்படி அல்வழியில் லகர, ளகர மெய்கள் க**ல்**சிறிது, க**ற்**சிறிது, மு**ள்**சிறிது, மு**ட்**சிறிது என உறழ்ந்தே வரவேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால்,

வி**ல்** + படை = வி**ற்**படை

எனப் பொதுவிதிப்படி உறழாது. லகரமெய் றகரமெய்யாகத் திரிந்தது காணலாம்.

2. தனிக்குறிலைச் சாராத ல, ள ஆகிய இரண்டும் அல்வழியில் இயல்பாகும் எனக் கூறப்பட்டது. சான்று: கால்கை, பொருள்புகழ். ஆனால் தனிக்குறிலைச் சார்ந்த ல, ள ஆகிய இரண்டும் அல்வழியில் இயல்பாக வருதலும் உண்டு.

**சான்று:**

கொ**ல்** + களிறு = கொ**ல்**களிறு
கொ**ள்** + பொருள் = கொ**ள்**பொருள்

இவை வினைத்தொகை.

**நெல், செல், கொல், சொல் என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி**

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு சொற்களின் இறுதியில் உள்ள லகரமெய் அல்வழிப் புணர்ச்சியில் பொதுவிதிப்படி உறழாது, வேற்றுமைப் புணர்ச்சியைப் போல றகர மெய்யாகத் திரியும்.

***நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்***
***அல்வழி யானும் றகரம் ஆகும் (நன்னூல், 232)***

*(**செல்** – மேகம்; **கொல்** – கொல்லனது தொழில்)*

**சான்று:**

நெ**ல்** + சிறிது = நெ**ற்**சிறிது
செ**ல்** + கரிது = செ**ற்**கரிது
கொ**ல்** + கடிது = கொ**ற்**கடிது
சொ**ல்** + புதிது = சொ**ற்**புதிது

**இல் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி**

இல் என்னும் சொல்லுக்கு வீடு, இன்மை (இல்லாமை) எனப் பல பொருள் உண்டு. இங்கு இன்மைப் பொருளை உணர்த்தும் இல் என்ற சொல்லினது புணர்ச்சிக்குரிய சிறப்புவிதி பின்வருமாறு நன்னூலாரால் கூறப்படுகிறது.

1. இல் என்னும் சொல்லோடு ஐகாரச் சாரியை வந்து சேர்ந்தால், வருமொழி வல்லினம் விகற்பமாகும். (அதாவது மிக்கும், மிகாமல் இயல்பாயும் புணர்தல்)

**சான்று:**

இ**ல்** + பொருள் > இல் + **ஐ** + பொருள் > இல்**லை** + பொருள் = இல்**லைப்**பொருள், இல்லை பொருள்

2. இல் என்னும் சொல்லோடு ஆகாரச் சாரியை வந்து சேர்ந்தால் வருமொழி வல்லினம் மிகும்.

**சான்று :**

இ**ல்** + பொருள் > இல் + **ஆ** + பொருள் = இல்**லாப்** பொருள்

3. இல் என்னும் சொல், மேலே கூறிய ஐகாரச் சாரியையோ, ஆகாரச் சாரியையோ பெறாமல் வல்லினத்தோடு இயல்பாகப் புணர்வதும் உண்டு.

**சான்று:**

இ**ல்** + பொருள் = இல்பொருள்

***இல் என் இன்மைச் சொற்கு ஐ அடைய***
***வன்மை விகற்பமும், ஆகா ரத்தோடு***
***வன்மை யாகலும், இயல்பும் ஆகும் (நன்னூல், 233)***

**வருமொழித் தகர, நகரத் திரிபுகள்**

மெய் ஈற்றுப் புணரியலில் நன்னூலார் நிலைமொழியின் ஈற்றில் உள்ள மெய்கள் வருமொழியின் முதலில் உள்ள எழுத்துகளோடு புணரும்போது, அவை என்னென்ன மாற்றங்கள் பெறுகின்றன என்பதைப் பற்றி இதுவரை விளக்கிக் கூறினார். பொதுவாக நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது, நிலைமொழியின் ஈற்றில் உள்ள மெய்களே, வருமொழியின் முதல் எழுத்துக்கு ஏற்பத் திரியும்.

**சான்று:**

ம**ண்** + குடம் = ம**ட்**குடம்
பொ**ன்** + குடம் = பொ**ற்**குடம்
மர**ம்** + கண்டார் = மர**ங்**கண்டார்
க**ல்** + கோயில் = க**ற்**கோயில்
மு**ள்** + செடி = மு**ட்**செடி
க**ல்** + மனம் = க**ன்**மனம்
மு**ள்** + மலர் = மு**ண்**மலர்

நிலைமொழியின் இறுதி எழுத்துக்கு ஏற்ப வருமொழியின் முதல் எழுத்தும் பிற எழுத்தாகத் திரிவது உண்டு. இவ்வாறு திரிகின்ற வருமொழி முதல் எழுத்துகள் தகர மெய்யும் நகர மெய்யும் ஆகும். வருமொழியின் முதலில் வருகின்ற இவ்விரண்டு மெய்களும், நிலைமொழியின் ஈற்றில் உள்ள ன, ல, ண, ள ஆகிய நான்கு மெய்களுக்கு முன் வரும்போது மட்டுமே திரிபடைகின்றன. இந்த வருமொழித் தகர நகரத் திரிபுகள் பற்றி நன்னூலார் கூறுவனவற்றைச் சான்றுடன் காண்போம்.

1. நிலைமொழியின் இறுதியில் உள்ள னகர, லகர மெய்களுக்கு முன், வருமொழி முதலில் வரும் தகர மெய் றகர மெய்யாகத் திரியும்.

**சான்று:**

பொன் + **தா**மரை = பொற்**றா**மரை
கல் + **தா**ழை = கற்**றா**ழை

*(இவற்றில் நிலைமொழி ஈற்றில் உள்ள ன-வும் ல-வும் திரிந்துள்ளன. இதற்கு உரிய விதியை முந்தைய பாடத்தில் (Co2141 பகுதி 1.2.1) படித்தோம். நினைவிருக்கிறதா?)*

*2. நிலைமொழியின் இறுதியில் உள்ள னகர, லகர மெய்களுக்கு முன், வருமொழி முதலில் வரும் நகர மெய் னகர மெய்யாகத் திரியும்.*

***சான்று:***

*பொன் + **நா**டு = பொ**ன்னா**டு*
*தென் + **நா**டு = தெ**ன்னா**டு*
*பல் + **ந**லம் = ப**ன்ன**லம்*

*3. நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகர, ளகர மெய்களுக்கு முன், வருமொழி முதலில் வரும் தகர மெய் டகர மெய்யாகத் திரியும்.*

***சான்று:***

*எண் + **தே**ர் = எ**ண்டே**ர் (எட்டுத்தேர்)*
*முள் + **தா**மரை = மு**ட்டா**மரை*

*4. நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகர ளகர மெய்களுக்கு முன், வருமொழி முதலில் வரும் நகரமெய் ணகர மெய்யாகத் திரியும்.*

***சான்று:***

*கண் + **நீ**ர் = க**ண்ணீ**ர்*
*கண் + **நோ**ய் = க**ண்ணோ**ய்*
*எள் + **நெ**ய் = எ**ண்ணெ**ய்*

*மேலே கூறிய வருமொழித் தகர நகரத் திரிபுகளை நன்னூலார்,*

***னலமுன் றனவும், ணளமுன் டணவும்,***
***ஆகும் தநக்கள் ஆயுங் காலே (நன்னூல், 237)***

*என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறார்.*

***உயிர் ஈற்று, மெய் ஈற்றுப் புணர்ச்சி விதிகளுக்குப் புறனடை***

*(**புறனடை** = ஏற்கெனவே கூறிய விதிகளுள் அடங்காதவற்றைத் தனியே ஒரு நூற்பாவில் அமைத்துக் காட்டுவது)*

*நன்னூலார் உயிர் ஈற்றுப் புணரியலிலும், மெய் ஈற்றுப் புணரியலிலும் எல்லா ஈற்று நிலை மொழிகளும், வருமொழிகளோடு புணரும் முறை பற்றிக் கூறிய புணர்ச்சி விதிகளை இதுவரை பார்த்தோம். நன்னூலார் அவ்விரண்டு இயல்களிலும் கூறிய புணர்ச்சி விதிகளுக்கு மாறுபட்ட சொற்புணர்ச்சிகளும் தமிழில் உள்ளன. சான்றாக,*

***மாயிரு ஞாலத்தை விழுங்கும் வாயினர்***
***(கம்பராமாயணம், 3008:2)***

*என்ற கம்பராமாயணப் பாடல் அடியில் **மாயிரு** என வருகிறது. இதற்கு 'மிகப் பெரிய' என்று பொருள். இது,*

*மா + இரு*

*எனப் பிரியும். மா என்னும் உயிர் ஈற்றுச் சொல் வருமொழி முதலில் உயிர் வரும்போது,*

***இ, ஈ ஐ வழி யவ்வும் ஏனை***
***உயிர்வழி வவ்வும் (நன்னூல், 162:1-2)***

*என்ற புணர்ச்சி விதிப்படி, இடையில் வகர உடம்படுமெய் பெற்று,*

*மா + இரு > மா + வ் + இரு = மாவிரு*

*என வரவேண்டும். ஆனால் இவ்விதிக்கு மாறாக,*

*மா + இரு > மா + **ய்** + இரு = மா**யி**ரு*

*என இடையில் **யகர மெய்** பெற்று வந்துள்ளது.*

*இதற்குக் காரணம் யாது? மா என்னும் ஓர் எழுத்துச் சொல் மரம், விலங்கு என்னும் இரு பொருள்களைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாகவும், மிகுதி என்னும் பொருளைக் குறிக்கும் உரிச்சொல்லாகவும் வழங்குகிறது.*

*மா என்னும் சொல் பெயர்ச்சொல்லாக நிலைமொழியில் நின்று, வருமொழி முதலில் உள்ள உயிரோடு புணரும்போது, விதிப்படி வகர உடம்படுமெய்யே பெறும்.*

***சான்று :***

*மா + இலை > மா + **வ்** + இலை = மா**வி**லை (மாமரத்தின் இலை)*
*மா + ஏறினான் > மா + **வ்** + ஏறினான் = மா**வே**றினான்*
*(மரத்தில் ஏறினான், விலங்கின்மேல் ஏறினான்)*

*ஆனால் மா என்னும் சொல் உரிச்சொல்லாக நிலைமொழியில் நின்று, வருமொழி முதலில் உள்ள உயிரோடு புணரும்போது, விதிப்படி வகர உடம்படுமெய் பெறாது, யகர மெய்யே பெறுகிறது. இந்த யகர மெய் உடம்படுமெய் அன்று. மா + இரு என்பதற்கு இடையில் தோன்றல் விகாரம் என்னும் புணர்ச்சி விதியின்படி யகரமெய் தோன்றி, மாயிரு என அமைந்தது என்று உணர்ந்து கொள்ளலாம்.*

*இதுபோல, ஏற்கெனவே விதித்த புணர்ச்சி விதிகளில் அடங்காது ஒரு காரணம் பற்றி வேறுபட்ட, மாயிரு போன்ற சொற்புணர்ச்சிகளை மெய்ஈற்றுப் புணரியலின் இறுதி நூற்பாவில் நன்னூலார் அமைத்துக் காட்டுகிறார். அந்நூற்பா **புறனடை நூற்பா** எனப்படுகிறது. புறனடை நூற்பா என்பதற்கு 'ஏற்கெனவே*

விதித்தவற்றுள் அடங்காதவற்றைத் தனியே அமைத்துக் காட்டும் நூற்பா' என்று பொருள். அந்நூற்பா வருமாறு:

***இடை, உரி வடசொலின் இயம்பிய கொளாதவும்,***

***போலியும், மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே (நன்னூல், 239)***

"இடைச்சொற்கள், உரிச்சொற்கள், வடசொற்கள் ஆகியவற்றிற்கு உயிர் ஈற்றுப் புணரியலிலும், மெய் ஈற்றுப் புணரியலிலும் சொல்லப்பட்ட தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பாதல் என்னும் புணர்ச்சி இலக்கணங்களைக் கொள்ளாமல் வேறுபட்டு வருவனவற்றையும் இலக்கணப்போலிச் சொற்களையும், மரூஉச்சொற்களையும் உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் வழங்கும் முறைமைக்குப் பொருந்துமாறு கூட்டி முடித்தல், அறிவுடையோர் எல்லோர்க்கும் முறை ஆகும்" என்பது இந்நூற்பாவின் பொருள்.

நன்னூலார் இந்நூற்பாவில் கூறும் கருத்துகளைச் சான்றுடன் காண்போம்.

- **இடைச்சொற்கள்**

***சான்று:***

ஒன்று + ***அன்*** + கூட்டம் > ஒன்ற***ன்*** + கூட்டம் = ஒன்ற***ன்***கூட்டம்
வண்டு + ***இன்*** + கால் > வண்டி***ன்*** + கால் = வண்டி***ன்***கால்

இவை இரண்டும் ஆறாம் வேற்றுமைத் தொகை. ***ஒன்றன் கூட்டம்*** – ஒரே பொருளினது கூட்டம்; ***வண்டின்கால்*** – வண்டினது கால்.

வேற்றுமைப் புணர்ச்சியில், ***னன வல்லினம் வரட்டறவும் (நன்னூல், 209)*** என்ற விதிப்படி, நிலைமொழி ஈற்று னகரமெய், வருமொழி முதலில் வல்லினம் வரின் றகர மெய்யாக வேண்டும். இவ்விதிப்படி,

ஒன்றன் + கூட்டம் = ஒன்றற்கூட்டம்
வண்டின் + கால் = வண்டிற்கால்

என வரவேண்டும். ஆனால் இந்நிலைமொழிகளின் ஈற்றில் உள்ள ***அன், இன்*** என்பன ***சாரியைகள்*** ஆகும். சாரியைகள் இடைச்சொற்கள் ஆதலால், அவை இவ்விதியைக் கொள்ளாமல்.

ஒன்ற***ன்*** கூட்டம், வண்டி***ன்***கால்

என இயல்பாகப் புணர்ந்தன.

- ***உரிச்சொற்கள்***

***சான்று :***

நனி + பேதை = நனிபேதை (மிகவும் பேதை)
மழ + களிறு = மழகளிறு (இளமையான களிறு)

நனி, மழ என்பன உரிச்சொற்கள். உயிர் ஈற்று உரிச்சொற்கள். உயிர் ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வரின்,

***இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும் (நன்னூல், 165)***

என்ற விதிப்படி இச்சொற்கள்,

நனி + பேதை = நனிப்பேதை
மழ + களிறு = மழக்களிறு

என வல்லினம் மிகுந்து வரவேண்டும். ஆனால் நனி என்பது மிகுதி என்னும் பொருளையும், மழ என்பது இளமை என்னும் பொருளையும் உணர்த்தும் உரிச்சொற்கள் ஆதலால், இவை இவ்விதியைக் கொள்ளாது,

நனிபேதை, மழகளிறு

என வல்லினம் மிகாது இயல்பாகப் புணர்ந்தன.

- **வடசொற்கள்**

***சான்று:***

இதயம் + கமலம் = இதய கமலம்
உதயம் + தாரகை = உதய தாரகை

(***இதயம்*** – உள்ளம்; ***கமலம்*** – தாமரை; ***உதயம்*** – விடிதல்; ***தாரகை*** – வெள்ளி நட்சத்திரம்; ***உதயதாரகை*** – விடிவெள்ளி)

இவை ***மவ்வீறு ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும் (நன்னூல், 219)*** என்ற விதிப்படி, இதயக் கமலம், உதயத் தாரகை என வரவேண்டும். ஆனால் மகர ஈறு கெட்டாலும், இவை வடசொற்கள் ஆதலால் இவ்விதியைக் கொள்ளாமல் இயல்பாகப் புணர்ந்தன. ஆதிபகவன், உதய சூரியன் போன்றவற்றிலும் வடசொற்கள் இயல்பாகப் புணர்ந்தமை காணலாம்.

- **இலக்கணப் போலிச் சொற்கள்**

இலக்கணம் இல்லாதனவாயினும், இலக்கணம் உடையது போலச் சான்றோர்களால் தொன்றுதொட்டு வழங்கப்பட்டுவரும் சொற்கள் **இலக்கணப் போலிச்** சொற்கள் எனப்படும். சான்று: இல்முன் என்பதை முன்றில் எனக் கூறுதல்.

இல்முன் > முன் + இல் = முன்றில்

இதில் சொற்கள் முன்பின்னாக மாறிப் புணர்ந்துள்ளதால் இலக்கணப்போலி என்றனர். **முன்** + **இல்** என்பது,

***தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன்னூல், 205)***

என்ற விதிப்படி **முன்னில்** என வரவேண்டும். ஆனால் இது இலக்கணப்போலி ஆதலால் இவ்விதியைக் கொள்ளாமல் இடையில் றகரமெய் பெற்று முன்றில் என முடிந்தது.

- ***மரூஉச் சொற்கள்***

தொன்றுதொட்டு வருதலின்றி இடையில் சில எழுத்துகள் தோன்றியும் திரிந்தும் கெட்டும் இலக்கணம் சிதைந்து தானே மருவி வழங்கும் சொற்கள் மரூஉச் சொற்கள் எனப்படும். சான்றாக அருமருந்தன்ன என்பதை அருமந்த என்று கூறுதலைச் சொல்லலாம்.

அருமை + மருந்து + அன்ன = அருமருந்தன்ன

என வரவேண்டும். ஆனால் இது அருமந்த எனவருகிறது. **மருந்து** + **அன்ன** என்பது **உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் (நன்னூல், 164)** என்ற விதிப்படி **மருந்தன்ன** என்று வாராமல், சில எழுத்துகள் கெட்டு (நீங்கி) **மந்த** என்று அமைந்து வழங்குகிறது.

மேலே கூறியவற்றைப் போல, கூறப்பட்ட புணர்ச்சி விதிகளுக்கு மாறாக ஒரு காரணம் பற்றி வேறொரு புணர்ச்சியுடன் அமைவனவற்றை ஏற்றுக் கொள்ளலாம் என்பது நன்னூலார் கருத்து. இதனை அடியொற்றியே இன்று கற்றறிந்த அறிஞர்கள் கூட, எழுத்துத் தமிழில், வன்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துக் ‘கள்’ என்னும் விகுதியைச் சேர்த்து எழுதும் போது, ‘வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் மிகும்’ என்ற நன்னூல் விதிப்படி,

கருத்து + கள் = கருத்துக்கள்
எழுத்து + கள் = எழுத்துக்கள்

என்று வல்லினம் மிகுமாறு எழுதாமல்,

கருத்து + கள் = கருத்துகள்
எழுத்து + கள் = எழுத்துகள்

என வல்லினம் மிகாமல் எழுதி வருகின்றனர். வன்தொடர்க் குற்றியலுகரச் சொல்லின் முன்னர் வரும் ‘கள்’ என்னும் பன்மை விகுதி இடைச்சொல்லாதலால் நன்னூலார் கூறிய புறனடை நூற்பாவின்படி, கருத்துகள் என வல்லினம் மிகாமல் இயல்பாக எழுதுவது ஏற்புடையதே ஆகும்.

இதுவரை லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி பற்றியும், வருமொழி தகர, நகரத் திரிபுகள் பற்றியும் நன்னூலார் கூறியனவற்றை அறிந்து கொண்டோம். உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல் ஆகியவற்றில் சொல்லப்பட்ட புணர்ச்சி விதிகளுக்கு மாறுபட்டு இடைச்சொற்கள், உரிச்சொற்கள், வடசொற்கள் ஆகியவையும், இலக்கணப் போலிச் சொற்களும், மரூஉச் சொற்களும், வேறுபட்ட சில புணர்ச்சியைப் பெற்று வருதலை ஏற்றுக் கொள்ளலாம் என்று நன்னூலார் குறிப்பிடும் விதிவிலக்கினை அறிந்து கொள்ளலாம். நன்னூலார் குறிப்பிடும் விதிவிலக்கின் வழிநின்று, புணர்ச்சி இலக்கணப்படி வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் கள் விகுதி சேர்த்து எழுதும் போது, கருத்துக்கள், எழுத்துக்கள் என வல்லினம் மிகுமாறு எழுதாமல் கருத்துகள், எழுத்துகள் என வல்லினம் மிகாமல் எழுதுவது இன்று கற்றறிந்த அறிஞர்களிடமும் நிலைத்துவிட்டது என்பதை அறிந்துகொள்ளலாம்.

## உருபு புணர்ச்சி - I

**பாட முன்னுரை**

வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் புணர்ச்சி **உருபு புணர்ச்சி** எனப்படும். ‘ஐ, ஆல், கு, இன், அது, கண்’ என்பன வேற்றுமை உருபுகள் ஆகும். இவை பெயர்ச்சொல்லுக்கு இறுதியில் வந்து, அப்பெயர்ச்சொற்களின் பொருளை வேற்றுமை செய்யும் காரணத்தால் வேற்றுமை உருபுகள் எனப்பட்டன என்பதைப் புணர்ச்சியும் அதன் பாகுபாடும் என்ற பாடத்தில் ஏற்கெனவே பார்த்தோம்.

வேற்றுமை உருபுகள் வருமொழியாக நின்று, நிலைமொழியில் உள்ள பெயர்ச்சொல்லோடு புணரும். சான்று: **கல்** + **ஐ** = **கல்லை**. பெயர்ச்சொல்லோடு சேர்ந்து நிலைமொழியின் இறுதியில் நின்று வருமொழியில் உள்ள சொற்களோடும் புணரும். சான்று: **கல்லை** + **கண்டான்** = **கல்லைக் கண்டான்**. இவ்வாறு புணரும்போது அவ்வேற்றுமை உருபுகள் உயிர் ஈற்றுப் புணர்ச்சியிலும், மெய்ஈற்றுப் புணர்ச்சியிலும் வேற்றுமைக்குச் சொல்லப்பட்ட புணர்ச்சி விதிகளைப் பெறும்.

பெயர்ச்சொல்லோடு வேற்றுமை உருபுகள் வந்து புணரும்போது, அவை இரண்டனுக்கும் இடையே **சாரியைகள்** என்று சொல்லப்படும் இடைச்சொற்கள் வருதலும் உண்டு. சான்றாக **மரம்** என்ற பெயர்ச்சொல்லோடு, **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு வருமொழியில் வந்து புணரும்போது, மரமை என்று புணராது; **மரத்தை**

என்று புணரும். **மரம் + அத்து + ஐ** என்பதே **மரத்தை** என்றாகியது. இங்கே மரம் என்பதற்கும், ஐ என்பதற்கும் இடையில் வந்துள்ள **அத்து** என்பது சாரியை ஆகும். நிலைமொழியில் உள்ள பெயர்ச்சொல்லையும், வருமொழியில் வரும் வேற்றுமை உருபுகளையும் சேர்த்து எளிதாக உச்சரிப்பதற்குச் சாரியை வருகின்றது.

நன்னூலார் எழுத்ததிகாரத்தில் இறுதியாக அமைந்த உருபு புணரியலில் உருபு புணர்ச்சி பற்றியும், உருபு புணர்ச்சியில் சாரியைகள் வருவது பற்றியும் கூறுகிறார். எல்லாம், எல்லாரும், எல்லீரும், ஆ, மா, கோ என்னும் பெயர்களும், தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்னும் மூவிடப் பெயர்களும் வேற்றுமை உருபுகளோடு புணரும் முறை பற்றியும் கூறுகிறார். உருபு புணரியலில் அவர் கூறும் கருத்துகளை இப்பாடத்திலும், இதனை அடுத்து வரும் பாடத்திலும் விளக்கமாகவும் விரிவாகவும் காண்போம்.

இப்பாடத்தில் வேற்றுமை உருபுகளும், அவை வரும் இடமும், வருவதற்குக் காரணமும் பற்றி நன்னூலார் கூறும் கருத்துகள் விளக்கிக் காட்டப்படுகின்றன. வேற்றுமை உருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் உருபு புணர்ச்சி பற்றி அவர் கருத்துகள் சான்றுடன் விளக்கப்படுகின்றன. சாரியைகள் என்று கூறப்படும் இடைச்சொற்கள் விகுதிப் புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபு புணர்ச்சி என்னும் மூவகைப் புணர்ச்சியிலும் வருமென நன்னூலார் குறிப்பிடுகிறார். இம் மூவகைப் புணர்ச்சியிலும் வரும் பொதுச்சாரியைகளைத் தொகுத்து அவர் தருகிறார், இவையும் இப்பாடத்தில் சான்றுகளுடன் விளக்கிக் காட்டப்படுகின்றன.

**வேற்றுமை உருபுகள்**

வேற்றுமை எட்டு வகைப்படும். அவற்றுள் முதல் வேற்றுமை **பெயர் வேற்றுமை** எனப்படும். இவ்வேற்றுமை உருபு எதுவும் ஏற்காது. பெயர் மட்டுமே நிற்றலால், பெயர் வேற்றுமை எனப்பட்டது. இப்பெயர் ஒரு தொடரில் எழுவாயாக வருவதால் **எழுவாய் வேற்றுமை** என்றும் கூறப்படும். எட்டாம் வேற்றுமை விளித்தல் (அழைத்தல்) பொருளில் வருவதால் **விளிவேற்றுமை** என்று கூறப்படும். இவை இரண்டும் நீங்கலான பிற ஆறு வேற்றுமைகளுக்கு மட்டுமே தனித்தனி உருபுகள் உண்டு. அவை ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன ஆகும். இவ்வேற்றுமைகள் ஒவ்வொன்றும் அவற்றிற்கு உரிய உருபினைக் கொண்டு **ஐ வேற்றுமை, ஆல் வேற்றுமை** என்றவாறு பெயரிட்டும் அழைக்கப்படும்.

நன்னூலார் சொல்லதிகாரத்தில் அமைந்த முதல் இயலாகிய பெயரியலில் வேற்றுமையின் இலக்கணத்தை விளக்குகிறார். (நன்னூல், 291-293) அதில் வேற்றுமையில் எழுவாயாக வரும் பெயரையும் உருபு என்றே குறிப்பிடுகிறார். எழுவாயாக வரும் அப்பெயர் உருபே, ஐ முதலாகிய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும் என்கிறார். இதனை,

***ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே (நன்னூல், 293)***

என்ற பெயரியல் நூற்பாவில் குறிப்பிடுகிறார். (**அவ்வுருபே** - எழுவாய் உருபே)

விளிவேற்றுமையும் பெயரின் திரிபாதலால் அதனையும் நன்னூலார் உருபு என்றே கொள்கிறார். பெயர்ச்சொல்லோடு விளியுருபுகள் சேர்ந்தே எட்டாம் வேற்றுமை விளித்தல் பொருளில் வரும்.

**சான்று:**

இராமன் > இராமா
அரசன் > அரசே

இங்கு ஆ, ஏ என்பன விளியுருபுகளாக வருகின்றன. எனவே நன்னூலார் கருத்துப்படி எட்டு வேற்றுமைகளுமே உருபுகள் என்பதாம். அவை **பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி** என்பன ஆகும்.

இந்த எட்டு வேற்றுமை உருபுகளும் நாற்பது ஆகின்றன என்று நன்னூலார் உருபு புணரியலில் கூறுகிறார்.

**வேற்றுமை உருபுகள் எட்டும் நாற்பது ஆதல்**

ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் வாய்பாடுகளில் அமைந்துவரும் ஐம்பால் பெயர்களோடு, பெயர் வேற்றுமை முதல் விளிவேற்றுமை வரையிலான எட்டு வேற்றுமை உருபுகளையும் பெருக்கிக் கணக்கிட, வேற்றுமை உருபுகள் நாற்பது ஆகும்.

**ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பல என**
**வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு**
**உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே (நன்னூல், 240)**

(**உறழ்தர** – பெருக்கிக் கணக்கிட)

**சான்று:**

| | |
|---|---|
| நம்பி – முதல் வேற்றுமை, | பெயர் |
| நம்பியை – இரண்டாம் வேற்றுமை | ஐ |
| நம்பியால் – மூன்றாம் வேற்றுமை | ஆல் |
| நம்பிக்கு – நான்காம் வேற்றுமை | கு |
| நம்பியின் – ஐந்தாம் வேற்றுமை | இன் |

| | |
|---|---|
| நம்பியது – ஆறாம் வேற்றுமை | அது |
| நம்பி கண் – ஏழாம் வேற்றுமை | கண் |
| நம்பீ – எட்டாம் வேற்றுமை | விளி |

இவ்வாறே நங்கை, மக்கள், மரம், மரங்கள் என்னும் ஏனைய நான்கு வாய்பாட்டுப் பெயர்களோடு எட்டு வேற்றுமை உருபுகளையும் கூட்டினால் வேற்றுமை உருபுகள் மொத்தம் **நாற்பது** ஆகும்.

**வேற்றுமை உருபுகள் வருதற்குக் காரணமும் வரும் இடமும்**

வேற்றுமை உருபுகள் தமது பொருளைக் கொடுக்க, பெயர்க்குப் பின்னால் வரும்.

***பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே (நன்னூல், 241)***

தம்பொருள் தரவரும் என்றது பெயர் வேற்றுமை உருபு கருத்தாப் பொருளையும், ஐ உருபு செயப்படுபொருளையும், இதுபோல மற்ற வேற்றுமை உருபுகள் தத்தமக்கு உரிய பொருளையும் பெயர்க்குப் பின்னால் வந்து தரும் என்பதைக் குறிக்கும்.

**சான்று**

| | | |
|---|---|---|
| நம்பி கண்டான் | **பெயர்** | கருத்தாப்பொருள் |
| நம்பியைக் கண்டான் | **ஐ** | செயப்படுபொருள் |
| நம்பியால் பெற்றான் | **ஆல்** | கருவிப்பொருள் |
| நம்பிக்குக் கொடுத்தான் | **கு** | கொடைப்பொருள் |
| நம்பியின் பிரிந்தான் | **இன்** | நீங்கல்பொருள் |
| நம்பியது வீடு | **அது** | கிழமைப்பொருள் |
| நம்பிகண் செல்வம் | **கண்** | இடப்பொருள் |
| நம்பீ! வா | **விளி** | விளிப்பொருள் |

*(**கிழமைப்பொருள்** – உடைமைப்பொருள்)*

**வேற்றுமை உருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் முறை**

வேற்றுமை உருபுகள் மெய்யையும் உயிரையும் முதலிலும் ஈற்றிலும் பெற்று வரும்.

**வேற்றுமை உருபுகள்**

**வரு மொழியாக வரும்போது**

**நிலை மொழியில் சேர்ந்து நிற்கும் போது**

| | |
|---|---|
| **ஐ** | ஐ – உயிர்முதல் |
| | ஐ – உயிர் ஈறு |
| **ஆல்** | ஆ – உயிர்முதல் |
| | ல் – மெய் ஈறு |
| **கு** | க் – மெய்முதல் |
| | உ – உயிர் ஈறு |
| **இன்** | இ – உயிர்முதல் |
| | ன் – மெய் ஈறு |
| **அது** | அ – உயிர்முதல் |
| | உ – உயிர் ஈறு |
| **கண்** | க் – மெய் முதல் |
| | ண் – மெய் ஈறு |

இனி நன்னூலார் வேற்றுமை உருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் உருபு புணர்ச்சி பற்றிக் கூறுவனவற்றைக் காண்போம்.

மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாக உடைய 'ஐ, ஆல், கு, இன், அது, கண்' என்னும் ஆறு வேற்றுமை உருபுகளும் நிலைமொழி வருமொழிகளோடு புணரும்போது, ஏற்கெனவே உயிர்ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல் ஆகிய இரண்டு இயல்களுள்ளும், வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சொல்லப்பட்ட இயல்பாதல், விகாரமாதல் *(தோன்றல், திரிதல், கெடுதல்)* என்னும் புணர்ச்சி விதிகளைப் பெரும்பாலும் ஒத்து நடக்கும்.

***ஒற்றுஉயிர் முதல்ஈற்று உருபுகள் புணர்ச்சியின் ஒக்கும்மன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே (நன். 242)***

***(வேற்றுமைப் புணர்ப்பு – வேற்றுமைப் புணர்ச்சி)***

***சான்று: 1***

*உயிர் எழுத்தை ......... மிகாது.*

நம்பி + கண் = நம்பிகண்

உயிர் எழுத்தை ஈறாகக் கொண்ட உயர்திணைப் பெயர் முன் வரும் வல்லினம் மிகாது.

***பொதுப்பெயர் <u>உயர்திணைப் பெயர்கள் ஈற்று</u>மெய்***

***வலிவரின் இயல்பாம் <u>ஆவி யரமுன்</u>***
***<u>வன்மை மிகா</u> (நன்னூல், 159)***

என்ற விதிப்படி நம்பி என்ற இகர உயிர் ஈற்று உயர்திணைப் பெயர்முன், வருமொழி முதலில் வந்துள்ள **க்** என்ற வல்லினம் மிகாமல் **நம்பிகண்** என்று இயல்பாயிற்று.

நம்பிகண் + வாழ்வு = நம்பிகண் வாழ்வு

கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு, நம்பி என்ற நிலைமொழியோடு இயல்பாய்ப் புணர்ந்து,

நம்பிகண் என்று நிலைமொழியாக நிற்க, அந்தக் கண் உருபின் இறுதியில் உள்ள ணகரமெய், வருமொழி முதலில் வ் என்ற இடையின மெய் வர,

***ணன வல்லினம் வரட்டறவும் பிறவரின் இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு*** ***(நன்னூல், 209)***

*(ணன என்னும் மெய்கள், வல்லினம் அல்லாத பிறமெல்லின, இடையின மெய்கள் வருமொழி முதலில் வரின் வேற்றுமையில் இயல்பாகும்)* என்ற விதிப்படி இயல்பாகி, **நம்பிகண் வாழ்வு** என வந்தது.

***சான்று: 2***

உறி + கண் + பால்
உறி + கண் = உறிக்கண்

இயல்பு ஈறாகவும், விதி ஈறாகவும் நிலைமொழியின் இறுதியில் நின்ற உயிர்முன் வரும் க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் மிகும்.

***இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்*** ***(நன்னூல், 165)***

என்ற விதிப்படி, உறி என்னும் நிலைமொழியின் இறுதியில் இயல்பு ஈறாக நின்ற இ என்ற உயிர்முன் வருமொழி முதலில் வந்துள்ள **க்** என்ற வல்லினமெய் மிக்கு, **உறிக்கண்** என்றாயிற்று.

உறிக்கண் + பால் = உறிக்கட்பால்

கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு, உறி என்னும் நிலைமொழியோடு மிக்குப் புணர்ந்த பின்னர், உறிக்கண் என்று நிலைமொழியாக நிற்க, அவ்வுருபின் இறுதியில் உள்ள ணகர மெய், வருமொழி முதலில் **ப்** என்ற வல்லினமெய் வர,

**ணன வல்லினம் வரட் டறவும் ........ வேற்றுமைக்கு**

***(நன்னூல், 209)***

என்ற விதிப்படி டகர மெய்யாகத் திரிந்து **உறிக்கட்பால்** என்றாயிற்று.

***சான்று: 3***

பழி+கு+அஞ்சி
பழி + கு = பழிக்கு

***இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்***

என்ற விதிப்படி, பழி என்னும் நிலைமொழியின் இறுதியில் நின்ற இ என்னும் இயல்பு உயிர்முன், வருமொழியின் முதலில் வந்த **க்** என்ற வல்லின மெய் மிக்கு, **பழிக்கு** என்றாயிற்று.

பழிக்கு + அஞ்சி = பழிக்கஞ்சி

பழி என்ற நிலைமொழியோடு கு என்ற நான்காம் வேற்றுமை உருபு வல்லினம் மிக்குப் புணர்ந்து, பழிக்கு என்று நிலைமொழியாக நிற்கிறது. அதன் இறுதியில் உள்ள கு என்பது வேற்றுமை உருபாகவே கொள்ளப்படுகிறது. அதிலுள்ள உகரமானது முற்றியலுகரம் ஆகும். அம் முற்றியலுகரமானது (உகர உயிரானது),

***உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் யவ்வரின் இய்யாம் முற்றும்அற்று ஒரோவழி (நன். 164)***

*(வருமொழியின் முதலில் உயிர் வரின், நிலைமொழி இறுதியில் உள்ள முற்றியலுகரம், குற்றியலுகரத்தைப் போலத் தான் ஏறியிருக்கும் மெய்யை விட்டு ஒரு சில இடங்களில் நீங்கும் என்பது இந்நூற்பாவின் பொருள்.)*

என்ற விதிப்படி, தான் ஏறியிருக்கும் ககரமெய்யை விட்டு நீங்கி, **பழிக்க்** என நிற்கிறது; அதனோடு வருமொழி முதலில் உள்ள அகர உயிரானது,

***உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன்னூல், 204)***

என்ற விதிப்படி, இறுதியில் நின்ற ககர மெய்யோடு பொருந்தி, **பழிக்கஞ்சி** என்றாயிற்று.

நூற்பாவில் **ஒக்குமன்** (பெரும்பாலும் ஒத்து நடக்கும்) என்றமையால், சிறுபான்மை ஒவ்வாது வருவதும் உண்டு என்பது பெறப்படும்.

***சான்று:***

நம்பி + கு = நம்பிக்கு

இங்கே "உயர்திணைப் பெயர்கள் ஈற்று... ஆவி யரமுன் வன்மை மிகா" (நன்னூல், 159) என்ற விதியை ஒவ்வாது, "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும்" (நன்னூல், 165) என்ற விதிப்படி, நம்பி என்ற இகர உயிர் ஈற்று உயர்திணைப் பெயர்முன், வந்துள்ள கு என்னும் நான்காம் வேற்றுமை உருபின் முதலில் உள்ள க் என்ற வல்லினம் மிக்கு, நம்பிக்கு என்றாயிற்று.

***சாரியைகள்***

ஒரு பதத்தின் (சொல்லின்) முன்னர் விகுதியும், பதமும் வேற்றுமை உருபும் வந்து புணரும்போது அவற்றிற்கு இடையே சில இடைச்சொற்கள் வந்து சார்ந்து பொருந்துதல் உண்டு. அச்சொற்களுக்குச் சாரியை என்று பெயர். விகுதியையோ, பதத்தையோ, வேற்றுமை உருபையோ சார்ந்து வருதலின் **சாரியை** எனப்பட்டது.

பதத்தின் முன்னர் விகுதி வந்து புணர்வது **விகுதிப் புணர்ச்சி** என்றும், பதத்தின் முன்னர் பதம்

வந்து புணர்வது **பதப்புணர்ச்சி** என்றும், பதத்தின் முன்னர் வேற்றுமை உருபு வந்து புணர்வது **உருபு புணர்ச்சி** என்றும் கூறப்படும். இம்மூவகைப் புணர்ச்சியிலும் சாரியைகள் வரும் முறைமை பற்றியும், இம்மூவகைப் புணர்ச்சிக்கும் உரிய பொதுச்சாரியைகள் பற்றியும் நன்னூலார் உருபு புணரியலில் கூறுகிறார். அவற்றைச் சான்றுடன் காண்போம்.

***சாரியைகள் வரும் முறைமை***

பதத்தின் முன்னர் விகுதியும், பதமும், வேற்றுமை உருபும் வந்து புணரும்போது, அவற்றிற்கு இடையே சாரியை ஒன்றோ பலவோ வருதலும், வாராதிருத்தலும், இவ்விரண்டும் ஆகிய விகற்பமாதலும் ஆகும்.

***பதம்முன் விகுதியும் பதமும் உருபும்***
***புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை***
***வருதலும், தவிர்தலும், விகற்பமும் ஆகும்***
***(நன்னூல், 243)***

*(**விகற்பமாதல்** - ஒரே புணர்ச்சியில் சாரியை வருதலும், வாராது இருத்தலும் ஆகும்.)*

நன்னூலார் கூறியவாறு விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபு புணர்ச்சி என்னும் மூவகைப் புணர்ச்சியிலும் சாரியை வரும் முறையைச் சான்றுடன் காண்போம்.

- **விகுதிப் புணர்ச்சி**

பதத்தின் முன்னர் விகுதி வந்து புணர்வது விகுதிப்புணர்ச்சி எனப்படும்.

**சான்று:**

| | | |
|---|---|---|
| 1.நடந்தனன்<br>நட - பகுதி | + த்(ந்) சந்தி விகாரம்<br>+ த் இடை நிலை<br>+ **அன் சாரியை** +<br>அன் விகுதி | **அன்**<br>சாரியை வந்தது |
| 2.நடந்தான்<br>நட - பகுதி | + த்(ந்) சந்தி விகாரம்<br>+ த் இடை நிலை<br>+ ஆன் விகுதி | சாரியை வரவில்லை |
| 3. நடந்தன<br>நட - பகுதி | + த்(ந்) சந்தி விகாரம்<br>+ த் இடை நிலை<br>+ **அன் சாரியை**<br>+ அ விகுதி<br>விகற்பம் | **அன்**<br>சாரியை வந்தது |
| 4. நடந்த<br>நட - பகுதி | + த்(ந்) சந்தி விகாரம்<br>+ த் இடை நிலை<br>+ அ விகுதி | சாரியை வரவில்லை |

- **பதப்புணர்ச்சி**

பதத்தின் முன்னர்ப் பதம் வந்து புணர்வது பதப்புணர்ச்சி எனப்படும்.

**சான்று:**

1. புளி + பழம் > புளி + **அம்** + பழம் = புளி**யம்**பழம் **-அம்** சாரியை வந்தது

2. புளி + சோறு > புளி + ச் + சோறு = புளிச்சோறு **-** வல்லினம் மிக்கதே தவிரச் சாரியை வரவில்லை

3. நெல் + குப்பை > நெல் + **இன்** + குப்பை- **இன்** சாரியை வந்தது விகற்பம் = நெல்**லின்**குப்பை

4. நெல் + குப்பை = நெற்குப்பை **-** சாரியை வரவில்லை

- **உருபு புணர்ச்சி**

பதத்தின் முன்னர் வேற்றுமை உருபு வந்து புணர்வது உருபு புணர்ச்சி எனப்படும்.

**சான்று:**

1. மரம் + ஐ > மர + **அத்து** + ஐ = மரத்தை

- அத்து என்னும் ஒரு சாரியை வந்தது

மரம் + ஐ > மர + **அத்து** + **இன்** + ஐ = மரத்தினை

அத்து, இன் என்னும் இரு சாரியைகள் வந்தன

மரம் + கு > மர + **அத்து** + **இன்** + **உ** + கு = மரத்தினுக்கு

அத்து, இன், உ என்னும் மூன்று சாரியைகள் வந்தன

இச்சான்றுகளில் பதத்தின் முன்னர் வேற்றுமை உருபு புணரும்போது இடையில் சாரியை ஒன்றோ பலவோ வந்தமை காணலாம்.

2. நாம் + ஐ = நம்மை
யான் + ஐ = என்னை

சாரியை வரவில்லை

3. ஆ + **ன்** + ஐ = ஆனை – னகரச் சாரியை வந்தது விகற்பம்

ஆ + வ் + ஐ = ஆவை - வகர உடம்படுமெய் வந்ததே தவிரச் சாரியை வரவில்லை

*(**ஆனை**, **ஆவை** - பசுவை)*

உருபு புணரியலில் நன்னூலார் சாரியை வரும் முறைமை பற்றிக் கூறும்போது, பதத்தின் முன்னர் வேற்றுமை உருபு வந்து புணரும் உருபுபுணர்ச்சியில் வரும் சாரியை பற்றிக் கூறுவது மட்டுமே பொருத்தமானது ஆகும். ஆனால் அதனோடு, பகுபத உறுப்புகளைப் பற்றிப் பேசும் பதவியலில் கூறவேண்டிய விகுதிப் புணர்ச்சியையும், உயிர் ஈற்று, மெய்ஈற்றுப் புணரியல்களில் கூறவேண்டிய பதப்புணர்ச்சியையும் ஆண்டுக் கூறாது, உருபு புணரியலில் இந்நூற்பாவில் சேர்த்துக் கூறியதற்குக் காரணம் ஒப்பின் முடித்தல் என்ற உத்தி ஆகும். ஓரிடத்தே ஒன்றற்குச் சொல்லும் இலக்கணம், அவ்விடத்தே சொல்லத் தேவையில்லாத வேறு ஒன்றற்கும் ஒத்து வருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாகும் என்று அதனையும் சேர்த்துக் கூறுதல் ஒப்பின் முடித்தல் என்னும் உத்தி ஆகும்.

**பொதுச் சாரியைகள்**

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன என்ற பதினேழும், இவை போல்வன பிறவும் பொதுச்சாரியைகள் ஆகும்.

***அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்***
***தம்நம் நும்ஏ அஉ ஐகுன***
***இன்ன பிறவும் பொதுச் சாரியையே (நன்னூல், 244)***

இச்சாரியைகள் விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபுபுணர்ச்சி என்ற மூன்று புணர்ச்சிகளிலும், தனிமொழிகளிலும் வருதலினால் **பொதுச்சாரியைகள்** என்று வழங்கப்பட்டன.

**சான்று:**

| | |
|---|---|
| அன் – ஒன்றன் கூட்டம் | ஒன்று + **அன்** + கூட்டம் |
| ஆன் – ஒருபாற்கு | ஒருபது + **ஆன்** + கு (இப்போது இது வழக்கில் இல்லை) |
| இன் – வண்டின்கால் | வண்டு + **இன்** + கால்) |
| அல் – தொடையல் | தொடை + **அல்**) – = மாலை) |
| அற்று – பலவற்றை | பல + **அற்று** + ஐ) |
| இற்று – பதிற்றுப்பத்து | பத்து + **இற்று** + பத்து) |
| அத்து – மரத்துக்கிளை | மரம் + **அத்து** + கிளை) |
| அம் – புளியம்பழம் | புளி + **அம்** + பழம்) |
| தம் – எல்லார்தம்மையும் | எல்லார் + **தம்** + ஐ + உம்) |
| நம் – எல்லா நம்மையும் | எல்லா + **நம்** + ஐ + உம்) |
| நும் – எல்லீர் நும்மையும் | எல்லீர் + **நும்** + ஐ + உம்) |
| ஏ – ஒன்றே கால் | ஒன்று + **ஏ** + கால்) |
| அ – புளியமரம் | புளி + **அ** + மரம்) |
| உ – அவனுக்கு | அவன் + **உ** + கு) |
| ஐ – பண்டைக்காலம் | பண்டு + **ஐ** + காலம்) |
| கு – செய்குவாய் | செய் + **கு** + ஆய்) |
| ன் – ஆனை | ஆ + **ன்** + ஐ) |

(செய்குவாய் – **விகுதிப்புணர்ச்சி**; தொடையல் – **தனிமொழி**; ஒன்றன்கூட்டம், வண்டின்கால், பதிற்றுப்பத்து, மரத்துக்கிளை, புளியம்பழம், ஒன்றேகால், புளியமரம், பண்டைக்காலம் – **பதப்புணர்ச்சி**; ஒருபாற்கு, பலவற்றை, எல்லார்தம்மையும், எல்லா நம்மையும், எல்லீர் நும்மையும், அவனுக்கு, ஆனை – **உருபு புணர்ச்சி**.)

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை: பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பன ஆகும். இவை எட்டுமே உருபுகள் ஆகும். பெயர் ஒரு தொடரில் எழுவாயாக வரும். அந்த எழுவாயே உருபாக நின்று ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும். விளிவேற்றுமையும் பெயரின் திரிபாதலின் உருபே ஆகும்.

வேற்றுமை உருபுகள் பெயருக்குப் பின்னால் வரும். பெயர் பால் அடிப்படையில் ஆண்பால் பெயர், பெண்பால் பெயர், பலர்பால் பெயர், ஒன்றன்பால் பெயர், பலவின்பால் பெயர் என ஐந்து வகைப்படும். எனவே ஐம்பால் பெயர்களோடு எட்டு வேற்றுமை உருபுகளையும் பெருக்கிக் கணக்கிட வேற்றுமை உருபுகள் நாற்பது ஆகும்.

வேற்றுமை உருபுகள் தத்தமக்கு உரிய கருத்தாப் பொருள், செயப்படுபொருள், கருவிப்பொருள் முதலானவற்றைத் தர, பெயருக்குப் பின்னால் வரும்.

ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் வேற்றுமை உருபுகள் மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாக உடையவை. இவை நிலைமொழி, வருமொழிகளோடு புணரும்போது, ஏற்கெனவே உயிர்ஈற்றுப் புணரியலிலும், மெய் ஈற்றுப் புணரியலிலும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சொல்லப்பட்ட புணர்ச்சி விதிகளைப் பெரும்பாலும் பெறும்.

பதத்தின் முன்னர் விகுதி வந்து புணர்வது விகுதிப் புணர்ச்சி எனப்படும். பதத்தின் முன்னர் பதம் வந்து புணர்வது பதப்புணர்ச்சி எனப்படும். பதத்தின் முன்னர் வேற்றுமை உருபு வந்து புணர்வது உருபு புணர்ச்சி எனப்படும். இம்மூவகைப் புணர்ச்சியிலும் சாரியைகள் என்னும் இடைச்சொற்கள் வருவது உண்டு. இம்மூவகைப் புணர்ச்சியிலும் சாரியைகள்

வரும்போது, ஒரு புணர்ச்சியில் ஒன்றாகவோ பலவாகவோ வரும்; வாராது இருத்தலும் உண்டு- ஒரே புணர்ச்சியில் சாரியை வருதலும், வாராமையும் ஆகிய விகற்பமும் உண்டு.

'அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன' என்னும் பதினேழும் பொதுச்சாரியைகள் ஆகும். இவை விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபுபுணர்ச்சி ஆகிய மூவகைப் புணர்ச்சியிலும், இவற்றோடு தனிமொழியிலும் வரும்.

***உருபு புணர்ச்சி - II***

நிலைமொழியாக நிற்கும் பெயர்ச்சொற்களோடு வேற்றுமை உருபுகள் புணரும்போது இடையில் சாரியை பெற்றும் பெறாமலும் புணர்வதையும், சாரியைகள் வரும் முறைமையையும் சென்ற பாடத்தில் பார்த்தோம்.

இப்பாடத்தில் எல்லாம், எல்லாரும், எல்லீரும் என்ற பன்மைப் பெயர்ச்சொற்களோடு வேற்றுமை உருபுகள் புணரும்போது சாரியைகள் எவ்விடத்தில் வரும் என்பது பற்றி நன்னூலார் கூறும் கருத்துகள் விளக்கிக் காட்டப்படுகின்றன. தான், தாம், நாம் முதலான மூவிடப்பெயர்கள் எல்லாம் நெடிலை முதலாகக் கொண்டு தொடங்கும் பெயர்கள் ஆகும். இவை வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது தம் நெடு முதல் குறுகப் பெறுகின்றன. (அதாவது தான் தன் என்றும், தாம் தம் என்றும், நாம் நம் என்றும் ஆகி, பிறகு உருபு ஏற்கும்.) இதுபற்றி நன்னூலார் கூறும் கருத்துகள் எடுத்துக்காட்டப் படுகின்றன. அவ், இவ், உவ், அஃது, இஃது என்னும் சுட்டுப்பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது பெறும் சாரியைகள் பற்றி நன்னூலார் கூறும் கருத்துகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அகர ஈற்றுப் பெயர்களின் முன்னர் வரும் அத்துச்சாரியை அடைகின்ற மாற்றம் பற்றிய நன்னூலார் கருத்துக் கூறப்படுகிறது-

உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல் ஆகிய இயல்களில் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சிக்குச் சொல்லப்பட்ட சில பொதுவிதிகளினின்று இரண்டாம் வேற்றுமை மாறுபட்டு அமைந்திருப்பது பற்றி நன்னூலார் கூறும் கருத்துகள் விளக்கிக் காட்டப்படுகின்றன.

**சில பெயர்களோடு வேற்றுமை உருபுகள் புணரும் முறைமை**

எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப்பெயர், எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயர், எல்லீரும் என்னும் இருதிணை முன்னிலைப் பொதுப்பெயர், தான், தாம், நாம் முதலான மூவிடப்பெயர்கள் ஆகியவற்றோடு வேற்றுமை உருபுகள் புணரும் முறையை நன்னூலார் விளக்கிக் கூறுகிறார். மேலும் ஆ, மா, கோ என்னும் ஓர் எழுத்துப் பெயர்கள், அவ், இவ், உவ், என்னும் வகர ஈற்றுச் சுட்டுப்பெயர்கள், ஆய்தம் இடையே வந்த அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப்பெயர்கள் ஆகியவற்றோடு வேற்றுமை உருபுகள் புணரும் முறையையும் அவர் விளக்கிக் கூறுகிறார். சாரியைகளில் அத்து என்னும் சாரியை மட்டும் புணர்ச்சியில் விகாரம் அடைவதை அவர் குறிப்பிடுகிறார். இவற்றை ஈண்டு ஒன்றன்கீழ் ஒன்றாகக் காண்போம்.

**எல்லாம் என்னும் பெயர்**

எல்லாம் என்பது அஃறிணைப் பன்மைப் பெயராகவும், உயர்திணையில் தன்மைப் பன்மைப் பெயராகவும் வரும். எனவே இது இருதிணைப் பொதுப்பெயர் எனப்படும். இப்பொதுப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது, அஃறிணைப் பொருளை உணர்த்த ஒரு சாரியையும், உயர்திணைப் பொருளை உணர்த்த ஒரு சாரியையும் பெறும். சாரியையே இன்ன திணைப் பொருள் என்பதை அறிய உதவுகிறது. இனி இப்பொதுப்பெயரோடு வேற்றுமை உருபுகள் புணரும் முறை பற்றி நன்னூலார் கூறுவதைக் காண்போம்.

- எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப்பெயர் அஃறிணையில் வரும்போது, அதனோடு ஆறு வேற்றுமை உருபுகளும் வந்து புணர்ந்தால், இடையே **அற்று** என்னும் சாரியையும், வேற்றுமை உருபின்மேல் உம் என்ற முற்றும்மையும் பெறும்.

***சான்று:***

எல்லாம் + ஐ > எல்லா + **அற்று** + ஐ + உம் = எல்லா**வற்றை**யும்.

- எல்லாம் என்பது உயர்திணையில் வரும்போது, இடையே **நம்** என்னும் சாரியையும், வேற்றுமை உருபின்மேல் உம் என்ற முற்றும்மையும் பெறும்.

***சான்று:***

எல்லாம் + ஐ > எல்லா + **நம்** + ஐ + உம் = எல்லா **நம்**மையும்

(எல்லா நம்மையும் – நம் எல்லாரையும்)

***எல்லாம் என்பது இழிதிணை ஆயின்***
***அற்றோடு உருபின் மேல்உம் உறுமே;***
***அன்றேல் நம்இடை அடைந்து அற்றாகும் (நன்னூல், 245)***

*(**இழிதிணை** - அஃறிணை; **அன்றேல்** – அவ்வாறு இல்லாமல் உயர்திணையில் வரும்போது; **அற்றாகும்** – அவ்வாறே வேற்றுமை உருபின் மேல் முற்றும்மையும் பெறும்.)*

**எல்லாரும், எல்லீரும் என்னும் பெயர்கள்**

எல்லாரும் என்பது உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர். எல்லீரும் என்பது இருதிணைக்கும் பொதுவான முன்னிலைப் பன்மைப் பெயர். இவ்விரு பெயர்களோடு வேற்றுமை உருபுகள் புணரும் முறை குறித்து நன்னூலார் திறம்படக் கூறுகிறார். அதனை ஈண்டுக் காண்போம்.

எல்லாரும், எல்லீரும் என்னும் இரு பெயர்களோடு ஆறு வேற்றுமை உருபுகளும் வந்து புணரும்போது, அப்பெயர்களின் இறுதியில் உள்ள முற்றும்மைகளை நீக்கிவிட்டு, அவை இருந்த இடங்களில் முறையே **தம்** என்னும் சாரியையும், **நும்** என்னும் சாரியையும் வந்து பொருந்தும். அச்சாரியைகளால் நீக்கப்பட்ட முற்றும்மைகள் வேற்றுமை உருபுகளின் பின்னே வந்து பொருந்தும்.

***எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை***
***தள்ளி நிரலே தம்நும் சாரப்***
***புல்லும் உருபின் பின்னர் உம்மே (நன்னூல், 246)***

*(**தள்ளி** – நீக்கிவிட்டு; **நிரலே** – முறையே; **புல்லும்** - பொருந்தும்)*

***சான்று:***

*1. எல்லாரும் + ஐ > எல்லார் + ஐ > எல்லார் + **தம்** + ஐ +உம் = எல்லார்**தம்**மையும்*

*2. எல்லீரும் + ஐ > எல்லீர் + ஐ > எல்லீர் + **நும்** + ஐ + உம் = எல்லீர்**நும்**மையும்*

*(**எல்லீர்நும்மையும்** – உங்கள் எல்லாரையும்)*

- **இக்காலத்தில் எல்லாம், எல்லாரும், எல்லீரும் என்னும் சொற்கள்**

எல்லாம், எல்லாரும், எல்லீரும் எனவும், அவை வேற்றுமை உருபு ஏற்கும்போது சாரியை பெற்று எல்லாநம்மையும், எல்லார்தம்மையும், எல்லீர்நும்மையும் எனவும் நன்னூலார் காலத்தில் வழங்கிய சொற்கள் இன்று எவ்வாறு வழங்குகின்றன என்பதைப் பற்றிச் சிறிது காண்போம்.

நன்னூலார் காலத்தில் எல்லாம் என்ற சொல் அஃறிணைப் பன்மைக்கும், உயர்திணையில் தன்மைப் பன்மைக்கும் பொதுவாக வழங்கியது. இக்காலத்தில் எல்லாம் என்ற அச்சொல் அஃறிணைப் பன்மை, உயர்திணைத் தன்மைப் பன்மை, முன்னிலைப் பன்மை, படர்க்கைப் பன்மை ஆகிய எல்லாவற்றிற்கும் பொதுவாக வழங்குகிறது.

***சான்று:***

| | |
|---|---|
| மாடுகள் எல்லாம் வந்தன | அஃறிணைப் பன்மை |
| அவை எல்லாம் வந்தன | |
| நாங்கள் எல்லாம் வந்தோம் | உயர்திணைத் தன்மைப் பன்மை |
| நீங்கள் எல்லாம் வந்தீர்கள் | முன்னிலைப் பன்மை |
| அவர்கள் எல்லாம் வந்தார்கள் | படர்க்கை உயர்திணைப் பன்மை |
| மாணவர்கள் எல்லாம் வந்தார்கள் | படர்க்கை உயர்திணைப் பன்மை |

எல்லாம் என்பது வேற்றுமை உருபு ஏற்று, அஃறிணையில் வரும் போது, நன்னூலார் காலத்தைப் போலவே இக்காலத்திலும் அற்றுச் சாரியை பெற்று எல்லாவற்றையும் என்றே வழங்குகிறது. ஆனால் எல்லாம் என்ற அச்சொல் உயர்திணையில் வரும்போது எல்லா நம்மையும் என்று இக்காலத்தில் வழங்குவது இல்லை. நம்மை எல்லாம் என்று வழங்குகிறது.

***சான்று:***

*நம்மை எல்லாம் ஆசிரியர் வரச்சொன்னார்*

இதில் வரும் நம் என்பது நாம் என்ற தன்மைப்பெயரின் உருபு ஏற்கத் திரிந்த வடிவம் ஆகும். எல்லா நம்மையும் என்பதில் வரும் நம் என்பது சாரியை ஆகும்.

நன்னூலார் காலத்தில் எல்லாரும் என்பது படர்க்கைப் பன்மையில் மட்டும் வந்தது. எல்லாரும் வந்தனர் என்றால், அதில் உள்ள எல்லாரும் என்பது படர்க்கையாரை மட்டும் குறிக்கும். மற்றத் தன்மையாரையோ, முன்னிலையாரையோ குறிக்காது. இக்காலத்தில் எல்லாரும் என்பது உயர்திணையில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும் உள்ள எல்லாரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக வழங்குகிறது. ஆயினும் இச்சொல் அம்மூவருள் யாரைக் குறிக்கிறது என்பதை அச்சொல்லின் முன் வரும் மூவிடப் பன்மைப்பெயர்கள் உணர்த்துகின்றன.

***சான்று:***

*நாங்கள் எல்லாரும் வந்தோம்*
*நாம் எல்லாரும் வந்தோம்*

நீங்கள் எல்லாரும் வந்தீர்கள்
அவர்கள் எல்லாரும் வந்தார்கள்

எல்லாரும் என்ற சொல் பொதுச்சொல்லாகி விடவே, முன்னிலைப் பன்மையாரை மட்டும் உணர்த்தி வந்த எல்லீரும் என்ற சிறப்புச்சொல் வழக்கு இழந்துவிட்டது.

எல்லாம், எல்லாரும் என்னும் இவை பொதுச்சொற்களாகி விட்ட நிலையில், இவை வேற்றுமை உருபு ஏற்பதிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. எல்லாரும் என்ற சொல் வேற்றுமை உருபு ஏற்று எல்லாரையும் என்று வழங்கியது. வேற்றுமை உருபை அடுத்தே உம் சேர்க்கப்படுகிறது. முன்வரும் சொற்களால் இடவேறுபாடு அறியப்படும். முன்வரும் சொற்களும் வேற்றுமை உருபு ஏற்கத் தம் நெடுமுதல் குறுகிய வடிவங்களாக உள்ளன.

**சான்று:**

எங்கள் எல்லாரையும் ஆசிரியர் வரச்சொன்னார்

நம் எல்லாரையும் ஆசிரியர் வரச்சொன்னார்
உங்கள் எல்லாரையும் ஆசிரியர் வரச்சொன்னார்

அவர்கள் எல்லாரையும் ஆசிரியர் வரச்சொன்னார்

எல்லாம் என்ற சொல் இதுபோல உருபு ஏற்பது இல்லை. முன்னர் வரும் சொற்களால் அஃறிணை, உயர்திணைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற நான்கு வேறுபாடும் அறியப்படும். அச்சொற்களோடு வேற்றுமை உருபு சேர்ந்துவரும்.

**சான்று:**

மாடுகளை எல்லாம் ஓட்டி வந்தனர்
எங்களை எல்லாம் ஆசிரியர் வரச்சொன்னார்
நம்மை எல்லாம் ஆசிரியர் வரச்சொன்னார்
உங்களை எல்லாம் ஆசிரியர் வரச்சொன்னார்
அவர்களை எல்லாம் ஆசிரியர் வரச்சொன்னார்
மாணவர்களை எல்லாம் ஆசிரியர் வரச்சொன்னார்

**தான், தாம், நாம் முதலான மூவிடப் பெயர்கள்**

யான், யாம், நாம் என்பன தன்மை இடப்பெயர்கள். நீ, நீர் என்பன முன்னிலை இடப்பெயர்கள். தான், தாம் என்பன படர்க்கை இடப்பெயர்கள். இவை வேற்றுமை உருபுகளோடு புணரும் முறை பற்றி நன்னூலார் நான்கு விதிகளைக் கூறுகிறார்.

- வேற்றுமை உருபுகளோடு புணரும்போது தான், தாம், நாம் என்னும் மூன்று பெயர்களும் தமது நெடுமுதல் குறுகி முறையே தன், தம், நம் என வரும்.

**சான்று:**

தான் + ஐ = **தன்**னை ; தான் + ஆல் = **தன்**னால்
தாம் + ஐ = **தம்**மை ; தாம் + ஆல் = **தம்**மால்
நாம் + ஐ = **நம்**மை ; நாம் + ஆல் = **நம்**மால்

- யான், யாம், நீ, நீர் என்னும் நான்கு பெயர்களும் முறையே என், எம், நின், நும் எனக் குறுகி வரும்.

**சான்று:**

யான் + ஐ = **என்**னை; யான் + ஆல் = **என்**னால்
யாம் + ஐ = **எம்**மை; யாம் + ஆல் = **எம்**மால்
நீ + ஐ = **நின்**னை; நீ + ஆல் = **நின்**னால்
நீர் + ஐ = **நும்**மை; நீர் + ஆல் = **நும்**மால்

- இவ்வேழு பெயர்களோடு நான்காம் வேற்றுமை உருபாகிய கு வந்து புணரும்போது இடையே அகரச்சாரியை வரும்.

**சான்று:**

தான் + கு > தன் + கு > தன் + **அ** + கு = த**ன**க்கு
தாம் + கு = த**ம**க்கு
நாம் + கு = ந**ம**க்கு
யான் + கு = எ**ன**க்கு
யாம் + கு = எ**ம**க்கு
நீ + கு = நி**ன**க்கு
நீர் + கு = நு**ம**க்கு

- நான்காம் வேற்றுமை உருபாகிய கு வந்து புணரும்போது இடையே வரும் அகரச்சாரியையின் உயிர் வந்தாலும், ஆறாம் வேற்றுமைக்கு உரிய அது, ஆது, அ என்னும் உருபுகளின் முதலில் உயிர் வந்தவிடத்தும், அவ்வேழு பெயர்களின் குறுக்கங்களாகிய தன், தம், நம், என், எம், நின், எம் என்பனவற்றின் இறுதியில் உள்ள ஒற்றுகள் இரட்டித்து வாரா.

இவை 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி என்னக்கு, என்னது, என்னாது, என்னா என ஒற்று இரட்டித்து வாரா. ஒற்று இரட்டாமலே வரும்.

**சான்று:**

என் + கு > என் + அ + கு = எனக்கு – நான்காம் வேற்றுமை
என்+அது= எனது
என் + ஆது = எனாது } ஆறாம் வேற்றுமை
என் + அ = என
(எனது கை, எனாது கை, என கைகள்)

***தான்தாம் நாம்முதல் குறுகும்; யான்யாம்***
***நீர் என்எம் நின்நும் ஆம், பிற***

***குவ்வின் அவ்வரும் நான்கு ஆறு இரட்டல (நன்னூல், 247)***

நூற்பாவில் பிற என்றதனால் நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும் திரிந்து வரும். மேலும் இந்நூற்பாவில் கூறப்படாத நான் என் எனவும், நீயிர், நீவிர் என்பன நும், உம் எனவும் திரிந்துவரும்.

**ஆ, மா, கோ என்னும் ஓர் எழுத்துப் பெயர்கள்**

ஆ, மா, கோ என்னும் ஓர் எழுத்துப் பெயர்கள் வேற்றுமை உருபுகளோடு புணரும் போது னகரச் சாரியை பொருந்தவும் பெறும்.

***ஆ மா கோ னவ் அணையவும் பெறுமே (நன்னூல், 248)***

*(**ஆ** – பசு, **மா** – விலங்கு; **கோ** – அரசன், தலைவன்; **அணையவும்** – பொருந்தவும்)*

இந்நூற்பாவில் **அணையவும்** *(பொருந்தவும்)* என்பதில் உள்ள உம்மையால், சாரியை அணையாமலிருக்கவும் பெறும் என்பது பெறப்படும். எனவே இம்மூன்று பெயர்களும் வேற்றுமை உருபுகளோடு புணரும்போது னகரச் சாரியை பெற்றும், பெறாதும் விகற்பமாக வரும் என்பது புலனாகும்.

***சான்று:***

ஆ + ஐ > ஆ + **ன்** + ஐ = **ஆனை**
மா + ஐ > மா + **ன்** + ஐ = மா**னை**
கோ + ஐ > கோ + **ன்** + ஐ = கோ**னை**

என னகரச் சாரியை பெற்றும்,

ஆ + ஐ > ஆ + **வ்** + ஐ = **ஆவை**
மா + ஐ > மா + **வ்** + ஐ = மா**வை**
கோ + ஐ > கோ + **வ்** + ஐ = கோ**வை**

என னகரச் சாரியை பெறாமல், வகர உடம்படுமெய் பெற்றும் விகற்பமாக வந்தன.

**அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்கள்**

அவ், இவ், உவ் என்னும் வகரமெய் ஈற்று மூன்று சுட்டுப்பெயர்களும், வேற்றுமை உருபுகளோடு புணரும்போது, அற்று என்னும் சாரியை பெறுதல் முறைமை ஆகும். (அவ் - அவை; இவ் - இவை; உவ் - உவை)

***வவ்விறு சுட்டிற்கு அற்று உறல் வழியே (நன்னூல், 250)***

*(**வழி** – முறைமை)*

***சான்று:***

அவ் + ஐ > அவ் + **அற்று** + ஐ = **அவற்றை**
இவ் + ஐ > இவ் + **அற்று** + ஐ = **இவற்றை**
உவ் + ஐ + உவ் + **அற்று** + ஐ = **உவற்றை**

*(உவற்றை என்பது இப்போது வழக்கில் இல்லை)*

**அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப்பெயர்கள்**

அது, இது, உது என்பன சுட்டுப்பெயர்கள். இவை, உயிரை முதலாகக் கொண்ட சொற்கள் தம்முன் வரும்போது இடையே ஆய்தம் பெற்று அஃது, இஃது, உஃது என வழங்கும்.

***சான்று:***

***அஃது அறியாதோர்க்கே (நற்றிணை, 174:8)***

***இஃது எவன்கொல்லோ தோழி (நற்றிணை, 273:1)***

அஃது, இஃது, உஃது என்னும் மூன்று சுட்டுப் பெயர்களும் வேற்றுமை உருபுகளோடு புணரும்போது, இடையே அன் சாரியை வந்தால், அ, இ, உ என்னும் சுட்டு எழுத்துகளை அடுத்துள்ள ஆய்தம் கெடும்.

***சுட்டின் முன் ஆய்தம் அன்வரின் கெடுமே (நன்னூல், 251)***

***சான்று:***

அஃது + ஐ > அஃது + **அன்** + ஐ > அது + **அன்** + ஐ = அதனை. அன் சாரியை வரும்போது ஆய்தம் கெட்டவிடத்து, அது, இது, உது என ஆய்தம் இல்லாச் சுட்டுப் பெயர்களாகிப் பின்பு அன் சாரியை பெறுதலால், ஆய்தம் இல்லாச் சுட்டுப்பெயர்கள் அன் சாரியை பெறுவதற்கும் இதுவே விதியாகும்.

**அத்துச் சாரியையின் முதல் கெடுதல்**

இயல்பாகவோ, இலக்கண விதியின் காரணமாகவோ நிலைமொழியின் ஈற்றில் நின்ற அகர உயிரின் முன் வந்து புணரும் அத்துச் சாரியையின் முதலில் உள்ள அகர உயிர் கெடும்.

***அத்தின் அகரம் அகர முனை இல்லை (நன்னூல், 252)***

*(**முனை** – முன்; **அகர முனை** – நிலைமொழியின் இறுதியில் உள்ள அகர உயிரின்முன் வந்தால்)*

***சான்று:***

மக + **அத்து** + கை > மக + **த்து** + கை = மக**த்து**க்கை

*(இயல்பு உயிர் ஈறு)*

*(**மக** – மகன் அல்லது மகள், பிள்ளை)*

மரம் + **அத்து** + ஐ > மர + **அத்து** + ஐ > மர + **த்து** + ஐ = மர**த்தை** *(விதி உயிர் ஈறு)*

**சில வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதிகள்**

நன்னூலார் உயிர் ஈற்றுப் புணரியலிலும், மெய் ஈற்றுப் புணரியலிலும் ஒவ்வோர் ஈற்றிற்கான புணர்ச்சி விதிகளைக் கூறும்போது, வேற்றுமைப் புணர்ச்சிக்கான பொதுவிதிகளையும் கூறிச்செல்கிறார். வேற்றுமைகளில் இரண்டாம் வேற்றுமையும், மூன்றாம் வேற்றுமையும் ஆங்கே சொல்லப்பட்ட வேற்றுமைப் புணர்ச்சி விதிகள் ஒரு சிலவற்றினின்று மாறுபட்டு அமைகின்றன. அவற்றை நன்னூலார் உருபுபுணரியலில் தொகுத்துக் கூறுகிறார். அவற்றை ஈண்டுச் சான்றுடன் விளக்கிக் காண்போம்.

**இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதிகள்**

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, முன்னமே வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறப்பட்ட பொதுவிதிகள் சிலவற்றிலிருந்து மாறுபட்டு அமையும். அவை பின்வருமாறு:

- இயல்பாக வரவேண்டிய இடத்தில் விகாரப்பட்டு வரும்.

பொதுவிதிப்படி நின் என்ற சொல்லின் இறுதியில் உள்ள னகரமெய் வல்லினம் வந்தால் வேற்றுமையில் இயல்பாகும். இது மெய்ஈற்றுப் புணரியலில் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது.

***நின் ஈறு இயல்பாம் (நன்னூல், 218: 2)***

***சான்று:***

*நின்* + பகை = *நின்*பகை (நினதுபகை, ஆறாம் வேற்றுமைத் தொகை)

ஆனால் இரண்டாம் வேற்றுமையில் நின் என்பதன் இறுதியில் உள்ள னகரமெய், வல்லின மெய் வந்தால் றகர மெய்யாகத் திரியும்.

***சான்று:***

***வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப (தொல். பொருள், 415: 1)***

(அரசே! நீ வழிபடுகின்ற தெய்வம் நின்னைப் பாதுகாக்க)

இத்தொடரில் இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சியாக,

**நின்** + புறங்காக்க = **நிற்**புறங்காக்க

என வந்துள்ளது. நின் என்பதன் இறுதியில் உள்ள னகரமெய் வருமொழி முதலில் வல்லினமெய் வந்தால் இயல்பாகும் என்ற பொதுவிதிக்கு மாறாக இங்கு றகர மெய்யாகத் திரிந்துள்ளது. னகரம் றகரமாகத் திரிந்தது மூவகை விகாரங்களுள் **திரிதல் விகாரம்** ஆகும்.

- விகாரப்பட்டு வரவேண்டிய இடத்தில் இயல்பாக வரும்.

பொதுவிதிப்படி, நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகரமும் னகரமும், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமையில் முறையே டகரமாகவும், றகரமாகவும் திரியும். இது மெய் ஈற்றுப் புணரியலில் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது.

***ணன வல்லினம் வரட் டறவும் ..... வேற்றுமைக்கு***

***(நன்னூல், 209: 1-2)***

***சான்று:***

**மண்** + குடம் = **மட்**குடம் (மண்ணால் ஆகிய குடம்)
**பொன்** + குடம் = பொ**ற்**குடம் (பொன்னால் ஆகிய குடம்)

இவை இரண்டும் மூன்றாம் வேற்றுமைத்தொகை.

ஆனால் இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகர, னகர மெய்கள் வல்லினம் வந்தால் அவ்வாறு திரியாது இயல்பாக நிற்கின்றன.

***சான்று:***

**மண்** + கொணர்ந்தான் = **மண்**கொணர்ந்தான்
**பொன்** + கொடுத்தான் = பொ**ன்**கொடுத்தான்

(**மண்கொணர்ந்தான்** – மண்ணைக் கொணர்ந்தான்; **கொணர்ந்தான்** – கொண்டுவந்தான்; **பொன் கொடுத்தான்** – பொன்னைக் கொடுத்தான்)

எனவே மற்ற வேற்றுமைகள் விகாரப்பட்டு வரவேண்டிய இடத்தில், இரண்டாம் வேற்றுமை இயல்பாக வந்தது.

இனி இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் உருபு கட்டாயம் விரிந்தே வருதலைப் பற்றியும், தொக்கு வருதலைப் பற்றியும் நன்னூலார் இரண்டு விதிகளைக் கூறுகிறார். அவற்றைக் காண்போம்.

- உயர்திணைப் பெயரினிடத்து ஐ உருபு விரிந்து வரும். தொக்கும் (மறைந்தும்) வரும்.

***சான்று: 1***

நம்பி**யைக்** கொணர்ந்தான்

ஈண்டு நம்பி என்ற உயர்திணைப் பெயரில் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்து நின்றது. இவ்விடத்தில் நம்பி கொணர்ந்தான் என உருபு தொக்கு வாராது. நம்பிகொணர்ந்தான்

என்றால், நம்பி ஏதோ ஒன்றைக் கொண்டுவந்தான் என்று பொருள்படும். எனவே நம்பியைக் கொணர்ந்தான் என்ற தொடரில் ஐ உருபு கட்டாயம் விரிந்தே வரும்.

***சான்று: 2***

*மகன் + பெற்றாள் = மகற்பெற்றாள்*

*(**மகற்பெற்றாள்** – மகனைப் பெற்றாள்)*

*ஈண்டு மகன் உயர்திணைப் பெயரில் ஐ தொக்கு வந்தது. மகன் பெற்றாள் என ஐ உருபு தொக்கு நின்றாலும், மகனைப் பெற்றாள் என ஐ உருபு விரிந்து நின்றாலும் ஒரே பொருள் ஆகும். எனவே இதுபோன்ற தொடரில் ஐ உருபு தொக்கு வரும். ஆனால் நம்பியைக் கொணர்ந்தான் என்ற தொடரில் ஐ உருபை விரித்தே சொல்லவேண்டும்.*

- *விரவுப்பெயர்களில் (இருதிணைப் பொதுப்பெயர்களில்) ஐ உருபு விரிந்தும், விரிதல் இன்றித் தொக்கும் வரும்.*

***சான்று: 1***

*சாத்தனைக் கொணர்ந்தான்*

*ஈண்டுச் சாத்தன் என்பது பொதுப்பெயர். எருதையும், மனிதன் ஒருவனையும் குறிப்பதால் பொதுப்பெயர். இப்பொதுப்பெயரில் ஐ உருபு விரிந்தே வரும்.*

***சான்று : 2***

*ஆண் பெற்றாள் (ஆணைப் பெற்றாள்)*

*ஈண்டு ஆண் என்ற பொதுப்பெயரில் ஐ உருபு தொக்கு வந்தது.*

*மற்ற வேற்றுமைகளில் உயர்திணையிலும், இருதிணைப்பொதுப் பெயர்களிலும் உருபு விரிந்தே வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு தொடரில் வேற்றுமை உருபு தொக்கும் விரிந்தும் வரலாம். பொருள் மாறாது. சான்றாக, உயர்திணைப் பெயரிலும், இருதிணைப் பொதுப்பெயரிலும் ஆறாம் வேற்றுமைத் தொகையில்,*

| | |
|---|---|
| நம்பி பெருமை | உயர்திணைப் பெயர் |
| மகன் பெருமை | |
| சாத்தன் செவி | இருதிணைப் பொதுப் பெயர் |
| ஆண் கை | |

*என உருபு தொக்கு வரும். இத்தொடர்களில் ஆறாம் வேற்றுமைக்கு உரிய அது என்னும் உருபை விரித்து,*

- *நம்பியது பெருமை*
- *மகனது பெருமை*
- *சாத்தனது செவி*
- *ஆணினது கை*

*எனச் சொன்னாலும் ஒரே பொருள். எனவே மற்ற வேற்றுமைகளில் உருபு தொக்கும், விரிந்தும் வரும். ஆனால் இரண்டாம் வேற்றுமை மட்டும் உருபு விரிந்து மட்டுமே வருதல், தொக்கும் விரிந்தும் வருதல் என்ற இருவேறு நிலைகளை உடையது.*

*மேலே கூறிய நான்கு விதிகளையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் தொகுத்துக் கூறுகிறார்.*

***இயல்பின் விகாரமும், விகாரத்து இயல்பும்,***
***உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்,***
***விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்,***
***அன்ன பிறவும் ஆகும் ஐ உருபே (நன்னூல், 255)***

*(**நின்றும்** – உருபு மறைந்தும்)*

**தொகுப்புரை**

*இதுகாறும் நன்னூலார் உருபு புணரியலில் எல்லாம், எல்லாரும், எல்லீரும் என்பன போன்ற சில பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளோடு புணரும் முறைமை பற்றியும், இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிகளுக்கான சிறப்புவிதி பற்றியும் கூறியனவற்றை விரிவாகவும், விளக்கமாகவும் பார்த்தோம். அவற்றை ஈண்டுச் சுருக்கமாகத் தொகுத்துக் காண்போம்.*

*வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எல்லாம் என்ற பொதுப்பெயர் அஃறிணைப் பொருளை உணர்த்த அற்றுச் சாரியையும், உயர்திணைப் பொருளை உணர்த்த நம் சாரியையும் பெறும்; எல்லாரும் என்ற பெயர் தம் சாரியை பெறும்; எல்லீரும் என்ற பெயர் நும் சாரியை பெறும்.*

*தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்னும் மூவிடப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது தமது நெடுமுதல் குறுகும்.*

*ஆ, மா, கோ என்னும் ஓர் எழுத்துப் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது னகரச் சாரியை பெறும்; பெறாமல் வருவதும் உண்டு.*

*வேற்றுமை உருபுகளோடு புணரும்போது, அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்கள் அற்றுச் சாரியை பெறும்; அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப்பெயர்கள் அன் சாரியை பெறும்.*

அகர ஈற்றுப் பெயர்களின் முன் அத்துச் சாரியை வந்து புணரும்போது, அதன் முதலில் உள்ள அகர உயிர் கெடும்.

உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல் ஆகிய இயல்களில் கூறப்பட்ட பொதுவிதிகள் சிலவற்றினின்று இரண்டாம் வேற்றுமையும் மூன்றாம் வேற்றுமையும் மாறுபட்டு அமைந்துள்ளன. இவற்றை எல்லாம் இப்பாடத்தின் வாயிலாகப் பார்த்தோம்.

**வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள்**

**பாடமுன்னுரை**

நிலைமொழியில் உள்ள ஒரு சொல், வருமொழியில் உள்ள மற்றொரு சொல்லோடு வேற்றுமைப் பொருளிலும், அல்வழிப் பொருளிலும் புணரும் புணர்ச்சி பற்றி நன்னூலார் உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் மூன்று இயல்களில் கூறியனவற்றை இதற்கு முந்தைய பதினொரு பாடங்களில் விரிவாகவும் விளக்கமாகவும் பார்த்தோம். நன்னூலார் புணர்ச்சி பற்றிக் கூறியுள்ள விதிகள் இக்காலத்தில் நாம் தமிழைப் பிழையின்றி எழுதவும், திருத்தமுறப் பேசவும் உதவுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள் ஆகிய இரண்டும் ஆகும்.

நன்னூலார், நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர்களின் முன்னர், வருமொழி முதலில் வருகின்ற க, ச, த, ப என்னும் வல்லினமெய்கள் பெரும்பாலும் மிகும் என்கிறார். இதனைப் பின்வரும் உயிர் ஈற்றுப் புணரியல் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

***இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்***
***க சத ப மிகும் விதவாதன மன்னே (நன்னூல், 165)***

(**விதவாதன** – சிறப்பு விதிகளில் சொல்லாதவை; **மன்** – பெரும்பாலும்)

நன்னூலார் இந்நூற்பாவில், நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உயிர்களின் முன்னர், வருமொழி முதலில் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்று பொதுவாகக் கூறியுள்ளாரே தவிர, எந்தெந்த இடங்களில் மிகும் என்பதைத் தனித்தனியே எடுத்துக் கூறவில்லை. ஆனால் உயிர் ஈற்றுப் புணரியலில் ஒவ்வோர் உயிர் ஈற்றுச் சிறப்பு விதியிலும் எந்தெந்த இடங்களில் உயிர்முன் வரும் வல்லினம் மிகாது என்பதைத் தனித்தனியே எடுத்துக் கூறுகிறார். சான்றாக, **அகர ஈற்றுச் சிறப்பு விதியில்,**

- செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களின் முன்னரும்,
- பல்வகைப் பெயரெச்சங்களுக்கு முன்னரும்
- பல்வகை வினைமுற்றுகளுக்கு முன்னரும்
- ஆறாம் வேற்றுமை அ உருபிற்கு முன்னரும்
- பல சில என்னும் அஃறிணைப் பன்மைப் பெயர்களுக்கு முன்னரும்
- அம்ம என்னும் இடைச்சொல்லுக்கு முன்னரும்

வரும் வல்லினம் **மிகாது இயல்பாகும்** என்கிறார். இதனை,

***செய்யிய என்னும் வினையெச்சம், பல்வகைப்***
***பெயரின் எச்சம், முற்று, ஆறன் உருபே,***
***அஃறிணைப் பன்மை, அம்ம முன் இயல்பே***
***(நன்னூல், 167)***

என்ற நூற்பாவில் உணர்த்துகிறார். இதுபோல் ஒவ்வோர் உயிர் ஈற்றின் முன்னரும் வரும் வல்லினம் எந்தெந்த இடங்களில் மிகாது என்பதை எடுத்துக் கூறுகிறார். சிறப்பு விதிகளில் வல்லினம் மிகாது என்று கூறப்படும் இடங்களைத் தவிர, பிற எல்லா இடங்களிலும் உயிர் முன் வரும் வல்லினம் மிகும் என்பது நன்னூலார் கருத்து, இதையே ‘இயல்பினும் விதியினும்’ என்ற நூற்பாவில் **விதவாதன மிகும்** (சிறப்பு விதிகளில் சொல்லாதவை மிகும்) என்று குறிப்பிட்டார்.

மெய் ஈற்றுப் புணரியலில் மெய் எழுத்துகளில் ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னர் வரும் வல்லினம் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதையும், மிகாது இயல்பாகும் என்பதையும்,

***யரழ முன்னர்க் கசதப அல்வழி***
***இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை***
***மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்***
***(நன்னூல், 224)***

என்ற நூற்பாவில் நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் இதுபோல உயிர்களின் முன்னர் வரும் வல்லினம் அல்வழியிலும் வேற்றுமையிலும் எந்தெந்த இடங்களில் மிகும், மிகாது என ஒரு சேரக் கூறவில்லை. உயிர்களின் முன்னர் வரும் வல்லினம் மிகாத இடங்களை மட்டும் கூறி, வல்லினம் மிகாத அவ்விடங்களைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் வல்லினம் மிகும் என்று பொதுப்படக் கூறுவதோடு அமைந்தார்.

எனவே உயிர் ஈற்றின் முன்னரும், ய,ர,ழ என்னும் மெய் ஈறுகளின் முன்னரும் வருகின்ற

வல்லினம் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதையும், மிகாது இயல்பாகும் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் தேவையானதும் இன்றியமையாததும் ஆகும். இப்பாடத்தில் வல்லினம் மிகும் இடங்களும், வல்லினம் மிகா இடங்களும் இக்காலத் தமிழ்வழிநின்று தக்க சான்றுகளுடன் விளக்கிக் காட்டப்படுகின்றன.

**வல்லினம் மிகும் இடங்கள்**

நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும், ய,ர,ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க,ச,த,ப என்னும் வல்லின மெய்கள் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதைச் சான்றுடன் காணலாம்.

**சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகல்**

அ, இ என்பன சுட்டு எழுத்துகள்; எ, யா என்பன வினா எழுத்துகள். இவற்றின் முன்னும், இவற்றின் அடியாகத் தோன்றிய அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; ஆங்கு, ஈங்கு, யாங்கு; அப்படி, இப்படி, எப்படி; ஆண்டு, ஈண்டு, யாண்டு; அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| அ + காலம் | அ**க்**காலம் |
| எ + திசை | எ**த்**திசை |
| அந்த + பையன் | அந்த**ப்** பையன் |
| எந்த + பொருள் | எந்த**ப்** பொருள் |
| அங்கு + கண்டான் | அங்கு**க்** கண்டான் |
| எங்கு + போனான் | எங்கு**ப்** போனான் |
| யாங்கு + சென்றான் | யாங்கு**ச்** சென்றான் |
| அப்படி + சொல் | அப்படி**ச்** சொல் |
| எப்படி+சொல்வான் | எப்படி**ச்** சொல்வான் |
| ஈண்டு+காண்போம் | ஈண்டு**க்** காண்போம் |
| யாண்டு+காண்பேன் | யாண்டு**க்** காண்பேன் |
| அவ்வகை+செய்யுள் | அவ்வகை**ச்** செய்யுள் |
| எத்துணை+பெரியது | எத்துணை**ப்** பெரியது |

**ஓர் எழுத்துச் சொற்களின் முன் வல்லினம் மிகல்**

கை, தீ, தை, பூ, மை என்னும் ஓர் எழுத்துச் சொற்களின் முன் வரும் வல்லினம் **மிகும்**.

**சான்று:**

| | |
|---|---|
| கை + குழந்தை | கை**க்**குழந்தை |
| கை + பிடி | கை**ப்**பிடி |
| தீ + பிடித்தது | தீ**ப்**பிடித்தது |
| தீ + பெட்டி | தீ**ப்**பெட்டி |
| தீ + புண் | தீ**ப்**புண் |
| தை + பொங்கல் | தை**ப்**பொங்கல் |
| தை + திருநாள் | தை**த்**திருநாள் |
| பூ + பறித்தாள் | பூ**ப்**பறித்தாள் |
| பூ + பல்லக்கு | பூ**ப்**பல்லக்கு |
| மை + கூடு | மை**க்**கூடு |
| மை + பேனா | மை**ப்**பேனா |

**குற்றியலுகரச் சொற்கள் முன் வல்லினம் மிகல்**

வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன்னும், சில மென்தொடர் மற்றும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன்னும், உயிர்த்தொடர் போன்ற அமைப்பை உடைய சில முற்றியலுகரச் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் **மிகும்.**

- **வன்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| பாக்கு + தோப்பு | பாக்கு**த்**தோப்பு |
| அச்சு + புத்தகம் | அச்சு**ப்**புத்தகம் |
| எட்டு + தொகை | எட்டு**த்**தொகை |
| பத்து + பாட்டு | பத்து**ப்**பாட்டு |
| இனிப்பு+ சுவை | இனிப்பு**ச்**சுவை |
| கற்று + கொடுத்தான் | கற்று**க்**கொடுத்தான் |

- **சில மென்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| குரங்கு + குட்டி | குரங்கு**க்** குட்டி |
| பஞ்சு + பொதி | பஞ்சு**ப்**பொதி |
| துண்டு + கடிதம் | துண்டு**க்**கடிதம் |
| மருந்து + சீட்டு | மருந்து**ச்** சீட்டு |
| பாம்பு + தோல் | பாம்பு**த்**தோல் |
| கன்று + குட்டி | கன்று**க்**குட்டி |

இவற்றை வல்லினம் மிகாமல் குரங்கு குட்டி, மருந்து சீட்டு என்று எழுதினால் குரங்கும் குட்டியும், மருந்தும் சீட்டும் என்று பொருள்பட்டு உம்மைத் தொகைகள் ஆகிவிடும்.

- **சில உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| முதுகு + தண்டு | முதுகு**த்**தண்டு |
| விறகு + கடை | விறகு**க்**கடை |

| | |
|---|---|
| படகு + போட்டி | படகு**ப்**போட்டி |
| பரிசு + புத்தகம் | பரிசு**ப்**புத்தகம் |
| மரபு + கவிதை | மரபு**க்**கவிதை |

**முற்றியலுகரச் சொற்கள் முன் வல்லினம் மிகல்**

தனிக்குறிலை அடுத்து வருகின்ற வல்லின மெய்யின் மேலும், பிற மெய்களின் மேலும் ஏறிவருகின்ற உகரம் முற்றியலுகரம் எனப்படும். நடு, புது, பொது, பசு, திரு, தெரு, முழு, விழு என்னும் முற்றியலுகரச் சொற்களின் முன் வரும் வல்லினம் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| நடு + கடல் | நடு**க்**கடல் |
| புது + புத்தகம் | புது**ப்**புத்தகம் |
| பொது + பணி | பொது**ப்**பணி |
| பசு + தோல் | பசு**த்**தோல் |
| திரு + கோயில் | திரு**க்**கோயில் |
| தெரு + பக்கம் | தெரு**ப்**பக்கம் |
| முழு + பேச்சு | முழு**ப்**பேச்சு |
| விழு + பொருள் | விழு**ப்**பொருள் |

தனி நெட்டெழுத்தை அடுத்தோ, பல எழுத்துகளைத் தொடர்ந்தோ ஒரு சொல்லின் இறுதியில் வல்லினமெய் அல்லாத பிற மெய்களின் மேல் ஏறி வருகின்ற உகரமும் முற்றியலுகரம் ஆகும். இத்தகைய முற்றியலுகரச் சொற்கள் பெரும்பாலும் ‘வு’ என முடியும். இவற்றின் முன் வரும் வல்லினமும் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| சாவு + செய்தி | சாவு**ச்**செய்தி |
| உணவு + பொருள் | உணவு**ப்**பொருள் |
| உழவு + தொழில் | உழவு**த்**தொழில் |
| நெசவு+ தொழிலாளி | நெசவு**த்**தொழிலாளி |
| தேர்வு + கட்டணம் | தேர்வு**க்**கட்டணம் |
| கூட்டுறவு + சங்கம் | கூட்டுறவு**ச்** சங்கம் |
| பதிவு + தபால் | பதிவு**த்**தபால் |
| இரவு + காட்சி | இரவு**க்**காட்சி |

**வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகல்**

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலான ஆறு வேற்றுமைகள் ஒவ்வொன்றும் புணர்ச்சியில் மூன்று வகையாக வருகின்றன.

- வேற்றுமை உருபு தொக்கு (மறைந்து) வருவது.
  இது **வேற்றுமைத்தொகை** எனப்படும்.

**சான்று:**

கனி + தின்றான் = கனிதின்றான்

இத்தொடருக்குக் கனியைத் தின்றான் என்று பொருள். கனி தின்றான் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ தொக்கு வந்துள்ளது. எனவே இது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

- வேற்றுமை உருபும், அதனோடு சேர்ந்து வரும் சில சொற்களும் தொக்கு வருவது. இது **வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை** எனப்படும்.

**சான்று:**

தயிர் + குடம் = தயிர்க்குடம்

இத்தொடருக்குத் தயிரை உடைய குடம் என்று பொருள். தயிர்க்குடம் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ என்பதும், அதனோடு சேர்ந்து வந்துள்ள உடைய என்பதும் தொக்கு வந்துள்ளன. எனவே இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

- வேற்றுமை உருபு விரிந்து வருவது. இது **வேற்றுமை விரி** எனப்படும்.

**சான்று:**

கனியை + தின்றான் = கனியைத் தின்றான்

மேலே கூறிய சான்றுகளை நோக்குவோம். வல்லினம் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகாமலும், மற்ற இரண்டிலும் மிக்கும் வந்துள்ளது புலனாகும். இதுபோல ஒவ்வொரு வேற்றுமையும் மூவகைப் புணர்ச்சியில் வல்லினம் மிக்கும், மிகாமலும் வரும்.

இனி வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகும் இடங்களைப் பார்ப்போம்.

*(i) இரண்டாம் வேற்றுமை விரியின் (ஐ உருபின்) முன் வரும் வல்லினம்* **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| ஒலி**யை** + குறை | ஒலியை**க்** குறை |
| பா**யை** + சுருட்டு | பாயை**ச்** சுருட்டு |
| கத**வை** + தட்டு | கதவை**த்** தட்டு |
| மல**ரை** + பறி | மலரை**ப்** பறி |

*(ii) நான்காம் வேற்றுமை விரியின் (கு உருபின்) முன்வரும் வல்லினம்* **மிகும்.**

***சான்று:***

*எனக்கு* + கொடு = *எனக்குக்* கொடு
*வீட்டுக்கு* + தலைவி = *வீட்டுக்குத்* தலைவி
*ஊருக்கு* + போனான் = *ஊருக்குப்* போனான்

*(iii) நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாயின் அதன்முன் வரும் வல்லினம்* ***மிகும்.***

***சான்று:***

| | |
|---|---|
| *குறிஞ்சி+ தலைவன்* | *குறிஞ்சி**த்** தலைவன்* |
| *(குறிஞ்சிக்குத் தலைவன்)* | |
| *படை + தளபதி* | *படை**த்**தளபதி (படைக்குத் தளபதி)* |
| *கூலி + படை* | *கூலி**ப்**படை (கூலிக்குப் படை)* |

*(iv) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம்* ***மிகும்.***

***சான்று:***

| | |
|---|---|
| *நகை + கடை* | *நகை**க்**கடை (நகையை விற்கும் கடை)* |
| *தயிர் + குடம்* | *தயிர்**க்**குடம் (தயிரை உடைய குடம்)* |
| *எலி + பொறி* | *எலி**ப்**பொறி (எலியைப் பிடிக்கும் பொறி)* |
| *மலர்+ கூந்தல்* | *மலர்**க்**கூந்தல் (மலரை உடைய கூந்தல்)* |
| *நெய் + குடம்* | *நெய்**க்**குடம் (நெய்யை உடைய குடம்)* |

*(v) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம்* ***மிகும்.***

***சான்று:***

| | |
|---|---|
| வெள்ளி + கிண்ணம் | வெள்ளி**க்** கிண்ணம் |
| *(வெள்ளியால் ஆகிய கிண்ணம்)* | |
| இரும்பு + பெட்டி | இரும்பு**ப்** பெட்டி *(இரும்பினால் ஆகிய பெட்டி)* |
| தேங்காய் + சட்னி | தேங்காய்**ச்** சட்னி *(தேங்காயால் ஆன சட்னி)* |
| பித்தளை + குடம் | பித்தளை**க்** குடம் *(பித்தளையால் ஆன குடம்)* |

*(vi) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் பெரும்பாலும்* ***மிகும்.***

***சான்று:***

| | |
|---|---|
| *கோழி + தீவனம்* | *கோழி**த்** தீவனம் (கோழிக்கு உரிய தீவனம்)* |
| *குழந்தை + பால்* | *குழந்தை**ப்** பால் (குழந்தைக்கு ஏற்ற பால்)* |

*(vii) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம்* ***மிகும்.***

***சான்று:***

| | |
|---|---|
| *வாய் + பாட்டு* | *வாய்**ப்**பாட்டு (வாயிலிருந்து வரும் பாட்டு)* |
| *கனி + சாறு* | *கனி**ச்**சாறு (கனியிலிருந்து எடுக்கப்படும் சாறு)* |

*(viii) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம்* ***மிகும்.***

***சான்று:***

| | |
|---|---|
| *தண்ணீர் + பாம்பு* | *தண்ணீர்**ப்**பாம்பு (தண்ணீரில் உள்ள பாம்பு)* |
| *சென்னை+கல்லூரி* | *சென்னை**க்** கல்லூரி (சென்னையில் உள்ள கல்லூரி)* |
| *மதுரை +கோயில்* | *மதுரை**க்**கோயில் (மதுரையில் உள்ள கோயில்)* |
| *மலை + பாம்பு* | *மலை**ப்**பாம்பு (மலையில் உள்ள பாம்பு)* |

*(ix) ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின், அதன் முன்னர் வரும் வல்லினம்* ***மிகும்***.

***சான்று:***

| | |
|---|---|
| *கிளி + கூண்டு* | *கிளி**க்**கூண்டு* |
| *புலி + குட்டி* | *புலி**க்**குட்டி* |
| *நரி + பல்* | *நரி**ப்**பல்* |
| *வாழை + தண்டு* | *வாழை**த்**தண்டு* |
| *எருமை + கொம்பு* | *எருமை**க்** கொம்பு* |
| *தேர் + சக்கரம்* | *தேர்**ச்**சக்கரம்* |

***அல்வழிப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகல்***

*அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொடர்கள் தொகை நிலைத்தொடர், தொகாநிலைத் தொடர் என இருவகைப்படும். இவ்விரு வகைத்*

தொடர்களில் வரும் வல்லினம் மிகும் இடங்களைப் பற்றிப் பார்ப்போம்.

- **தொகை நிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகல்**

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர்கள் வினைத்தொகை, பண்புத்தொகை (இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் இதில் அடங்கும்), உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை ஆகிய ஐந்தும் ஆகும். இத்தொகைநிலைத் தொடர்களில் எந்தெந்தத் தொடர்களில் வல்லினம் மிகும் என்பதைப் பார்ப்போம்.

i) பண்புத்தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| சிவப்பு + துணி | சிவப்பு**த்**துணி |
| புதுமை + பெண் | புதுமை**ப்**பெண் |
| தீமை + குணம் | தீமை**க்**குணம் |
| வெள்ளை + தாள் | வெள்ளை**த்**தாள் |
| மெய் + பொருள் | மெய்**ப்**பொருள் |
| பொய் + புகழ் | பொய்**ப்**புகழ் |
| புது + துணி | புது**த்**துணி |
| பொது + பண்பு | பொது**ப்**பண்பு |

ii) இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

நிலைமொழியில் சிறப்புப் பெயரும் வருமொழியில் பொதுப்பெயருமாகச் சேர்ந்து வரும். இடையில் ஆகிய என்ற பண்பு உருபு மறைந்து வரும். இதுவே இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும். இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வரும் வல்லினம் மிகும்.

**சான்று:**

| | |
|---|---|
| மார்கழி + திங்கள் | மார்கழி**த்** திங்கள் |
| வெள்ளி + கிழமை | வெள்ளி**க்** கிழமை |
| மல்லிகை + பூ | மல்லிகை**ப்**பூ |
| சாரை + பாம்பு | சாரை**ப்**பாம்பு |
| உழவு + தொழில் | உழவு**த்**தொழில் |

iii) உவமைத் தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| மலர் + கண் | மலர்**க்**கண் (மலர் போன்ற கண்) |
| தாமரை + கை | தாமரை**க்**கை (தாமரை போன்ற கை) |

- **தொகாநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகல்**

எழுவாய்த் தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத்தொடர் என்னும் ஒன்பதும் அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகாநிலைத் தொடர்கள் ஆகும். இவற்றுள் எந்தெந்தத் தொடர்களில் வரும் வல்லினம் மிகும் என்பதைப் பார்ப்போம்.

i) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் **மிகும்**

பெயரெச்சத்தில் ஒரு வகை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். அறியாத என்பது எதிர்மறைப் பெயரெச்சம். இதன் முன் வரும் வல்லினம் மிகாது. **சான்று:** அறியாத பிள்ளை. ஆனால் அறியாத என்பதில் உள்ள 'த' என்னும் ஈறு கெட்டு (மறைந்து), அறியா என நிலைமொழியில் நிற்கும். இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதன் முன் வருமொழி முதலில் வரும் வல்லினம் கட்டாயம் மிகும். **சான்று**: அறியா + பிள்ளை = அறியா**ப்**பிள்ளை.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகுதலுக்கு மேலும் பல சான்றுகள் காட்டலாம். அவை வருமாறு:

| | |
|---|---|
| செல்லா + காசு | செல்லா**க்** காசு (செல்லாத காசு) |
| ஓடா + குதிரை | ஓடா**க்** குதிரை (ஓடாத குதிரை) |
| தீரா + சிக்கல் | தீரா**ச்** சிக்கல் (தீராத சிக்கல்) |
| காணா + பொருள் | காணா**ப்** பொருள் (காணாத பொருள்) |

ii) அகர ஈற்று, இகர ஈற்று, யகர மெய் ஈற்று வினையெச்சங்களின் முன்னும், வன்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சங்களின் முன்னும், ஆக, ஆய் என முடியும் வினையெச்சங்களின் முன்னும் வரும் வல்லினம் **மிகும்.**

- **அகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| வர + சொன்னான் | வர**ச்** சொன்னான் |
| உண்ண + போனான் | உண்ண**ப்** போனான் |
| உட்கார + பார்த்தான் | உட்கார**ப்** பார்த்தான் |

- **இகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| ஓடி + போனான் | ஓடி**ப்** போனான் |
| தேடி + பார்த்தான் | தேடி**ப்** பார்த்தான் |
| கூறி + சென்றான் | கூறி**ச்** சென்றான் |
| கூடி + பேசினர் | கூடி**ப்** பேசினர் |

- **யகர மெய் ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகல்**

**சான்று:**

போய் + பார்த்தான் = போய்**ப்** பார்த்தான்

- **வன்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| கற்று+ கொடுத்தான் | கற்று**க்** கொடுத்தான் |
| வாய்விட்டு+சிரித்தான் | வாய்விட்டு**ச்** சிரித்தான் |
| படித்து+ கொடுத்தான் | படித்து**க்** கொடுத்தான் |
| எடுத்து + தந்தான் | எடுத்து**த்** தந்தான் |
| கடித்து + குதறியது | கடித்து**க்** குதறியது |
| வைத்து + போனான் | வைத்து**ப்** போனான் |

- **ஆக, ஆய், என என்று முடியும் வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகல்**

**சான்று:**

| | |
|---|---|
| தருவதாக + சொன்னான் | தருவதாக**ச்** சொன்னான் |
| வருவதாய் + கூறினார் | வருவதாய்**க்** கூறினார் |
| வா என + கூறினார் | வா என**க்** கூறினார் |

மேலே காட்டிய சான்றுகள் எல்லாம் தெரிநிலை வினையெச்சங்கள் ஆகும். வினையெச்சத்தில் குறிப்பு வினையெச்சம் என்ற ஒன்றும் உண்டு. ஒரு தொழிலை உணர்த்தும் வினைப்பகுதியிலிருந்து தோன்றுவது தெரிநிலை வினையெச்சம். சான்று: **உண்ணப்** போனான். உண் என்ற வினைப்பகுதியிலிருந்து தோன்றியதால் உண்ண என்பது தெரிநிலை வினையெச்சம். ஒரு பண்பை உணர்த்தும் பெயர்ப்பகுதியிலிருந்து தோன்றுவது குறிப்பு வினையெச்சம். சான்று: **மெல்லப்** பேசினாள். மென்மை என்ற குணத்தை உணர்த்தும் பெயர்ப்பகுதியிலிருந்து தோன்றியதால் மெல்ல என்பது குறிப்பு வினையெச்சம். மொழியியலார் இதனை வினையடை *(Adverb)* என்று குறிப்பிடுவர். மேலே பார்த்த தெரிநிலை வினையெச்சம் போலவே குறிப்புவினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| நிறைய + பேசுவான் | நிறைய**ப்** பேசுவான் |
| இனிக்க+பேசுவான் | இனிக்க**ப்** பேசுவான் |
| நன்றாக+சொன்னான் | நன்றாக**ச்** சொன்னான் |
| வேகமாக+ கூறினான் | வேகமாக**க்** கூறினான் |
| விரைவாய்+ பேசினார் | விரைவாய்**ப்** பேசினார் |
| மெல்லென+ சிரித்தாள் | மெல்லென**ச்** சிரித்தாள் |

**மகர இறுதி கெட்டு உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் மிகல்**

புணர்ச்சியில் மகர இறுதி கெட்டு, உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் **மிகும்.**

**சான்று:**

| | |
|---|---|
| மரம்+கிளை > மர + **க்** + கிளை | மர**க்**கிளை |
| குளம் + கரை > குள + **க்** + கரை | குள**க்**கரை |
| ஆரம்பம்+பள்ளி > ஆரம்ப + **ப்** + பள்ளி | ஆரம்ப**ப்** பள்ளி |
| தொடக்கம்+கல்வி > தொடக்க + **க்** + கல்வி | தொடக்க**க்** கல்வி |
| அறம்+பணி > அற + **ப்** + பணி | அற**ப்**பணி |
| கட்டடம்+கலை > கட்டட + **க்** + கலை | கட்டட**க்**கலை |
| வீரம் + திலகம் > வீர + **த்** + திலகம் | வீர**த்**திலகம் |
| மரம்+பெட்டி > மர+ **ப்** + பெட்டி | மர**ப்**பெட்டி |
| பட்டம்+ படிப்பு > பட்ட + **ப்** + படிப்பு | பட்ட**ப்**படிப்பு |

மேலே வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுடன் பார்த்தோம். இதுபோல வல்லினம் இன்னும் சில இடங்களில் மிகும். ஒற்றைக்கை, இரட்டைக் குழந்தைகள், மற்றப் பிள்ளைகள், பயிற்சிப் பள்ளி, பயிற்சிக் கூடம், நகரவைத் தலைவர் என்பன போல வல்லினம் மிகுந்து வரும் தொடர்கள் பல உள்ளன.

| வ. எண் | வல்லினம் க், ச், த், ப் மிகும் இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | **அந்த, இந்த** என்னும் சுட்டுத்திரிபுகளுக்குப் பின் வல்லினம் மிகும் | இந்தக் காலம் அந்தப் பக்கம் |
| 2. | **எந்த** என்னும் வினாத்திரிபுபின் வல்லினம் மிகும் | எந்தப்பயணம்? எந்தத்திசை? |
| 3. | **ஐ** - இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் | பாடத்தைப் படி கதவைத் திற |
| 4. | **கு** - நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் | எனக்குத் தெரியும் ஊருக்குச் செல் |
| 5. | **அகர (அ), இகர (இ)** ஈற்று வினையெச்சங்கள் பின் வல்லினம் மிகும் | ஆடச் சொன்னார் ஓடிப் போனார் |
| 6. | **வன்தொடர்க் குற்றியலுகரம்** (கு, சு, டு, து, பு, று) பின் வல்லினம் மிகும் | பெற்றுக் கொண்டேன் படித்துப் பார்த்தார் |
| 7. | **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** பின் வல்லினம் மிகும் | செல்லாக் காசு ஓடாக் குதிரை |
| 8. | **உவமைத்தொகை**யில் வல்லினம் மிகும் | தாய்த்தமிழ் மலர்ப்பாதம் |
| 9. | **உருவ**கத்தில் வல்லினம் மிகும் | தாமிழ்த்தாய் உலகப் பந்து |
| 10. | **எட்டு, பத்து - எண்ணுப்** பெயர்களின் பின் வல்லினம் மிகும் | எட்டுத்தொகை பத்துப்பாட்டு |

| வ. எண் | வல்லினம் க், ச், த், ப் மிகும் இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 11. | **அப்படி, இப்படி, எப்படி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும் | அப்படிச் செய் இப்படிக் காட்டு |
| 12. | **திசைப் பெயர்களின்** பின் வல்லினம் மிகும் | கிழக்குக் கடல் தெற்குப் பக்கம் |
| 13. | **மகரமெய்** கெட்டு வல்லினம் மிகும் | மரம் + சட்டம் மரச்சட்டம் |
| 14. | **இருபெயரெட்டுப்** பண்புத் தொகையில் வல்லினம் மிகும் | மல்லிகைப்பூ சித்திரைத்திங்கள் |
| 15. | **ஓரெழுத்து** ஒருமொழிக்குப் பின் வல்லினம் மிகும் | தைத்திங்கள் பூப்பந்தல் |
| 16. | **என, ஆக** - சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும் | எனக்கேட்டார் வருவதாகக்கூறு |
| 17. | **அதற்கு, இதற்கு, எதற்கு** - சொற்களின் பின் வல்லினம் மிகும் | அதற்குக்கொடு எதற்குக்கேட்கிறாய்? |
| 18. | **இனி, தனி** சொற்களின் பின் வல்லினம் மிகும் | தனிச்சிறப்பு இனிக்காண்போம் |
| 19. | **மிக** - சொல்லின் பின் வல்லினம் மிகும் | மிகப் பெரியவர் |
| 20. | **சால, தவ, தட, குழ** உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும் | சாலப் பேசினார் தவச்சிறிது |

### வல்லினம் மிகா இடங்கள்

இதுகாறும் வல்லினம் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதைப் பார்த்தோம். இனி, நிலைமொழி இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும் ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் எந்தெந்த இடங்களில் மிகாது இயல்பாகும் என்பதைச் சான்றுடன் காண்போம்.

**சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகாமை**

அது, இது, எது; அவை, இவை, எவை; அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தனை; அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு ; அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு என்னும் சொற்களின் முன் வரும் வல்லினம் **மிகாது.**

***சான்று:***

| | |
|---|---|
| அது + சிறிது | அது சிறிது |
| எது + பெரியது | எது பெரியது? |
| அவை + போயின | அவை போயின |
| எவை + பெரியவை | எவை பெரியவை? |
| அன்று + பார்த்தான் | அன்று பார்த்தான் |
| என்று + காண்பேன் | என்று காண்பேன்? |
| அத்தனை + செடிகள் | அத்தனை செடிகள் |
| எத்தனை + பழங்கள் | எத்தனை பழங்கள்? |
| அவ்வளவு + பேர் | அவ்வளவு பேர் |
| எவ்வளவு + தருவாய் | எவ்வளவு தருவாய்? |
| அவ்வாறு + பேசினான் | அவ்வாறு பேசினான் |
| எவ்வாறு + படித்தாள் | எவ்வாறு படித்தாள்? |

வந்த, கண்ட, சொன்ன, வரும் என்பன போன்ற பெயரெச்சங்களோடு படி, ஆறு என்னும் சொற்கள் சேர்ந்து வரும் வினையெச்சச் சொற்களின் முன்வரும் வல்லினம் **மிகாது.**

| | |
|---|---|
| கண்டபடி + பேசினான் | கண்டபடி பேசினான் |
| சொன்னபடி + செய்தான் | சொன்னபடி செய்தான் |
| கண்டவாறு + சொன்னான் | கண்டவாறு சொன்னான் |
| சொன்னவாறு + செய்தான் | சொன்னவாறு செய்தான் |
| வரும்படி + கூறினான் | வரும்படி கூறினான் |
| வருமாறு + கூறினான் | வருமாறு கூறினான் |

**எண்ணுப்பெயர்கள், எண்ணுப்பெயரடைகள் முன் வல்லினம் மிகாமை**

ஒன்று முதல் பத்து வரையிலான எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகியன வன்தொடர்க் குற்றியலுகரங்கள். இவற்றின் முன்வரும் வல்லினம் மிகுவதை ஏற்கனவே பார்த்தோம். ஏனைய ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் மென்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் முன்னும், ஆறு, நூறு என்னும் நெடில் தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் முன்னும், ஏழு என்னும் முற்றியலுகர எண்ணுப்பெயரின் முன்னும்,

ஒன்பது என்னும் உயிர்த்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயரின் முன்னும் வரும் வல்லினம் **மிகாது.**

***சான்று:***

| | |
|---|---|
| ஒன்று + போதும் | ஒன்று போதும் |
| இரண்டு + தடவை | இரண்டு தடவை |
| மூன்று + குழந்தைகள் | மூன்று குழந்தைகள் |
| நான்கு + கால்கள் | நான்கு கால்கள் |
| ஐந்து + சிறுவர்கள் | ஐந்து சிறுவர்கள் |
| ஆறு + கடைகள் | ஆறு கடைகள் |
| ஏழு + சிறுகதைகள் | ஏழு சிறுகதைகள் |
| ஒன்பது + கிரகங்கள் | ஒன்பது கிரகங்கள் |
| நூறு + பழங்கள் | நூறு பழங்கள் |

ஒரு, இரு, அறு, எழு என்னும் எண்ணுப்பெயரடைகளின் முன்வரும் வல்லினம் **மிகாது.**

***சான்று:***

| | |
|---|---|
| ஒரு + பொருள் | ஒருபொருள் |
| இரு + தடவை | இருதடவை |
| அறு + படைவீடு | அறுபடைவீடு |
| எழு + கடல் | எழுகடல் |

**வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகாமை**

*i)* இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| சாமி + கும்பிடு | சாமி கும்பிடு *(சாமியைக் கும்பிடு)* |
| நகை + செய்தான் | நகை செய்தான் *(நகையைச் செய்தான்)* |
| கனி + தின்றான் | கனி தின்றான் *(கனியைத் தின்றான் )* |
| காய் + கொடுத்தான் | காய்கொடுத்தான் *(காயைக் கொடுத்தான்)* |
| தமிழ் + படித்தான் | தமிழ் படித்தான் *(தமிழைப் படித்தான்)* |
| நீர் + பருகினான் | நீர் பருகினான் *(நீரைப் பருகினான்)* |

*ii)* நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி **உயர்திணையாயின்** அதன்முன் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

பொன்னி + கணவன் = பொன்னி கணவன் *(பொன்னிக்குக் கணவன்)*

*iii)* ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையாக இருப்பின் அதன்முன் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| காளி + கோயில் | காளிகோயில் |
| கண்ணகி + சிலம்பு | கண்ணகி சிலம்பு |
| தம்பி + துணி | தம்பி துணி |
| மகளிர் + கல்லூரி | மகளிர் கல்லூரி |
| ஆசிரியர் + கழகம் | ஆசிரியர் கழகம் |
| தாய் + சொத்து | தாய் சொத்து |
| மனைவி + கண்ணீர் | மனைவி கண்ணீர் |
| நடிகை + கோபம் | நடிகை கோபம் |
| வள்ளி + திருமணம் | வள்ளி திருமணம் |

*iv)* மூன்றாம் வேற்றுமைக்கு ஆன், ஆல், ஒடு, ஓடு, உடன் என்னும் உருபுகள் உள்ளன. இவற்றுள் ஒடு, ஓடு என்பன உயிர் ஈறு கொண்டவை. இவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| என்னொடு+படித்தவன் | என்னொடு படித்தவன் |
| யாரோடு + பேசினாய் | யாரோடு பேசினாய்? |

இக்காலத் தமிழில் 'கொண்டு' என்னும் சொல்லுருபும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய கருவிப் பொருளில் வழங்குகிறது. இதன் முன் வரும் வல்லினமும் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| கத்தி கொண்டு + குத்தினான் | கத்திகொண்டு குத்தினான் |
| *(கத்தியால் குத்தினான்)* | |
| வாள்கொண்டு + போர் செய்தான் | வாள்கொண்டு போர் செய்தான் |

*v)* ஐந்தாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் இல், இன் என்பன ஆகும்; பொருள்: நீக்கப் பொருள் (விலகிச் செல்லல்). ஐந்தாம் வேற்றுமை விரியில் இல், இன் என்னும் உருபுகள் மட்டும் நின்று நீக்கப் பொருளைக் காட்டுவது இல்லை. இல் என்பதோடு இருந்து என்னும் சொல்லுருபும், இன் என்பதோடு நின்று என்னும் சொல்லுருபும் சேர்ந்தே நீக்கப் பொருளை உணர்த்துகின்றன.

இவ்விரு உருபுகளின் முன்வரும் வல்லினமும் **மிகாது**.

**சான்று:**

| | |
|---|---|
| வீட்டிலிருந்து + சென்றான் | வீட்டிலிருந்து சென்றான் |
| கூட்டினின்று + பறந்தது | கூட்டினின்று பறந்தது |

*vi)* ஆறாம் வேற்றுமைக்கு உரிய உருபுகளாக நன்னூலார் அது, ஆது, அ என்னும் மூன்றனைக் குறிப்பிடுகிறார். இவற்றுள் ஆது, அ என்பன இக்காலத் தமிழில் இல்லை. அது என்பது மட்டுமே உண்டு. அது என்னும் உருபின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

**சான்று:**

| | |
|---|---|
| யானையது + கொம்பு | யானையது கொம்பு |
| எனது + புத்தகம் | எனது புத்தகம் |

இக்காலத் தமிழில் 'உடைய' என்னும் சொல்லுருபும், ஆறாம் வேற்றுமைக்கு உரிய கிழமைப் பொருளில் (உடைமைப் பொருளில்) வழங்குகிறது. இதன் முன் வரும் வல்லினமும் **மிகாது**.

**சான்று:**

| | |
|---|---|
| என்னுடைய + புத்தகம் | என்னுடைய புத்தகம் |
| பண்புடைய + கணவர் | பண்புடைய கணவர் |
| ஆசிரியருடைய + பெருமை | ஆசிரியருடைய பெருமை |

**அல்வழிப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகாமை**

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர், தொகா நிலைத்தொடர் என்னும் இருவகைத் தொடர்களில் வல்லினம் மிகும் இடங்கள் எவை என்பதைப் பார்ப்போம்.

- **தொகைநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகாமை**

*i)* அல்வழியில் உள்ள தொகைநிலைத் தொடர்களில் ஒன்றான வினைத்தொகை மிகவும் அற்புதமான தொகை. ஊறுகாய் என்று சொன்னதும், நம் நாவில் அந்தக் காயின் சுவை ஊறி நிற்கும். நேற்று ஊறிய காய், இன்று ஊறுகின்ற காய், நாளையும் ஊறும் காய் – ஊறுகாய். மூன்று காலங்களையும் காட்டும் இடைநிலைகள் என்னும் உருபுகள் மறைந்திருப்பதால், **வினைத்தொகை** எனப்பட்டது. வினைத்தொகையில் வரும் வல்லினம் கட்டாயம் **மிகாது**. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும் எனப் பார்த்தோம். ஆனால் வினைத்தொகையில் மட்டும் நிலைமொழி வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தாலும் வல்லினம் **மிகாது**.

**சான்று:**

| | |
|---|---|
| நாட்டு + புகழ் | நாட்டுபுகழ் |
| ஈட்டு + பொருள் | ஈட்டுபொருள் |

இவ் வன்தொடர்க் குற்றியலுகரங்களின் முன்வரும் வல்லினம் வினைத்தொகையில் மிகவில்லை.

| | |
|---|---|
| சுடு + காடு | சுடுகாடு |
| நடு + கல் | நடுகல் |
| குடி + தண்ணீர் | குடிதண்ணீர் |
| மூடு + பனி | மூடுபனி |
| சுடு + சோறு | சுடுசோறு |
| விடு + கதை | விடுகதை |
| திருவளர் + செல்வன் | திருவளர் செல்வன் |
| திருவளர் + செல்வி | திருவளர் செல்வி |

*ii)* இரண்டு சொற்களோ, இரண்டுக்கு மேற்பட்ட சொற்களோ வரும்போது, அச்சொற்களின் இறுதியில் உம்மை மறைந்திருப்பது உம்மைத் தொகை எனப்படும். உம்மைத்தொகையில் வரும் வல்லினம் **மிகாது**.

**சான்று:**

| | |
|---|---|
| இட்லி + தோசை | இட்லி தோசை (இட்லியும் தோசையும்) |
| யானை + குதிரை | யானை குதிரை (யானையும் குதிரையும்) |
| மா + பலா + வாழை | மா பலா வாழை (மாவும், பலாவும், வாழையும்) |
| இரவு + பகல் | இரவு பகல் (இரவும் பகலும்) |
| நரை + திரை | நரைதிரை (நரையும் திரையும்) |
| கல்வி + கேள்வி | கல்வி கேள்வி (கல்வியும் கேள்வியும்) |
| நன்மை + தீமை | நன்மை தீமை (நன்மையும் தீமையும்) |

- **தொகாநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகாமை**

*i) எழுவாய்த் தொடரில் வரும் வல்லினம் **மிகாது**.*

***சான்று:***

| | |
|---|---|
| கண்ணகி + பேசினாள் | கண்ணகி பேசினாள் |
| மாதவி + பாடினாள் | மாதவி பாடினாள் |
| கோழி + கூவியது | கோழி கூவியது |
| யானை + பிளிறியது | யானை பிளிறியது |

*ii) விளித்தொடரில் வரும் வல்லினம் **மிகாது**.*

***சான்று:***

| | |
|---|---|
| மகனே + கேள் | மகனே கேள் |
| தம்பீ + போ | தம்பீ போ |
| அரசே + பார் | அரசே பார் |

*iii) ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது**.*

***சான்று:***

- **ஏவல் வினைமுற்று**

| | |
|---|---|
| வா + கண்ணா | வா கண்ணா |
| போ + தம்பி | போ தம்பி |
| படி + பாடத்தை | படி பாடத்தை |
| புறப்படு + பள்ளிக்கு | புறப்படு பள்ளிக்கு |

- **வியங்கோள் வினைமுற்று**

| | |
|---|---|
| வாழ்க + தலைவா | வாழ்க தலைவா |
| ஒழிக + தீமைகள் | ஒழிக தீமைகள் |
| வருக + புலவரே | வருக புலவரே |

*iv) அகர ஈற்றுப் பெயரெச்சங்களின் முன்வரும் வல்லினம் **மிகாது**.*

பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப் பலவகைப்படும். இவற்றுள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைத் தவிர, மற்றப் பெயரெச்சங்கள் அனைத்தின் முன்னும் வரும் வல்லினம் **மிகாது**. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகும் என்பதை ஏற்கெனவே பார்த்தோம்.

- **தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை**

தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் **மிகாது.**

***சான்று:***

| | |
|---|---|
| வந்த + பையன் | வந்த பையன் |
| ஓடிய + குதிரை | ஓடிய குதிரை |
| கேட்ட + கேள்வி | கேட்ட கேள்வி |
| பாடிய + பாட்டு | பாடிய பாட்டு |
| கொடுத்த + கை | கொடுத்த கை |
| கூடிய + கூட்டம் | கூடிய கூட்டம் |

- **குறிப்புப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகாமை**

குறிப்புப் பெயரெச்சத்தை இக்கால மொழியியலார் பெயரடை *(Adjective)* என்று குறிப்பிடுவர். இதன் முன் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| நல்ல + பையன் | நல்ல பையன் |
| பெரிய + தெரு | பெரிய தெரு |
| புதிய + சிந்தனை | புதிய சிந்தனை |
| சிறிய + பேனா | சிறிய பேனா |
| கரிய + குதிரை | கரிய குதிரை |
| அரிய + பொருள் | அரிய பொருள் |

- **எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை**

செல்லாத, காணாத, ஓடாத என்பன போன்ற பெயரெச்சங்கள் எதிர்மறைப் பொருளை உணர்த்துவதால் எதிர்மறைப் பெயரெச்சங்கள் எனப்படும். இவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| செல்லாத + காசு | செல்லாத காசு |
| காணாத + கண்கள் | காணாத கண்கள் |
| ஓடாத + குதிரை | ஓடாத குதிரை |

*v) ண்டு, ந்து, ன்று என முடியும் மென்தொடர்க் குற்றியலுகர வினையெச்சங்களுக்கு முன்னும், ய்து என முடியும் இடைத்தொடர்க் குற்றியலுகர வினையெச்சங்களுக்கு முன்னும் வரும் வல்லினம் **மிகாது**.*

***சான்று:***

| | |
|---|---|
| கண்டு + பேசினார் | கண்டு பேசினார் |
| கொண்டு + போனான் | கொண்டு போனான் |
| வந்து + சென்றான் | வந்து சென்றான் |
| தின்று + பார்த்தான் | தின்று பார்த்தான் |
| கொன்று + குவித்தான் | கொன்று குவித்தான் |
| செய்து + தந்தான் | செய்து தந்தான் |
| கொய்து + கொடுத்தாள் | கொய்து கொடுத்தாள் |

வினையெச்சத்திலே குறிப்பு வினையெச்சம் என்ற ஒன்று உண்டு என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சத்தின் முன்வரும்

வல்லினம் மிகும் என்பதையும் ஏற்கெனவே பார்த்தோம். குறிப்பு வினையெச்சத்தில் உகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சங்களும் உண்டு. இவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது.**

***சான்று:***

| | |
|---|---|
| நன்கு + பேசினான் | நன்கு பேசினான் |
| நன்று + பேசினாய் | நன்று பேசினாய் |

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | **எழுவாய்த்(பெயர்) தொடர்**களில் வல்லினம் மிகாது | தம்பி படித்தான்<br>கிளிபேசும் |
| 2. | **அது, இது, எது,** சொற்களை அடுத்து வல்லினம் மிகாது | அது செய்<br>எது சென்றது? |
| 3. | **பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம்** பின் வல்லினம் மிகாது | எழுதியபாடல்<br>எழுதாத பாடல் |
| 4. | **இரண்டாம் வேற்றுமைத்தொகை**யில் வல்லினம் மிகாது | நாடு கண்டான்<br>காய் தின்றேன் |
| 5. | **மென்தொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங்களில்** வல்லினம் மிகாது | தின்று தீர்த்தான்<br>செய்து பார்த்தான் |
| 6. | **வினைத்தொகை**யில் வல்லினம் மிகாது | எழுதுபொருள்<br>சுடுசோறு |
| 7. | **படி**வினையெச்சத்தில் வல்லினம் மிகாது | பாடும்படி கேட்டாள்<br>வரும்படி சொன்னார் |
| 8. | **விளித்தொடரில்** வல்லினம் மிகாது | மகனே படி |
| 9. | **வியங்கோள் வினைமுற்று**த் தொடரில் வல்லினம் மிகாது | வாழ்க தமிழ்<br>வருக தலைவா! |
| 10. | **அன்று, இன்று, என்று** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | அன்று சொன்னார்<br>என்று தருவார்? |

**வல்லினம் மிகா இடங்கள் - மேலும் சில**

*i.* ஆ, ஓ என்னும் வினா எழுத்துகளை இறுதியிலே கொண்டு முடியும் சொற்களுக்கு முன்னர் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| அவனா + தந்தான் | அவனா தந்தான் ? |
| அவளோ + கொடுத்தாள் | அவளோ கொடுத்தாள் ? |

*ii.* பல, சில என்னும் சொற்களின் முன்வரும் வல்லினம் **மிகாது.**

***சான்று:***

| | |
|---|---|
| பல + பொருள் | பலபொருள் |
| சில + பூக்கள் | சிலபூக்கள் |

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 11. | **அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | அவ்வளவு பெரியது?<br>எவ்வளவு சிறியது? |
| 12. | **அத்தனை, இத்தனை, எத்தனை** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | இத்தனை சிறியது<br>எத்தனை பெரியது? |
| 13. | எட்டு, பத்து தவிர **பிற எண்ணுப்பெயர்களு**டன் வல்லினம் மிகாது | ஒரு புத்தகம்<br>மூன்று கோடி |
| 14. | **அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி**யில் வல்லினம் மிகாது | பார் பார்<br>சல சல |
| 15. | **கள் விகுதி**சேரும் போதுவல்லினம் மிகாது | வாழ்த்துகள் |
| 16. | **உறு, நனி, கூர், கழி, கடி** உரிச்சொற்களில் வல்லினம் மிகாது | உறுபொருள்<br>கடிகாவல் |
| 17. | **உம்மைத்தொகை**யில் வல்லினம் மிகாது | தாய் தந்தை |
| 18. | **மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றமைத்தொடர்**களில் வல்லினம் மிகாது | என்னோடு சேர்<br>மரத்திலிருந்து பறி<br>குரங்கினது குட்டி |
| 19. | **இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைத்தொகை**களில் வல்லினம் மிகாது | தமிழ் படி(ஐ)<br>கைதட்டு (ஆல்)<br>வீடு சென்றான் (கு) |
| 20. | **உயர்திணை பெயர்த்தொகை**யில் வல்லினம் மிகாது | தலைவன் கூற்று<br>தலைவி கூற்று |

*iii.* இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வரும் தொடர்களில் வரும் வல்லினம் **மிகாது**.

***சான்று:***

| | |
|---|---|
| ஆதி + பகவன் | ஆதிபகவன் |
| தேச + பக்தி | தேச பக்தி |

*iv.* வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதியும், தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும் வந்தால் வல்லினம் மிகுவதில்லை.

***சான்று:***

| | |
|---|---|
| எழுத்து + கள் | எழுத்துகள் |
| வழக்கு + கள் | வழக்குகள் |
| வாக்கு + கள் | வாக்குகள் |
| வகுப்பு + கள் | வகுப்புகள் |
| ஆக்கு + தல் | ஆக்குதல் |
| வாழ்த்து + தல் | வாழ்த்துதல் |
| கூப்பு + தல் | கூப்புதல் |
| தூற்று + தல் | தூற்றுதல் |

**வினாக்கள்.**

*1 சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?*
A. எட்டு B. பத்து
C. பதினொன்று D. பன்னிரண்டு

*2 அளபெடை எத்தனை வகைப்படும்?*
A. பத்து B. ஐந்து
C. இரண்டு D. ஒன்று

*3 உயிரளபெடை எத்தனை வகைப்படும்?*
A. பன்னிரண்டு B. பத்து
C. எட்டு D. மூன்று

*4 உயிரளபெடையில் அளபெடுக்கும் எழுத்துகள் எத்தனை?*
A. பத்து B. ஏழு
C. ஐந்து D. இரண்டு

*5 ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துகள் எத்தனை?*
A. முப்பது B. பதினாறு
C. பன்னிரண்டு D. பதினொன்று

*6 செய்யுளில் ஓசைக் குறையும் போது அளபெடுப்பது?*
A. செய்யுளிசை அளபெடை
B. இன்னிசை அளபெடை
C. சொல்லிசை அளபெடை
D. இயற்கை அளபெடை

*7 செய்யுளிசை அளபெடையின் வேறு பெயர்?*
A. இன்னிசை அளபெடை
B. இசைநிறை அளபெடை
C. சொல்லிசை அளபெடை
D. இயற்கை அளபெடை

*8 செய்யுளில் ஓசை குறையாத விடத்தும் இசை இனிமைக்காக குறில் எழுத்து நெடில் எழுத்தாக மாறி அளபெடுப்பது.*
A. செய்யுளிசை அளபெடை
B. இன்னிசை அளபெடை
C. சொல்லிசை அளபெடை
D. இயற்கை அளபெடை

*9. ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது?*
A. செய்யுளிசை அளபெடை
B. இன்னிசை அளபெடை
C. சொல்லிசை அளபெடை
D. இயற்கை அளபெடை

*10 மொழி எத்தனை வகைப்படும்?*
A. இரண்டு B. மூன்று
C. ஐந்து D. ஆறு

*11 ஒரு சொல் தனித்து நின்று பொருள் உணர்த்துவது?*
A. பொதுமொழி B. தொடர்மொழி
C. தனிமொழி D. இவை அனைத்தும்

*12 ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது*
A. ஒரு மொழி B. தனிமொழி
C. பொதுமொழி D. தொடர்மொழி

*13 ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று பல பொருளையும் தருவது?*
A. ஒருமொழி B. பொதுமொழி
C. தொடர்மொழி D. தனிமொழி

*14 எட்டு என்பது........*
A. ஒருமொழி B. தனிமொழி
C. தொடர்மொழி D. பொதுமொழி

*15 வினையைக் குறிக்கும் பெயர், பால், எண், இடம், காலம் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது?*
A. தொழிற்பெயர்
B. முதல்நிலைத் தொழிற்பெயர்
C. முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்
D. எதிர்மறைத் தொழிற்பெயர்

*16 வினையடி + விகுதிகள் = …………..*
A. தொழிற்பெயர்
B. விகுதி பெற்ற தொழிற்பெயர்
C. முதல்நிலைத் தொழிற்பெயர்
D. முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்

*17 வினைப்பகுதியே தொழிற்பெயராக வருவது…….*
A. முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்
B. முதல்நிலைத் தொழிற்பெயர்
C. எதிர்மறைத் தொழிற்பெயர்
D. வினையாலனையும் பெயர்

*18 விகுதி பெறாமல் முதனிலைத் திரிந்து வருவது……*
A. தொழிற்பெயர்
B. முதல்நிலைத் தொழிற்பெயர்
C. முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்
D. எதிர்மறைத் தொழிற்பெயர்

*19 வினையைக் குறிக்காமல் வினை செய்பவரைக் குறிப்பது……..*
*A. தொழிற்பெயர்*
*B. முதல்நிலைத் தொழிற்பெயர்*
*C. எதிர்மறைத் தொழிற்பெயர்*
*D. வினையாலனையும் பெயர்*

*20 கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலனையும் பெயரும் முறையே……*
*A. பாடிய, கேட்டவர்*
*B. பாடல், பாடிய*
*C. கேட்டவர், பாடிய*
*D. பாடல், கேட்டவர்*

**விடைகள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| B | C | D | B | D | A | B | B | C | b |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| C | D | B | D | A | B | B | C | D | D |

Virtual Resources
Scan the QR code to unlock extra content

உன் கனவை நீ நம்பு, உன் உழைப்பால் அதை நிஜமாக்கு!

# UG TRB TAMIL ACHIEVERS

DIRECT RECRUITMENT OF GRADUATE ASSISTANTS / BLOCK RESOURCE TEACHER EDUCATORS (BRTE) - 2023

(Test series only offered)

| ROLL NO | REG NO | NAME |
|---|---|---|
| 121010071 | BTBRTE027397 | THANASEKAR P |
| 132010138 | BTBRTE033620 | DHANUSHKODY D |
| 134020070 | BTBRTE026426 | ROJAMANI S |
| 103070255 | BTBRTE001872 | MURALI K |

Professor Academy

# PG TRB

# தமிழ்

## COURSE DETAILS

+91 707070 1005
+91 707070 1009

www.professoracademy.com

Professor Academy

# PG TRB 2025 ONLINE COURSE

**New Syllabus 2024**

Complete coverage of
**New Syllabus 2024**

**Online Live Classes**

**Online Live Classes**
200+ hrs. of Lectures

**100+ Test Series**

- Daily test
- Unit wise test
- Full-length test

**REC**

**Recorded Access**

**Recorded Access**
24/7 Availability

**Study Material**

**Study Material**
**11** Printed Books + Class notes

**Support**

**Technical &**
**Academic Support**

www.professoracademy.com

Professor Academy

# VIRTUAL CLASS FEATURES

**Start Date:** December 05, 2024

**Duration of Classes:** 5 months (up to exam date)

**Class Schedule:**

- **Morning Session:** 5:00 AM - 7:00 AM
- **Evening Session:** 7:30 PM - 9:00 PM
  (subject to change based on exam announcements)

**Key Features:**

- Interactive online live classes
- Weekly schedule updates via WhatsApp community
- Sessions conducted through Zoom for ease of access




www.professoracademy.com

Professor Academy

# COURSE BENEFITS

## APP FEATURES

- Login ID and password will be provided to the candidates to access the mobile app after enrolling in course.
- **Access to Missed Live Sessions** as Recorded Videos.
- Validity for Recorded Sessions and Test Series will be provided upto 1 year in our mobile app (Upto date of the examination)
- **Access to Missed Live Sessions as Recorded Videos.**
- **Mobile App** for learning (For Android users)
- **Website** for easy access from any device






www.professoracademy.com

Professor Academy

# TEST SERIES

Extensive Test Series to Boost Your Preparation!

Get access to 100+ Test Series, including:

- **Daily Tests** to reinforce learning every day
- **Unit-Wise Tests** for focused revision
- **Full-Length Tests** to simulate the real exam experience

Comprehensive Study Materials as soft copy PDFs, available in our mobile app.





Download & Explore!

www.professoracademy.com

Professor Academy

# STUDY MATERIALS

Enroll today and receive 11 Printed Books right at your doorstep

- **10 Subject-Based Books** covering all major topics
- **1 Previous Year Question Bank**

Comprehensive Study Materials as soft copy PDFs, available in our mobile app.

## PG TRB TAMIL

**Based on New Syllabus**



Rs. 300 for courier charge payments is excluded

www.professoracademy.com

Professor Academy

# PAYMENT DETAILS& ENROLLMENT PROCESS

| BOOKS ONLY | COURSE ONLY | COURSE + BOOKS |
|---|---|---|
| ₹3999 | ₹8999 | ₹9999 |
| ACTUAL FEE | ACTUAL FEE | ACTUAL FEE |
| ~~₹5999~~ | ~~₹14999~~ | ~~₹15999~~ |

An additional charge of Rs. 300 for courier charge payments is excluded in the original course fee.

- Step 1: Register Online on Our Website or App.

**SCAN HERE TO REGISTER**

- Step 2: Choose Your Course and Complete Payment
- Step 3: Receive Login Details and Begin Your Journey!
- Step 4: Our dedicated support team is here to assist you at every step.

NOTE* Books will be provided only after the full payment of fees has been made.

www.professoracademy.com

# Professor Academy

## Professor Academy's Pride
## TRB State Rankers

STATE FIRST
**ISWARYA P**

STATE FIRST
**DEVASAGAYAM D**

STATE SECOND
**RAJESHWARI N**

## *Achiever's Testimonials*

Line by line teaching helps me to take good notes. They teach me lessons thoroughly, and then only I attend their tests. Their test makes me more focused on preparation.

**VINITHA. M | STATE 6TH RANK**

Professor Academy's test series are good. I write each and every test like TRB exam. I am very happy to attend Professor Academy's test. Happy to see my test result. In a similar way, I secured state rank on PG TRB exam (just assume exam like Professor Academy's test).

**AMUTHA VIJAYALAKSHMI. A | STATE 7TH RANK**

Professor Academy's motivation and their notes are very helpful for me. Their crystal-clear explaining faculties are the secret of my success. Their friendly guidance boosts my exam preparation.

**HEMA. P | STATE 8TH RANK**

The reason for my success is Professor Academy. If not for Professor Academy, I wouldn't have achieved this. The recorded classes are very useful for me. It made studying easier and gave me confidence. Therefore, I recommend Professor Academy to everyone who wants to succeed in their studies.

**ARUNA RAJESWARI. R | STATE 10TH RANK**

*www.professoracademy.com*

Click here to
Watch more Achiever's Talks